

முன்னர் வெளி வந்த சொல்லடைவுகளின் சிறந்த கூறுகளைப் பின்பற்றி அனைவரும் எளிதில் திருக்குறள் பயில்வதில் ஆர்வம் காட்டும் வகையில் கந்தையா அவர்கள் இந்தத் திருக்குறள் அகராதியை வெளியிட்டார்.

ஓரளவு தமிழறிவு பெற்ற குறளன்பர் ஒவ்வொருவரும் தாம் தாமே நேரடியாக (உரைகாரர்கள், விளக்குநர்கள் கூறியவற்றையும் தெரிந்துகொண்டாலும் அத்தோடு நின்று விடாமல்) குறளைப் பயின்று வள்ளுவர் சொல்லும் நெறிமுறைகளை நேரடியாகக் கற்றுச் சிந்தித்து உணர இந்தத் திருக்குறள் சொல்லடைவு அகராதி பெரிதும் பயன்படும்.

– பி. இராமநாதன்

அமிழ்தம் பதிப்பகம்
எ4, மாதவ் குடியிருப்பு
5, டாக்டர் தாமசு சாலை
தியாகராயர் நகர்
சென்னை – 600 017

ந.சி.க. நூல் திரட்டு 18



# திருக்குறள் அகராதி

ந.சி.க
நூல்திரட்டு
18

அமிழ்தம் பதிப்பகம்

# திருக்குறள் அகராதி

*ஆசிரியர்*

**ந.சி. கந்தையா**

*தொகுப்பாளர்*

புலவர் **கோ. தேவராசன்** எம்.ஏ.,பி.எட்.,

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திருக்குறள் அகராதி** |
| ஆசிரியர் | : | **ந.சி. கந்தையா** |
| பதிப்பாளர் | : | **கோ. இளவழகன்** |
| முதல் பதிப்பு | : | 2003 |
| தாள் | : | 16.0 கி. மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16 + 124 = 140 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 130/- |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | பிரேம் |
| அச்சு | : | வெங்கடேசுவரா ஆப்செட்<br>20 அஜீஸ் முல்க் 5வது தெரு<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006 |
| கட்டமைப்பு | : | இயல்பு |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2 சிங்கார வேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 90304 |

# தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் வாழ்வும் தொண்டும் (1893 - 1967)

*தமிழ்மொழியின் தொன்மையை அதன் தனித் தன்மையை உலக மொழிகளோடு ஒப்பிட்டு விரிவாக ஆய்வு செய்தவர் தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள். தமிழ் இனத்தின் மேன்மையை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்தவரும் அவரே.*

***'தொண்டு செய்வாய்! தமிழுக்குத்***
***துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே'***

*என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். புரட்சிக் கவிஞரின் கனவை நினைவாக்கும் வகையில், தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் தமிழின் துறைதோறும் துறைதோறும் அரிய ஆய்வு நூல்களை எழுதியவர். தமது நூல்களின் வாயிலாக வீழ்ச்சியுற்ற தமிழினத்தை எழுச்சி பெறச் செய்தவர்.*

*ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் தமிழ்ப் பணியோ மலையினும் மாணப் பெரியது. ஆயினும் அவருடைய வாழ்க்கைப் பதிவுகளாக நமக்குக் கிடைப்பன தினையளவே யாகும். தமிழர்கள் அந்த மாமனிதரின் தமிழ்ப் பணியைக் கூர்ந்து அறிந்து தக்க வகையில் அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்யத் தவறி விட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது. இன்று அவருடைய வாழ்ககைக் குறிப்புகளாக நமக்குக் கிடைப்பன மிகச் சிலவாகும். அவை:-*

*தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் ஈழ நாட்டில் கந்தரோடை என்னும் ஊரில் 1893 ஆம் ஆண்டில் திரு நன்னியர் சின்னத்தம்பி என்பாரின் புதல்வராய்ப் பிறந்தார். தக்க ஆசிரியரிடம் பயின்று கல்வியில் தேர்ந்தார். பின்னர் கந்தரோடை என்னும் ஊரில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். ஆசிரியர் பணியிலிருக்கும் போதே தக்க பெரும் புலவர்களைத் தேடிச் சென்று தமிழ் இலக்கிய இலக்கணங்கள் முறையாகப் பயின்று பெரும் புலவராய் விளங்கினார். ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்ற வல்லுநராய்த் திகழ்ந்தார். பின்னர் மலேசியா நாட்டிற்குச் சென்று சிறிதுகாலம் புகைவண்டி அலுவலகத்தில் பணியாற்றினார்.*

*ந.சி. கந்தையா பிள்ளையவர்களின் தமிழறிவு ஆழமும் அகலமும் கொண்டது. அவரது வாழ்க்கை முழுமையும் தமிழ் ஆய்வுப் பணியே பெரும் பணியாக அமைந்தது. அவர் பெற்ற ஆங்கில அறிவின் துணையால் தமிழ் மொழி, தமிழினம் தொடர்பான மேலை நாட்டு அறிஞர்களின் நூல்களை*

யெல்லாம் நுணுகிக் கற்றார் வியக்கத்தக்க கல்விக் கடலாய் விளங்கினார். அறுபதுக்கு மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதினார்.

தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் தாம் எழுதிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்று வேட்கை கொண்டார். இலங்கையில் அதற்குப் போதிய வசதி இல்லை. ஆதலால் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்தார். சென்னையில் "ஒற்றுமை நிலையம்" என்னும் பதிப்பகத்தின் உரிமையாளராய்த் திகழ்ந்தவர் வீரபாகு பிள்ளை என்பவர். அவர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் நூல்கள் சிலவற்றை வெளியிட்டார். பின்னர் முத்தமிழ் நிலையம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆகியவற்றின் வாயிலாக ந.சி. கந்தையா பிள்ளையவர்களின் நூல்கள் வெளிவரலாயின.

ந.சி. கந்தையா பிள்ளையவர்களின் அருமைத் துணைவியார் இரத்தினம்மா எனப்படுபவர். இவருக்குத் திருநாவுக்கரசு என்றொரு மகனும் மங்கையர்க்கரசி என்றொரு மகளாரும் உண்டு. துணைவியார் பல ஆண்டுகளுக்கு முன்பே காலமானார். தமிழ்மொழி, தமிழினம் ஆகியவற்றின் மேன்மைக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை தமது எழுபத்து நான்காம் வயதில் 1967இல் இலங்கையில் மறைந்தார். எனினும் தமிழ் வாழும் வரை அவரது புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

தமிழறிஞர் கந்தையா பிள்ளை அவர்களின் தமிழ்ப்பணி மதிப்பு மிக்கது; காலத்தை வென்று நிலைத்துநிற்க வல்லது. தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, தமிழ்இனம் ஆகியவற்றின் வரலாற்றை எழுதியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு. அவருடைய ஆய்வுப் பணியைச் சிறிது நோக்குவோம்.

**அகராதிப் பணி**

தமிழ் மொழியில் முதன் முதலில் தோன்றிய அகராதி வீரமா முனிவர் எழுதிய சதுரகராதியே யாகும். பின்னர் பல்வேறு அகராதிகள் தோன்றின, வளர்ந்தன, வெளிவந்தன. அகராதி வளர்ச்சிப் பணியில் கந்தையா பிள்ளையவர்களுக்கும் பெரும் பங்குண்டு. அவர் படைத்த அகராதிகள் ஐந்து. 1. செந்தமிழ் அகராதி, 2. தமிழ் இலக்கிய அகராதி, 3. தமிழ்ப் புலவர் அகராதி, 4. திருக்குறள் அகராதி, 5. காலக் குறிப்பு அகராதி என்பன அவை.

ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் செந்தமிழ் அகராதி முன்னுரை யில் "நாம் தமிழ்த் தாய் மொழிக்குச் செய்யும் பணிகளுள் ஒன்றாக இந் நூலைச் செய்து முடித்தோம்" என்கிறார். "நூலொன்றைச் செய்து தமிழுலகுக்கு உதவ வேண்டும் என்னும் ஆவலால் பலவகையில் முயன்று இந் நூலைச் செய்து முடித்தோம்" என்று கூறுகிறார். தமிழ் இலக்கிய அகராதியில் அகத்தியர் முதல் வைராக்கிய தீபம் ஈறாக ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இலக்கியங்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. தமிழ்ப் புலவர் அகராதியில் பல நூற்றுக்கணக்கான தமிழ்ப்புலவர்களைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அவர் தொகுத்த திருக்குறள் சொற் பொருள் அகராதி

பயன்பாடு மிக்கது. காலக்குறிப்பு அகராதி புதுமை யானது. தமிழ் மொழியில் இது போன்ற அகராதி இதுவரை வெளிவந்த தில்லை "இந்நூல் ஓர் அறிவுக் களஞ்சியம்" என்கிறார் முனைவர். மா. இராச மாணிக்கனார்.

### இலக்கியப் பணி

புலவர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த தமிழ் இலக்கியச் செல்வத்தை எளிய மக்களும் படித்துப் பயன் பெறுமாறு உரைநடையில் வழங்கிய வள்ளல் கந்தையா பிள்ளை அவர்கள்.

பத்துப்பாட்டு, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலிங்கத்துப்பரணி, புறப்பொருள் விளக்கம், விறலிவிடுதூது போன்ற இலக்கியச் செல்வங்களை எல்லாம் இனிய எளிய நடையில் உரைநடையில் தந்தவர் கந்தையா பிள்ளை அவர்கள். திருக்குறளுக்கும், நீதிநெறி விளக்கத்திற்கும் அரிய உரை வரைந்தவர்.

### தமிழ்மொழி – தமிழினம்

தமிழ்மொழி - தமிழினம் தொடர்பாகப் பதினைந்துக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதியவர் கந்தையா பிள்ளை. தமிழகம், தமிழ் இந்தியா, தமிழர் சரித்திரம், தமிழர்யார்?, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர், நமதுமொழி, நமதுநாடு, தமிழ் ஆராய்ச்சி, தமிழ் விளக்கம், முச்சங்கம், அகத்தியர், சிந்துவெளி நாகரிகம், தமிழர் பண்பாடு, தமிழர்சமயம் எது? சிவன், சைவ சமய வரலாறு, தமிழ்ப் பழமையும் புதுமையும் போன்ற எண்ணற்ற அரிய ஆயவு நூல்களைப் படைத்தவர். ஆயிரக் கணக்கான நூற்கடலுள் மூழ்கி எடுத்த அரிய கொற்கை முத்துக்கள் அவரது நூல்கள். எத்தனை ஆண்டுகாலப் பேருழைப்பு! நினைத்தால் மலைப்புத் தோன்றும். தமிழின் - தமிழினத்தின் தொன்மையைத் தமிழர்தம் பண்பாட்டை - நாகரிகத்தை, தமிழர்தம் உயர் வாழ்வியலை உலகறியச் செய்த பேரறிஞர் கந்தையா பிள்ளை.

### திராவிட நாகரிகமும் – ஆரியத்தால் விளைந்த கேடும்

தொன்மை மிக்க திராவிட நாகரிகத்தின் சிறப்புகளை விளக்கும் வகையில் பல நூல்களை எழுதினார். அவை:-

திராவிடர் நாகரிகம், திராவிடம் என்றால் என்ன? திராவிட இந்தியா, தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் போன்ற அரிய ஆய்வு நூல்களை எழுதினார். ஆரியர்களால் விளைந்த கேடுகள் குறித்தும், ஆரியர் தமிழர் கலப்பு, ஆரியத்தால் விளைந்த கேடு, புரோகிதர் ஆட்சி, இராமாயணம் நடந்த கதையா? என்பன போன்ற நூல்களை எழுதினார்.

### பிற

மாணவர் தம் அறிவை விரிவு செய்யும் வகையில் எட்டு நூல்களும், மகளிருக்குப் பல்லாண்டுக் காலமாக இழைக்கப்பட்டு வரும் கொடுமைகள் குறித்து மூன்று நூல்களையும் எழுதினார். மேலும் மொழிபெயர்ப்பு நூல்கள் சிலவும் மனித இனத்தோற்றம் குறித்த நூல்கள் சிலவும் எனப் பல நூல்களை எழுதியுள்ளார். புரட்சிக் கவிஞர் கூறியவாறு துறைதோறும்,

துறைதோறும் எண்ணற்ற நூல்களை எழுதித் தமிழுக்கு வளம் சேர்த்தவர். ந.சி. கந்தையா பிள்ளை. புட்சிக்கவிஞர் பாரதிதாசனார், தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களைப் பற்றிப் பின்வருமாறு பாராட்டுகிறார்.

"ந.சி. கந்தையா எனும் நல்லவன், வல்லவன் தமிழ் தமிழின வரலாறனைத்தையும் தொல்பொருள் ஆய்வின் தொகை வகை, விரித்து நிலநூல், கடல்நூல் சான்றுகள் நிறைத்தும் தமிழ் நூற் சான்றுகள் முட்டறுத் தியம்பியும் இலக்கிய இலக்கணச் சான்றுகள் கொடுத்தும் பழக்க வழக்க ஒழுக்கம் காட்டியும் வையகம் வியக்க வரலாறு எழுதினான். பொய் அகன்று மெய்க் கை உயர்ந்தது."

வாழ்க! ந.சி. கந்தையா பிள்ளையின் பெரும் புகழ்!

தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் வரலாறே தமிழர் களால் மறக்கப்பட்டு விட்டது. தமிழ்ப் பகைவர்களால் மறைக்கப்பட்டு விட்டது. அங்ஙனமிருக்க அம் மாமனிதரின் ஆய்வு நூல்கள் மட்டும் எங்ஙனம் கிடைக்கும்? ஆழ்கடலிலிருந்து முத்துக்கள் எடுப்பது போல, தங்கச் சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டி எடுப்பது போல, பெருமுயற்சி எடுத்து ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் நூல்களைத் தேடினேன். நூல்நிலையங்களைத் தேடித்தேடி என் கால்கள் அலைந்த வண்ணம் இருந்தன. அதன் விளைவாக ஐம்பது நூல்கள் கிடைத்தன. பெரும் புதையலைத் தேடி எடுத்தது போல் பெருமகிழ்வுற்றேன்.

அன்பன்

**கோ. தேவராசன்**

# அகம் நுதலுதல்

உலகில் வாழும் மாந்தர் அனைவர்க்கும் உள்ளார்ந்த எண்ண ஓட்டங்கள் அலை அலையாய் எழுந்து பல்வேறு வடிவங்களில் வெளிப் படுகின்றன. சங்கக் காலத்துத் தமிழ் மாந்தர் தமது எண்ணங்களை ஒழுங்கு படுத்தி ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்தி வாழ முற்பட்டதன் விளைவே நாகரிகத்தின் தொடக்கம் எனலாம்.

உலகில் தோன்றி வாழ்ந்து வரும் எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது இயல்பாக விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகவே உள்ளது. அந்த இன்பத்துககுத் தடையோ இடையீடோ நேரின் அதைப் போக்கிக் கொள்ள முயலும் முறையில் மனிதக் குலத்துக்குத் தனிப் பண்பு சிறப்பாக வெளிப்பட்டிருப்பதைச் சங்க இலக்கியத்தின் வழி நன்கு அறிய முடிகிறது.

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று பெரும் பிரிவாக மனித வாழ்வின் இயல்பை வகுத்து இலக்கணம் செய்தாலும், அவன் உள்ளத்தில் எழும் உணர்வை வெளிப்படுத்த மொழியும் சொல்லும் அதன் பொருளும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்திருக்கின்ற பாங்கு புறத்திணைச் செய்யுளைக் காட்டிலும் அகத்திணைச் செய்யுள்களிலேயே மிகுந்திருப்பதைக் காண முடிகிறது.

தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றார். குறித்தனவே என்னும் தேற்றேகாரம் பொருள் குறியாத சொல் இல்லை என்பதையே உணர்த்துகிறது. இற்றை நாளில் நம்மில் சிலர் வஞ்சக எண்ணத்துடனும் பலர் மக்களின் சிந்தனை ஓட்டத்தைத் தூண்டி நல்வழிப் படுத்தவும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதைக் கேட்கிறோம்.

எருதுநோய் காக்கைக்குத் தெரியாது என்று கூறும் போதும் குதிரைக்குக் கொம்பு முளைத்தது போலத்தான் என்று கூறும் போதும் (முயற்கொம்பே) அச் சொல்லின் பொருளையும் அதனால் நுண்ணுணர் வுடையார் அறியும் வேறு பொருளையும் அச் சொல் உணர்த்துவதாக அறிய முடிகிறது. விடுகதைகள் சொல்லி அறிவைத் தூண்டிச் சிந்திக்க வைப்பதும் சிலேடையாகப் பேசி உட்பொருளை உணரத் தூண்டுவதும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அறிவார்ந்த செயல்கள்.

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்ப் பிரிவின் முடிவும் மனித னின் உள்ளுணர்வை வெளிப்படுத்த முயன்ற முயற்சியே. அகம் - புறம் என்ற பிரிவில் உள்ளத்து உணர்வைத்தான் நுகர்ந்தான் என்பதை எவ்வாறு வெளிப்படுத்துவது? எவ்வாறு அறிவது? அறமோ மறமோ - உயிர் உடல்

வேறுபாடுகளால், மொழியால், இசையால், அழுகையால், சைகை என்னும் நாடகத்தால் அல்லவோ வெளிப்படுத்த முடியும். அகத்தில் எழும் காதல் உணர்வை ஒருவனும் ஒருத்தியும் நுகர்ந்த நுகர்ச்சியை இத்தகையது என்று பிறர்க்கு அறிவுறுத்த இயலாது. அகத்தால் மட்டுமே உள் முகமாக நாடி ஆராய்ந்து அறிந்து கொள்ளமுடியும் என்பது உண்மை என்றாலும். இவ்வுணர்வு மனிதக் குலத்திற்கு ஒத்திருப்பதால் சில பல குறிப்புகளை மட்டுமே வெளிப்படுத்தினால் போதும் மற்றவரும் அறிந்து இது இவ்வாறு இருக்கும் என்று உணர்ந்து மகிழவும் ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்யவும் ஏதுவாக இருக்கிறது.

எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய மூன்றும் நானூறு நானூறு பாடல்களாலான தொகை நூல்கள். சங்கக்காலச் சான்றோரின் அரிய முயற்சியால் இவ்வாறு தொகுக்கப் பட்டாலும் அகப் பொருள் திணைக் களங்கள் ஐந்தும் இவற்றுள் கலந்துள்ளன. ஆனால் குறுந்தொகை 4 முதல் 8 அடிகளும், நற்றிணை 9 முதல் 12 அடிகளும், அகநானூறு 13 முதல் 21 அடிகளும் கொண்ட அடிவரையறை களையுடையன. ஏனோ அகநானூறு நீண்ட ஆசிரியப் பாவான் அமைந்து நெடுந்தொகை எனப் பெயர் பெற்றாலும் களிற்றி யானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக் கோவை என முப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உயிர் எழுத்துகள் 12 மெய் எழுத்துகள் 18 என்பதால் எழுத்துகள் ஒவ்வொன்றற்கும் பத்துப் பத்தாகக் களிற்று யானை நிரை 12 x 10 = 120 பாடல்களாகவும் மணிமிடை பவளம் 18 x 10 = 180 பாடல்களாகவும் பிரித்தனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. மதங் கொண்ட யானை போன்ற ஐம்புலனையும் ஒழுங்கு படுத்தக் களிற்றுயானை நிரை என்று உயிர் பன்னிரண்டை 120 ஆகப் பகுத்தனரோ! மணிபோன்ற மெய்யான உடலை நிரல்பட மாலையாகத் தொடுக்கப்பட்டதாக எண்ணிப் பதினெட்டை 180 மணிமிடை பவளமாகத் தொகுத்தனரோ! உள்ளமாகிய கடலின் ஆழத்திலிருந்து சேகரித்த நித்திலத்தை முழுமை பெற்ற மாலையாகத் தரித்து மகிழவோ முழுவதும் நூறி எழுந்த வெற்றி யின்பத்தைக் குறிக்கவோ 100 நூறு பாடல்களை நித்திலக் கோவை எனத் தொகுத்தனர் என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த முப்பான் பிரிவிற்குக் காரணம் முழுமையாகத் தோன்றவில்லை.

வகுபடாமல் ஒற்றைப் படையாய் எஞ்சி நிற்கும் எண்களையுடைய பாடல்கள் உரிப்பொருளால் பாலைத் திணைப் பாடல்களாகவும், இரண்டும் எட்டும் உரிப் பொருளால் புணர்ச்சியை உணர்த்தும் குறிஞ்சித் திணைப் பாடல்களாகவும், நான்கில் முடியும் எண்ணுள்ள பாடல்கள் நான்கு உறுதிப் பொருள்களை எண்ணி உரிப் பொருளால் ஆற்றி இருக்கும் முல்லைத் திணைப் பாடல்களாகவும், ஆறாவது எண்ணில் முடியும் பாடல்கள் தொடர்ந்து செல்லும் ஆறுபோல மனம் ஒருநிலைப் படாமல் மாறி மாறி உடல் கொள்ளவாய்ப்பாக அமைந்து நீர் வளம் மிக்க மருதத்திணைப் பாடலாகவும், முழுமை பெற்ற ஒன்றோடு சுழியைச் சேர்த்தது போன்ற பத்தாம் எண்ணுள்ள பாடல்கள் யான் என் தலைவனோடு சேர்ந்து என்று முழுமை பெறுவோனோ என்று இரங்கி ஏங்கும் உரிப்

பொருளால் நெய்தல் திணைப் பாடலாகவும் பகுத்துத் தொகுத்திருக்கும் பாங்கு அகநானூற்றுப் பாடல்களில் மட்டுமே காணப்படும் சிறப்பாகும். முல்லை, மருதம், நெய்தல் ஆகிய முத் திணைப் பாடல்கள் ஒவ்வொன்றும் சமமாக நாற்பது பாடல்களைக் கொண்டு பொதுவாக அமைந்துள்ளது. புணர்ச்சி உரிப் பொருளை உணர்த்தும் குறிஞ்சிப் பாடல்கள் எண்பதாக அமைந்தன; பிரிவை உணர்த்தும் பாலைத்திணைப் பாடல்கள் இருநூறாக உள்ளது வாழ்வில் இன்பம் அடைய துன்பத்தில் மிகுதியும் உழல வேண்டியுள்ளது என்பதை உணர்த்தவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அகத்துறைப் பாடல்கள் நாடகப் பாங்கில் அமைந்துள்ளன. சொல்ல வந்த கருத்தை நிலை நாட்ட உவமை மூலமாக விளக்குவது மிகவும் எளிது. பெண்கள் நயமாகப் பேசிக் கருத்தை வலியுறுத்திச் செயல் படுத்துவதில் வல்லவர்கள். அகத்துறையில் தோழி அறத்தொடு நின்று பேசும் பேச்சுகள் தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையைக் காட்டுவன. தோழியின் பேச்சில் உள்ளுறைப் பொருளும் இறைச்சிப் பொருளும் வெளிப்படும் பாங்கு நினைந்து நினைந்து போற்றத்தக்கன.

உள்ளுறை என்பது தெய்வம் நீங்கலாகக் கூறப்படும். அவ்வந் நிலத்துக் கருப் பொருள்களை நிலைக்களனாகக் கொண்டு உணரப்படும் குறிப்புப் பொருளாகும். கருப் பொருள் நிகழ்சசிகள் உவமம் போல அமைந்து அவற்றின் ஒத்து முடிவது போலப் பெறப்படும் ஒரு கருத்துப் பொருளாகும்.

இறைச்சி தானே பொருட் புறத்ததுவே என்பார் தொல்காப்பியர். இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே இறைச்சி தானே உரிப் புறத்ததுவே என்றும் பாடம். அகத்திணைக் கருப்பொருள்களின் மூலம் பெறப்படும் குறிப்புப் பொருள் இறைச்சி என்று கொள்ளலாம். அக் குறிப்புப் பொருளிலிருந்து வேறு ஒரு கருத்துப் பெறப்படுமாயின் அக் கருத்தே இறைச்சியில் பிறக்கும் பொருள் என்று கொள்ளலாம். அகநானூற்றில் முதல் கருப்பொருள்களுக்கே சிறப்பிடம் கொடுத்துப் பேசப்படுகிறது. மிக நுட்பமான உள்ளுறை உவமமும் இறைச்சிப் பொருளும் ஆங்காங்கு கண்டு உணர்ந்து மகிழுமாறு அமைந்துள்ளன. ஆசிரியர் சங்க இலக்கியச் செய்யுள்களில் பெரிதும் பயிற்சியுடையவர் என்பதை அவரது உரைநடையால் காணமுடிகிறது. செய்யுள் இலக்கணம் கடந்த உரைநடைப் பாட்டு என்று சொல்லுமளவுக்குத் தொடர்கள் அமைந் துள்ளன. நீண்ட எச்சச் சொற்களால் கருத்தைத் தெளிவுறுத்தும் பாங்கு இவ்வாசிரியர்க்கே கைவந்த கலையாக அமைந்து நம்மை எல்லாம் வியக்க வைக்கிறது.

சங்கக் காலத்தில் வழக்கிலிருந்த சொற்களை நினைவுறுத்தும் பாங்கில் அரிய சொற்களைத் தமது உரைநடையில் கையாண்டு தமிழைப் பழம் பெருமை குன்றாமல் காத்திட இவரது உரைநடை சிறந்த எடுத்துக் காட்டாகும் என்பதை இந்த அகநானூற்று உரைநடையைப் பயில்வார் உணர்வர் என்பது உறுதி.

அரிய நயம் மிக்க செந்தமிழ்த் தொடரையும் ஆசிரியர் தமது உரையில் தொடுத்துக் காட்டுகிறார். மெய்யின் நிழல் போலத் திரண்ட

ஆயத்தோடு விளையாடி மகிழ்வேன் என்று 49 ஆம் பாடலில் குறிப்பிடு கிறார். மெய் - உண்மை அவரவர் நிழல் அவரவரை விட்டுப் பிரியாது அது போல தலைவியை விட்டுப் பிரியாத தோழியரோடு தலைவி விளையாடி யதை எண்ணி மகிழலாம்.

உப்புவிற்கும் பெண் ‘நெல்லுக்கு வெள்ளுப்பு’ என்று கூவிக் கை வீசி நடக்கிறாள். பண்ட மாற்று முறையை இது நமக்கு உணர்த்துகிறது.

நீனிற வண்ணன் குனியா நின்ற ஆயர் பெண்களின் துகிலை எடுத்துக் கொண்டு குருந்தமரத் தேறினானாகப் பானிற வண்ணன் இடையர் குலப் பெண்களின் மானத்தைக் காக்கக் குருந்த மரக் கிளையைத் தாழ்த்தித் தழைகளால் மறைத்துக் காத்தான் என்று கூறும் வரலாற்றைப் பாலைத் திணைச் செய்யுள் 59 இல் கூறியிருப்பது எண்ணி மகிழத்தக்கது. பெண் யானை உண்பதற்கு ஆண் யானை யாமரத்தின் கிளையைத் வளைத்துத் தாழ்த்தித் தருவதைக் கண்டும், மதநீர் ஒழுகும் கன்னத்தில் மொய்க்கும் வண்டுகளை ஓட்டும் தழைகளின் செயலையும் ஒருங்கு இணைத்துப் பார்த்துத் தலைவனின் தண்ணளியை எண்ணி ஆறி இருக்கலாம் என்னும் தோழியின் கூற்றை மிக ஆழமாக ஆசிரியர் விளக்கிய பாங்கு போற்றுதற்கு உரியதாம்.

அன்பன்

புலவர் **த. ஆறுமுகன்**

# பதிப்புரை

**வளம் சேர்க்கும் பணி**

*"குமரிநாட்டின் தமிழினப் பெருமையை நிமிரச் செய்தான்," "சிந்தையும் செயலும் செந்தமிழுக்கு சேர்த்த நூல் ஒன்றா இரண்டா" என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் போற்றப்பட்ட தமிழீழ அறிஞர்* ***ந.சி. கந்தையா****வின் நூல்களை மீண்டும் மறுபதிப்புச் செய்து தமிழ் உலகிற்கு வளம் சேர்க்கும் பணியைச் செய்ய முன் வந்துள்ளோம்.*

*இப்பெருமகனார் எழுதிய நூல்கள் அறுபதுக்கு மேற்பட்டவை யாகும். இந்நூல்கள் சிறிதும் பெரிதுமாக உள்ளவை. இவற்றைப் பொருள் வாரியாகப் பிரித்து இருபதுக்கு மேற்பட்ட நூல் திரட்டுகளாகத் தமிழ் உலகிற்குக் களமாகவும், தளமாகவும் வளம் சேர்க்கும் வைரமணி மாலை யாகவும் கொடுத்துள்ளோம். மொழிக்கும் இனத்திற்கும் அரணாக அமையும் இவ்வறிஞரின் நூல்கள் எதிர்காலத் தமிழ் உலகிற்குப் பெரும் பயனைத் தரவல்லன.*

**ந.சி. கந்தையா**

*இவர் 1893இல் தமிழீழ மண்ணில் நவாலியூர் என்னும் ஊரில் பிறந்தவர். பிறந்த ஊரிலேயே பள்ளிப்படிப்பை முடித்து அவ்வூரிலேயே ஆசிரியப் பணியாற்றியவர். பின்னர் மலேசிய மண்ணில் சிலகாலம் தொடர்வண்டித் துறையில் பணியாற்றியுள்ளார். இவர் தமிழ் ஈழ மண்ணில் பிறந்திருந்தாலும் தமிழகத்தில் இருந்துதான் அவர் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்க்கும் நூல்கள் பல எழுதினார் என்று தெரிகிறது.*

*தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர்களில்* ***ந.சி. கந்தையா*** *குறிப்பிடத்தக்கவர். தன்னை முன்னிலைப் படுத்தாது மொழியையும் இனத்தையும் முன்னிலைப்படுத்திய பெருமைக்குரியவர். உலக மொழி களுள் தமிழ்மொழி தொன்மைமிக்கது. உலகமொழிகளுக்கு வேராகவும் சாறாகவும் அமைந்தது. தமிழர் சமயமும், கலையும் பண்பாடும், வரலாறும், தமிழன் கண்ட அறிவியலும் உலகுக்கு முன்னோடியாகத் திகழ்வன. இவற்றையெல்லாம் தம் நுண்ணறிவால் கண்டறிந்து பல நூல்களை யாத்தவர்.*

*தமிழியம் பற்றிய ஆய்வை ஆராய்ந்த அறிஞர்கள் பலருளர். இவர்கள் அனைவரும் கலை, இலக்கியம், சமயம், மொழி, வரலாறு, நாகரிகம்,*

பண்பாடு போன்ற பல துறைகளில் பங்காற்றியுள்ளனர். ஆனால், **ந.சி.க.** இத் துறைகளில் மட்டுமன்றிப் பொது அறிவுத் துறையிலும் புகுந்து புத்தாக்கச் செய்திகளைத் தமிழ் உலகிற்குக் கொடுத்தவர். இவருடைய மொழிபெயர்ப்பு படிப்பாரை ஈர்க்கக் கூடியவை. படித்தலின் நோக்கம் பற்றியும் பல்வேறு பொருள் பற்றியும் கூறுபவை. தமிழ் அகராதித் துறையில் இவர் எழுதிய **காலக்குறிப்பு அகராதி** தமிழ் உலகிற்குப் புதுவரவாய் அமைந்தது.

தமிழ் மொழிக்கு அரிய நூல்களைத் தந்தோர் மிகச் சிலரே. நிறைதமிழ் அறிஞர் மறைமலை அடிகளும், தமிழ் மலையாம் தேவநேயப் பாவாணரும் தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்க்கத்தக்க நூல்களைத் தமிழர்களுக்கு வைப்பாக எழுதிச் சென்றவர்கள். அவர் தம் வரிசையில் இவர் தம் நூல்களின் வரிசையும் அடங்கும். தமிழ் ஆய்வு வரலாற்றில் இவரின் பங்களிப்பு குறிக்கத்தக்கது. கழகக் காலச் செய்தி களைப் படித்துப் பொருள் புரிந்து கொள்வது பலருக்குக் கடினமாக இருந்தது. இவற்றை எளிதில் படித்துப் பொருள் புரியும் உரைநடைப் போக்கை முதன்முதலில் கையாண்டவர். இவரது மொழிநடை, கருத்துக்கு முதன்மை தருபவை. உரைநடை, எளிமையும் தெளிவும் உடையது. சிறுசிறு வாக்கிய அமைப்பில் தெளிந்த நீரோடை போன்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தென்னகம் பெற்றிருந்த நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளைக் கண்ணுக்குக் காட்சியாகவும் படிப்பாரின் கருத்துக்கு விருந்தாகவும் அளித்தவர்.

### நூல் திரட்டுகள் நுவலும் செய்திகள்

1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் காலம் தொட்டு இவர் வாழ்ந்த காலம் வரை தமிழரின் வரலாற்றுச் சுவடுகளை நுட்பமாக ஆராய்ந் துள்ளார். அவர் மறைவிற்குப் பிறகு இன்று வரை அவருடைய ஆய்விற்கு மேலும் ஆக்கம் தரும் செய்திகள் அறிவுலகில் தமிழுக்கும், தமிழர்களுக்கும் வலுவாய் அமைந்துள்ளன. தமிழும் சிவநெறியும் ஓங்கியிருந்தமை. - தாயாட்சிக் காலம் முதன்மை பெற்றிருந்தது. மொழியின் தோற்றம், சமற்கிருதம் எப்படித் தோன்றியது - ஆரியர் யார் - இந்தியாவிற்கு எப்படி வந்தனர் - தமிழரோடு எவ்வாறு கலப்புற்றனர் - ஆதிமக்களின் தோற்றமும், பிறப்பும் - இந்திய நாட்டின் ஆதிமக்கள், திராவிட மக்கள் - ஆதிமக்கள் பிறநாடுகளில் குடிபெயர்ந்தது - மொழிக்கும், சமயத்துக்கும் உள்ள உறவு - சமற்கிருதம் சமயமொழி ஆனதற்கான ஆய்வுகள் - வழிபாட்டின் தொடக்கம் - வழிபாடு எங்கெல்லாம் இருந்தது - பண்டைய மக்கள் எழுது வதற்குப் பயன்படுத்திய பொருள்கள் - மேலை நாடுகளிலும், சென்னை யிலும் இருந்த நூல் நிலையங்கள் - ஆரியமொழி இந்திய மண்ணில் வேரூன்றிய வரலாறு - தமிழுக்கு நேர்ந்த கேடுகள் - திருவள்ளுவர் குறித்த கதைகள் - வள்ளுவச் சமயம் - பண்டைய நாகரிக நாடுகள் - அந்நாடுகளில் பெண்களைப் பற்றிய நிலை - அகத்தியர் பற்றிய பழங்கதைகள் - திராவிட மொழிகள் பற்றிய குறிப்புகள் - உலகநாடுகளில் தமிழர் நாகரிகச் சுவடுகள் - திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் - திராவிடரின் பிறப்பிடம் - ஐவகை நிலங்கள், பாகுபாடுகள் - பழக்க வழக்கங்கள் - சிந்து வெளி நாகரிக

மேன்மை - புத்தரின் பிறப்பு - அவரைப் பற்றிய கதைகள் - இராமகாதை பற்றிய செய்திகள் - தென்னவரின் குலங்கள், குடிகள், வடவரின் குலங்கள், .குடிகள் - தமிழின் பழமை, தமிழக எல்லை அமைப்பு - பண்டைக்கால கல்வி முறை, உரைநடை - வேதங்கள், வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் - நீர்வழி, நிலவழி வணிகம் சிறந்தோங்கிய நிலை - மலைவழி, கடல்வழி, நிலவழி பொருள்கள் நிரம்பிய காலம் - சுற்றம் தழைக்க வாழ்ந்த நிலை - தமிழ வணிகர், வேற்று நாட்டு வணிகருடன் தொடர்பு கொண்டு மிக்கோங்கியிருந்த காலம் - வானநூல் கலையும், சிற்பக் கலையும், கட்டடக் கலையும் , இசைக்கலையும் மிக்கோங்கியிருந்த காலம் - ஆரியர் வருகைக்கு முற்பட்ட பிறமொழி கலப்பற்ற தூய தமிழ் பெருகி யிருந்த காலம் - உலக நாகரிகங்களுக்குத் தமிழர் நாகரிகம் நாற்றங்கால் - உலகப் பண்பாடுகளுக்குத் தமிழர் பண்பாடு தொட்டிலாக அமைந்தமை - அகராதிகள் - அறிவுத் தேடலுக்குரிய செய்திகள் - இவர்தம் நூல்களின் உயிர்க்கூறுகளாக அடங்கியுள்ளன.

### வாழும் மொழி தமிழ்

தமிழ் இளைஞர்கள் தம் முன்னோரின் பெருமையை உணர, எதிர்கால வாழ்விற்கு ஏணிப்படிகளாய் அமைவன இந்நூல்கள். எகிப்திய மொழி, சுமேரிய மொழி, இலத்தீனும், பாலியும் கிரேக்கமும் அரபிக் மொழியும் வாழ்ந்து சிறந்த காலத்தில் தமிழ் மொழியும் வாழ்ந்து சிறந்தது. பழம்பெரும் மொழிகள் பல மாண்டும் சில காப்பக மொழிகளாகவும் அறிஞர்களின் பார்வை மொழியாகவும் இருந்து வரும் இக் காலத்தில் இன்றளவும் இளமை குன்றா வளம் நிறைந்த மொழியாக தமிழ் மொழி வாழ்கிறது என்று நாம் பெருமைகொள்ளலாம்.

ஆனால், இத்தமிழ் மொழியின் நிலை இன்று ஆட்சிமொழியாக அலுவல் மொழியாக, இசைமொழியாக, கல்வி மொழியாக, அறமன்ற மொழியாக , வழிபாட்டு மொழியாக, குடும்ப மொழியாக இல்லாத இரங்கத் தக்க நிலையாக உள்ளது. தாய்மொழியின் சிறப்பைப் புறந்தள்ளி வேற்றுமொழியைத் தூக்கிப் பிடிக்கும் அவல நிலை மிகுந்துள்ளது. முகத்தை இழந்த மாந்தன் உயிர்வாழ முடியாது. எப்படி உயிரற்றவனோ, அவ்வாறே மொழியை இழந்த இனம் இருந்த இடம் தெரியாமல் அழியும் என்பது உலக வரலாறு காட்டும் உண்மை. ஒரு இனத்தை அழிக்க வேண்டுமெனில் மொழியை அழித்தால்தான் இனத்தை அழிக்க முடியும். உலக மக்களெல்லாம் தம் கையெழுத்தைத் தம் தம் தாய்மொழியில் போடுவதைப் பெருமையாகக் கொள்வர். ஆனால் தமிழ் மண்ணின் நிலையோ? எங்கணும் காணாத அவலம் நிறைந்தது. மொழியையும் இனத்தையும் உயர்வாகக் கருதிய இனங்கள் உலக அரங்கில் உயர்ந்து நிற்கும் உன்னதத்தையும் தாழ்வாகக் கருதிய இனங்கள் உலக அரங்கில் தாழ்வுற்று இருப்பதையும் தமிழர்கள் இனியேனும் அறிவார்களா?

**தமிழர்களின் கடன்**

*இளம் தலைமுறைக்கும் மாணவர்களுக்கும் பயன்படத்தக்க இவ்வரிய நூல்களைத் தொகுத்து 23 திரட்டுகளாகக் கொடுத்துள்ளோம். தமிழ் மொழியின் காப்புக்கும், தமிழரின் எழுச்சிக்கும் வித்திடும் இந்நூல்கள். தமிழர் யார், எதிரிகள் யார் எனும் அரிய உண்மைகளைக் கண்டு காட்டும் நூல்கள். இவரின் பேருழைப்பால் எழுதப்பட்ட இந் நூல்கள் பழைய அடையாளங்களை மீட்டெடுக்கும் நூல்கள். தமிழர் களுக்குள்ள பலவீனத்தை உணர்வதற்கும் பலத்தை உயிர்ப்பிப்பதற்கும் உரிய நூல்களாகும். இந் நூல்களைத் தேடி எடுத்து இளந்தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம். இவற்றைக் காப்பதும் போற்றுவதும் தமிழர்கள் கடன்.*

*மாண்டுபோன இசுரேல் மொழியையும் பண்பாட்டையும் மீட்டெடுத்த இசுரேலியர்களின் வரலாறு நமக்குப் பாடமாக அமைந்துள்ளது. உலக மக்களுக்கு நாகரிகம் இன்னதெனக் காட்டியவர்கள் தமிழர்கள். உலகில் முதன்முதலில் உழவுத் தொழிலையும் கடல் வாழ்வையும் வளர்த்தவர்கள் தமிழர்கள். முதன்முதலில் வீடமைப்பும், தெருவமைப்பும் நகரமைப்பும் நாடமைப்பும் கண்டவர்கள் தமிழர்கள். உலகில் முதன்முதலில் மொழியும் கலையும் ஆட்சிப் பிரிவுகளும், சட்டங்களும் பிற கூறுகளும் வகுத்தவர்கள் தமிழர்கள்.*

**எழுச்சிக்கு வித்திட...**

*உடம்பு நோகாமல் கை நகத்தின் கண்களில் அழுக்குபடாமல் தமிழகக் கோயில்களைச் சாளரமாகக் கொண்டு வாழும் கூட்டத்தால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் விளைந்த சீரழிவை இற்றைத் தலைமுறை அறிதல் வேண்டும். மறுமலர்ச்சிக்கும் உரிமைப் போருக்கும் உன்னத எழுச்சிக்கும் அந்தந்த நாடுகளில் இளைஞர்கள் முன்னெடுத்துச் சென்ற வரலாறு நம் கண்முன்னே காட்சியாகத் தெரிகிறது. அயர்லாந்து, செர்மனி, துருக்கி, சப்பானின் அன்றைய நிலையும், இன்றைய நிலையும் - தமிழ் இளைஞர்கள் படித்தால்தான் நம்நாட்டின் எழுச்சிக்கு வித்திட முடியும் என்பதை இந்நூல்களின் வாயிலாக உணர முடிகிறது.*

*இந் நூல் திரட்டுகள் வெளிவருவதற்கு எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் சென்னை வாழ் புலவரும், வடசென்னை தமிழ் வளர்ச்சிப் பேரவையின் செயலாளர், நிறுவனருமான புலவர் கோ. தேவராசன், மு.க.,க.இ., ஆவார். இவரின் பேருதவியால் முழுமையாக நூல்களைத் தேடி எடுத்துத் தமிழ் உலகிற்குக் கொடையாகக் கொடுத்துள்ளோம். அவருக்கு எம் நன்றி. இந்நூல்களைப் பொருள் வாரியாக பிரித்துத் திரட்டுகளாக ஆக்கியுள்ளோம். ஒவ்வொரு திரட்டிற்கும் தக்க தமிழ்ச் சான்றோரின் அறிமுக உரையோடு வெளியிடுகிறோம். இவர்களுக்கு என் நன்றி என்றும். இந் நூலாக்கப் பணிக்கு உதவிய கோ. அரங்கராசன், மேலட்டை ஆக்கத்திற்கு உதவிய பிரேம், கணினி இயக்குநர்கள் சரவணன், குப்புசாமி,*

கலையரசன், கட்டுநர் தனசேகரன், இந்நூல்கள் பிழையின்றி வெளிவர மெய்ப்புத் திருத்தி உதவிய புலவர் சீனிவாசன், புலவர் ஆறுமுகம், செல்வராசன் ஆகியோருக்கும் மற்றும் அச்சிட்டு உதவிய ‘ப்ராம்ட்’ அச்சகத்தார் மற்றும் ‘வெங்க டேசுவரா’ அச்சகத்தாருக்கும் எம் பதிப்பகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பதிப்பகத்தார்**

# உள்ளடக்கம்


ந.சி. கந்தையாப் பிள்ளை

வாழ்வும் தொண்டும். ... iii

அகம் நுதலுதல் ... vii

பதிப்புரை ... xi

**நூல்**

திருக்குறள் அகராதி ... 1

# திருக்குறள் அகராதி

# முன்னுரை

திருக்குறள் மூலப் பதிப்புகள் பல வெளிவந்துள்ளன; பல வெளிவருகின்றன. அவை கையடக்கப் பதிப்புகளாக விருத்தலின் அவற்றில் அருஞ்சொல், அருஞ் சொற்றொடர் களுக்குப் பொருள் சேர்க்கப்படுவதில்லை. திருக்குறளுக்கு அருஞ்சொல் அகராதி ஒன்று இருப்பின் அது திருக்குறள் மூலங்களைக் கையாளுவார்க்குப் பெரும்பயன் அளிப்ப தாகும். இஃதன்றி எவ்வெச்சொற்கள் எவ்வெவ்விடங்களில் ஆளப்பட்டுள்ளன வென்று அறிந்து கொள்வதற்கும் அது துணைதரும். இந்நூலைத் தொகுப்பதற்கு உதவிய நூல்கள் திரு. வா. மார்கசகாயஞ் செட்டியார் 1924இல் வெளியிட்ட திருக்குறள் சொற்குறிப்பு அகராதி, திருவாடுதுறை ஆதீனத் தார் வெளியிட்ட திருக்குறள் உரை வளத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் சொல் அகராதி, தமிழ்மணி சாமி வேலாயுதம் பிள்ளை அவர்கள் வெளியிட்ட (1952) திருக் குறள் சொல்லடைவு என்பன. இந்நூலில் சொற்களுக்கன்றி அருஞ்சொற்றொடர்களுக்கும் பொருள் தரப்பட்டுள்ளன. இடையிடையே பரிமேலழகரல்லாத பிற உரை ஆசிரியர் களின் உரைப் பகுதிகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

*ந.சி.கந்தையா*

# திருக்குறள் அகராதி

## அ

**அ** - அந்த 225, 247, 254, 350, 355, 370, 411, 423, 426, 475, 489, 641, 645, 671, 677, 695, 848, 950, 967, 1091, 1187.

**அஃகாமை** - சுருங்காமை 178.

**அஃகி** - சுருங்கி, நுண்ணிதாய் 175.

**அஃகி அகன்ற** - நுணுகி ஆராய்ந்து பெற்ற விரிந்த, நுனித்து அகன்ற 175.

**அஃதிலார்**-அதனை இல்லாதவர் 572.

**அஃது** - அது; அது என்னும் நிலை மொழிக்கு முன்னால் உயிரெழுத்தில் தொடங்கும் சொல்வரும் போது அது என்பது (பெரும்பாலும்) அஃது என்றாகும்; 38, 49, 76, 80, 132, 162, 170, 220, 226, 236, 242, 262, 363, 368, 414, 427, 459, 476, 556, 572, 575, 591, 600, 621, 943, 971, 1001, 1014, 1032, 1093, 1166, 1279, 1308.

**அகடு** - வயிறு 936.

**அகத்தது** - மனத்திலிருப்பதை 702.

**அகத்தார் நிலைக்கு** - உள்ளே நிற்பவரின் போர் நிலைக்கு 745.

**அகத்தான்** - மனத்தில், மனத்துடன் ஆகிய 93.

**அகத்து** - மனத்து 78; இடத்து, இடையில் 194, 694, 717, 723, 727, 814, 877, 1020, 1027, 1163, 1180, 1305, 1323.

**அகத்து உறுப்பு** - உள் உறுப்பாகிய 79.

**அகத்தே** - உள்ளே 271

**அகப்பட்டி** - மனங்கட்டுப்பாடில்லாதவர் 1074.

**அகம்** - மனம் 78, 277, 298, 786, 830, 1305, 1323; இடம் 101, 547, 1055.

**அகம்நக** - மனம் மலர 786.

**அகரம்** - அ என்னும் எழுத்து 1.

**அகலம்** - (புறத்தோர்க்கு அகழல் ஆகா அடி) அகலம் 743.

**அகலாக்கடை** - அதிகப்படாமல் இருப்பின் 478.

**அகலாத** - பிரியாத, பிரியாததற்கு (முன்) 1226.

**அகலாது** - (மிக) நீங்குதல் செய்யாது 691.

**அகல்** - அகன்ற, விரிந்த, பெரிய 25.

**அகழ்வார்** - தோண்டுவார் 151.

**அகறல்** - நீங்குதல் 1326.

**அகற்றும்** - விசாலப்படுத்தும் 372.

**அகன்** - அகம், மனம் 84, 92.

**அகன்ற** - விரிந்த 175.

**அகன்றாரும்** - பெரியவராயினாரும் 170.

**அங்கணத்துள்** - (தூய்மையற்ற) முற்றத்தில் 720.

**அங்கணம்** - முற்றம்; இது ஆரியச் சொல் எனக் கருதப்படும், உண்மையில் இது தமிழ்ச் சொல்லே. இதற்கு வீட்டிற்கு வெளியே உள்ள

இடம் (அகம் + கண் + அம்) என்பது பொருள்.

**அங்கம்** - உறுப்பு (அதி. 64) இது வட சொல் எனக் கொள்ளப்படும். இதனை அ-என்னும் சுட்டு அடி யாகப் பிறந்து கூறுபாடு என்னும் பொருள் தருவதொரு தமிழ்ச் சொல் எனவும் கூறலாம்.

**அசாவாமை** - தளராமை; தளரா தொழிக; மெய்யீற்று வியங்கோள் (நுண்) 611.

**அசை** - அசைந்தாடும், துவளும், அசையும் 1098.

**அசைஇ** - சோம்பி 1040.

**அசை இயற்கு** - அசையும் இயல் புடையவளுக்கு; அசை இயல் வினைத்தொகை (நுண்).

**அசைவின்மை** - முயற்சி 371.

**அசைவு** - தளர்வு, சோம்புதல் 594.

**அச்சம்** - பயம், நடுக்கம் 146, 501, 534, 1075.

**அச்சாணி** - கடை ஆணி, அச்சின் புறத்தே செருகும் ஆணி 667.

**அச்சு** - வண்டி அச்சு 475, 667.

**அஞர்** - துன்பம் 1086, 1179.

**அஞ்சப்படும்** - அஞ்சப்படுதல் வேண் டும் 202; அஞ்சல் வேண்டும் 824.

**அஞ்சல்** - பயப்படுதல் 428; பயப்படு தலை 1149; பயப்படாதிரு 1154.

**அஞ்சல் ஓம்பு** - பயப்படுதலைத் தவிர் 1149.

**அஞ்சற்க** - பயப்படாதொழிக, பயப் படவேண்டாம் 882.

**அஞ்சா** - அடங்கா 500; பயப்படாத 725, 761, 762, 778.

**அஞ்சாதவர்** - அஞ்சாது செல்ல வல்லவர் 723.

**அஞ்சாது** - பயப்படாது 585.

**அஞ்சாமை** - துணிவு 382; அஞ்சா தொழிதல் 428; துணிவு, உறுதிப் பாடு, திடபுத்தி 497.

**அஞ்சார்** - பயப்படார்கள் 201.

**அஞ்சான்** - (சபைக்குப்) பயப்படாத வன் (யாவன்) 647; பயப்படாது 689.

**அஞ்சி** - பயந்து 44, 325, 680, 730, 741, 863, 869, 883.

**அஞ்சுக** - அஞ்சவேண்டும் 882.

**அஞ்சுதும்** - அஞ்சுகின்றேன் 1128.

**அஞ்சுபவர்** - அஞ்சுவார் 464, 726, 906.

**அஞ்சும்** - அஞ்சுதற்கு ஏதுவாகிய 244; அஞ்சுவர் 451; பயப்படுகின்ற 727; அஞ்சி ஒழுகும் 904; அஞ்சுவான் 905; அஞ்சுவர் 1152; அஞ்சுகின்றது 1295.

**அஞ்சும் அவன்**-அஞ்சுகின்றவன் 727.

**அஞ்சுவது** - அஞ்சித் தடுப்பது 366; பயப்பட வேண்டியது (பாவம்) 428.

**அஞ்சுவர்** - பயப்படுவர் 201.

**அஞ்சுவார்** - பயப்படுவார் 729.

**அஞ்சுவான்** - பயப்படுகின்றவன், (கோபத்துக்கு) அஞ்சுகின்றவன் 905.

**அடக்கமுடைமை** - மனம், மொழி, செயல் என்பவற்றைத் தீயவழியிற் செல்லாமல் அடக்கிக் கொள்ளு தல் (அதி. 13)

**அடக்கம்** - மனம் மொழி மெய்களைத் தீய வழியிற் செல்லவிடாது இருக் கும் ஒழுக்கம் 121, 122.

**அடக்கல்** - ஒடுக்கல், செல்லவிடாது தடுத்தல் 126.

**அடங்க** - ஒடுங்க 123.

**அடங்கல்** - அடங்குதல், மனம் புறத்துப் பறவாது அறத்தின்கண் நிற்றல், தன் வசமாதல் 130.

**அடங்கா** - அமைவில்லாத, அவற்றின் படி நடவாத, அடங்கி ஒழுகாத 834.

**அடங்காமை** - மனமொழி மெய்களை அடங்காமை 121.

**அடங்கியான்** - அடங்கியவனது 124.

**அடல்** - வருத்துதல் 206; கெடுத்தல் 343; தாக்குதல், போர் செய்தல் 768; கெடுத்தல், கொல்லுதல் 893.

**அடல் வேண்டின்** - தன்னை அழித்துக் கொள்ள விரும்பினால் 893.

**அடி** - தாள், பாதம் 3, 4, 10, 208, 544, 610, 1120, 1279.

**அடி அளந்தான்** - திருமால் 610.

**அடி உறைதல்** - தாள்களில் வந்து தங்குதல் 208.

**அடிக்கு** - பாதங்களுக்கு 1120.

**அடிமை** - அடியவனாந்தன்மை, தொண்டு 608.

**அடு** - வெல்லும் 567; சமைத்த 1065; காய்ச்சப்பட்ட 1090.

**அடுக்கி** -மேலும் மேலும், மேன் மேலாகி 625.

**அடுக்கிய** - தொடர்ந்த; முன்னும் பின்னுமாக வருகின்ற 525; பலவாக அடுக்கிய 954, 1005.

**அடுக்கிய கோடி** - பலகோடி 954, 1005.

**அடுங்காலை** - இறக்கும்போது, கூற்றுக் கொல்லும்போது 799.

**அடுங்கால்** - துன்பஞ் செய்யும்போது 1166.

**அடுத்த** - மடங்கு, மடங்கான 450, 817.

**அடுத்தது** - (தன்னை) அடுத்த பொருள்களை 706.

**அடுத்திருந்து** - தொடங்கியிருந்து 867.

**அடுத்து** - தொடர்ந்திருந்து 621; தொடங்கி 867; நெருங்கி 1030.

**அடுத்தூன்றும்** - பக்கத்திலே அடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கோல் (போல) நெருங்கித் தாங்கவல்ல 1030.

**அடுப** - வெல்லுவர் 493.

**அடுமுரண்** - வெல்லும் வலி 567.

**அடும்** - கொல்லும் 207; வெல்லும் 495; கொல்லும் 500, 799.

**அடைக்கும்** - தடுக்கும் 38, 71.

**அடைக்கும் தாழ்** - அடைத்து வைக் கும் தாழ்ப்பாள் 71.

**அடையாவாம்** - சாராவாம் 939.

**அட்டிய** - வார்த்த 1093.

**அணங்கு** - காம நோயால் உயிர்கொள் ளும் தெய்வப் பெண் 918; தெய்வப் பெண் 1081, 1802.

**அணங்குறுத்தல்** - துன்புறுத்தல் 109.

**அணி** - ஆபரணம், அழகு 95; அழகு 115, 118; ஆபரணம் 701; அழகு 738, 742; அழகு 1014; ஆபரணம் 1089; அழகு 1102; அழகு, மலர்ச்சி 1273.

**அணிஇழை** - அழகிய ஆபரண மணிந்த பெண்; வினைத் தொகை, அணிதலையுடைய எனவேற்று-மைத் தொகையுமாம், அன்மொழி யாயினும் ஆகுபெயராயினுமாகுக.

**அணிகலம்** - அழகு 575.

**அணி நிழற்காடு** - அழகிய நிழ லுடைய காடு; செறிந்த காடு 742.

**அணியுமாம்** - புனையும், அலங்கரிக் கும், பிறரின் தமக்கொரு மிகுதியை ஏற்படுத்திக்கொள்ளும் 978.

**அணுகாது**- (மிகக்) கிட்டாது, நெருங் காமல் 691.

**அண்ணாத்தல்** - வாயைத் திறத்தல்; புறப்படவிடுதல் (மண) 255.

**அதர்** - வழி 594.

**அதற்கு** - அக் கல்விக்கு 391; அவ் வினை செய்தற்கு 518; அவ்வுரி மைக்கு 802; உயிருக்கு 1124; ஊரு தற்கு 1330.

**அதனால்** - அது காரணமாக 303, 642, 1031.

**அதனினும்** - அதிலும் பார்க்க 152, 1158.

**அதனின்** - அதிலும் பார்க்க 122, 302; அப்பொருளால்; அதனளவு 341; அதனிலும் பார்க்க 644, 1166.

**அதனை** - அதை 32, 77, 152, 262, 495, 517, 621, 859; 1141, 1143.

**அதனோடு** - அதனுடன் 550.

**அதன்** - அவை தமக்கு 60; அதற்கு 323; அதனுடைய 490, 773,அதை 1038; அதனுடைய 1289.

**அதி** - மிக 7636, அதி என்பது வட சொல்லெனக் கருதப்படுகின்றது. இது தமிழ் எனக் கொள்ளினும் இழுக்காது. அதிகாலை என்னு மிடத்து அதி என்பது அது என்றும் சுட்டுப் பெயரடியாகப் பிறந்து மிக என்னும் பொருளுணர்த்தும். இவை யென்றது நணியவற்றை; உவை யென்றது அவற்றிற்சேயவற்றை; அவையென்றது அவற்றிற்சேய வற்றை; (பரி. 40 உரை) மிகச் சேய் மையிலுள்ளது அதி எனப்பட்டது. இப் பொருளிலிருந்து அதி என்ப தற்கு மிகுதி என்னும் பொருள் வருதல்சாலும், வடமொழி தொடர் பான அடி வேறு வகையினதாகும்.

**அதிர** - நடுங்கும்படி 429.

**அது** - அஃறிணை ஒருமைச் சுட்டுப் பெயர் 36, 45, 74, 165, 231, 257, 278, 332, 333, 334, 362, 364, 452, 477, 533, 536, 570, 596, 901, 948, 985, 996, 1144, 1166, 1284, 1302, 1307.

**அதூஉம்** - அதும்; அது என்னும் முற்றுகரத்தின் மேல் இழிவு சிறப்பும் மையின் உயிரேறி உம் என நின்று பின் செய்யுள் இசை நிறைக்க அளபெடுத்து அதூஉம் என நின்றது. (இரா. உரை) 230, 546.

**அத்தால்** - அதனால் 524.

**அத்து** - சாரியை 13, 21......

**அந்தணர்** - அழகிய தண்ணளியை உடையவர்; உயிர்களிடத்துக் கரு ணையுடையவர் 30; துறவோர் 543.

**அந்தணன்** - கடவுள் 8.

**அந்நிலை** - அது நிற்குமளவில் 439.

**அந் நிலையே** - அது செய்யாது; முன்னை நிலையிலேயே நின்று 967.

**அப்பால்** - அப்பகுதி 950.

**அப்பால் நாற்கூற்று** - நான்கு பகுதி களையுடைய நான்கு திறத்தது. அதாவது உற்றான் முதலிய நான் கும் தனித்தனி நான்கு பகுதிகளா கும் (பரிமே); நோயுற்றான்... முதலிய நான்கு கூற்றது மருந்து (மண) 950.

**அப்பொருளை** - அவ்விரகசியத்தை 695.

**அமரகத்து** - போர்க்களத்தே 1027.

**அமரர்** - தேவர் 121; (இது வட சொல்-லெனக் கருதப்படும். தமிழ்ச் சொல் லெனக் கூறுவார் இனிது அமர்ந் திருப்பவர் எனப் பொருள் கூறு வர். இச் சொல் வானத்தில் இருப்ப வர் என்னும் பொருளில் அ அமரர் என நின்று பின் அமரர் என்றாயிற் றென்று கொள்ளல் மிக எற்றதாகின் றது. அ, இ, உ என்னும் சுட்டுகளி லிருந்து தமிழிலுள்ள சொற்களிற் பெரும்பாலன தோன்றி யுள்ளன என்பது தமிழ் மொழி ஆராய்ச்சி யாளர் கருத்தாகும்).

**அமராமை** - (முன் சுற்றமாக) இராமை 529.

**அமர்** - போர் 9814; அமர்செய்கின்ற 1083; அமரைச் செய்யும் 1125.

**அமர்க்கண்** - போர் செய்கின்ற கண்கள்; அமர்த்தல் போர் செய்தல் 1083.

**அமர்த்தன** - மாறுபட்டிருந்தன. அமர்த்தல் மாறுபடுதல்; குணங்

கட்கும் பேதைமைக்கும் ஏலாது கொடியவாயிருந்தன வென்பதாம் 1084.

**அமர்ந்த** - பொருந்திய 75.

**அமர்ந்து** - மகிழ்ந்து 84; மலர்ந்து, விரும்புதலை; விரும்பி 92, 93.

**அமிழ்தும்** - சாவா மருந்து; இது அம்ருத என்னும் வடசொல்லின் வேறு பாடெனப்படுகிறது. (இதனைத் தமிழ்ச் சொல் எனக் கூறுவார் இதற்கு இன்பத்தில் ஆழ்த்துவது என்னும் பொருள் கூறுவர். இச்சொல் ழகர உச்சரிப் புடைமையால் பழந்தமிழ்ச் சொல் ஆகலாம். நாவாய், நேவியாகவும், கல், கல்குலஸ் ஆகவும் ஆங்கி லம், இலத்தின் முதலிய மொழிகளில் வழங்குதலை ஒப்ப அமிழ்தமே வட மொழியில் அம்ருதமாயிருத் தலும் கூடும்.)

**அமிழ்தினும்** - அமிழ்தத்தினும் பார்க்க; உம்மை உயர்வு சிறப்பு 64.

**அமிழ்தின்** - அமிழ்தத்தைவிட 64; அமிழ்தினால் 1106.

**அமிழ்து** - அமிர்தம், தேவருணவு 64, 720, 1106.

**அமை** - மூங்கில் 906.

**அமைகலா** - செய்ய மாட்டாத; செய்ய மாட்டாது 219.

**அமைச்சு** - மந்திரிமாரின் குணம் செயல் முதலியன (அதி. 64) 381; மந்திரிமார் 631, 632, 633, 634 (அமைச்சர் என்னும் சொல் ஆமாத் தியர் என்பதிலிருந்து பிறந்ததெனச் சிலர் கூறுவர். அமைவு என்பதி லிருந்து அமைச்சர் தோன்ற வில்லை. ஆமாத்தியரிலிருந்து தோன்றியதெனக் கூறுதல் மிக மிகப் பொருத்தமற்றதாகும்).

**அமைதல்** - பொருந்துதல் (நட்புக் கொள்ளுதல்) 825; (அளவுக்கு, அமைதல்; சேருதல், 1302.)

**அமைந்த** - அடக்கமான 635; பெரிய 900.

**அமைந்தக் கண்ணும்** - வாய்த்த விடத்தும் 606.

**அமைந்தற்று** - வேண்டுமள விற்றாதல் போல 1302.

**அமைந்தார்** - (கணவனாக) அமைந் தவரது, காதலரது 1155.

**அமைந்தின்று** - 1 அமைந்தது இல்லை, அமையவில்லை 340.

**அமைந்து**-(தன்மைகளால்) நிறைந்தது 118; பொருந்தி (சமாதானப்பட்டு) 474; நிறைந்து 761.

**அமையல** - இருக்க முடியவில்லை, திருப்தியடைய வில்லை 1283.

**அமையா** - வாழ முடியாத, இல்லாமல் முடியாத 961.

**அமையாக்கடை** - ஏற்றுக் கொள்ளாத விடத்து, உடன்படாத விடத்து 803.

**அமையாத** - முடியாத 682; பொருத்த மில்லாத 825

**அமையாது** - நடவாது. முடியாது 20.

**அமையார்** - (அமை + ஆர்) மூங்கில் போன்ற 906.

**அமையும்** - உண்டாகும் 298; (துன் பத்தை நீக்குவதற்குப்) போது மானது 708; ஏற்புடைத்து 1193.

**அமைவர்** - பழகுவர், மேவுவர் 580.

**அமைவில** - பொறுக்கின்றில 1178.

**அமைவிலன்** - பொருத்தம் இலன் 862.

**அமைவிலாத** - பொருத்த மில்லாத 740.

**அமைவு** - பொருந்துதல், மேவுதல்; “வேத்தமைவு எனவே குடிகள் அவன் மாட்டு அன்புடையராத லும் அவன்றான் இவர் மாட்டு

அன்புடையராதலும் அடங்கின" 740; மிகுதி, 743; அமைதல் 1178.

**அமைவு இலன்** - பிறரோடு பொருத்தம் இலன் 863.

**அம்** - அழகிய 1107.

**அம்பினில்** - அம்பினும், அம்பை வைத்திருப்பதை விட 772.

**அயர்கம்** - உண்பேமாக, செய்வோம் 1268.

**அரங்கு** - சூதாடு கோடுகள்; சதுரங்கக் கோடுகள் 401 (இதனை வடசொல் லாகக் கொள்வாருமுளர். அரங்கு என்பது அறு என்னும் அடியாகப் பிறந்ததெனலாம். அப்படியாயின் கோடு அறுத்தல் வகுத்தல் என்னும் பொருளதாகும். (அரம், அராவுதல் முதலிய சொற்களை நோக்குக.)

**அரசர்** - வேந்தர் 381 (இது ராஜா என்னும் வட சொல்லின் திரிபு எனக் கொள்வாருமுளர். ஐரோப்பிய ஆரிய மொழிகளில் இச்சொல் காணப்படாமையால் அரசு என் னும் தமிழ்ச் சொல்லே வடமொழி யில் ராஜா என வழங்கும் எனக் கருதப்படும். அரணுடையவன் அரசன்.)

**அரசு** - அரசன்; அரசனது தன்மை 384, 385, 554.

**அரண்** - கோட்டை; கோட்டை மதில் 381, 421, 492; காவல், பாதுகாப்பு 534; கோட்டை 741, 750.

**அரம்** - அராவும் கருவி. 567, 888, 997.

**அரம் பொருத** - அரத்தால் தேய்க்கப் பட்ட 888.

**அரிது** - ஆகாது, முடியாது 7, 8, 29, 101; இல்லை 177, 227, 235, 248; உண்டா காது, அருமையுடையது 377, 419, 499; இல்லை 606, 647, 693, 762, 823, 843, 886, 1049, 1153, 1155, 1156, 1160, 1180, 1276.

**அரிது ஆற்றி** - பிரிவுக்கு உடன்பட்டு 1160.

**அரிதே** - அரியது 213, 443, 503.

**அரிந்தற்று** - அறுத்தாற் போலும் 1304.

**அரிய** - அரியவை, எளிதில் இயலா தவை 26, 489; அரிய நூல்களை (அரசர்க்குரிய போர் நூல் பொருள் நூல் ஆட்சி நூல் முதலியன) 503; அரியவை 537, 664, 781.

**அரியது** - அரிய காலம் 489; அருமை யுடையது 747.

**அரியர்** - சிலர், பெறுதற்கு அரியர் 723; (நாம் காமம் மீதூர்தற்கு) அரியர் 1138.

**அரியவற்றுள்** - அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் 443.

**அரியவை** - பொறுத்தற்கரியன 693.

**அரிவை** - பெண் 1107.

**அரு** - அரிய, அரியதான 483, 631, 647.

**அருங்கேடன்** - அரிதாகிய கேட்டை உடையவன் (கேடிலன்) 210.

**அருங்கேடு** - அழிவில்லாமை 732.

**அருஞ்செவ்வி** - (தன்னைக்காண வரு கின்றவருக்குச்) சமயமின்மை 565.

**அருட்செல்வம்** - அருளால் வருஞ் செல்வம், அருளுடைமையாகிய செல்வம், 241.

**அருட்பொருள்** - அருளாகிய பொருள் 914.

**அருந்தியது** - உண்டது 942.

**அருப்பு** - கிளைத்தல்; அரும்பி- வளர்தல்; அரும்பு 522.

**அருமறை** - அரிய இரகசியங்களை 847.

**அருமை** - முடியாமை, கடுமை 611; பொறிகள் இருப்பதால் கடத்தற்கு அருமை 743; அடைதற்கு அருமை 1142.

**அருமை உடைய** - (பிறர் செய்தற்கு) அருமையுடைய 975.

**அரும்** - அறிதற்கரிய 198; பெற முடியாத 462; இன்மை 732.

**அரும்பயன்** - அருமைதரும் (நன்மை தரும்) காரியங்களை 198.

**அரும்பி** - உண்டாக்கி 1223; முகிழ்ந்து, மொட்டாகி 1227.

**அருவினை** - முடித்தற்கருமையுடைய செயல் 483, 631.

**அருளல்லது** - பாவம் 254.

**அருளற்றார்** - அருளில்லாதவர் 248.

**அருளாட்சி** - அருளாற் பயன் கொள்ளுதல் 242.

**அருளாதான்** - அருளில்லாதவன், இரங்காதவன் 249.

**அருளாள்க** - கருணையுடைய செயல்களிற் பழகுக 242.

**அருளின்மை** - கருணையின்மை 1209.

**அருளென்னும்** - அருளாகிய 757.

**அருளொடும்** - அருளுடைமை யோடும்; குடிகளிடத்துச் செய்யும் அருளோடும் 755.

**அருள்** - அருளொழுக்கத்தை; துறவு 176; கருணை, அருளுடைமை (அருளுடைமையானது யாதானும் ஒரு உயிர் இடர்ப்படுமிடத்து தன் னுயிர் வருந்தினாற்போல் வருந் தும் நீர்மை, - இளம்பூரணர்) 241, 248, 251, 252, 254, 285, 938.

**அருள் ஆள்வாற்கு** - கருணையுடைய வனாகியிருப்பவனுக்கு 244.

**அருள் பொருள் ஆயும்** - அருளைப் பொருளாக ஆராயும்; அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்து செய்யும் 914.

**அரோ** - அசை நிலை,ஈற்றசை 1153, 1256.

**அலகு** - நெற்கதிர், நெல் 1034.

**அலகை** - பேய் 850.

**அலந்தாரை** - துன்பமடைந்திருப் பவரை 1303.

**அலரறிவுறுத்தல்** - களவொழுக்- கத்தை அறிந்த பிறர் தூற்றுதல் தனக்கு நன்மையுடைத்தாதலைத் தலைவன் தோழிக்குத் தெரிவித் தல் (அதி. 115).

**அலர்** - பலர் அறிதல் 1141, 1142 - 1146, 1149, 1296, 1301.

**அலர் எழ** - பிறரறிந்து தூற்றுதல் எழுதலால் 1141.

**அலர் நாண** - அலர் தூற்றுவதற்கு நாண 1149.

**அலை** - அலைத்தற்றொழில், வருந்து தல் 551.

**அலைக்கும்** - தொந்தரவு கொடுக்கும் 735.

**அல்** - அல்லாததாகிய 301; ஆகா 1299; அல்லாத 1300.

**அல்ல** - ஒழிந்த 61; ஆகா 95; இல்லை 115; நடுவல்லாதவற்றை 116; பாவங்கள் 150; அல்லாதன 157, 173; பாவம் 181; அல்லாத 289; இல்லை 279; அன்றி 337; அல்லாத 351, 376; இல்லை 400; அல்லாதவற்றை 466, 700, 944, 962; இல்லை 1012.

**அல்லதற்கண்** - துன்பத்தில் 798.

**அல்லது** - அல்லாதது 108; இல்லது 231, 254; அல்லாமல் 491; 570, 751; குற்ற முள்ளது (செய்யக் கருதின்) 795; அல்லாமல் 951; செய்வதல்லது 1090; அல்லாமல் 1131, 1159, 1168.

**அல்லம்** - அல்லாதவராவோம் 1209.

**அல்லர்** - அவரில்லை 143, 880, 926, 973; அல்லராதல் 1300.

**அல்லல்** - துன்பம், 245, 379, 460, 555, 626, 787, 936, 938, 1160, 1301, 1303.

**அல்லவரை** - அல்லாதவரை 751.

**அல்லவற்றை** - இல்லாதவற்றை 351.

**அல்லவை** - பாவங்கள் 96, 164, 182, 246; தவமல்லாதவை 274; அருளல் லாதவை 384; அலைத்தற் றொழில் 551; பிறவற்றை 1286.

**அல்லற் கண்** - துன்பம் வந்தவிடத்து 798.

**அல்லனேல்** - அல்லாதவனாயின் 386.

**அல்லாதவர்க்கு** - இல்லாதவருக்கு 1077.

**அல்லார்** - அல்லாதார் 266, 419, 720, 822, 973.

**அல்லார்க்கு** - அல்லாதவருக்கு 726, 918, 999.

**அல்லால்** - அல்லது, அல்லாமல், 7, 8, 16, 233, 235, 377, 406, 497, 515, 762, 1095, 1183.

**அல்லாவார்** - வருந்தார் 593.

**அல்லிடம்** - பலியாத இடம் 301.

**அல்லை** - (நீ அப்படி) இல்லை 1221.

**அல்வழி** - ஆகாதபோது 1299, 1300.

**அவம்** - வீண் 262, கேடு; பயனில் லாதன 262, 266.

**அவரவர்** - அவரவருக்குள்ள 469.

**அவரின்** - அவரிலும் பார்க்க 1074.

**அவர்** - மக்கள் 63, 65; ஒருவர் 109; இன்னா செய்தார் 314; துறவாதவர் 348; கல்லாதவர் 410; கேள்வியுடை யவர் 417; உடையவர் 447; அவரவர் 469; ஆற்றார் 506; அவர் 653; உடையார் 112, 721, 807, 977, 1016; ஈபவர் 1051; கயவர் 1071; காதலர் 1152, 1155, 1156, 1182, 1183, 1184, 1188, 1204, 1255, 1236, 1242, 1244, 1249, 1261, 1293, 1297, 1198, 1321.

**அவர்க் கண்ட** - அவரைக் கண்ட 1177.

**அவர்க் காணாது** - அவரைக் காணாது 1178.

**அவர்க் காதல்** - (நம்மை நினையாது) அவர்க்காய் நிற்றல்; அவர் கருதிய தற்கு உடம்படல் 1291.

**அவர் பழி** - இரக்கப்பட்டவர்க்குப் பழி யல்லது 1051.

**அவர் பொருள்** - அவர்களைப் பெறு தலாகிய செல்வம் 63.

**அவர் வயின் விதும்பல்** - பிரிந்திருந்த கணவன் மனைவியர் தம்முள் ஒருவரை ஒருவர் காணுதற்கு விரைதல். (அதி. 127)

**அவலம்** - கவலை - 1072.

**அவள்** - அப்பெண் - 1093, 1113, 1279.

**அவற்றின்** - பகை இரண்டனுள் 875.

**அவற்றுள் செல்வங்களுள்** 61; அவை களுள் 504.

**அவனின்** - அவன் போல 526.

**அவன்** - 684, 727.

**அவா** - ஆசை 35, 361, 364, 365, 366, 368, 369, 370, 513; விரும்பப்படும் பொருள் 1075; ஆசை 1310.

**அவாம்** - விரும்பிச் செய்யும் 215; விரும்பும் 681.

**அவாய்** - அவாவி, விரும்பி 643.

**அவாவின்மை** - பொருள் மேல் ஆசை இன்மை 513.

**அவி** - நெய் 259; தேவர்களை நினைத்து ஓமத்தில் இடும் நெய் முதலியன 413 (அவித்துப் படைப்பது அவி எனப்படும், அவி என்பதே வட மொழியில் ஹவிஸ் என வழங்கி யிருக்கலாம்.)

**அவித்தான்** - அறுத்தான் 6; அடக்கிய வனது 25.

**அவித்து** - நீக்கி 695.

**அவியின்** - இறந்தால் 420.

**அவிர்** - விளங்கும் 1117.

**அவை** - சபை 67; அரங்கு 332; அது என்பதன் பன்மை 400, 658, 659; சபை 711, 717, 723, 725, 727, 729; அப்பொருள்கள் 1105.

**அவை அஞ்சாமை** - சபையில் எழுந்து பேசும்போது அஞ்சாதிருத்தல். (அதி. 73)

**அவை அவை போலுமே** - அவை அவை கிடைத்து இன்பஞ் செய்வது போல் இன்பம் செய்யும் போலும் 1105.

**அவை அறிதல்** - அரசனை சூழ்ந் திருப்பவரின் மன நிலையை அறிந்து பேசுதல். (அதி. 72)

**அவை நீக்கி** - அவற்றை நீக்கி 787.

**அவையத்து** - சபையில் 67.

**அவ்** - அந்த 254.

**அவ்வது** - அவ்வாறு 426.

**அவ்வித்து** - பொறாமைப்பட்டு 167.

**அவ்விய** - அழுக்காறு 164.

**அவ்வுலகம்** - வீட்டுலகம் 247.

**அழ** - வருந்தி 659.

**அழச் சொல்லி** - கண்டித்துச் சொல்லி (விலக்கி) 795.

**அழப்போம்** - அழுது கவலைப்படும் படி போம் 659.

**அழல்** - நெருப்பு 1228.

**அழிக்கல்** - அழித்தல், கெடுத்தல் 421.

**அழிக்கும்** - கெடுக்கும் 934.

**அழிதல்** - வருந்துதல். (அதி. 118)

**அழித்து** - (உணர்வைக்) கெடுத்து 359; (அப்பார்வையை) மாற்றி 775 ; மறித்து, (அதற்கு) மாறாக 1317.

**அழிந்து** - கெட்டு 498.

**அழிபசி** - மிக்கபசி 226.

**அழிப்பது** - கெடுப்பது 744.

**அழிய** - அழியும்படி 968.

**அழிவதூஉம்** - அழிவதனையும் 461.

**அழிவந்த** - அழிவுவந்தவை 807.

**அழிவிலான்** - கலக்கமில்லாதவன் 625.

**அழிவின் அவை** - அழிவைத் தரு கின்ற தீயவழிகள் 787.

**அழிவின்று** - (போரில்) கெடுதல் இல்லை 764.

**அழிவு** - கேடு 615, 764, 876.

**அழீஇ** - அழித்துச் சொல்லி 182.

**அழுக்கறுப்பான்** - பொறாமை அடை வான் 163, 166.

**அழுக்கற்று** - பொறாமைகொண்டு 170.

**அழுக்காறு** - அழுக்கு மனம்; பொறாமை 35, 135, 161, 165, 167, 168.

**அழுக்காற்றின்** - அழுக்காற்றினின்று 162; அழுக்காறு ஏதுவாக 164.

**அழுத** - அழுதலாலுண்டான 555, 828.

**அழுதகண்ணீர்** - அழுதலாலுண்டான கண்ணீரும் 555, 828.

**அழுதாள்** - அழலாயினாள், புலம் பினாள். 1317, 1318.

**அழுந்தும்** - வருந்தும் 835.

**அளக்கும்** - அளந்து அறியும் 710.

**அளந்தான்** - கடந்தான் 610.

**அளப்பது** - அளந்தறிவது, அளப் பதற்குக் கருவியாக உள்ளது 796.

**அளவல்ல செய்து** - அளவில்லாத தீச்செயல்களைச் செய்து 284.

**அளவளாவு** - நெஞ்சு கலத்தல் 523.

**அளவில்** - நேரத்தில் 1187.

**அளவினான்** - அளவுகடவாத 574.

**அளவிறந்து கெடும்** - எல்லையைக் கடந்து கெடும் 283.

**அளவின்றிப்படும்** - அளவில்லாமல் உண்டாகும் 947.

**அளவு** - வரை 224; எல்லை 283; அளத் தல் 287, 287, 288, 289; வலியின் அளவு 474; பொருளின் அளவு 477, 478, 479; அளவை நூல் 725; காலம் வரை 848; செரிக்கும் அளவு 943; பசியளவு 947; நோயாளனின் பருவம், வேதனை வலிகளின் அளவு 949.

**அளறு** - நரகம் 255, 835, 919.

**அளாவிய** - அளைந்த 64.

**அளி** - கருணை, முகமலர்ந்து இன் சொல் சொல்லுதல் 390; அருள் 557, 1192, 1209, 1322.

**அளிக்க** - காக்க 387.

**அளிக்கும்** - செய்யும் 1192, 1312.

**அளிக்கும் ஆறு** - செய்யும் வகை 1321.

**அளித்து** - அருளி 1154; அருளுடைய தாயிருந்தது 1168; நன்றாகின்றது, இரங்கத்தக்கது 1256.

**அளியர்** - இரங்கத்தக்கவர், அன்பு மிகுந்தவர் 1138.

**அளைஇ** - கலந்து 91.

**அள்ளிக்கொள்வற்றே** - அள்ளிக் கொள்ளும் பொருள் போலக் குவிந்தது 1187.

**அற** - நீங்க, ஒழிய 184, 268, 391; முற்றாக 465; நீங்க 717, 845.

**அற ஆழி** - அறக்கடவுளாகிய 8.

**அறஞ்சாரா நல்குரவு** - பொருளையும் சிந்தித்து நல்கூர்தல் (மண) 1047.

**அறத்தாறு** - அறத்தின் பயன் 37.

**அறத்தாற்றின்** - அறவழியில் 46.

**அறத்திற்கும்** - (அதிற் கூறப்பட் டுள்ள) அறத்திற்கும் 543.

**அறத்திற்கே அன்பு சார்பு** - அன்பு துணையாவது அறத்திற்கே என்று 76.

**அறத்தின்** - நல்வினையிலும் பார்க்க 31, 32.

**அறம்** - தருமம் 8; துறவறம் 23; தருமம் 31; தருமம் 31, 32, 35, 36, 37, 38, 39, 46; தவம் 76; அறக்கடவுள் 77; தரு மம் 93, 96; அறக்கடவுள் 130, 141; அறம் என்னும் 181; அறநூல் ("அற மென்பது அறநூலையாதலின் ஆகுபெயர்") 183; தருமம் 185; அறநூலை 189; அறக் கடவுள் 204; தருமம் 249, 288, 296, 297, 501, 1018, 1019, 1047.

**அறம் நாணத்தக்கது** - அறம் அவ னிடம் இருக்க நாணும் 1018.

**அறம் நோக்கி** - அறமென்று கருதி 189.

**அறல்** - சமித்தல் 1326.

**அறவினை** - அறச்செயல் 33, 321, 909.

**அறவோர்** - துறவோர்; தண்ணளி யாகிய அறத்தை உடையோர் 30.

**அறன்** - அறம், நற்செயல் 34, 40, 45, 48, 49, 142, 147, 148, 150, 157, 163, 173, 179, 182, 189, 366, 384, 441, 635, 644, 754.

**அறன் அழீஇ** - அறன் என ஒன்று இல்லை என அழித்துச் சொல்லி 182.

**அறன் ஆக்கம்** - அறத்தையும் செல் வத்தையும் 163.

**அறன் எனப்பட்டது** - (இல்லறம் துறவறம் என்பபட்டவைகளுள்) அறமென்று சிறப்பித்துச் சொல்லப் பட்டது 49.

**அறன் கடை** - பாவம் 142.

**அறன் சொல்லும் நெஞ்சம்** - பிற னுடைய நன்மையை எடுத்துச் சொல்லும் மனம் 185.

**அறா** - நீங்காத 552, 1295.

**அறி** - அறிந்த 218.

**அறிக** - அறிந்துகொள்க 116, 210.

**அறிகல்லாதவர்** - அறியமாட்டாதவர் 427.

**அறிகிலார்** - அறியாதிருக்கின்றார் 1139.

**அறிகொன்று** - அறிந்தவர் சொல் லைத் தட்டி 638.

**அறிதல்** - (தான் ஒற்றால்) அறிதல் 582, 632.

**அறிதோறும்** - (நூல்களை ஆராய்ந்து) அறியுந்தோறும் 1110.

**அறிந்த** - அறியவல்ல, அறிவினால் அறியத்தக்க, அறிவுடைய 61;

(பயன்படுத்த) அறிந்த 721; அறிதலாலுண்டான 1143.

**அறிந்தக் கடைத்தும்** - அறிந்த விடத்தும் 637.

**அறிந்தது** - அறியப்பெற்றது 1226.

**அறிந்தவை** - கேட்டறிந்த செயல்கள் 587.

**அறிந்தார்** - பயின்றவர் 288; ஆராய்தல் வல்லார் 717.

**அறிந்தான்** - அறிந்தவன் 635.

**அறிந்து** - (பிறரால்) அறியப்பட்டு 123; உணர்ந்து 136, 164, 179, 427, 441, 469, 472, 477, 483, 493, 494, 515, 635, 637, 644, 645, 687, 696, 711, 721, 725, 729, 754, 767, 793, 878, 943, 944, 946, 981, 1128, 1287, 1312.

**அறிந்தேன்** - தெரிந்து கொண்டேன் 1083.

**அறிய** - பிறரறிய 590 அறிந்து நடக்கும்படி செய்ய 795.

**அறியலம்** - அறியமாட்டோம் 1258.

**அறியா** - அறியாததாய் 736; அறியாத 836; அறியமாட்டாது 1116.

**அறியாது** - அறிய மாட்டாது 1142.

**அறியாமை** - அறியாமல் 440; மறப்பு 925; முன்னிருந்த அறியாமை 1110.

**அறியார்** - கண்டறியார் 228; தெளிய மாட்டார் 76; 337; அறியாதார் 507; அறியாது 713; அறியமாட்டார் 1141.

**அறியார்க்கு** - அறிய மாட்டாத நண்பருக்கு 877.

**அறியார் கொல்** - அறியமாட்டார்களோ 228.

**அறியான்** - அறிவதும் செய்யாது 474; அறியான் ஆயினும் 638; அறிய வேண்டியவற்றை அறியான் 863.

**அறியும்** - அனுபவிக்கப்படும் 1101; அறிந்து கொள்ளும் 1308.

**அறியேன்** - (களித்து) அறியேன் 928; அறியமாட்டேன் 928, 1083, 1125, 1207.

**அறிவது** - கண்டறிவது, மதிப்பது 61; அறிவது ஒன்றனை 293; அறிந்து கொள்வது 1255.

**அறிவல்** - அறிவேன் 1129.

**உழத்தொறூஉம்** - அனுபவிக்குந் தோறும், நுகரும் போதெல்லாம் 940.

**உழந்து** - நுகர்ந்து (பின் அது பெறாது); முயன்று (மண) 1131.

**உழந்தும்** - (நோயினை) அனுபவித்து 1137.

**உழந்துழந்து** - (அழுது துன்பத்தை) அனுபவித்து அனுபவித்து; - அடுக்கு இடைவிடாமைக் கண் வந்தது 1177.

**உழப்பது** - அனுபவிப்பது 787; வருந்துவது 1172.

**உழப்பர்** - வருந்துவர் 936.

**உழப்பிக்கும்** - உறுவிக்கும், படுத்து விக்கும் 938.

**உழவர்** - உழுதொழில் செய்கின்றவர் 14, 872.

**உழவினார்** - உழவர் 1036.

**உழவு** - உழுதொழில், உழுதல் 1031 தொழில்கள் எல்லாவற்றினுஞ் சிறந்த உழவின் சிறப்பு (அதி. 104)

**உழாஅர்** - உழுதலைச் செய்யார் 14.

**உழி** - இடம் 226, 415

**உழுது** - உழுதலைச் செய்து 1033.

**உழுதுண்டு** - உழுவினால் உணவைப் பெற்று உண்டு 1033.

**உழுவார்** - உழுதொழில் செய்பவர் 1032.

**உழை** - இடம் 530; இடத்து 594, 1294.

**உழைச்செல்வான்** - மருந்துகளை (இடித்து, அரைத்து பிழிந்து) செய் கின்றவன் 950.

**உழைப்பிரிந்து** - தன்னிடத்தினின்று நீங்கி 530.

**உழையிருந்தான்** - பக்கத்திலிருக்கும் அமைச்சன் 638.

**உள** - உள்ளன, இருக்கின்றன 54, 223, 241, 304, 380, 483, 521, 527, 636. 781, 995, 1019, 1101.

**உளதாகும்** - (புகழுடம்பு தோற்றுவ தற்கு) உள்ளதாகிய 235.

**உளது** - உள்ளதாவது 454

**உளபோல** - உள்ளனபோலத் தோன்றி 479.

**உளபோல்** - இருக்கின்றனபோல 574.

**உளராகார்** - பிழைக்க மாட்டார், அழிவர் 895.

**உளர்** - (உயிரோடு) இருக்கின்றார் 406, 730, 1178, 1204.

**உளர்அல்லர்** - நிலை பெறுகின்றவ ரல்லர், இறப்பர் 880.

**உளவரை** - (தனக்கு) உள்ள பொரு ளின் அளவு 480.

**உளன்** - இருக்கின்றான் 294, 336.

**உளவாக** - தன்னிடத்தில் இருக்க 100.

**உளார்** - இருப்பவர், உறைபவர் 25.

**உளாள்** - உறைவாள், இருப்பாள் 617.

**உளி** - பால் (மூன்றாம் வேற்றுமை உருபு) 545.

**உளேம்** - உள்ளேமாயிருக்கின் றோமோ 1204.

**உளேன்** - இருக்கின்றேன் 1167; உயிர் வாழ்கின்றேன் 1206; உயிரை வைத் துக் கொண்டிருக்கின்றேன் 1263

**உள்** - இடத்தில் 50...; மனத்தில் 129; உட் புகுந்து அழிக்க முடியாத (மண) 421; உள்ளம் 487; உள்ள தன்மை 677; உள்ளம் 680; உள்ளாய் நிற்கும் 735; மனம் 927; உள்ளிடம் 955, 1177, 1274, 1324.

**உள்ஊர்** - ஊர்உள், நடுஊர் : உள்ளூ ரில் இருப்பவரால் 927.

**உள்ஒற்றி** - உள்நிகழ்வதை உய்த் தறிந்து 927.

**உள் வீழ்ந்தக் கண்ணும்** - சுருங்கிய விடத்தும் 955.

**உள்ள** - நினைக்க 109, 357; (இனி இவரை எவ்வாறு அங்கு எதிர்ப் படுவோமென நினைக்குமாறு) 394; நினைக்க 540; ஊக்க 600; நினைக்க 622; ஊக்க 971; நினைக்க 1069, 1206, 1281.

**உள்ளஉளேன்** - நினைத்தலால் உயிர் வாழ்கின்றேன் 1206.

**உள்ளங்கொளல்** - கருத்தைத்தான் அறிதல் வேண்டும் 677.

**உள்ளதாம்** - உள்ளதாகும் 889.

**உள்ளது** - இருப்பது 53; இடத்து 255; மெய்ப்பொருள் 357; நிகழ்வது 572; இருப்பது 1091.

**உள்ளதூஉம்** - அடங்குவதும் 641; கரைந்து உள்ளதும்; சேர்ந்ததும் 982; கரைந்து நின்ற உள்ளமும் 1069.

**உள்ளத்தார்** - மனத்திலிருப்பவர் 1249.

**உள்ளத்தால்** - மனத்தால் 282; உள்ளத் துக்கேற்ப 294; மனத்தால் 309

**உள்ளத்தின்** - மனத்திலே; மனத்தி னாலே 622.

**உள்ளத்து** - ஊக்கத்தின் 595.

**உள்ளத்துள்** - மனத்தில் 294, 1130.

**உள்ளப்படும்** - மதிக்கப்படும் 665.

**உள்ளம்** - மனம் 357, 438; ஊக்கம் 592, 598; மனம் 677; ஊக்கம் 798; மனம் 799, 1057, 1069, 1170, 1207, ஊக்கம் 1263.

**உள்ளலும்** - நினைத்தலும் - உம்மை இழிவு சிறப்பின் கண்வந்தது, அல் விகுதி வியங்கோள் எதிர்மறைக் கண்வந்தது 282.

**உள்ளல்** - நினைத்தல் 282; நினைக்க 596; நினைத்தல் 1243, 1318.

**உள்ள வெறுக்கை** - ஊக்கமிகுதி; மனப்பெருமை 971.

**உள்ளற்க** - நினையா தொழிக; உள்ளம் கருதற்க 798.

**உள்ளார்** - இருக்கின்றார் 1127.

**உள்ளான்** - நினையான், நினைக்க மாட்டான் 309, 930.

**உள்ளான்கொல்** - (கள்ளுண்ணும் போது தனக்கு இருக்கும் சோர் வைப்பற்றி) நினையான் போலும் (நினைப்பானா யின் நீங்கும்) 930.

**உள்ளி** - நினைந்து 1230; உள்ளுதலால் (அழுதலால்) 1231; நினைத்து 1243; 1249, 1264, 1317, 1320.

**உள்ளியது** - நினைத்ததனை, கருதிய பேறுகள் 309; நினைத்த காரி யத்தை 540.

**உள்ளினும்** - (முன் அனுபவித்த வற்றை) நினைத்தாலும், 1201; (பிரிவை) நினைத்தாலும் 1207.

**உள்ளினேன்** - நினைத்தேன் 1316.

**உள்ளின்** - நினைத்தால் 799; அகத்து 1126; நினைப்பின் 1201, 1207.

**உள்ளுக** - நினைக்க 539.

**உள்ளும்** - நினைந்திருக்கும் 1298.

**உள்ளுவது** - நினைப்பது 596.

**உள்ளுவர்** - நினைப்பர் 107.

**உள்ளுவன்** - நினைப்பேன் 1125; (அவர் சொற்களை) நினைப்பேன் 1184.

**உள்ளுவேன்** - நினைப்பேன் 1136.

**உள்ளுள்ளே** - உள்ளத்துள்ளே; உள் ளுந்தோறும் உள்ளும் தோறும் (காளி) 1057.

**உற** - அடைதலால் 399; வரக்கூடிய வற்றை 535; மிக 659.

**உறங்கி** - தூங்கி - 339

**உறங்குவது** - தூக்கம் வருவது 339.

**உறல்** - அடைதல் 378; உறவு 885.

**உறல்முறையான்** - உறவு முறைத் தன்மையோடு, சுற்றத்தாரோடு 885.

**உறவு** - படுதல், கொள்ளுதல் 510.

**உறற்பால** - வரக்கூடியன 378.

**உறாஅ** - அடையாவகை; உறாமல் என்பது கடைக்குறைந்து நின்றது 1052.

**உறாஅதவர்** - அயலவர், பழகாதவர் 1096; (என்னை) விரும்பாதவர் 1245; அன்புடையவராகாதவர் 1292.

**உறாஅதோ** - பெறத்தக்க ஒன்றோ; பெறுதற்கு அரியது 1143.

**உறாஅமை** - வராதபடி 442.

**உறாஅர்** - அயலவர் 1097.

**உறாஅர்க்கு** - சேராதவருக்கு 1200.

**உறாஅமை** - வராமை 442.

**உறின்** - (போர்) பெற்றால்; எதிர்ப் படை தம்மேல் வந்து தாக்கினால் 778; தனக்கும் பயன் உள்ள வழி 812; மெய்யுறக் கலந்தால் 1270.

**உறினென்** - தழுவிக்கொண்டா லென்ன 1270.

**உறு** - வரும் 261; பெரிய, மிக 499, 734; வந்த, வந்து முற்றிய 744; உடையார் இன்மையால் வந்த 756; அமைந்த, மிகுந்த 1200; மிகு 1245.

**உறுகண்** - வருந்துன்பம்; துன்பம் 261.

**உறுதல்** - படுதல் 402, 629; அன்பு படுதல் 1245.

**உறுதி** - நன்மை பயப்பன, நல்லபுத்தி மதி 638; மிகுதியை (நன்மையைத் தருவதை 690; நல்லறிவு 796.)

**உறுதுயர்** - மிக்க துயர் 1245.

**உறுதோறு** - தழுவுந்தோறும் 1106.

**உறுநோய்** - மிக்கநோய் 1200.

**உறுபகை** - முற்றுகையிட்ட பகைவர் 744.

**உறுபசி** - மிக்கபசி 734.

**உறுபொருளும்** - (உடையவர் இல்லா மையால்) வந்த பொருளும் 756.

**உறுப்பினுள்** - படைத்துணையுள், அங்கங்களுள் 703; அவயவங் களுள் 705.

**உறுப்பு** - (தலைவியின்) கண் தோள் நெற்றி முதலியன, அங்கங்கள் 79, 704, 737; தேர் யானை குதிரை காலாள் முதலிய உறுப்புகள் 761, 802; உறுப்பு, உடம்பு, மெய்வாய் கண் மூக்கு முதலிய உறுப்புக்கள் 993.

**உறுப்பு ஓர் அனையர்** - அவயவத் தால் ஒரே தன்மைவராயிருப்பி னும் 704.

**உறும்** - நிற்கும், வரும் 380; வந்து, பட்டு 707; நல்ல 816, 817; நிற்கும் 1023; நல்லது 1061.

**உறுவது** - (இன்பம்) அடைதற்கு ஏதுவாகிய கல்விக்கு 399; பயன் 813; தொடங்கேல், செய்தல் 1259; விரும்புவது 1271.

**உறூஉம்** - மிகுவிக்கும் 94.

**உறை** - இருக்கின்ற, உரிய 499; மழை 559; ஆயுள் 564; ஆளும் இடம், நகர் 680.

**உறைநிலம்** - இருக்கும் நாட்டில் 499.

**உறைந்தற்று** - தங்கியதுபோலும் 208; வாழ்ந்தாற் போன்றது 890.

**உறைபதி** - இருப்பிடம் 1015.

**உறையும்** - வாழும் 50; (இனிது) வாழும் 84.

**உறைவது** - ஒழுகுவதாயிற்று; ஒழுகுவது 426; தொடங்குதல் 1259; சொல்வது 1271.

**உறைவர்** - இருப்பர் 1130.

## ஊ

**ஊக்க** - நெகிழ்த்த; நீக்க 1238.

**ஊக்கத்தின்** -மன எழுச்சியால் 743.

**ஊக்கமுடைமை** - கருமமாற்று மிடத்து மனம் சோர்வின்றி எழுச்சி கொண்டிருத்தல் (அதி. 60).

**ஊக்கம்** - (வினைசெய்தற்கண்) மன எழுச்சி 382; வலி மிகுதி 486; பெருமை 498; மன எழுச்சி 591, 593, 594, 744.

**ஊக்கம் அழிப்பது** - மன எழுச்சியைக் கெடுப்பது 744.

**ஊக்காது** - நோக்காது, நினையாது 253.

**ஊக்கார்** - மேற்கொள்ளார் 463.

**ஊக்கி** - முயன்று 473.

**ஊக்கின்** - முயன்றால் 476; மேற்கொள் வானாயின்; நினைப்பின் (மண) 858.

**ஊக்குமாம் கேடு** - கேடுமிகும் 858.

**ஊக்கும்** - (வெல்ல) நினைக்கும் 855.

**ஊங்கு** - மேற்பட்ட, மேலான, 31, 32, 122, 460, 644; மேல் 1065.

**ஊடலின்** - புலத்தலில் 1307, 1322, 1327.

**ஊடலுவகை** - ஊடலாலுண்டாகும் மகிழ்ச்சி (அதி. 133)

**ஊடல்** - பிணங்குதல்; கணவன் மனைவியிருக்கிடையில் நேரும் சிறுபிணக்கம் 1109, 1310, 1326.

**ஊடற்கண்** - ஊடலைக் கருதி 1284.

**ஊடாமை** - பிணங்காமை 1282.

**ஊடி** - வெறுத்து 1039, புலந்து 1260, 1312, 1328.

**ஊடியவரை** - பிணங்கியவரை 1304.

**ஊடிவிடும்** - விளைவுகுன்றும் 1039.

**ஊடினாள்** - பிணங்கினாள் 1314.

**ஊடுக** - புலக்க 1329.

**ஊடுதல்** - புலத்தல் 1321, 1330.

**ஊட்டா** - அடைவிக்காமல் 378.

**ஊண்** - உண்ணுதல் 44; உணவு 227, 939, 1012.

**ஊண்மாலையவர்** - உண்ணுமியல் பினர் 1035.

**ஊதியம்** - பயன், இலாபம் 231; ஆதாயம் 449, 641; பேறு, இலாபம் 797; ஆக்கம், செல்வம் 831.

**ஊர** - மறைக்க, நெருங்க 601.

**ஊரவர்** - ஊரின் பெண்கள் 1147, 1220.

**ஊராண்மை** - உபகாரம் 773.

**ஊராம்** - தனது ஊர் போன்றதாம் 397.

**ஊரார்க்கு** - ஊரிலுள்ளவருக்கு 1180.

**ஊருணி** - ஊரிலுள்ளார் நீருண்ணும் குளம் அல்லது கேணி 215.

**ஊரும்** - படரும், செல்லும் 1182.

**ஊருள்** - ஊர் நடுவுள் 1008.

**ஊர்** - மக்கள் குடியிருப்பு 216; நகரம் 397; ஊரிலுள்ளவர் 1129; (வேறு) ஊரில் 1158.

**ஊர்தல்** - ஏறிச்செல்லுதல் 1136.

**ஊர்ந்தான்** - ஏறிச் செல்பவன் 37.

**ஊர்ந்துவிடல்** - மேற்கொண் டொழு கல்; கொண்ட அளவில் நின்று விடும் (பரிமே) 979.

**ஊர்வது** - வரத்தக்கது 621; பரவுவது 1185.

**ஊழால்** - வினைப்பயனால் 371.

**ஊழி** - உலகம் அழியும் காலம் 989.

**ஊழிபெயரினும் தாம்பெயரார்** - ஏனைக் கடலும் கரையும் நில்லா மல் காலம் திரிந்தாலும் தாம் திரி யார்; ஊழிக்காலம் வந்தாலும் நிலை பெயரார் (பரிதி) 989.

**ஊழின்** - ஊழைப்போல 380.

**ஊழையும்** - (தீய) வினைப்பயனையும் 620.

**ஊழ்** - வினைப்பயனின் விளைவு. (அதி. 38)

**ஊழ்த்து** - மலர்ந்திருந்தும் 650.

**ஊறிய** - சுரந்த 1121.

**ஊறு** - தொடுதலுணர்ச்சி 27; வந்த விடத்து 535; பழுதுபடும் கருமங்

களை; உறும் துன்பம் (மண) 662; அடைதல் 665; தடை 676; அடைதல் 761, 762.

**ஊறுஎய்தி** - இடையூறு அடைதலால் 665.

**ஊறுபாடு** - துன்பம் 945.

**ஊறும்** - சுரக்கும் 396.

**ஊற்று** - ஊன்று; பற்றுக்கோடு 414; ஊன்று ஆகிய 415; நீரூற்று 1161.

**ஊற்றுக்கோல்** - ஊன்றுகோல் 415.

**ஊற்றுநீர்** - ஊற்றிலிருந்து வரும் நீர் 1161.

**ஊனைக்குறித்த** - உடம்பை இருப்பிட மாகக்கொண்டு அதனை விடா 1013.

**ஊன்** - உடம்பு 251, 252, 254, 255, 256, 258, 968.

**ஊன்ஓம்பும்** - உடம்பைக் காப்பாற்றுகின்ற 968.

**ஊன்றிய** - தாங்கிய 983.

**ஊன்றும்** - நிலைநாட்டும் 597, 615, 789, 1030.

## எ

**எஃகு** - படைக்கலம் 759; கூர்மை 773.

**எங்ஙனம்** - எவ்வாறு, எப்படி 251.

**எச்சம்** - எஞ்சி நிற்பது 238; ஒழிந்து நிற்பது 674, 1004; ஒழிந்தவை 1012; அஃதொழிந்தது 1075; மக்கட்பேறு 114.

**எச்சத்தால்** - மக்களால் 114.

**எச்சத்திற்கு** - வழியிலுள்ளார்க்கு 112.

**எஞ்சல்** - அற்றுப்போதல் 44.

**எஞ்சாது** - ஒழியாமல் 690.

**எஞ்சாமை** - ஒழியாமல்; குறையாமல் 497.

**எஞ்ஞான்று** - எப்போது 44, 145, 317. 361, 439, 582, 635, 697, 701, 864, 870, 886, 903, 905, 910. 921, 926, 927.

**எடுக்கும்** - எழுப்பும் 1150.

**எடுத்து** - எடுத்து எண்ணி 776.

**எடுப்பதூஉம்** - உண்டாக்குவதும், வாழவைப்பதும் 15.

**எட்பகவு** - எட்பிளவு 889.

**எண்** - எட்டு 9; கணக்கு; கணிதம் 392; அரிய; அறிதற்கரிய 424; எளிய 548, 760; எண்ணம் 910; எளிய 991.

**எண்குணத்தான்** - எட்டுக் குணங்களுடைய கடவுள் 9.

**எண் சேர்ந்தநெஞ்சத்து** - ஆலோசனை செய்யும் மனமும் 910.

**எண்ண** - மதிக்க 922.

**எண்ணப்படுவது** - கொள்ளப்படுவது 438.

**எண்ணம்** - எண்ணியிருந்த வெற்றியை 494.

**எண்ணாத** - ஆராயாத, ஆலோசனை செய்யாத 568.

**எண்ணாது** - விசாரியாது (பின்விளைவதை நினையாது) 180.

**எண்ணி** - ஆராய்ந்து 462, 467, 470, 497, 530. 675; சொல்லும் வழியை முன்னே அறிந்து 687; ஆராய்ந்து 699, 1298.

**எண்ணிக் கொண்டற்று** - எண்ணியறிந்தாற்போலும் 22.

**எண்ணிய** - பெற நினைத்தவற்றை 666; கருதிய 753; (ஒன்று இரண்டு மூன்று) என்று எண்ணிச் சொல்லப்பட்ட 941.

**எண்ணியமூன்று** - வகுத்துச் சொல்லிய வாதம் பித்தம் சிலேட்டுமம் என்னும் மூன்று 941.

**எண்ணியாங்கு** - நினைத்தபடி 666.

**எண்ணியார்** - (வெல்வதாக) எண்ணியிருந்தவர் 494; நினைத்தவர் 666.

**எண்ணின்** - நினைப்பாராயின் 264.

**எண்ணும்** - நினைக்கும் 639, 1004.

**எண்ணுவம்** - எண்ணுவோம் 467.

**எண்பதத்தான்** - எளிதில் (பார்த்துப் பேசத்தக்க) நிலையிலுள்ளானாகி -எண்பதம்-வந்தவர்தம் குறையைச் சொல்லுதற்கு ஏற்ற காலம் 548.

**எண்பதத்தால்** - எளிய காலத்தால்; எல்லோரும் தம் குறை சொல்வ தற்கு எய்தும் காலத்தால் 991.

**எண்பொருள்** - கிட்டும் பொருள்கள் 760.

**எதிரதுஆக்** - பின் வருவதை முன் னறிந்து 429.

**எதிர்** - எதிர்த்து, எதிரில் 765; மாறுபாடு 885, 858; எதிரில், நேரில் 1082.

**எதிர்சாய்ந்து** - ஏற்றுக் கொள்ளாத 855.

**எதிர்ப்பை** - எதிர் பார்த்தலை 221.

**எத்தன்மைத்து ஆயினும்** - யாதொரு இயல்பினதாய்த் தோன்றினும் 355.

**எந்நலத்ததூஉம்** - ஒரு நலத்தினும் 982.

**எந்நன்றி** - எல்லா நன்மையையும்; எகர வினா சிறப்பை யுணர்த்தும் 110.

**எப்பால்** - எவ்வகைப்பட்ட 533.

**எமக்கு** - நமக்கு 790, 1142, 1176, 1291.

**எம்** - எமது 1126; எம்மை 1180; எமது 1185; 1204, 1205, 1222, 1278.

**எம்மிடை** - எங்களிடத்து 1122.

**எம்மை** - எங்களை 1205, 1217, 1318.

**எயிறு** - பல் 1121.

**எய்த** - பொருந்தத்தக்க 516; ஏவிய 772

**எய்தலால்** - பெறலாம் ஆதலால் 265.

**எய்தலின்** - உண்டாதலைவிட 815.

**எய்தல்** - பெறுதல் 540, 606, 671, 904, 991.

**எய்தற்கு** - அடைவதற்கு 489.

**எய்தா** - அடைதற்குரியதல்லாத; அடாத 137.

**எய்தாமை** - இல்லையாதல் 815.

**எய்தார்** - பெறார் 598, 901.

**எய்தி** - பெற்று 665, 749. 932.

**எய்திய** - பெற்ற 657.

**எய்தியக்கண்** - (தம்வயத்தது) ஆகிய வழியும் 354; உடையராயவிடத் தும் 670; நிறைந்திருந்தாலும் 740.

**எய்தின்று** - அடைந்தது 1240.

**எய்துப** - பெறுவர் 666

**எய்துபிழைத்தது** - எய்து இலக்குத் தவறிய 772.

**எய்தும்** - (மறுமையில்) அடையும் 75; அடைவான் 145; பெறும் 309, 610; அடையும் 1024.

**எய்துவர்** - பெறுவர் 137.

**எய்யாமை** - (மெய்) வருந்தாமை, முயலாமையில் 296.

**எரி** - நெருப்பு 308, 435, 1148.

**எரியால்** - நெருப்பால் 896.

**எரு** - உரம்; ஆடுமாடுகளின் எரு 1037, 1038, 1147.

**எலிப்பகை** - எலியாகிய பகை 763.

**எல்லா** - அனைத்து 260, 296. 299, 361, 457, 746, 851, 972.

**எல்லாஅம்** - எல்லாம் 375.

**எல்லாம்** - அனைத்தும் - 1, 15, 29........

**எல்லாரும்** - அனைவரும் 191, 742, 1139, 1311.

**எல்லார்க்கும்** - அனைவருக்கும் 582.

**எல்லைக்கண்** - எல்லையோடு, எல்லைக்குள் 806.

**எவன்** - யாது (உளது) 31; யாது 46; 57; யாது (பயனை) 79; யாது பயனைக் கருதி 99, 237; என்ன பயனை 272; என்னாம் 345; யாது கருதி 379; யாது 574; என்ன பயனை 803; என்ன பயனுடையது 1089; என்ன செய்வ ரோ 1165; என்கருதி 1171; எதற்காக

1172; என்ன இன்பத்தை 1195; யாது 1207, 1291; என்ன 1308.

**எவ்வ** - துன்பந்தரும் 853; ஒன்றாலும் தீராத 1241.

**எவ்வது** - எப்படி 426.

**எவ்வம்** - துன்பந்தரும் (செயல்), இளிவரவு 223; ஒன்றாலும் தீராமை 1241.

**எவ்வுயிர்க்கும்** - எல்லா உயிர்கள் மேலும் 30.

**எழ** - உண்டாக 1141.

**எழிலி** - முகில் 17.

**எழில்** - அழகு, எழுச்சி (தோற்றப் பொலிவு) 407.

**எழு** - ஏழு 62, 107, 1269, 1278.

**எழுதல்** - போர் கருதிச் செல்லுதல் 465.

**எழுதுங்கால்** - (கண்ணுக்கு) மை எழுதும்போது 1285.

**எழுதேம்** - எழுதமாட்டோம் 1127.

**எழுத்து** - நெடுங்கணக்கு 1; "எழுத்தும் சொல்லும்" முதலிய அஞ்சு இலட்சணமும் (பரிதி); இயற்றமிழ் (சிவஞான முனிவர்) 392.

**எழுபதுகோடி** - மிகப்பல; ஏழாகிய பத்துக்கோடி 639.

**எழுபிறப்பு** - தேவர், அசுரர், நரர், மிருகம், பட்சி, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் ஏழுபிறப்பு (பழைய உரை) 62, 107.

**எழுமை** - வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பு; எழு வகையுடைய 107, 126, 398, 538, 835.

**எழுமையும்** - ஏழு பிறப்பிலும் 126.

**எழுவாரை** - (பிற தொழில்) செய்வாரை 1032.

**எழுவாள்** - எழுந்திருப்பாள் 55.

**எளிது** - அரியதன்று 145, 540, 745, 864, 991.

**எளிய** - இலகுவானவை 664.

**எளியர்** - பலராவர்; பெறுதற்கு எளியராவர் 723.

**எளியன்** - அணுகுதற்கு எளிமையுடையவன்; 'எளிமையாவது பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடைய னாயிருத்தல்' 863.

**எள்** - எள்ளின் விதை 889.

**எள்ளப்படும்** - இகழப்படுவான் 191.

**எள்ளற்க** - இகழாதொழிக; இகழ்தல் - அற்பமாக நினைத்தல், 491.

**எள்ளாத** - இகழாத 470.

**எள்ளாது** - இழிவு சொல்லாது 1057.

**எள்ளாமை** - இகழப்படாமை 281; இகழாமை 667.

**எள்ளின்** - இகழின் (வாயில் மறுக்கின்) 1298.

**எள்ளும்** - இகழ்ந்து கூறும் 607.

**எள்ளுவாரை** - இகழும் பகைவரை 829.

**எள்ளுவர்** - இகழ்வர் 752.

**எறிக** - செய்க, தண்டிக்க 562.

**எறிதற்கு** - வெட்டுவதற்கு 821.

**எறிந்தும்** - (ஒருமுகமாகப்) போர் செய்தும் 747.

**எறிய** - வீச 775.

**எற்றா** - நீங்காத 663.

**எற்றிற்கு** - எதற்கு 1080.

**எற்று** - யாது செய்தோம் 275; எத்தன்மையது 557, 655, 1256.

**எற்றுள்** - எல்லாவற்றுள்ளும் 438.

**என** - என்றுசொல்ல 55, 69; என்று சொல்லப்பட்ட 168; என்று 316; என்பது 334; என்று 630,700; என்று சொல்ல 722; என்றும் 766; என்று சொல்லப் படுவது வேறு 942; என்று சொல்லப்பட்ட 1022; என்று 1173; 1190, 1216, 1236; என்று கருதி 1245; என்று சொல்லப்பட்ட 1252;

என்று 1257; என்று கருதி 1259; என்பது பற்றி 1292.

**எனக்கு** - 1151

**எனது** - என்னுடைய 346

**எனப்படுதல்** - என்று சொல்லப்படுதல் 967.

**எனப்படும்** - என்று சொல்லப்படும் 453.

**எனப்படுவது** - என்று சொல்லப்படு வது 291, 324, 591, 801, 844.

**எனப்படுவர்** - என்று சொல்லப்படுவர் 722.

**எனப்படுவார்** - என்று பிறரால் சொல் லப்படுபவர்கள் 989.

**எனப்பட்டது** - (சிறப்பித்துச்) சொல் லப்பட்டது 49.

**எனல்** - என்று சொல்லற்க 196; என்று கருதற்க 282; என்று கருதல் 971, 1148, 1260.

**எனினும்** - என்று சொல்லப்படுபவர் உளராயினும் 222.

**எனின்** - என்றால் (ஆனால்) 2, 19, 20, 82, 102, 149. 178....

**எனை** - எவ்வளவு 52; எவ்வளவு (பெருமை) 144, 207; எல்லா 514, 750.

**எனைத்தானும்** - சிறிதாயினும் 317.

**எனைத்து** - எவ்வளவு (சிறியது) 209, 281, 300, 317, 416, 820, 825, 1202; எவ் வளவு 1208; எவ்வளவு சிறியது 1241.

**எனைத்துஆனும்** - சிறிதளவாயினும் 416.

**எனைத்து ஒன்றும்** - யாதொரு பொருளையும் 281; எப்படிப்பட்ட தாயினும் 1241.

**என்** - எவன் என்னும் வினா என் என விகாரப்பட்டு இல்லை என்ற பொருளுணர்த்திற்று 2; யாது 53; யாது (மேலானது) 70; யாது 211; என்ன 301; யாது கருதி 397; யாது பயன் 420; எல்லாம் 430; யாது 436; என்ன (இன்பு உண்டு) 426; (கேடு) யாது 812; எப்படி 862; யாதாகும் 923; (அது) செய்வது, யாது 966; யாதனை 1004; என்ன 1059, 1081, 1088, 1136, 1139, 1163; என்னை 1168; எனது 1170, 1175, 1181, 1182, 1185, 1188; எதனால் 1206; எனது 1209, 1213, 1217; யாது 1225......

**என் அல்லது இல்லை** - என்னையல் லாமல் வேறுதுணை இல்லை 1168.

**என் எண்ணும் கொல்** - எதை நினைப் பானோ 1004.

**என்கண்** - என்னிடத்தில் 1174.

**என்கொலோ** - யாது காரணத்தால் 318.

**என்ப** - என்று கூறுவர் 63, 66....; என்று சொல்லப்படுவன 483.

**என்பதனை** - சொல்வதை 1083.

**என்பது** - என்று சொல்லப்படுவது 87, 114, 116, 193; என்றல் 467, 928....

**என்பதுஅல்லால்** - என்று குறை கூறுவதல்லாமல் 1188.

**என்பரிதல்** - பரிதல் ஏன் 1243.

**என்பரியும்** - எப்படி நீக்கும் 862.

**என்பயத்தது** - என்ன பயனை யுடையது 987.

**என்பர்** - என்று கூறுவர் 246, 662, 1220.

**என்பவர்** - என்று கூறுப்படுபவர் 393.

**என்பவன்** - செய்கின்றவனது; கருது கின்றவனும் 856.

**என்பவன் வாழ்க்கை** - என்பவனும் வாழ்க்கையும் (மண) 85.

**என்பார்** - என்று சொல்லுபவர் 275; என்று சொல்லப்படுகின்றவர் 365; 710; 956, 1188, 1209.

**என்பார்க்கு** - என்று சொல்லப்படு வர்க்கு 1036.

**என்பான்** - என்று சொல்லப்படுவான் 41, 42, 47. 147; நன்கு மதிக்கப்படு வான்; சொல்லப்படுவான் 281;

தெளிந்திருப்பான்; கொள்ளுகின்ற வன் 628; சொல்லு பவன் 850.

**என்பு** - எலும்பு, உடல் 72, 77, 80.

**என்புஇல்அதனை** - எலும்பில்லாத உயிரை 77.

**என்போர்** - என்று சொல்லப்படுபவர் 30.

**என்ற** - என்று சொல்லப்பட்ட 584.

**என்றது** - என்று சொன்னது 552.

**என்றல்** - (உலகத்தாரால்) சொல்லப் படுதல் 181.

**என்றவர்** - என்று கூறியவர் 1154.

**என்றவற்றுள்** - என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டவற்றுள் 715.

**என்றார்** - என்று சொன்னவர் 1149.

**என்று** - என்றவாறு, என்பதாக 11; சொல்லப்பட்ட 27; என்று கருதி 174, 205, என்று சொல்லும்படி : என்று கொண்டு 307, 331, 351; என்பதாக 388.....

**என்று அற்றால்** - என்பது போலாகும் 1148.

**என்றும்** - எப்பொழுதும் 138, 152; எக்காலத்தும் 538, 652, 958, 1130.

**என்றேனா** - என்றேனாக 1314.

**என்ன** - எத்தன்மைய 705, 987, 1100; எத்தன்மையன 1122.

**என்னாது** - எனக் கருதாமல் 30; என்று செய்யாது 1138.

**என்னாம்** - என்ன பெருமையுடையது 144.

**என்னின்** - என்னைப் பார்க்கிலும் 1290.

**என்னுமவர்** - என்று சொல்லுகின்ற அவர் 653.

**என்னும்** - என்று சொல்லும் 14, 24...

**என்னை** - யாது (செய்யமாட்டார்) 188; என்னை 1296, 1316.

## ஏ

**ஏ** - ஓர் இடைச்சொல்; ஈற்றசை யாகவும், எதிர்மறை, பிரிநிலை, தேற்றம், வினா, விளி முதலிய பொருள்களிலும் வருவது 9......

**ஏஎர்** - அழகு 1053, 1305; நன்மைக் குறிப்பு, அழகு 1098.

**ஏகினான்** - சென்றவனது 3.

**ஏக்கற்று** - ஆசையால் தாழ்ந்து, தாழ்ந்து நின்று 395.

**ஏங்கி** - வருந்தி 1248.

**ஏங்குபவர்க்கு** - வருந்தும் பெண் களுக்கு 1269.

**ஏதப்பாடு** - குற்றமுண்டாதல் 464.

**ஏதம்** - குற்றம் 136; துன்பம்; குற்றம் (மண) 164; கேடு 275; குற்றம் 432; கேடு 831; குற்றம் 884, 885; நோய் 1006.

**ஏதில** - பழுதாம்; பலிக்காது 440; வேறு, பிற 1089.

**ஏதிலர்** - அன்பிலர் 1129, 1130; கொலை ஞர்; அருள் யாது மில்லாத பகை வர் 1224.

**ஏதிலார்** - அயலார் 188, 190; பகைவரது 440; இயைபில்லாதவர் 837; முன் பழகாதவர் 1099; அயலார் 1300.

**ஏதிலான்** - பகைவன் 862.

**ஏதில்** - முன்னறியாத 913.

**ஏது இல் பிணம்** - அறியப்படாத பிணத்தை 913.

**ஏதின்மை** - பகை; பகையும் நண்பு மாகிய ஏதும் இன்மை 816.

**ஏத்தும்** - துதிக்கும் 970.

**ஏந்தல்** - தாங்குதல் 772.

**ஏந்திய** - உயர்ந்த 899.

**ஏந்திய கொள்கையர்** - உயர்ந்த தவ முடையவர் 899.

**ஏம** - பாதுகாப்பு; சேமமாகிய (காளி) 306; அரணாகிய 1131, 1164.

**ஏமஞ்சாரா** - பாதுகாவலில்லாத 815.

**ஏமப்புணை** - அரணாகிய புணை (நுண்) 1164.

**ஏமம்** - காவல் 738; காப்பாகிய குணங் கள் 766; அரண் 815.

**ஏமரா** - காவலாயில்லாத, காவலற்ற 448.

**ஏமாப்பு** - வலிமை 112; (தீமையி னின்றும், பாதுகாப்பு; நன்மை 126; உதவுதல் 398; வலியாதல் 458, 459; துணையாதல் 868.

**ஏமார்த்தல்** - ஏமம் ஆர்த்தல்; பாது காப்புச் செய்தல் 660.

**ஏமுற்றவரினும்** - பித்துற்றவரினும்; ஏமுறல் - மயங்கல் 873.

**ஏரினும்** - உழுதலினும் 1038.

**ஏர்** - கலப்பை 872, 1031; ஒத்த 1089; நன்மைக் குறிப்பாய ஆகு பெயர் 1098; அழகு 1305

**ஏர்பின்னது** - (முடிவில் உணவு வேண்டி) ஏர் உடையவர் வழியதா யிற்று 1031.

**ஏல்** - ஆயின் 18, 368, 386, 556, 573, 575, 996, 1014, 1118, 1144.

**ஏவவும்** - (பிறர்) சொல்லவும் 848.

**ஏவல்** - கட்டளையிடுதல் 515; ஏவிய தொழில் 907, 909.

**ஏழை** - அறிவிலான் 873.

**ஏறா** - ஊராத 1137.

**ஏறி** - மேலே சென்று 758.

**ஏறினார்** - ஏறிநின்றவர் 476.

**ஏறு** - இடபம்; சிங்க ஏறு 59; ஏறு போல்வான் உயர்திணைப் பொரு ளில் வந்த அஃறிணைச் சொல் 381.

**ஏறும்** - ஏறிச்செல்லும் 1132, 1264; ஊரு கின்ற 1133.

**ஏற்றல்** - போர் செய்தல் 861.

**ஏற்று** - கேட்டு 716

**ஏனும்** - ஆயினும் 277, 430. 997.

**ஏனை** - மற்ற 505; எல்லா 514; மற்ற 704; 760.

**ஏனை இரண்டும்** - அறமும் இன்ப மும் 760.

**ஏனைய** - மற்ற 268.

**ஏனையவர்** - (மற்றவர்) கல்லாதவர் 410.

## ஐ

**ஐ** - ஐந்து 354; சந்தேகம் 510; தலைவன் (அரசன்) 771.

**ஐந்தன்** - ஐம்பொறிகட்குரியவாய 343.

**ஐந்தன் புலத்தை** - ஐம்பொறிகளுக்கு முரிய புலன்களை 343.

**ஐந்தின்** - ஐந்தனது 27.

**ஐந்து** - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து ஆசை களையும்; (பொறிகளாகிய யானை) ஐந்து 24; புலன்களிற் செல்கின்ற அவா ஐந்து 25; ஐம்பொறிகள் 126; ஐந்து 271, 675, 738, 939, 983.

**ஐந்துடன்** - ஐந்தோடு 632.

**ஐம்** - ஐந்தாகிய 43, 1101.

**ஐம்புலத்து ஆறு** - ஐந்து இடத்து செய்யும் அறநெறியை 43.

**ஐயத்தின்** - ஐயத்தினின்றும் 353.

**ஐயப்படாஅது** - சந்தேகப்படாமல் 702.

**ஐயப்படும்** - (உலகம்) சந்தேகப்படும் 958.

**ஐயப்பாடு** - சந்தேகம் 587.

**ஐயம்** - சந்தேகம்; மயக்கம் 353, 845.

**ஐயுணர்வு எய்தியக் கண்ணும்** - ஐம் புலனாலறியக் கூடியவற்றை அறிந் திருந்தாலும்; புலன்களைத் தன் வயப்படுத்தி விட்டாலும் 354.

**ஐயறவு** - சந்தேகம் 510.

## ஒ

**ஒக்க** - ஒத்திருப்பதாக 490

**ஒக்கல்** - சுற்றம், சுற்றத்தார் 43.

**ஒக்கின்** - ஒத்திருந்தால் 1100.

**ஒக்கும்** - போன்றிருக்கும், நிகர்க்கும் 972, 1112.

**ஒடு** - உடன் 18...

**ஒடுக்கம்** - (சமயம் பார்த்து) ஒய்ந் திருத்தல்; ஒடுங்கியிருத்தல் 486.

**ஒடுங்கும்** - மறைந்திருக்கும் 828.

**ஒட்ட** - பொருந்த 140, 482.

**ஒட்டல்** - தாக்குதல், கிட்டுதல் 499.

**ஒட்டாரை** - பகைவரை 679.

**ஒட்டார்** - பகைவர் 826; இணக்கமில் லாதவர் 967.

**ஒட்டி** - நட்பாகி 679.

**ஒட்டிக்கொளல்** - நட்பாக்கிக் கொளல் 679.

**ஒட்பம்** - அறிவு 404, 425.

**ஒண்** - முறையின்வரும் 760; விளங் கும் 1009, 1088, 1101, 1240.

**ஒண்டொடி** - விளங்கும் வளைய லணிந்தவள் 1101.

**ஒண்ணுதல்** - ஒளிபொருந்திய நெற்றி 1240.

**ஒண்பொருள்** - நெறியான் வரும் பொருள் 760, 1009.

**ஒண்மை** - விளக்கமாகிய அறிவு 844.

**ஒத்தது** - உலக நடை 214.

**ஒத்தல்** - நிகர்த்தல் 993.

**ஒத்தாங்கு** - ஒப்ப, பொருந்துமாறு, ஏற்றவாறு 561.

**ஒத்தி** - ஒத்திருக்க விரும்பினாயா னால் 1119.

**ஒப்ப** - போல 702.

**ஒப்பதாம்** - பொருந்துவதாகிய 993.

**ஒப்பது** - போல்வது 162, 363, 536, 621; பொருந்துவது 993.

**ஒப்பர்** - சமமாவர் 413, 730.

**ஒப்பன்று** - ஒத்தவராகார் 993.

**ஒப்பாரி** - ஒப்பு 1071.

**ஒப்பிலார்** - ஒப்பில்லாதவர்; மாறான வர் 800, 812.

**ஒப்பு** - ஒத்திருத்தல் 993.

**ஒப்புரவாண்மை** - உபகாரம் செய்தல் 480.

**ஒப்புரவில்** - கொடுப்பதில், உபகாரஞ் செய்வதில் 218.

**ஒப்புரவின்** - ஒப்புரவு போன்ற 213.

**ஒப்புரவு** - உலக நடை, உபகாரஞ் செய் தல் 983.

**ஒரார்** - நீங்கார் 658

**ஒரால்** - நீங்குதல் 153; செய்யாமை 662.

**ஒரீஇ** - நீங்கி; ஒருவி, ஒரிஇ என விகாரப்பட்டு நின்றது 116; நீங்க; நீங்கி 422, 797, 830; ஒழித்து 1009.

**ஒரு** - ஒப்பிலாத 168; சிறு 337; தெளிய 357.

**ஒருகால்** - ஒரு காலத்தில் 248.

**ஒருங்கு** - ஒருசேர 343, 554, 610; முழு வதும் 733; ஒருசேர 760, 951, 1056.

**ஒருங்கே** - ஒருகாலத்தில்; ஒரு சேர 343

**ஒருதலையா** - உறுதியாக 119.

**ஒரு தலையாக** - துணிபாக 357.

**ஒருதலையான்** - ஒருவரிடத்து மாத்திர முண்டானால் 1196.

**ஒருத்தியை** - ஒரு பெண்ணுக்கு 1313.

**ஒருநாளை** - ஒரு நாளைக்குள்ள; அப்பொழுதுள்ள 156.

**ஒருபால்** - ஒரு பக்கம் 118.

**ஒருபொழுதும்** - ஒரு நொடிப் பொழு தும் 337.

**ஒருமை** - ஒரு பிறப்பு 398, 835; கற்பு 974.

**ஒருமைக்கண்** - ஒரு பிறப்பில் 398.

**ஒருமைமகளிர்** - ஒரு நிலையில் மன முடைய (கற்புடைய) பெண் களைப் போல 974.

**ஒருமையுள்** - ஒரு பிறப்பில்; ஒரு வழிப்பட்ட உள்ளத்தினாலே 126.

**ஒருவந்தம்** - உறுதியாக, திண்ணமாக 563; உறுதியாக 593.

**ஒருவரால்** - ஒருவராலும் 1004.

**ஒருவற்கு** - ஒருவனுக்கு 40, 95, 398, 400; 414, 454, 600, 797, 971, 988, 1023, 1026, 1052.

**ஒருவனை** - ஒருத்தனை 366.

**ஒருவன்** - ஒருத்தன் 38, 161, 181...

**ஒருவுக** - விடுக 800.

**ஒருவுதல்** - விடுதல் 652.

**ஒரூஉம்** - நீங்கும் 812.

**ஒலித்தக்கால்** - இரைந்தால் 763.

**ஒல்காமை** - தளராமை 662.

**ஒல்கார்** - நீங்கார் 13, 5; தளரார் 218, 597.

**ஒல்லா** - உடன்படாத, இசையாத 1064; பொருந்தாத 1136; உடன்படாமல் 1271.

**ஒல்லாக்கால்** - இயலாதவிடத்து 673.

**ஒல்லாது** - செய்யாது 559; மேவாது; பொருந்தாது 870.

**ஒல்லானை** - அடையாதவனை 870.

**ஒல்லும்** - இயன்ற, இயலும் 33; 673, 818.

**ஒல்லை** - விரைவில் 563, 564, 826. 1096.

**ஒல்வது** - இயல்வது 472; கூடுமோ 1149.

**ஒவ்வா** - ஒப்பாகமாட்டா 972.

**ஒவ்வேம்** - ஒப்பாகமாட்டோம் 1114.

**ஒழித்து** - நீக்கி 280.

**ஒழிய** - நீங்க 240; நிற்க 1231.

**ஒழியவிடல்** - கைவிடல் 113.

**ஒழுக** - நடக்க 111, 446, 855.

**ஒழுகப்படும்** - நடக்கவேண்டும் 154, 698.

**ஒழுகலான்** - நடத்தலான் 30, 445, 1073.

**ஒழுகல்** - நடத்தல் 140, 286, 482, 524; நடந்து கொள்க 602, 694; நடத்தல் 845.

**ஒழுகான்** - நடக்காதவனாய் 474

**ஒழுகின்** - நடந்தால் 294, 359, 892, 974.

**ஒழுகுதல்** - நடத்தல் 444.

**ஒழுகுபவர்** - நடப்பவர் 908.

**ஒழுகும்** - நடக்கும் 141, 278, 551, 563, 603, 874; செய்துதிரியும் 907.

**ஒழுகுவார்** - நடப்பவர் 143, 246, 691, 876, 921.

**ஒழுகுவான்** - நடப்பான் 326, 727; இயங்குவான்; நடந்துகொள்வான் 1197.

**ஒழுக்க** - ஒழுக்கமாகிய 6.

**ஒழுக்கஆறு** - ஒழுக்கத்தின் வழி 161.

**ஒழுக்கத்தின்** - ஒழுக்கத்தினின்றும் 136; ஒழுக்கத்தினால் 137.

**ஒழுக்கத்து** - நல்லொழுக்கத்தில் நின்று 21.

**ஒழுக்கம்** - (நல்) ஒழுக்கம் 131, 132, 133, 134, 135, 138, 139, 271, 275, 415, 952.

**ஒழுக்கி** - நடத்தி 48.

**ஒழுக்கு** - (நீரின்) ஓட்டம் 20; ஒழுக்கம் 148, 161.

**ஒளி** - விளக்கம். கண்ணால் அறியப் படுவது 27; ஞானம் 267; விளக்கு, ஒளி 390; புகழ் 556; நன்கு மதிக் கப்படுதல் 556; புகழ் 870, 921, 939, 970; நன்கு மதிக்கப்படுதல் 971, புகழ் 1118; விளக்கம் 1329.

**ஒளிக்கும்** - மறைக்கும் 1070.

**ஒளித்ததூஉம்** - மனதில் ஒளித்திருந்த இரகசியத்தையும் 928.

**ஒளியார்** - அறிஞர் 714.

**ஒளியொடு** - அதிகாரத்துக்கேற்ப 698.

**ஒளிவிடும்** - ஞானம் மிகும் 267.

**ஒள்** - விளங்குகின்ற 1088, 1125.

**ஒள்பொருள்** - நல்லவழியில் வந்த பொருள் 760.

**ஒள்வாள்** - கூரியவாள் 727.

**ஒள்ளியர்** - விளங்கும் அறிவுடைய வர் 714.

**ஒள்ளியவர்** - அறிவுடைய அரசர் 487.

**ஒறுக்கிற்பவர்** - பழிக்க வல்லவர் 779.

**ஒறுத்தல்** - தண்டித்தல் 314, 550.

**ஒறுத்தாரை** - (தீமை செய்தவரைத்) தண்டித்தவரை 155.

**ஒறுத்தார்க்கு** - தண்டித்தவருக்கு 156.

**ஒறுத்து** - தண்டித்து 579.

**ஒறுப்பது** - தண்டிப்பது 561.

**ஒற்கத்தின்** - தளர்ச்சியில் 414.

**ஒற்றாடல்** - பிறரிடம் நிகழ்பவை களை மறைவாக அறிந்து வந்து அரசனிடம் கூறுதல் (அதி. 59).

**ஒற்றி** - ஒற்றினாலறிந்து 583, 588; மறைத்து (உண்டு) 927, தொட்டு 1261.

**ஒற்றினால்** - ஒற்றனால் 588.

**ஒற்றினான்** - ஒற்றனால் 583.

**ஒற்றின்கண்**- ஒற்றனிடத்து 590.

**ஒற்று** - ஒற்றன் 581, 584 - 589.

**ஒன்றல்** - கூடுதல், பொருந்துதல் 886.

**ஒன்றன்** - ஒரு உயிரின் 253, 257, 259.

**ஒன்றாக** - ஒரு பொருளாக 155; சிறப் பாக 323.

**ஒன்றாமை** - பகைமை 886.

**ஒன்றானும்** - ஒன்றாவது 128.

**ஒன்றியார்** - உள்ளாயினார்; தன்னுடை யவர் 886.

**ஒன்று** - ஒரு அளவு 87; ஒரு 109; ஒரறம் 111; யாதானுமொன்றை 221; ஒருபொருள் 232; பிறிதொன்று 233; ஒரு காலவரையறை, கால அளவு 334; உபாயத்தை 380; ஒரு பொருள் 438; ஒரு வினையை 758; ஒரு தாழ்வு 778; ஒரு குற்றம் 831; ஒரு துன்பம் 839; பகை ஒன்றை 875; ஒன்றனை 932; பிறிதொன்று 934; ஒருபொருள் 1006; ஒரு பொருள் 1007, 1035; ஒரு துன்பம், 1080, 1202; ஒரு பாவி 1216; ஒரு காரியம் 1271; ஒரு குறிப்பு 1273; ஒரு குறிப்பு 1274 இன்பம் 1325.

**ஒன்று ஆ** - ஒப்பில்லாமல் 233.

**ஒன்று இன்மை** - பற்றப்படுவது ஒரு பொருளுமின்மை 344.

**ஒன்றும்** - ஒன்றாயினும் 209; ஒரு பொருளையும் 281 சிறிதும் 291 நல்ல ஒன்றும் 300.

**ஒன்றோ** - எண் இடைச்சொல்; ஒன்று மேயன்றி 148, 805; ஒன்று மாத் திரமே 836.

**ஒன்னார்** - பகைவர் 165, 264, 608, 630, 756, 827, 828

## ஓ

**ஓ** - அசைநிலை 31; வேண்டா 85; அசைநிலை 99; இல்லை 190; 211 அசை; இல்லை 304, 315; அசை 318, 319; இல்லை 483; அசை 819, 987, 9 90, 1004, 1016, 1029, 1048, 1070, 1081, 1089, 1170, 1171, 1178, 1184, 1195, இடைவிடாமை 1204; அசை 1206, 1240, 1241, இரக்கக் குறிப்பு, ஐயோ 1252; அசை 1267, 1329; இரங்கக் கண்வந்தது 1253, 1254.

**ஓஓ** - ஓ என்னும் வியப்பின் குறிப்பு; அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையும் தோன்றி நின் றது 1088; ஓ மிகுதிப் பொருட்கண் வந்த குறிப்புச் சொல்; 1176.

**ஓஓ இனிதே** - இது மிக இனிதா யிருந்தது 1176.

**ஓஓஉளரோ** - இடைவிடாமல் உளர் 1204.

**ஓஓதல்** - தவிர்தல்; ஓதல் என்பது ஒரு சொல் நீர்மைத்து, ஓவுதல் என்பது குறைந்து நின்றது 653.

**ஓசை** - ஒலி 27.

**ஓச்சி** - தொடங்கி 562.

**ஓச்சும்** - செலுத்தும் 544, 545.

**ஓடா** - ஓடமாட்டா 496

**ஓடி** - சென்று 210.

**ஓடு** - உடன் (3-ம் வேற்றுமை உருபு) 37, 410. 413, 426, 632, 636, 730, 962, 983, 310.

**ஓடும்** - செல்லும் 496.

**ஓட்டு** - தோல்வி 775.

**ஓதி** - கற்று 834.

**ஓத்து** - வேதம்; ஓதப்படுவது 134.

**ஓம்பப்படும்** - காப்பாற்றப்படும் 131.

**ஓம்பல்** - வழுவாமல் செய்தல்; வழுவாமல் பாதுகாத்தல் 43; பாதுகாத்தல் 390; ஒழிக 612; காத்தல் (சோர்வு படாமல் சொல்லல்) 642; தவிர்க்க 820; செலவினைத் தடைப்படுத்து வித்தல் 11155.

**ஓம்பா** - இகழும்; செய்யாத, போற்றாத 89; ஒழிக 861.

**ஓம்பி** - போற்றி, பேணி 81; உபசரித்து 86; காத்து 88; போற்றி 132; பாது காத்து 244, 549.

**ஓம்பின்** - பாதுகாப்பின் 1155.

**ஓம்பு** - தவிர் 1149.

**ஓம்புக** - ஒழிக 506, 861.

**ஓம்புதல்** - பாதுகாத்தல் 322; போற்றி வைத்தல் 626.

**ஓம்பும்** - காக்கும் 968.

**ஓம்புவான்** - காப்பவன் 83, 84.

**ஓரனையர்** - ஒரு தன்மையர் 704.

**ஓரா** - ஆராய்ந்து 548.

**ஓரார்** - (எக்காரியத்தையும் செவி கொடுத்துக்) கேளாமலும் 695.

**ஓரால்** - நீக்குதலும்; செய்யாமையும் 662.

**ஓரும்** - அசை நிலை 40, 366.

**ஓர்** - ஒரு 24, 429, 465, 639. 645, 848, 932, 1053.

**ஓர் ஏர்** - ஒரு நன்மைக் குறிப்பு உண்டு 1098.

**ஓர் ஐந்தும்** - ஐம்புலன்களையும் 24.

**ஓர்த்து** - ஆராய்ந்து 357.

**ஓர்ந்து** - ஆராயந்து 541.

**ஓவா** - நீங்காத 734; ஒழியாது, எப்பொழுதும் 1205.

**ஓவாது** - இடைவிடாமல் 933.

**ஓவாதே** - ஒழியாமல் 33.

**ஓவாப்பிணி** - நீங்காத நோய் 734.

## க

**கஃசு** - காற்பலம் 1037.

**கசடறவல்லதூஉம்** - குற்றந்தீரக் கற்றறிந்ததனையும்; குற்றந்தீரக் கற்றநூல் உண்டாயின் அதன் கண்ணும் 845.

**கசடு** - குற்றம், வழு 391, 717, 845.

**கடப்பாடு** - உபகாரங்கள்; ஒப்புரவு; கைம்மாறு வேண்டாத கொடை; முறையறிந்து செய்யும் உபகாரம்; கடன் என்பதும் கடமை என்பதும் முறைமை; அது தொழிற் பெயராங் கால் கடம்படல், கடப்பாடு என நிற்கும் 211.

**கடலில்** - கடலினும் பார்க்க 103.

**கடலும் ஆற்றா** - கடல் சிறிதாம் வண்ணம்; கடலினும் மிக்க 1175.

**கடலை** - கடலினை 1200.

**கடலை செறாய்** - கடலைத் தூர்க்க முயல் 1200.

**கடல்** - கடத்தற்கரியது கடல் 10, 17, 496, 1137, 1164, 1166, 1175.

**கடவுள்** - கடவுள் இறைவன்; உள்ளத் தைக் கடந்த பொருள் (ஆதி-1)

**கடன்** - கடமை 218, 638; வேற்றரச ரிடத்துத் தான் செய்யும் முறைமை கள் 687; கடமை 802; (தமக்காற்றத்

தகுந்த) கடமை 981; முறைமை 1053.

**கடாஅ** - ஐயுறா; கடா என்பது கடுக்கு என்னும் பெயரெச்சத்து எதிர்மறை; வினாவி அறியப்படுதல் 585; மதநீர் 1087.

**கடி** - காவல் 1205.

**கடி கொண்டார்** - தனது நெஞ்சத்தில் நான்புகாமல் காவல் கொண்டார் 1205.

**கடிதல்** - தண்டித்தல் 549.

**கடிது** - கடுமையாக; அளவிறந்து (செய்வார் போல) 562.

**கடிந்த** - நீக்கிய; தள்ளிய 658.

**கடிந்து** - நீக்கி 658; ஒழிந்து 668.

**கடியன்** - கொடியன் 564.

**கடுகி** - கிட்டி 564.

**கடுங்கோல்** - கொடுங்கோலரசன் 570.

**கடுத்தது** - மிகுந்த (குணத்தை) 706.

**கடுத்தபின்** - (பிழை நிகழ்ந்ததாகக் கேட்டு அரசன்) ஐயப்பட்டபின் 693;

**கடும்** - கடுமையான 386, 566; கொடிய 570; வலிய 1134; பெரிய 1167

**கடும்சொல்** - இனிமையல்லாத சொல்; இனிமைக்கு எதிர்ச்சொல் கடுமை 386.

**கடை** - ஆயின், இடத்து 53, 230, 315; கீழானது 328; இடத்து 372, 478; முடிவில் 663; இழிந்தவர் 729; பின் 792; இடத்து 803, 837; குறிக் கொண்டு 944; இடத்து 964; இழிபு 998; இடத்து 1019, 1059, 1149, 1195.

**கடைத்தும்** - இடத்தும் 637. 823.

**கடைப்பிடித்து** - குறிக்கொண்டு; கவனித்து; மறவாது 944.

**கடைமுறை** - முடிவில் 792.

**கடையர்** - தாழ்ந்தவர் 395.

**கட்டதனோடு** - களையைக் களைந்து பயிரைக்காத்தலோடு 550.

**கட்டபின்** - களை பிடுங்கியபின் 1038.

**கட்டளை** - உரைகல் 505.

**கட்டளைக்கல்** - உரைகல் 986.

**கட்டு** - இடத்து, 27, 502, 513; கண் களையுடையது 1083.

**கட்படாம்** - முகபடாம்; முகத்திலிடும் சீலை; கண்ணை மறைத்தலின் கட்படாம் எனப்பட்டது 1087.

**கணத்தர்** - இனத்தார் 720.

**கணம்** - சிறுபொழுது; கண்ணிமைப் பொழுது இது க்ஷணம் என்னும் வடசொல்லின் வேறுபாடு எனக் கொள்வாருமுளர். அவ்வாறு கொள் ளுதல் தவறுடைத்து. கண் அம் என் பது கண் இமைத்தலாகிய நேரத் தைக் குறிக்கும் தமிழ்ச்சொல் 29.

**கணிச்சி** - குந்தாலி 1251.

**கணை** - அம்பு 279.

**கண்** - இடத்து 52.....; கண்ணோட்டம் 184; அப்பொழுதே 349; கண் 393; கண் 445; தறுகண் 500; கண்ணோட் டம் 556; கண் 573; கண்ணிற்கு 585; (கோபித்துப் பார்த்துபின்) அப்பார் வைக்கு 686; கண், 705, 709, 780; முன் 1055; கண் 1041.

**கண் அஞ்சா** - பார்வைக்கு அடங் காது 500.

**கண் அஞ்சாது** - அறிந்து கோபித்துப் பார்த்தவரின் பார்வைக்கு அஞ் சாது 585.

**கண்அற** - முகத்தில் விழிக்க முடியாத படி 184.

**கண்அன்னார்** - கண்போன்ற சிறந்த வர் 1061.

**கண்இன்று** - இரக்கமில்லாமல் 1252.

**கண்சாய்பவர்** - அறிவு தளர்ந்தார் 927.

**கண்டது** - பார்த்தது 1071, அறிந்து 1171; பார்த்து 1146,

**கண்டதூஉம்** - கண்டனுபவித்த இன்பமும் 1215.

**கண்டவற்றுள்** - கண்ட நூல்களுள் 300.

**கண்டனைத்து** - கண்டாற்போலும் தன் வசத்ததாகும் (அவனுக்கு அடங்கி நடக்கும்) 387.

**கண்டார்** - அறிந்தவர் 91, 141, 356; பார்த்தவர் 1084, 1090.

**கண்டால்** - பார்த்தால் 1246.

**கண்டான்** - கண்டு அறிந்தவன் 849.

**கண்டு** - பார்த்து 249; கருதிய 387; பார்த்து 399, 667; பார்த்து 758, 1101, 1259.

**கண்டுஅனையரேனும்** - கண்டாற் போன்று வேடமுடையராயினும் 277.

**கண்ணஞ்சான்** - (அவர் கோபித்துப் பார்க்கின்) அப்பார்வைக்கு அஞ் சாது, 686.

**கண்ணார்** - கண்ணுடையவர் 1180, 1305.

**கண்ணாள்** - கண்களையுடைவள் 1119, 1125, 1142.

**கண்ணான்** - கண்ணையுடையவன் 1103.

**கண்ணில்** - கண்களால் 1311.

**கண்ணிற்காண** - கண்ணாற் பார்க்கும் படி 1140.

**கண்ணிற்கு** - கண்ணுக்கு 575.

**கண்ணினால்** - கண்ணால் 1210, 1280.

**கண்ணின்** - பார்வையினது 709; கண்ணினால் 1140; கண்ணினது 1240; கண்ணினால் 1290, 1311.

**கண்ணும்** - இடத்தும் 241; கண்ணும் என்பதில் சிறப்பும்மை எய்துதற் கருமை விளக்கிநிற்கின்றது 354; கண்களையும் 1244; இடத்தும் 1292.

**கண்ணும் எழுதேம்** - கண்ணை மையி னால் எழுதோம் 1127.

**கண்ணுள்ளில்** - கண் உள்ளில் நின்றும் 1126.

**கண்ணே** - அப்பொழுதே 349.

**கண்ணை** - கண்ணினையுடையாய் 1222.

**கண்ணொடு** - கண்ணோடு 1100.

**கண்ணோடாது** - நட்புப்பற்றிச் சாயாது; தாட்சணியம் காட்டாது 541.

**கண்ணோடு** - கண்ணுடன் 576.

**கண்ணோட்டம்** - தன்னோடு பழகின வரைக் கண்டால் அவர்சொல் மறுக்க மாட்டாமை (அதி. 58.)

**கண்நின்று** - கண்முன்னே நின்று 184; முன்நின்ற அளவில் 1055.

**கண்பாடு** - உறக்கம் 1049.

**கதம்** - கோபம் 130.

**கதவு** - கதவினை 1251.

**கதுப்பு** - கூந்தல் 1105.

**கதுமென** - விரைந்து 1173.

**கந்து** - பற்றுக்கோடு; பற்று 507.

**கயமை** - நற்குணங்கள் எவையும் இலராய கீழாரது தன்மை (அதி. 108).

**கயலுண்கண்** - பிறழ்ச்சியுடையகண் 1212.

**கயல்** - கெண்டைமீன் 1212.

**கயிறு** - வடம் 482.

**கரத்தல்** - மறைத்தல் 1054, நாணாலடக் குதல் 1162;

**கரப்பவர்க்கு** - மறைப்பவர்க்கு 1070.

**கரப்பவர்க்குயாங்கொளிக்கும்** - (கரப்பவனுடைய உயிரும் பிச்சை கேட்பவன் சொல்லைக் கேட்டுப் போகும்) பிச்சை கேட்பவனுடைய உயிர் மேலும் நிற்றலால் கரந்தவன் உயிர் எங்கு போய் ஒளித்துநிற்கும் 1070.

**கரப்பாக்கு** - மறைத்தல் 1127, 1129.

**கரப்பார்** - கரப்பவரிடத்து 1067.

**கரப்பிலார்** - ஒளியாது கொடுப்பவர் 1055.

**கரப்பினும்** - (சொல்லாது) மறைத்தாலும் 1271.

**கரப்பின்** - மறுத்தால் 1051; மறைத்தால் 1271.

**கரப்பு** - மறைத்தல் 1053, 1055, 1056.

**கரவா** - மறையாது 527.

**கரவாது** - ஒளிக்காமல் 1035, 1051.

**கரவு** - வஞ்சனை 288; மறைத்தல் 1068, 1069.

**கரி** - சான்று 25, 245, 1060.

**கரியார்** - (மனம்) இருண்டிருப்பார் 277.

**கரு** - கரிய 1123; பசுமை 1306.

**கருக்காய்** - இளங்காய் 1306

**கருத** - நினைக்க 1028,

**கருதி** - நோக்கி 463; அறிந்து 484; நினைந்து 485; பார்த்து 687, 696; எண்ணி 700, 852; ஆராய்ந்து அறிந்து 949.

**கருதினும்** - கொள்ள விரும்பினாலும் 484.

**கருதுப** - நினைப்பர் 337.

**கருதுபவர்** - நினைப்பவர் 485.

**கருமஞ்செய** - (குடியை உயரச் செய்யும்) கருமத்தைச் செய்ய 1021.

**கருமணியின்** - கண்ணின் கருமணியின் 1123.

**கருமத்தால்** - (இழிந்த) செயல் காரணமாக 1011.

**கருமம்** - தொழில், செயல் 266, 467, 505, 578, 818, 1021.

**கரும்பு** - கரும்புப்புல் 1078.

**கருவி** - ஆயுதம் 421; மூவகை ஆற்றலும் நால்வகை உபாயங்களும் 483; மனம் 537; சாதனம் 631, 675.

**கருவியான்** - சாதனத்தால் 483; மனத்தால் 537.

**கரை** - நீர்நிலையை அடுத்துள்ள தரை 1167.

**கரைந்து** - அழைத்து, கத்தி அழைத்து 527.

**கலக்கத்தை** - துயரத்தை 627.

**கலங்காது** - (மனங்) கலங்காது 668.

**கலங்கிய** - தடுமாறித் திரியலாயின 1116.

**கலங்கினாள்** - மறந்து கூடிவிட்டாள் 1290.

**கலத்தல்** - கூடுதல் 1259; கலக்கும் கலவி 1276.

**கலத்தல் உறுவது** - கலங்கத் தொடங்குவது 1259.

**கலத்துள்** - ஏனத்துள் 660.

**கலந்தார்க்கு** - (கனவில் வரும்) காதலருக்கு 1212.

**கலந்து** - சேர்ந்து 1246. 1268.

**கலப்பேன்கொல்** - கலத்தல் கூடுதலென்னும் இரண்டையும் கலந்து செய்வேனோ 1267.

**கலம்** - அணிகலம் 60, 575; ஏனம் 660, 1000, 1029; வளையல்கள் 1262.

**கலம் கழியும்** - வளைகள் கழலும் 1262.

**கலன்** - மரக்கலம் - 605.

**கலுழும்** - அழும் 1173.

**கலுழ்வது** - அழிவது 1171.

**கல்** - கல்லு, 505; நடுகல் 771.

**கல்நின்றவர்** - கல்நடப்பட்டு நின்றவர்; தமக்கு கல் நடப்பட்டவர் 771.

**கல்லா** - பழக்கமில்லாத 814.

**கல்லாத** - கல்லாத நூல்களை 845.

**கல்லாத ஆறு** - கல்லாது கழிகின்றது 397.

**கல்லாதவர்** - படியாதவர் 393, 395, 403, 406.

**கல்லாதார்** - படியாதவர் 409.

**கல்லாதான்** - படியாதவன் 402, 404.
**கல்லாமை** - கல்வியின்மையால் உண் டாகும் குற்றம் (அதி. 41).
**கல்லார்** - கல்வியறிவில்லாதவர் 408, 570.
**கல்லான்** - (அரசியலை) அறியாதவ னோடு 870.
**கல்வி** - (வேண்டிய) கல்வி 383; கற்றல் 398, 400, 684, 717, 939; கற்றற்குரிய நூல்களைக் கற்றல் (அதி. 40.)
**கவரிமா** - கவரிமா என்னும் விலங்கு 969.
**கவர்ந்து** - கொண்டு, உண்டு 100,
**கவலை** - துயர், துன்பம் 7.
**கவறு** - சூது 920; சூதாடுகாய் 935.
**கவிகை** - குடை 389.
**கவிழ்ந்து** - குனிந்து 1114.
**கவின்** - இயற்கை அழகு 1234, 1235, 1250.
**கவுள்** - கன்னமுடைய 678.
**கவ்விது** - மிகுதலையுடையது; அலர் தலையுடையது 1144.
**கவ்வை** - பழி தூற்றுதல் 1144.
**கழகத்து** - சூதாடு களத்தின்கண் 937.
**கழகம்** - சூதாடுகளம் 935.
**கழல்** - வீரதண்டை 777.
**கழல்யாப்பு** - வீரக்கழலை அணிதல் 777.
**கழாஅ** - கழுவாத 840.
**கழாஅக்கால்** - (அழுக்கை மிதித்துக்) கழுவாதகால் 840.
**கழி** - மிக 57; மிகுதியான 657, 866, 946.
**கழிபெரும்** - மிகப் பெரிய 571, 866.
**கழிபேர்** - மிக அதிக; கழிபெரு என் னும் இரண்டும் ஒரு பொருள் தரும் சொற்கள் 946.
**கழிய** - மிக 404.
**கழியும்** - நீங்கும் 378; செல்கின்ற 1169; கழலும் 1262.
**களத்து** - களரியில் 1224.
**களரின்** - சேற்று நிலத்தில் 500.
**களர்** - உவர்நிலம்; சவர்நிலம் 406.
**களவினால்** - திருட்டினால் 283.
**களவு** - திருட்டு 284, 286 - 289.
**களவு கொள்ளும்** - களவாகப் பார்க் கும்; யான் அறியாமல் பார்க்கும் 1092.
**களன்** - சபை; சபையோர் 730.
**களி** - கள்ளுண்டு மகிழ்தல் 923; மயக் கம் 1145.
**களித்தல்** - மகிழ்ச்சி மிகுதல் 1281.
**களித்தறியேன்** - கள்ளைப் பிறரறியா மல் உண்டு பின்பு) நான் கள் உண்ண வில்லை எனக் கூறுதல் 928.
**களித்தற்றால்** - (கள்ளுண்டு) களித் தது போலும் 838.
**களித்தார்க்கு** - கள்ளுண்டு மகிழ்ந்த வருக்கு 1288.
**களித்தானை** - கள்ளுண்டு மகிழ்ந்த வனை 920, 930.
**களித்து** - மயங்கினாற் (போலும்) 838; மயங்கி 928.
**களித்தொறும்** - மயங்குந்தோறும் 1145.
**களிறு** - ஆண்யானை 500; 597, 774, 1087.
**களைகட்டு** - களைகளைப் பிடுங்கு தல் 550.
**களையாள்** - கிள்ளாள்; நீக்காள் 1115.
**களையுநர்** - தறிக்கின்றவர்; கெடுக் கின்றவர் 879.
**களைவது** - நீக்குவது 788.
**கள்** - மயக்கம் தரும் பொருள்கள் 920, 921, 924, 926, 927, 930, 1145, 1201, 1288.
**கள்வ** - வஞ்சகா; கள்ளா 1288;
**கள்வர்** - திருடர் 813.
**கள்வன்** - திருடன் 1258.

**கள்வார்** - களவினைப் பயில்வார் 290.

**கள்வேம்** - வஞ்சித்துக் கொள்வோம் 282.

**கள்ளத்தால்** - களவினால் 282.

**கள்ளம்** - வஞ்சனை 1184; மறைத்தற் குறிப்பு 1275.

**கள்ளாமை** - வஞ்சித்துக் கொள் ளாமை 281.

**கள்ளார்க்கு** - திருடக் கருதாருக்கு 290.

**கள்ளுண்ணாமை** - ஒழுக்கமும் உயர்வும் அழிக்கும் கள்ளை உண் ணாமை (அதி. 93)

**கள்ளுக்கு** - கள்ளிற்கு 1281.

**கள்ளை** - கள்ளினை 922.

**கறுத்து** - பகைத்து, சினந்து 312.

**கற்க** - (வியங்கோள்) படிக்க 391, 725.

**கற்பவை** - படிக்கவேண்டிய நூல் களை 391.

**கற்பின்** - படித்தால் 373.

**கற்பு** - பதிவிரதத்தன்மை; கணவன் கற்பித்தபடி நடத்தல் (“கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை”, (ஔவையார்). 54; தலைவன் தலை வியை மணந்து இல்லிருந்து நல் லறம் நடத்தும் கால நிகழ்ச்சிகள் (அதி. 116).

**கற்றக்கடைத்தும்** - கற்றவிடத்தும் 823.

**கற்றதனால்** - கற்ற கல்வியறிவினால் 2.

**கற்றது** - கற்றநூல் 650.

**கற்றறிதல்** - (நீதி நூல்களைக்) கற்று விதிவிலக்குகளை அறிதல் 632.

**கற்றறிந்தார் காமுறுவர்** - கற்றறிந்த வர் கல்வியைப் போதிக்க விரும்பு பவர் 399.

**கற்றனைத்து** - கற்ற அளவுக்கு 396.

**கற்றார்** - கற்றவர்களாவர்; உயர்ந்தவர் களாவர் 395; நூல்களைக் கற்றவர் 403, 409, 722.

**கற்றான்** - (மருந்து நூலைக்) கற்ற மருத்துவன் 949.

**கற்றிலன்** - கல்லாதவன்; கற்கமாட்டாத வன் 414.

**கற்று** - நூல்களைப் பயின்று 130, 140, 356, 399, 632, 686, 717, 728, 729.

**கற்றோர்** - நூல்களைப் பயின்றவர் 393.

**கனங்குழை** - கனத்த காதணியை யுடைய பெண் 1081.

**கனம்** - சுமை, பாரம் 1084.

**கனவினான்** - கனவிடத்து 1213, 1214, 1216, 1217, 1219, 1230.

**கனவினுக்கு** - கனாவிற்கு 1211.

**கனவினும்** - கனவிடத்தும் 819.

**கனவு** - கனா 1215.

**கனி** - பழம் 100, 1191, 1306.

**கன்றிய** - மிகுந்த 284, 286.

## கா

**கா** - தோளில் வைத்து சுமை தூக்கும் காவுதண்டு 1163; காவுதடிச் சுமை 1196.

**காக்க** - பாதுகாக்க 122; அடக்குக 127; காப்பாற்றுக 132, 281, 305, 434; 883.

**காக்கின்** (துன்பம் நேராமல்) - காக்கின் 305.

**காக்கும்** - காப்பாற்றுவான், காப்பாற்றும் 547; காப்பாற்றும் 57 , 421, 429, 422.

**காக்கை** - காகம் 481, 527

**காடி** - கஞ்சி, ஊறுகாய் 1050.

**காடு** - வனம் 742.

**காட்சி** - அறிவு 174, 199, 218, 654, 699.

**காட்சிக்கு எளியன்** - தங்குறைகளைக் கூறவரும் (குடிகளுக்கு) காண்ப தற்கு எளியன் 386.

**காட்சியவர்** - அறிவினையுடையவர் 174, 199, 218, 352, 654, 699.

**காட்சியார்** - அறிவுடையார் 258.

**காட்ட** - (காதலரைக்) காட்டலாலன்றே 1171.

**காட்டி** - காண்பித்து 167, 334; தோன்றி, புலப்படுத்தி 454

**காட்டிய** - காட்டுதற்கு 1313.

**காட்டிவிடும்** - கண்ணெதிரில் காணும் படி செய்யும் 28.

**காட்டுதல்** - காட்டித் தெளியச் செய்தல் 929.

**காட்டும்** - காண்பிக்கும் 706, 959.

**காட்டுவான்** - அறிவிக்கப் புகுவான் 849.

**காணப்படும்** - அறியப்படும் 114, 185; உண்டாம் 298; அறியப்படும் 349, 1237.

**காணலுற்று** - விரும்பி 1244.

**காணல்** - பார்த்தல் 1244.

**காணா** - பார்க்க மாட்டாத 1285.

**காணாக்கால்** - காணாதபோது 1286.

**காணாச்சினத்தான்** - (தன்னையும் பிறரையும்) அறியாமைக் கேது வாகிய கோபமுடையவன் 866.

**காணாதவர்** - காணாத பெண்கள் 1219.

**காணாதான்** - (பிறரால் ஒன்றை) அறி யும் குணமில்லாதவனை 849.

**காணாது** - காணாமல் 1178, 1283.

**காணார்** - அறியமாட்டார் 857, 1220.

**காணான்கொல்** - அறியமாட்டானோ 1197.

**காணின்** - கண்டால் 488; பெற்றால், வாய்க்கப்பெற்றால் 881; கண்டால் 1040, 1051, 1056, 1057, 1074, 1079, 1112; கண்டால்; காணும் தொழிலுடை யன வாயின் 1114.

**காணுங்கால்** - ஆராயுமிடத்து 710; கண்டவிடத்து 930, 1286.

**காணும்** - நினைக்கும் 859; பார்க்கும் 224; பார்க்கப்படும் 1285.

**காண்பு** - காணல் 16.

**காணேன்** - காணப்பெறேன் 1167; காண மாட்டேன் 1285; 1286.

**காண்க** - காண்பேனாக; (கண்கள்) காண்பனவாக 1265.

**காண்கம்** - காண்பேமாக 1301.

**காண்கிற்பின்** - காணவல்லானாயின் 190, 436.

**காண்டலின்** - காண்பதினாலே 1213.

**காண்பது** - காணுவது 355, 358, 423, 424.

**காண்பர்** - பார்ப்பர் 620, 1034.

**காண்பவர்** - அனுபவிப்பவர் 379.

**காண்பான்** - அறிகின்றவன் 99; கண்டு வருந்துகின்றவன் 656.

**காண்பு** - காணல் 16.

**காதல** - விரும்பப்பட்ட பொருள்கள் 440.

**காதலம்** - காதலை உடையேம் 1314.

**காதலர்** - காதலையுடையவர் 1150, 1185, 1208, 1211, 1216, 1219, 1226 , 1246, 1278, 1308.

**காதலவர்** - விருப்பமுடையவர் 286; காதலர் 1126, 1127, 1128, 1149.

**காதலன்** - நன்மையை விரும்புபவன் 209.

**காதலார்** - காதலையுடையார்; காதலித் தவர் 1099.

**காதலிக்கும்** - விருப்பந்தரும் 940.

**காதலை** - (நீயும்) விருப்பப்படத் தக்காய்; காதலையுடையாய் 1118.

**காதல்** - விருப்பம் 284, 440, 921; காமவிருப்பம் 1195, 1242.

**காதற்று** - காதலை உடையது 940.

**காதன்மை** - அன்புடைமை (காதல் மை) 507, 832

**காதன்மைசெயல்** - விரும்பிச் செயல் 832.

**காத்தலும்** - (பொருளைக்) காத்தலும் 385.

**காத்தல்** - தடுத்தல், தாங்குதல் 29; பாது காத்தல் 632; அழியாமற் காத்தல் 1038.

**காத்து** - காத்து கடவாமல் காத்து 56; எழாமல் தடுத்து 130, 549. 642.

**காத்து ஓம்பல்** - காக்க; (காத்தல் ஓம்பல் என்னும் இரு சொற்களும் ஒரு பொருள் தருவன; இன்றி யமையாமையை யுணர்த்த இரு காற் கூறப்பட்டது) 642.

**காப்ப** - காப்பாற்றிக் கொள்ள 878.

**காப்பாற்றும்** - காத்தல் செய்யும் 388.

**காப்பான்** - அடக்குபவன் 3; செல்லா மல் தடுப்பவன் 24, 301.

**காப்பின்** - பாதுகாப்போடு 744.

**காப்பு** - காவல் 57; காத்தல் 388; பாது காப்பு 781, 1038.

**காப்போல** - காவு தடியின் பாரம் போல 1196.

**காமக்கடல்** - காமநோயாகிய கடல் 1164.

**காமக்கலம்** - விரும்பி ஏறும் மரக் கலம் 605.

**காமக் கடும்புனல்** - காமமாகிய பெரிய கடல்; காமமாகிய பெருங்காற் றினை (மண) 1167.

**காமத்தான்** - காமமுடையவன் 866.

**காமத்தில்** - சேர்க்கையில் 1092.

**காமத்திற்கு** - காமமுடையவருக்கு 128; காம நுகர்ச்சிக்கு 1330.

**காமத்து** - காம நுகர்வினது 1191.

**காமம்** - ஆசை 360; விருப்பம் 1090; காமவிருப்பம் 1109, நுகர்தல் 1110; .... காமம் என்பது ஆதியில் நிறைவு என்னும் பொருளில் வழங்கிய தமிழ்ச் சொல் என டாக்டர் துரை அரங்கனார் கூறுவர்;

**காமம் விடு** - காமத்தை விடு 1247.

**காமன்** - காதற் கடவுள் 1197.

**காமுறுதல்** - விரும்புதல் 402.

**காமுறுவர்** - விரும்புவர் 399, 649.

**காமுற்றற்று** - விரும்பினாற்போலும் 402.

**காமுற்றார்** - காமம் மிக்கவர் 1133.

**காம்பு** - மூங்கில் 1272.

**காயார்** - கோபிக்க மாட்டார் 1208.

**காயினும்** - வெறுப்பினும் 707.

**காயும்** - சுடும் 77; கோபிப்பாள் 1313, 1319. 1320.

**காய்தி** - வெறுக்கின்றாய் 1246.

**காய்வார்** - காய்கின்றவர் 691.

**காய்வு** - சினம் 1246.

**காரணங்காட்டுதல்** - காரணங்காட்டி விளக்குதல் 929.

**காரணத்தின்** - காரணம் ஏதுவாக 530.

**காரணம்** - ஏது 270, 529, 929.

**காரிகை** - அழகு 571, 777, 1262.

**கார்** - இருண்ட 287.

**காலத்தால்** - காலத்தோடு பொருந்த 686.

**காலத்தினால்** - (ஆபத்து வந்த) காலத்தில் 102.

**காலத்தோடு** - காலத்தோடு பொருந்த 516.

**காலமறிதல்** - வலிமையுடைய அரசன் பகைமேல் செல்வதற்கு ஏற்ற கால மறிதல் (49)

**காலம்*** - பொழுது 483, 484, 485, 487, 631, 675; சமயம் 687; பொழுது 696, 830, மருந்து கொடுக்கும் காலம் 987.

**காலம் கருதி** - சமயம் பார்த்து 687.

**காலை** - காலத்தில் 799; இளமைக் காலத்தில்; அறம்பொருள் இன்பங் களை அடையத்தக்க காலம் 937;

பொழுது 1094; முன்னே 1226; விடியற்காலை 1225.

**காலைக்கு** - விடியற் காலத்துக்கு 1225.

**கால்** - பொழுது 36, 248, 379, உருளை 496; அடி 500; பொழுது 674, 710, 733; அடி 840; பொழுது 859, அடி மரம் 430, 930; 1030; முளை 959; பொழுது 1064, 1104; காம்பு, முகிழ் 1115; 1166; 1179, 1218.

**கால்ஆழ்** - கால் புதைகின்ற 500.

**கால் கொன்றிட** - காலை வெட்டிச் சாய்க்க 1030.

**காவலன்** - அரசன் 560.

**காவாக்கால்** - அடக்காவிட்டால் 127, 301, 305.

**காவாதான்** - காவாத அரசன் 435.

**காவாது** - பாதுகாப்புத் தேடாது 535.

**காவார்** - காவாதவர் 127.

**காவான்** - முறையால் பாதுகாவான் 560.

**காழ்** - கொட்டை, விதை 1191.

**காழ்த்தவிடத்து** - வயிரம் அடைந்த விடத்து; காழ்தல் - முதிர்தல் 879.

**காழ்ப்ப** - முற்ற, மிக, அதிகம் 760.

**கானம்** - காடு 772.

## கி

**கிடந்தது** - முடிந்தது, கூடியது 446, 583, 1001.

**கிடந்தமை** - இயல்பு 959.

**கிழக்கு** - கீழ், கீழாகும் 488.

**கிழக்காந் தலை** - தலைகீழாக விழுவர் 488.

**கிழமை** - உரிமை 785, 805.

**கிழமையை** - (நட்பு) உரிமையால் செய்தவைகளை 801.

**கிழவன்** - (நிலத்துக்கு) உரியவன் 1039.

**கிளத்தல்** - சொல்லுதல் (125)

**கிளவா** - சொல்லாத 715.

**கிளைஞர்** - நண்பர் 976.

## கீ

**கீழல்லார்** - கீழ்மை இல்லாதவர் 937.

**கீழிருந்தும்** - கீழிடத்திலிருந்தும்; இடம் - செல்வம் அதிகாரம் என்பவற்றால் இருக்குமிடம் 973.

**கீழ்** - கண், இல் 389; கீழ்க்குலம் 409; உள்ளாக 558, 929; கீழான இடம் 973; உள்ளாக 1034; கீழாயினான் 1074, 1079; கீழாயினான் 1078.

**கீழ்களது** - கயவரது 1075.

**கீழ்நீர் குளித்தானை** - நீருள் மூழ்கிய ஒருவனை 929.

**கீழ்ந்திடா** - அழிக்கலில்லாத; அறுத்தலில்லாத 801.

**கீழ்ப்படின்** - வாழின் 558.

## கு

**கு** - நாலாம் வேற்றுமை உருபு 7, 8, 18, 24....

**குடங்கர்** - குடில் 890.

**குடம்பை** - முட்டை 338.

**குடி** - குடும்பம் 171; நாட்டில் வாழும் மக்கள் 381, 390; உயர்ந்த மரபு 502; நாட்டில் வாழும் மக்கள் 542, 544, 549, 554; குடும்பம் 601, 604; 609; நாட்டு மக்கள் 632; உயர் மரபு 681, 794; குடும்பம் 887, 888; உயர் மரபு 952, 954, 957; 992; குடும்பம் 1022, 1023, 1025, 1028, 1030.

**குடிகாத்தல்** - குடிசனங்களைக் காத்தல் 632.

**குடிக்கு** - உயர்குடியிற் பிறந்தவருக்கு 953.

**குடிசெய் வகை** - ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்யும் வகை (103)

**குடி செய்வல்** - குடியை உயரச் செய்வேன் 1023.

**குடிமை** - குடிப்பிறப்பு, உயர்குலம் 133, 608, 793; உயர்ந்த குடியிற் பிறந்த வருடைய தன்மை (96)

**குடியாக** - (மென்மேல் வளரும்) குடியாக 602.

**குடியாண்மை** - குடியை ஆளுகின் றமை 609.

**குடும்பத்தை** - குடியை; (குடும்பம் கூட்டமாய் இருப்பது; குடுமி - கூட்டி முடியப்பட்டது. கூடு என்னும் அடியாகப் பிறந்தது குடும்பம் என்னும் சொல். இது ஆரியச் சொல்லெனல் தவறுடைத்து)

**குடை** - கவிகை 1034.

**குணநலம்** - நற்குணங்களாலாகிய நன்மை 982.

**குணத்தான்** - குணங்களை உடைய வன் 9.

**குணமில** - பயனில்லாதன 9.

**குணம்** - நல்ல தன்மை; குண மென் பது உள்ளத்து அமைவுடைமை (காளிங்கர்) 9, 29, 504, 1125.

**குணன்** - குணம் 793, 868.

**குதித்தலும்** - கடத்தலும்; குதித்தலும் என்பதில் உம்மை சிறப்பும்மை; அது கைகூடாமையை விளக் கிற்று 269.

**குதித்தல்** - கடத்தல் 269.

**குத்து** - மூக்கால் கொத்துதல் 490.

**குறை** - இசை நிறைக்கண் வந்த இடைச்சொல் 1045.

**குலத்தில்** - உயர் குடியில் 959.

**குலத்தின்கண்** - பிறப்பிடத்து 958.

**குலமுடையான்** - நல்ல குலத்திற் பிறந்தவன் 223.

**குலம்** - குடி, மரபு 956, 960, 1019.

**குலம்சுடும்** - குடிப்பிறப்பைக் கெடுக் கும் 1019.

**குலன்** - குலம் 223.

**குவளை** - நீலோற்பலம் 1114.

**குழல்** - குழலோசை 66, 1228.

**குழவி** - குழந்தை 757.

**குழாஅத்து** - சபையிடத்து 840.

**குழாத்து** - கூட்டம் 332.

**குழு** - கூட்டம் 735.

**குழை** - காதணி 1081.

**குழையும்** - வாடும் 90.

**குளவளா** - குளப்பரப்பு 523.

**குளித்தான்** - முழுகினவன் 929.

**குறி எதிர்ப்பு** - அளவு குறித்து வாங்கி அவ்வாறே கொடுப்பது; வட்டிக்குக் கொடுப்பது 221.

**குறிக்கொண்டு** - குறித்து; காமக் குறிப்புடையார் போல நகுதல் 1095.

**குறித்த** - நிலைக்களனாகக் கொண்டு விடா; உடம்பை வளர்த்ததற்கு ஊனை நத்திவாழும் (காளிங்கர்) 1013.

**குறித்தது** - இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாதது 1013.

**குறித்தமையான்** - குறித்து நின்றமை யால் 827.

**குறிப்பறிதல்** - பிறர் நினைத்ததைக் குறிப்பாலறிதல் (71)

**குறிப்பறிந்து** - (அரசனின்) மனக் குறிப்பை அறிந்து 696.

**குறிப்பறி புறுத்தல்** - தலைவன் தலைவி தோழி என்போர் ஒருவர் குறிப்பை ஒருவருக்கு அறிவித்தல் (128)

**குறிப்பின்** - குறிப்பினால் 703; அறி வால் 705.

**குறிப்பின்றி** - எண்ணத்தின்படி அடங்கி நில்லாது 1253.

**குறிப்பு** - உடல் வேறு பாட்டால் விளங்கும் கருத்து 696; அரசன் நினைத்த கருமத்தின் குறிப்பை 701; மனக்குறிப்பு 703, 705; குறிப்புப் பற்றி வருவன (அது ஆகு பெயர்) 1097.

**குறுகுதல்** - கிட்டுதல் 820.

**குறுகும்கால்** - கிட்டும்போது 1104.

**குறும்** - குறிய, சிறிய 1135.

**குறும்பு** - **குறும்பர்** - காட்டுச் சாதியினர், சதி செய்வோர்; பாலை நிலத்து ஊர் குறும்பு எனப்படும் 735.

**குறை** - இன்றியமையாமைப் பொருள் 612; குறையிரத்தல் 680; உற்றகுறை 908.

**குறைபெறின்** - குறையிரந்தற்காகிய சமயம் பெற்றால்; இணக்கத்துக்கு இசைந்தால் 680.

**குறைமுடியார்** - குறைகளை நீக்க மாட்டார் 908.

**குறையின்** - குறைந்தால் 941.

**குற்றத்தார்க்கு** - குற்றத்தினையுடையார்க்கு 924.

**குற்றத்தின்** - குற்றங்களிலிருந்து 502.

**குற்றம்** - பிழை 171, 188, 190, 433, 434, 436, 504, 549, 604; குடிக்கு வேண்டுவன செய்யாமையால் வருங்குற்றம் 609.

**குற்றம் கடிதல்** - காமம், கோபம், ஆசை, மானம், உவகை மதம் என்னும் அறுவகைப்பட்ட குற்றங்களையும் நீங்குதல் (44).

**குற்றம் மறைப்பான்** - குற்றம் வராதபடி மறைப்பவனது 1029.

**குன்ற** - குறைவுபட 134; கெட 898; தாழ 961.

**குன்ற நினைப்பின்** - (ஒருவன்) கெட்டுப் போகவேண்டுமென்று நினைப்பின் 898.

**குன்ற மதித்தல்** - அவமதித்தல் (மண) 898.

**குன்றல்** - குறைதல் 811.

**குன்றன்னார்** - மலைபோன்ற பெருமையுடையவர் 898.

**குன்றா** - குறையாத 601; குறைவற்ற 793.

**குன்றி** - குன்றிமணி 277, 965.

**குன்றிக்கால்** - குறைவுபடுமானால் 14.

**குன்றிமூக்கின்** - குன்றிமணியின் மூக்குப் போல 277.

**குன்றின்** - குறைந்தால் 990; மலை போல் 965.

**குன்றின் அனையரும்** - மலைப் போலக் (குடிப்பிறப்பால்) உயர்ந் தோரும் 965.

**குன்று** - மலை,மேடு 29, 758, 898.

**குன்றும்** - குறைவுபடும் 17, 239, 560.

**குன்றுவ** - ஒழுக்கம் குன்றும் செயல்கள் 954, 965.

**குன்றுவர்** - தாழ்வர் 965.

**குன்றேறி யானைப்போர் கண்டற்று** - மலையில் ஏறி நின்று யானைப் போரைப் பார்த்ததுபோல எவராலும் எளிதில் காணமுடியும். 758.

## கூ

**கூகை** - கோட்டான் 481

**கூடலில்** - சேர்க்கையின் கண் 1327, 1328.

**கூடற்கண்** - சேர்க்கையின் கண் 1284.

**கூடாது** - சேராது 887.

**கூடாநட்பு** - மனதில் நட்பில்லாது வெளியே நட்புப் போலிருக்கும் நட்பு (83)

**கூடி** - நெஞ்சு ஒத்து; சிதறுதலின்றி 765; ஒத்த உணர்வினராகி 1330.

**கூடிய** - மேற்கூடிய; கூடுதற்கு அரிய (மண); கூடும் பொருட்டு 1264.

**கூடியகாமம்** - காதலால் கூடுதல் பொருட்டு 1264.

**கூடியார்** - இடைவிடாது எய்தியவர் 1109.

**கூடின்** - சேர்ந்தால் 887.

**கூடும்** - இயலும் 269; பெறலாம் 484.

**கூடுவேம்** - சேரக்கடவோம் 1310.

**கூத்தாட்டு** - கூத்தாடுதல் செய்கின்ற 332.

**கூத்து** - நாடகம் 332.

**கூப்பி** - குவித்து 260.

**கூம்பும்** - குவியும்; மூடும் 425; குவியும் (காலம் பார்த்திருக்கும்) 490.

**கூரியது** - கூர்மையானது 759.

**கூர்ங்கோட்டது** - கூரிய கொம்புடையது 599.

**கூர்ந்து** - மிகுந்து 1010.

**கூலி** - பயன் 619.

**கூழ்** - சோறு; உணவு 64; பொருள் 381; பயிர் 550; பொருள் 554.

**கூழ்த்து** - உணவுகளை உடையது 745.

**கூறப்படும்** - சொல்லப்படும்; - செயப்பாட்டு வினையன்று, கூற வேண்டுமென்பதுபோல உம்மீற்று வியங்கோள் முற்றுவினை (இராமனுசர் உரை) 186.

**கூறல்** - சொல்லுதல் 100, 638; கூறாதே 1236.

**கூறாமை** - சொல்லாமை 701, 704.

**கூறான்** - கூறமாட்டான் 181.

**கூறிவிடும்** - சொல்லிவிடும் 980.

**கூறின்** - சொல்லின் 22; சொல்லிச் சூதாடுவானாயின் 933.

**கூறும்** - சொல்லும் 386.

**கூறுவான்** - சொல்லுவான் 186.

**கூற்றத்தை** - கூற்றுவனை 89.

**கூற்றம்** - இயமன் 269, 1085.

**கூற்று** - இயமன் 326, 765; பகுதிகளை உடையது 950; கேடு 1050; இயமன் 1083.

**கூன்கையார்** - பொத்தியகையர்; வளைத்தகையர் 1077.

## கெ

**கெட** - அழிய 359, 360, 1266.

**கெடல்** - தவிர்ந்திருத்தல் 612 கெடுதல் 856, 893.

**கெடாஅ** - அழியாது 809.

**கெடின்** - கெட்டுப் போகின் 369; இல்லையாயின் 854.

**கெடு** - கெடுதல்; வறுமை 117.

**கெடுக** - கெட்டுப் போவானாக 1062.

**கெடுக்கும்** - அழிக்கும் 447; போக்கும் 937, 1043.

**கெடுதல்** - அழிதல் 208.

**கெடுத்து** - அழித்து 938.

**கெடு நீரார்** - அழிந்துபோகும் குணமுடையவர் 603.

**கெடுப்பதூஉம்** - அழிப்பதும் 15.

**கெடுப்பார்** - (பகையாய்க்) கெடுப்பார் 448.

**கெடும்** - அழியும், நீங்கும், இல்லையாகி விடும் 109, 109, 134.......

**கெடுவல்** - கெட்டு விடுவேன் 116.

**கெட்டவிடத்தும்** - கெட்டதாயினும் 736.

**கெட்டாரை** - (முன்) கெட்ட அரசரை 539.

**கெட்டார்க்கு** - (பொருளில்லாது) கெட்டுப் போனவருக்கு; 1293.

**கெட்டான்** - இறந்தான்; நின்று கெட்டான் 697.

**கெழீஇ** - செறிந்த 816

**கெழீஇயிலர்** - நல்வினையிலர்; விருப்பமில்லாராவர் (மண) 1194.

**கெழு தகைமை** - உரிமை 700; உரிமை பாராட்டுவது 802.

## கே

**கேடன்** - கேட்டினை உடையவன் 210.

**கேடில்** - அழிவில்லாத 400.

**கேடு** - அழிவு 32, 115, 165, 169; கேடு தரும் செயல் 204; பொருட்கேடு 220, 235; அழிவு 400, 478, 642, 700, 736; அழிவு தரும் செயல் 791, 858, 859, 889.

**கேடும்** - கேடு வருதலும் 115; தீமையும் 642.

**கேட்க** - சொல்லக் கேட்க 414, 416; வினாவ 587.

**கேட்கும்** - கைக்கொள்ளும் 648.

**கேட்ட** - செவிக்கொண்ட 10, 1076.

**கேட்டல்** - செவிக் கொள்ளுதல் 65.

**கேட்டார்** - நட்பாய் ஏற்றுக் கொண்டாரை; வினாவினாரை (மண) 643.

**கேட்டால்** - கெடுதியினால் 732.

**கேட்டினும்** - கேடுவந்த காலத்திலும் 796.

**கேட்டு** - (செவியால்) கேட்டு 1101.

**கேட்பர்** - (பிறர் தூற்றுதலைச்) செவிக்கொள்வர் 607.

**கேணி** - ஊற்று, கிணறு 396.

**கேண்மை** - நட்பு 106; உறவு 441; நட்புத்தன்மை 709; உறவு 782......

**கேண்மையவர்** - நட்புடையவர் 807.

**கேண்மையார்** - நண்பரின் 809.

**கேளா** - கேளாத 418; பிறர் சொல்லினும் கேளாத 418, 808.

**கேளாதவர்** - கேட்கப் பெறாதவர் 66.

**கேளாது** - கேட்காமல் 804.

**கேளாது** - கேட்டுச் சம்மதம் பெறாது 804; நீதி நூலைக் கடந்து; பெரியார் சொல்வதைக் கேளாது 893.

**கேளார்** - ஏற்றுக் கொள்ளாதவர் 643.

**கேளிர்** - சுற்றம் 187, 615; தலைவர், காதலர் 1267.

**கேள்** - நண்பர் 808,882 காதலர் 1222

**கேள்வி** - கேட்க வேண்டியவற்றைக் கற்றாரைக் கேட்டல் (42)

**கேள்வியர்** - கேள்வியை உடையவர் 419.

**கேள்வியவர்** - கேள்வியையுடையவர் 418.

## கை

**கை** - கையென்னும் உறுப்பு 64, 178..........; அளவு 567; உரிமை ஒழுக்கம் 832; சிறுமை 925; செய்யும் முறைமை 836; கைத்தொழில் 935; அளவு 1271.

**கை அல்லது** - தனக்கு ஆகாத (கடியப்பட்ட) 832.

**கை அறியாமை உடைத்தே** - சிறிய அறியாமை உடையதன்று 925.

**கை இகந்த தண்டம்** - அதிக தண்டனை; மிக்க தண்டம் 567.

**கை இகந்து** - கை கடந்து 1271.

**கைகளை** - கரங்களை 1238.

**கைகூடும்** - இயலும் 269; அனுகூலமாகும் 484.

**கை செய்து** - கையால் செய்து (உழுது) 1035.

**கைதூவேன்** - முயற்சி ஒழியாமை (கை தூவாமை - கை ஒழியாமை) 1021.

**கைத்து** - கைப்பொருளாக 593; கையிடத்தே 758.

**கைப்ப** - வெறுக்குமாயினும் 389.

**கைப்பொருள்** - கையிடத்துள்ள பொருள் 178.

**கைமடங்கின்** - விட்டாராயின் 1036.

**கைம்மாறா** - அதற்கு மாறாக 1183.

**கைம்மாறு** - பதில் உபகாரம் 211.

**கையர்** - கையினை உடையவர் 1077.

**கையறியா** - அறிய மாட்டாத 836.

**கையறியாமை** - செய்ய அறியமாட் டாமை 925.

**கையால்** - கை காட்டி 894.

**கையாறு** - தும்பம் 627.

**கையும்** - ஆடும் கைத்திறமையையும் 935.

**கையுள்** - கையகத்து 828.

**கைவிடல்** - தொடர்புவிடுதல் 450, 1245.

**கைவிடுக** - ஒழிக 928.

**கைவிடுவார்** - விட்டு நீங்குவார் 799.

**கைவேல்** - கையிற் பிடித்தவேல் 774.

## கொ

**கொக்கு** - கொக்கென்னும் பறவை 490.

**கொடிது** - செயலில் கொடுமையுடை யது 279, 551.

**கொடிய** - கொடுமையுடைய 1169.

**கொடியார்** - கொடுமை உடையவர் 1236.

**கொடியார்** - கொடுமை உடையவர் 1169, 1217, 1235.

**கொடிறு** - தாடை, கதுப்பு 1077.

**கொடு** - கொண்டு 1264.

**கொடுக்கும்** - காட்டும் 924.

**கொடுங்கோன்மை** - நீதியில் தவறி ஆளும் தன்மை (56)

**கொடுத்து** - தந்து 703, 794, 867, 925.

**கொடுத்தும்** - அவன் வேண்டியது ஒன்றைக் கொடுத்தும் 794.

**கொடுப்பது** - ஒருவன் மற்றொரு வனுக்குக் கொடுப்பதை 166.

**கொடுப்பதூஉம்** - தருவதும் 1005.

**கொடுமை** - இரக்கமில்லாத செயல் 1169; பொல்லாங்கு 125.

**கொடும்** - வளைந்த 1086.

**கொடை** - கொடுத்தல் 390.

**கொடையான்** - கொடுப்பவன் 526.

**கொட்க** - புலப்பட; வெளிப்பட 663.

**கொட்கில்** - புலப்படுமாயின் (கொட்கு தல் - வெளிப்படுதல்) 663.

**கொட்பு** - வேறுபாடு 789.

**கொண்கன்** - கணவன் 1186, 1266, 1285.

**கொண்ட** - கொண்டவை 659; உள்ளே கொண்ட 745.

**கொண்டவன்** - பூண்டிருந்தவன் 307.

**கொண்டனள்** - உள்ளவளாயினாள் 1315.

**கொண்டற்று** - கொண்டதுபோல (ஊரெங்கும் அலராயிற்று) 1146.

**கொண்டார்** - கையில் வைத்திருப்ப வர் 253; செய்யப்பட்டவர் 1195; கொண்ட காதலவர் 1205.

**கொண்டாரின்** - மேற்கொண்டொழுகு வாரைப் பார்க்கிலும் 551.

**கொண்டான்** - கணவன் 51, 56.

**கொண்டு** - கொண்டால்; அறிந்தால் 22; மேற்கொண்டு 326, 551, கைக் கொண்டு 831; மேற்கொண்டு 845; கைக்கொண்டு 874, 921, 974; கொண்டு வந்து 1082; கைக்கொண்டு 1095, 1146.

கொண்டு ஒழுகின் - காத்துக்கொண்டு ஒழுகின் (காத்தல் - கெட்ட வழி யில் செல்லாது காத்தல்) 974.

**கொம்பர்** - மரக்கிளை 476.

**கொலை** - கொல்லும் தொழில் 325, 329, 551, 1224.

**கொலைக்களம்** - கொல்லும் களரி 1224.

**கொலையின்** - கொலை செய்து 550.

**கொல்** - அசைநிலை 2, 28. 211, 345......; கொலை 735.

**கொல்ல** - நெருக்க; வருத்த 1078.

**கொல்லா** - கொலை செய்யாத 984.

**கொல்லாது** - கொலை செய்யாது 256.

**கொல்லாமை** - கொலை செய்யாமை 254, 321, 323, 324, 325, 326.

**கொல்லான்** - கொலை செய்யாதவனாய் 260.

**கொல்லி** - கொல்வது 306.

**கொல்லும்** - கெடுக்கும் 304; கெடுக்கும் துன்பங்களை வருவிக்கும் 305; கெடுக்கும் 532; களையும் 879.

**கொழுநன்** - கணவன் 55.

**கொள** - கொண்டு 1244.

**கொளப்பட்டேம்** - மதிக்கப்பட்டேம்; கைக்கொள்ளப்பட்டேம் 699.

**கொளலின்** - அடைவதைவிட 450.

**கொளல்** - பெறுதல் 134........; இரத்தல் 222; அழிக 279; கொள்க 442; துணைக்கொளல் 504; கொள்ளுதல் வேண்டும் 445; நன்கு கொள்ளுதல் வேண்டும் 714; மதிக்க 702; கொள்ளற்க 720; விலைகொடுத்து வாங்குதல் 925; ஏற்றுக் கொள்ளுதல் 986.

**கொளற்கு** - பகைவர் கொள்ளுதற்கு 745.

**கொளினும்** - கொண்டாலும் 872.

**கொளின்** - கொண்டால் 630, 836, 939.

**கொளிஇ** - மேற்கொள்ளப் பண்ணி 938.

**கொள்க** - அடைக 161, 875.

**கொள்கலம்** - இடுகலம் 1029.

**கொள்கை** - விரதங்கள்; கோட்பாடு 899; ஒழுக்கம் 1019.

**கொள்பவர்க்கு** - கொண்டு ஒழுகுபவர்க்கு 981.

**கொள்பவன்** - கொள்ளும் அவன் 873.

**கொள்வது** - முயல்வது 262; செய்வது 1055.

**கொள்வாரோடு** - அறிவாரோடு 704.

**கொள்வு** - கொள்வது 1187.

**கொள்வேம்** - பெறுவேம் 282; அவரது தன்மையைக் கைக்கொள்வேம் 976.

**கொள்ளப்பட்டேம்** - நன்கு மதிக்கப் பட்டோம் 699.

**கொள்ளலாகும்** - திரும்பவும் கற்றுக் கொள்ளலாம் 134.

**கொள்ளற்க** - கொள்ளாதொழிக 798, 827, 872.

**கொள்ளா** - கொள்ள முடியாத; அடங்காத 1064.

**கொள்ளுக் கடை**- கொள்ளாதவிடத்து 1195.

**கொள்ளாத** - போருந்தாத 470; விரும்பாத 699.

**கொள்ளாதான்** - அடையாதவன் 792.

**கொள்ளாது** - ஏற்றுக் கொள்ளாது 470, 627, 1016.

**கொள்ளார்** - ஏற்றுக் கொள்ளார் 404.

**கொள்ளும்** - அடைகின்ற 1092.

**கொற்றம்** - வெற்றி 583.

**கொன்ற** - கெடுத்த, அழித்த 110.

**கொன்றது** - கொலை செய்வதுபோல் துன்பம் தரும் 1048.

**கொன்றாங்கு** - கெடுக்குமாறு போல 532.

**கொன்றார்க்கு** - அழித்தவருக்கு 110.

**கொன்றிட** - வெட்டிச் சாய்க்க 1030.

**கொன்று அன்ன** - கொண்றாலொத்த 109.

## கோ

**கோடல்** - கொள்ளுதல் 646; கொள்க 678.

**கோடா** - கோடாது; வளையாது, நேராக 1086.

**கோடாது** - கோணிப் போகாது 520, 546.

**கோடாமை** - நடுவு நிலையில் தவறாமை 115; சாயாமை 118; கோணாது கடமை களைச் செய்ய 520.

**கோடி** - நூறு நூறாயிரம் 337, 377; தவறி 554, 559; நூறு நூறாயிரம் 639; கோடி மடங்கு 816, 817; 954.

**கோடியும்** - கோடியளவுமன்றி 337.

**கோடு** - வளைவு உடையது 279; கரை 523; கிளை 1264.

**கோடு கொடுஏறும்** - கோடு கொண்டேறும்; மரக்கிளைமேல் ஏறிப் பார்க்கும் (மென்மேலும் பருத்தெழு கின்றது) 1264.

**கோட்டது** - கொம்பினை உடையது 599.

**கோட்டம்** - கோணுதலையுடைமை; கோணல் 119.

**கோட்டி** - சபை 401; சபை; பேச்சு 720.

**கோட்டி கொளல்** - சபையில் ஒன்றைச் சொல்லுதல் 401.

**கோட்டுப்பூ** - வளைவாகிய பூமாலை; கிளைகளிலுள்ள பூவால் தொடுத்த மாலை 1313.

**கோமான்** - தலைவன், அரசன் 25.

**கோல்** - தராசுகோல் 118; செங்கோல் 390; தடி 415; கொடுங்கோல் 552; முறை செய்யும் கோல் 543, 546, 554; கொடுங்கோல் 558, 570; அளவுகோல் 710, 796; கண்ணுக்கு மை எழுதும்கோல் 1285.

**கோல்கோடி** - நீதி தப்பி 554.

**கோள்** - கொள்ளுதல் 9, 220; துணிவு 311, 312, 646, 652 கொள்ளுதல் 780, 1059.

**கோள்இல்** - தத்தமக்குரிய புலன்களைக் கிரகித்து அறியமாட்டாத 9.

**கொள்வாரோடு** - அறியவல்லாரோடு 704.

**கோறல்** - கொல்லுதல் 254, 321.

**கோன்மை** - ஈகையை உடைமை; ஆட்சியை உடைமை அதி. 55.

## கௌ

**கௌவை** - பழி தூற்றுதல் 1143, 1147, 1150.

**கௌவையால்** - அலர் தூற்றுதலினால் 1148.

### ச

**சமன்** - ஒத்தநிலை 118.

**சமன்செய்து** - முன்னே தான் சமனாக நின்று 118.

**சலத்தால்** - வஞ்சகத்தால்; தீவினையால் 660.

**சலம்** - வஞ்சனை 956.

### சா

**சா** - இல்லையாகும்படியாக; இறக்கும் படியாக 824.

**சாகாடும்** - வண்டியும் 475.

**சாகிற்பின்** - சாக முடியுமானால் 780.

**சாக்காடு** - மரணம் 235, 339, 780.

**சாதல்** - இறத்தல் 183, 1244.

**சாதலின்** - இறத்தலின் 230.

**சாம்துணையும்** - இறக்கும் வரையும் 397.

**சாய** - மடிய 749.

**சாயல்** - மேனியில் அழகு; மென்மை (மண) - 1183.

**சாய்தல்** - ஒழிதல் 858.

**சாய்ந்து** - ஒழிந்து 855.

**சாய்பவர்** - தளர்பவர் 927.

**சார** - நிற்க 323.

**சாரா** - பொருந்தாத; படாத 194; சேராத 815; 1047.

**சார்தரா** - சாரமாட்டா 359.

**சார்தரும்** - பற்றுகின்ற; சாரக்கூடிய 354.

**சார்பில** - அமைவில வாகிய தொழில் களை; (அமைவின்மை அம்மர பிற்கு ஏலாமை) 956.

**சார்பு** - துணை 76; 449; துணை - அரண் 359; படை பொருள் நட்பு 900.

**சார்புகெட** - பற்று அற 359.

**சார்வாய்** - துணையாய் 15.

**சார்வு** - துணையாதல் 15.

**சால** - மிக 475, 770, 1037; மிக, விளங்கு 1233,

**சாலப்படும்** - மிக விளையும் 1037.

**சாலும்** - அமையும்; போதுமான 25; கேட்டை உண்டாக்கப் போதும் 165; அமையும், பொருந்தும் 1060.

**சால்பிற்கு** - நற்குணங்கள் நிறைந் தமைக்கு 986.

**சால்பின்** - அமைதியினது 105.

**சால்பு** - நற்குணம் 956, 983, 984, 987, 988, 1013, 1064.

**சாவாமருந்து** - சாவாமைக்குக் காரண மாகிய மருந்து; அமிழ்தம்; தேவருணவு 82.

**சாவாரை** - இறக்கின்றவரை 779.

**சாவார்** - உயிர்விட வல்லவர் 723.

**சாற்றுவேன்** - சொல்வேன் 1212.

**சான்ற** - நிறைந்த 56, 581, 1001.

**சான்றவர்** - நற்குணம் நிறைந்தவர் 990.

**சான்றாண்மை** - நற்குணம் நற் செய்கை களால் நிறைந்திருக்கும் தன்மை (99)

**சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்** - சான்றாண்மை யாகிய கடலுக்குக் கரை எனப் படுவார் (பரிமே); சான் றாண்மைக்கு ஒரு கடலென்று பிற ராற் சொல்லப் படுவார் (வேறு உரை) 989.

**சான்று** - குணங்களால் நிரம்பி 989, 990, 981.

**சான்றோர்** - நற்குணங்கள் நிறைந்த வர் 197, 656, 657, 802, 840, 923, 982, 985, 1078.

**சான்றோர்க்கு** - நிறைந்த குண முடையவருக்கு 115, 118, 148. 299, 328, 458, 1014;

**சான்றோர்முகத்து** - அறிவுடையோர் முன் 923.

**சான்றோன்** - கல்வி கேள்விகளால் நிறைந்தோன் 69.

## சி

**சிதைக்கலாதார்** - கெடுக்கமாட்டா தவர் 880;

**சிதையாமல்** - அழியாமல் 578.

**சிதைவிடத்து** - தளர்ச்சி வந்தவிடத்து 597.

**சிதைவின்றி** - அழிவின்றி 112.

**சிமிழ்த்து** - பிணித்து; சிமிழ்த்தல் என்றது அவன் வாய்மேல் விரல் வைத்து அது படவிளித்தல் (காளிங்கர்)

**சிவிகை** - பல்லக்கு 37.

**சில** - சிலவாய வார்த்தைகள் 649.

**சிலர்** - சிறு எண்ணிக்கையினர் 649.

**சிறக்கணித்தாள்** - சிறங்கணித்ததாள்; (சிறங்கணித்தாள் என்பதின் விகாரம் சுருங்குதல்) 1092.

**சிறந்த** - மிக்க, மிகுந்த 531.

**சிறந்தமைந்த** - மிக நிலைத்த 900.

**சிறந்தான்** - நட்பிற் சிறந்தான்; அன் புடையான் 515.

**சிறந்து** - மிகவும்; 900.

**சிறப்பின்** - உயர்வின் 961.

**சிறப்பீனும்** - உயர்வினைத்தரும் 311.

**சிறப்பு** - முத்தி, வீடு, தேவர்பதம் 31; மதிப்பு, பெருமை 58; 74; சுவர்க்க இன்பம் 75; வீடுபேறு 358; பெருமை

590, 630, 752; பொதுவல்லாதது, பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்கள் 972; கல்வி செல்வம் முதலிய சிறப்பு 977; வேறுபாடு 1012.

**சிறப்பென்னும்** - சிறப்பு என்னும் வீட்டுக்குக்காரணமாகிய 358.

**சிறப்பொடு** - விழாவோடு 18; சிறப்பும் 195.

**சிறிது** -சிறியது 102; சிறியதாக 412, 1075, 1301, 1302.

**சிறிய சுருக்கத்து** - குறைந்த வறுமைக் காலத்து 963.

**சிறியர்** - கீழானவர் 26.

**சிறியவர்** - கீழ் மக்கள் 815.

**சிறியார்** - சிறிதளவு உடையார் 680; அற்பகுணமுடையவர் 976.

**சிறு** - இன்னாத 1097.

**சிறுகாப்பின்** - காக்க வேண்டிய இடம் சிறிதாகிய 744.

**சிறுகும்** - சுருங்கும் 568.

**சிறுகுவ** - சுருங்குவதற்குக் காரணமாகிய செயல்; சிறுமையுள்ளவை 798.

**சிறுதுனி** - சிறிதுகால வறுமை 1010.

**சிறு நோக்கம்** - சிறிது நேரப்பார்வை 1092.

**சிறு பொருள்** - இலேசாக முயற்சியின்றிக் கிடைக்கும் பொருள் 870.

**சிறுமை** - குற்றம்; துயர் செய்யும் தன்மை 98; காமம் 431; சிறியவர் 451; படை தேய்ந்து சிறிதாதல்; அரசர் செய்யும் அவமதிப்பு 769; துன்பம் 934; சிறுமையுடையார் 978; சிறிய தன்மை 979; சிறுமை யுடையார் 980; துயர் 1231.

**சிறுமைக்கு** - சிறியவனாதற்கு 505.

**சிறுமைத்து** - சிறிய தன்மையுடைத்து 889.

**சிறுமையுள்** - நோய் செய்யும் தன்மையுள் 98.

**சிறை** - அடைத்து வைத்து 57; அரண் 499, 569.

**சிற்றினஞ் சேராமை** - அறிவு குணம் முதலியவற்றால் சிறியவரைச் சேராமை (46)

**சிற்றின்பம்** - நிலையில்லாத இன்பம் 173.

**சினத்தாற்றி** - கோபத்தே செலுத்தி 568.

**சினத்தான்** - கோபமுடையவன் 866.

**சினத்தின்** - கோபத்தைவிட 304.

**சினத்து** - கோபமாகிய குற்றத்தின் 568.

**சினத்தை** - கோபத்தை 307, 310.

**சினம்** - கோபம் 301, 431.

**சினைப்பது** - அரும்புவது 1203.

## சீ

**சீரல்ல** - சிறப்பில்லாதன 962.

**சீரல்லவர்** - சிறியவர் 977.

**சீரழிக்கும்** - புகழைக் கெடுக்கும் 934.

**சீரார்** - சிறப்புடையவர், தவத்தர் 900.

**சீரிடம்** - வாய்க்குமிடம்; வாய்ப்பு 821.

**சீரினும்** - புகழீட்டு மிடத்தும் 962.

**சீர்** - அளவு 118; சிறப்பு, ஆற்றல் பெருமை 499; வீரம் 778; புகழ் 934, 962, 977.

**சீர்குன்றல் இலர்** - இயல்பில் வீரம் குறைவுபடார் 778.

**சீர் தூக்கும்** - நிறுத்து அளக்கும் 118; அளந்து பார்க்கும் 813.

**சீர்த்தவிடத்து** - காலம் வாய்த்த விடத்து 490.

**சீர்மை** - சிறப்பு 123; மதிப்பு, ஒழுக்கம் 195.

**சீறின்** - கோபங் கொண்டால் 568, 899.

## சு

**சுடச்சுட** - வருத்த வருத்த 267.

**சுடரும்** - ஒளிவிடும்; ஓடும் 267.

**சுடல்** - சுடுதல் 1159.

**சுடின்** - சுட்டால் 1159.

**சுடும்** - வருத்தும் 293; கொல்லும் 306; வெதுப்பும் 799; கெடுக்கும் 1019; வெதுப்பும் 1207.

**சுட்ட** - எரித்த 129.

**சுதை** - சுண்ணாம்பு 714.

**சுமக்க** - தலையினால் தாங்குக; பணிக 488.

**சுருக்கத்து** - வறுமை உண்டான விடத்து 963.

**சுவை** - உருசி 27, 253, 420.

**சுவைபட** - சுவை உண்டாக 253.

**சுழலும்** - (பூமியைச்) சூழ்ந்து நிற்கும் 777 .

**சுழன்றும்** - (பிற தொழில்களில்) சுழன்று திரிந்தும்; செய்து திரிந்தும் 1031.

**சுற்றத்தார்** - உறவினர்; சுற்றியிருப்ப வர் 521.

**சுற்றப்பட** - சூழ்ந்திருக்கும் வகை 524.

**சுற்றப்படும்** - சூழப்படுவான் 525.

**சுற்றம்** - சுற்றத்தார்; உறவினர் (சூழ்ந் திருப்பவர்) 166, 451, 522, 529, 584, 1025.

**சுற்றம்ஆ** - சுற்றத்தவராக நினைத்து 1025.

**சுற்றம்தழாஅல்** - சுற்றத்தாரைத் தழுவுதல் (53)

**சுற்றும்** - சூழ்ந்துகொள்வர் 1025.

## சூ

**சூடினீர்** - அணிந்தீர் 1313.

**சூதர்க்கும்** - சூதாடுவோர்க்கும் 932.

**சூதினை** - சூதாடலை 931.

**சூதின்** - சூதாட்டத்தைப் போல 934.

**சூது** - சூதாட்டத்தால் வரும் குற்றம் (94) 936; 938.

**சூதேபோல்** - சூதாடுவதைப் போல 940.

**சூழ** - எண்ண; நினைக்க 176.

**சூழ** - எண்ண, நினைக்க 176.

**சூழற்க** - நினையாது விடுக 204.

**சூழாது** - ஆராயாமல் 465, 554.

**சூழின்** - எண்ணுவானானால் 204; ஆராய்ந்தாலும் 380

**சூழும்** - எண்ணும் 204; 324.

**சூழ்ச்சி** - ஆலோசனைக்கு, உபாயம் நினைத்தல் 671.

**சூழ்ந்தவன்** - எண்ணியவனுக்கு 204.

**சூழ்ந்து** - உபாயம் ஆராய்ந்து 445, 461, 640.

**சூழ்ந்துவிடும்** - எண்ணித் துணியும் 451.

**சூழ்வது** - நினைதல் 1276.

**சூழ்வரை** - அமைச்சரை 445.

**சூழ்வார்** - அமைச்சர் 445; எண்ணுப வர் 1294.

**சூழ்வான்** - மறவாதவன் 325.

## செ

**செகுத்து** - கொன்று 259.

**செத்தாரின்** - இறந்தவரைக் காட்டி லும் 926.

**செத்தாருள்** - இறந்தவருள் 214.

**செத்தான்** - இறந்தவன் 1001.

**செப்பம்** - நடுவு நிலைமை 112, 119; மாறாமை 951.

**செப்பின் புணர்ச்சிபோல்** - செப்பும் மூடியும் சேர்வது போல 887 .

**செப்பு** - சிமிழ் 887.

**செம்பாகம்** - நேர்பாதி 1092.

**செம்பொருள்** - அறத்தினை 91; இன்பப் பொருள், கடவுள் 358.

**செம்மல்** - செருக்கு 880.

**செம்மாக்கும்** - இறுமாக்கும், செருக்கு வான் 4017.

**செய** - செய்தற்கு 1021.

**செயக்கிடந்தது** - செய்யக்கூடியது 446; செய்தற்குரியது 1001.

**செயப்பட்டார்** - உதவி செய்யப்பட்டவர் 105.

**செயலின்** - செய்தலை விட 679.

**செயல்** - செய்க 33; செய்தல் (அறிவை உண்டாக்குதல்) 67; செய்தல் 316, 318; செய்க 333, 461, 471, 489, 516, 518, 637, 668, 673, 676, 675, 948, 949.

**செயல் ஆற்றும்** - செய்து கொள்ள வல்லவனாவான் 835.

**செயற்கு** - செய்தற்கு 96; உண்டாக்குவதற்கு 375; செய்து கொள்வதற்கு 781.

**செயற்கை** - செய்யத் தகுவன, செய்யும் திறம் 637.

**செயற்பாலது** - செய்ய வேண்டுவது 40.

**செயன்முறை** - செய்யும் முறை 677.

**செயிரில்** - குற்றத்தில் நின்றும் 258.

**செயிர்** - நோய் 330.

**செயிர்ப்பவர்** - பகைப்பவர் 880.

**செயின்** - செய்தால் 104, 109..........

**செயும்** - செய்யும் 219.

**செய்** - செய்யப்படுவதாகிய 265.

**செய்க** - செய்யவேண்டும் 36, 512, 669; தேடிச் சேர்க்க 759; செய்க 893.

**செய்கலாதார்** - செய்ய மாட்டாதவர் 26.

**செய்கலான்** - செய்யான் 848.

**செய்கிற்பாற்கு** - செய்ய வல்லவனை 515.

**செய்கையும்** - செய்யும் வகையும் 631.

**செய்தக்க** - செய்யத்தக்க 466.

**செய்தலின்** - செய்தலைப் பார்க்கிலும் 182, 192.

**செய்தற்கரிய** - (முன்) செய்தற்கரியனவா யிருந்தவற்றை 489.

**செய்தாங்கு** - (தாம்) செய்தவை போல 803.

**செய்திறந்த** - செய்துபோன 1275.

**செய்து** - படைத்து 660; நட்புச் செய்து கொண்டாலும் 815.

**செய்தொழில்** - செய்யும் தொழில்; செயல்கள் 972.

**செய்ப** - செய்வர் 1195.

**செய்யப்படும்** - செய்யவேண்டும் 335.

**செய்யப்பட்டார்** - பெற்றுக் கொண்டவரது 105.

**செய்யல** - செய்யமாட்டா 1086.

**செய்யவன்** - இலக்குமி 167.

**செய்யற்க** - செய்யாது விடுக 205, 206, 327, 590, 655, 656.

**செய்யாக்கால்** - செய்யாத விடத்து 987.

**செய்யாது** - செய்யாமல் 219, திறவாது 255; செய்யாமல் 437, 538.

**செய்யாது அமைகலா ஆறு** - செய்ய மாட்டாது வருந்துகின்ற இயல்பாகும் 219.

**செய்யாமல்** - முன் ஓர் உதவி செய்யாதிருக்க 101; (தான் ஓர் இன்னாமையும்) செய்யாதிருக்க 313.

**செய்யாமை** - செய்யாதிருத்தல் 157, 261, 267....

**செய்யார்** - செய்யமாட்டார் 164....

**செய்யாவிடல்** - செய்யாதுவிடல் என்பது செய்யாவிடல் என நின்றது 203.

**செய்யாள்** - இலக்குமி 84.

**செய்யான்** - செய்யமாட்டான் 210; செய்யாதவன் 865.

**செய்யின்** - செய்தால் 157....

**செய்யும் நீர** - செய்யவேண்டிய கடமைகளை 219.

**செய்வாரின்** - செய்வாரிலும் பார்க்க 295.

**செய்வானேல்** - செய்வான் ஆனால் 655.

**செய்வினை** - செய்யும் கருமம் 455, செய்கின்ற வினையை 677.

**செய்வேன்** - (உபசாரம்) செய்வேன் 1211.

**செரு** - போர் 569.

**செருக்கி** - களித்து, இறுமாந்து 916.

**செருக்கு** - செல்வம் மகிழ்ச்சி; பெருமிதம் 180; அகந்தை; மயக்கம் 201; மயக்கம் 346; அகந்தை 431; பெருமிதம் 598; மேம்பாடு; பெருமிதம் 613; அகந்தை 759; மயக்கம் 844; செல்வம் 860; களிப்பு 878, 1193.

**செல** - போக 422; மனம் கொள்ளும் படி 424, 686, 719, 722, 724, 728, 730.

**செலல்** - செல்கின்றது; செல்வதற்குக் காரணம் 1293.

**செலவிடாது** - செல்லவிடாது 422.

**செலவு** - செல்லுதல் 766.

**செல் இடத்து** - பலிக்கக்கூடிய இடத்து 301.

**செல்க** - செல்வானாக 684.

**செல்கிற்பின்** - செல்லமுடியுமாயின் 1170.

**செல்பவர்** - போகின்றவர் 1033.

**செல்லா** - பலியா 302; உணவு செல்லாத (மண); வறுமை கூர்ந்த 330; செய்யாத 561; நீங்காத 769; போகாத 1255.

**செல்லாது** - முடியாதது 472.

**செல்லாது** - நடவாது 18, 326.

**செல்லாத்துனி** - ஒன்றாலும் நீக்க முடியாத பிணக்கு; நீங்காத வெறுப்பு 769.

**செல்லாமை** - பிரியாமை 1151.

**செல்லா வாழ்க்கை** - வறுமை 330.

**செல்லான் இருப்பின்** - சென்று பாராமல் இருந்தால் 1039.

**செல்லிடத்து** - பலிக்குமிடத்தில் 301.

**செல்லுமிடத்து** - கோபித்துச் செல்லும் போது 250.

**செல்லும் வாய்** - செய்யக்கூடிய இடம் 33; முடியும் வழி; முடியும் உபாயம் 673.

**செல்வச் செவிலி** - செல்வத்தையுடைய செவிலி 757.

**செல்வது** - போவது 767.

**செல்வத்திற்கு** - மிக்க பொருளுக்கு 178.

**செல்வத்துள் செல்வம்** - செல்வங்களுள் மேலான செல்வம் 241, 411.

**செல்வமும்** - செல்வத்தையும் 31.

**செல்வம்** - மிக்க பொருள் 31, 125....

**செல்வம் தகைத்து** - மிக நன்மையுடையதாம் 125.

**செல்வரை** - பொருளுடையவரை 752.

**செல்வர்** - பொருளுடையவர் 731, 1010.

**செல்வாய்** - போகின்ற நீ; போவாய் 1248.

**செல்வார்** - போவார் 1185.

**செல்வான்** - செல்பவன் 950.

**செல் விருந்து** - சென்ற விருந்தினர் 86.

**செவிக்குணவு** - செவிக்குணவாகிய கேள்வி 412.

**செவிச் செல்வம்** - கேள்வியால் வரும் செல்வம் 411.

**செவிச் சொல்லும்** - (மற்றவர்) காதில் மறைத்துச் சொல்லுதலும் 694.

**செவியிற் சுவை** - நகை, வீரம், கோபம், அச்சம், இழிவு, வியப்பு. சாந்தம், காமம், அருள் என்பன 420.

**செவிலி** - வளர்ப்புத் தாய் 757.

**செவ்வி** - ஏற்றகாலம் 130, 565, 1289.

**செவ்விது** - நன்மையுடையது 279.

**செவ்வியராதலும் வேறு** - அறிவுடையராதலும் வேறு 374.

**செவ்வியான்** - நல்ல மனமுடையவன் 169.

**செறப்பட்டவர்** - கோபிக்கப்பட்டவர் 895.

**செறா அ** - இனிய 1097.

**செறா அச்சிறு சொல்** - பின் இனிதாய் முன் இன்னாத சொல் 1097.

**செறா அ அய்** - தூர்க்க முயல் 1200.

**செறா அர்** - கோபிக்காதவர் 1096, வெகுளார் 1292.

**செறிதொடி** - நெருங்கிய வளைகளை அணிந்தவள் 1275.

**செறீதோறும்** - சேரச் சேர 1100.

**செறிவு** - அடக்கம் 123, கூட்டம் 684; அடக்கம் 715.

**செறின்** - கோபித்தால் 778, 897, 900.

**செறு** - அழிக்கின்ற 734.

**செறு பகை** - அழிவு செய்யும் பகை 734.

**செறுநர்** - பகைவர் 488, 759.

**செறுப்ப** - அடக்க, அடக்கியபோது 1318.

**செறுவார்** - பகைவர் 203, 421, 843, 869.

**செறுவார்க்கு** - வருந்துவார்க்கு 203; 421, 849, 869.

**செற்றவர்** - அகன்று சென்றவர் 1256.

**செற்றார்** - பகைவர் 446, 1097; வெறுத் தார் 1245.

**செற்றார்க்கும்** - பகை கொண்டாருக் கும் 313.

**செற்றார்பின்** - பிரிந்து சென்றவருக் குப் பின் 1255.

**செற்று** - கெடுத்து 168, அடக்கி 335; வருத்தி 1009.

**சென்ற** - போன 422, 1261.

**சென்றது** - போனது 1284.

**சென்று நிலை** - சென்றுநிற்கும் நிலை 966.

**சென்றுவந்தற்று** - ஏந்திரக் கயிற்றால் சென்று வந்தாற் போலும் 1058.

**சென்றேன்** - போயினேன் 1259, 1284.

## சே

**சே** - அழகிய, சிவந்த 1110.

**சேண்** - தூரம் 869, 1231, 1269.

**சேண் இகவா இன்பம்** - அணித்தில் வரும் இன்பம் 869.

**சேரா** - வந்தடையமாட்டா 5.

**சேராதார்** - இடைவிடாது நினையா தவர் 10.

**சேராது** - சேராமல் 734.

**சேரின்** - சேர்ந்தால் 498.

**சேரும்** - சென்றடையும் 179.

**சேர்** - சேர்ந்த; பற்றி வருகின்ற 5.

**சேர்ந்த** - செறிந்த 243; மிகுதியாகக் கூடிய 492 பொருந்திய 694, 910.

**சேர்ந்த நகையும்** - (பிறரோடு) சேர்ந்து சிரித்தலும்; முகம் பார்த்துச் சிரித்த லும் 694.

**சேர்ந்தாரைக் கொல்லி** - நெருப்பு 306.

**சேர்ந்தார்** - அடைந்தவர் (இடை விடாது நினைப்பவர்) 3.

**சேர்ந்தார்க்கு** - இடைவிடாது நினைந் தவர்க்கு 4, 7, 8.

**சேர்ந்தார்க்கு அல்லால்** - சேராத வருக்கு 7, 8.

**சேர்ந்து** - கூடி 492, 691; வயப்பட்டு 910.

**சேர்வது** - சேர்ந்திருப்பது 731.

**சேயிழை** - சிவந்த இழை, அழகிய ஆபரண மணிந்தவள் 1110.

**சேறல்** - செல்லுதல் 1256.

**சேறி** - செல் 1244; செல்கின்றாய் 1249, 1292.

## சொ

**சொரிந்து** - ஊற்றி 259, 718.

**சொரியினும்** - கொட்டினாலும் 376.

**சொலல்** - சொல்லுதல் 139, 291, 647; சொல்லுக 696.

**சொலவர்க்கு** - சொல்லையுடைய வர்க்கு 94.

**சொலன்** - சொல்லையுடையவன் 95.

**சொலால்** - (1) சொல்லுடனே (2) புகழோடு மேவி 387.

**சொலிசை** - சொல்லின் கண்ணது 93.

**சொலினும்** - சொன்னாலும் 96, 195, 1096.

**சொல்** - வார்த்தை 66, 65... சொல்லை உண்டாக்குதல் 70; பிறர்க்கு நன்மை பயக்கும் இனிய சொல் 97; புத்தி சொல்பவரின் சொல் 389; பேச 402; அமைச்சரது சொல் 643; கோபித்துச் சொல்லும் சொல் 1147.

**சொல் இழுக்குப்பட்டு** - குற்றமான சொற்களைச் சொல்லி 127.

**சொல் சோர்வுபடும்** - பயனற்ற சொல்லாய் முடியும் 1046

**சொல்ல** - (மெலியவர் தம் குறையைச்) சொல்ல 1078.

**சொல்லல்** - சொல்லுதல் 192, 634, 649, 713, 718.

**சொல்லற்க** - சொல்லாதொழிக 184, 200, 719.

**சொல்லன்** - சொல்லையுடையவன் 386, 566.

**சொல்லா** - சொல்லாமல் 697, சொல் லாத 984.

**சொல்லாட** - (தா என்று) சொல்லி இரக்க 1070.

**சொல்லாடார்** - அவரறியச் சொல்லா மல் 818.

**சொல்லாதார்** - சொல்லமாட்டாதவர் 728.

**சொல்லாது** - உரையாடாது 403.

**சொல்லாமை** - சொல்லாதிருத்தல் 197.

**சொல்லாய்** - சொல் 1241.

**சொல்லார்** - சொல்லமாட்டார் 198, 199, 417

**சொல்லான்** - சொல்லோடு 635.

**சொல்லி** - அறிவித்து, உரைத்து 187, 424, 646, 685, 686, 697, 724, 795; 1280.

**சொல்லினால்** - சொல்லால் 825.

**சொல்லினும்** - சொன்னாலும் 197.

**சொல்லின்** - சொன்னால் 184, 197; சொல்லவேண்டுமாயின்; சொற்க ளில் 200; சொல்லினது 711, 712, 713, 721; சொன்னால் 826, 1046.

**சொல்லின் தொகை** - சொல்லின் வகை; வகைகளாவன செஞ்சொல், இலக்கணச் சொல், குறிப்புச் சொல் - 711, 721.

**சொல் ஏர் உழவர்** - சொல்லை ஏராக உடைய அமைச்சர் 872.

**சொல்லுக** - சொல்வாயாக 197, 200, 644, 645, 711, 712.

**சொல்லுதல்** - கூறுதல் 648, 644.

**சொல்லும்** - கூறும் 160; 185; 193.

**சொல்லுவ** - சொல்லுவன 1232.

**சொல்லுவார்** - சொல்லுதற்கு உரியார் 719, 722.

**சொல்லுவான்** - சொல்லுபவன் 191.

**சொல்வணக்கம்** - பணிந்த சொல் 827.

**சொல்வன்மை** - சொல்லும் வலிமை 682; தனது எண்ணம் நிறைவேறும் படி சொல்லும் சொற்களை வன்மை யாகச் சொல்லுதல் (65)

## சோ

**சோகாப்பர்** - துன்பப்படுவர்; சோகாப்பு - துன்பம் 127.

**சோரவிடல்** - சோரவிடுக; கழியவிடுக 818.

**சோரா** - சோர்ந்தும் 689.

**சோரார்** - சோர்வுபட (வழுப்பட) சொல்லார் 721.

**சோரும்** - வெளிவிடுவான் 847; கழலும் 1234.

**சோர்விலது** - (தன்னைப் பிறரறிய முடியாத படி) எச்சரிச்சையா யிருத்தல் 586.

**சோர்விலன்** - மறவாதவன் 647.

**சோர்வு** - மறதி, அயர்வு 56, 531, தளர்வு 586, 642; மறப்பால் ஒழிதல் 647; தளர்வு 930, 1044.

**சோர்வுபடும்** - மறையும் 405; ஏற்றுக் கொள்ளப்படாது 1046.

## ஞா

**ஞாட்பினுள்** - போர்முனையில் 1088.

**ஞாலங்கருதுபவர்** - பூமி முழுவதை யும் வெல்ல நினைப்பவர் 485.

**ஞாலத்திற்கு** - உலகில் வாழும் உயிர் களுக்கு 557.

**ஞாலத்தின்** - மண்ணுலகத்திலும் 102.

**ஞாலத்து** - உலகத்திலே 141.

**ஞாலம்** - உலகத்தில் வாழ்பவர் 245; பூமி 485, 648, 1016; உலகில் வாழ்ப வர் 1058.

**ஞான்று** - பொழுது, காலம், 44, 145......

## த

**தக** - தகுதியாக; ஏற்க 391.

**தகர்** - ஆட்டுக்கடா 486.

**தகவிலர்** - நடுவு நிலைமையற்றவர்; தருமமில்லாதவர் 114.

**தகுதி** - நடுவு நிலைமை 111.

**தகுதியான்** - பொறையால் 158.

**தகை** - நன்மை 56; தகுதி, குணம் 643; தகுதி 768, மேம்பாடு - ஆடல் பாடல் அழகு 916; தன்மை (நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு) 1084; மிகுதி 1305; அழகு (109)

**தகைத்து** - சிறப்பினையுடையது 125; தன்மையுடையது 486; பெருமை யுடையது 1064.

**தகைமாண்ட** - பெருமை மிக்க 897.

**தகைமை** - பெருமை 405; உயர்குணம் 613; உரிமை 700, 802, 803, 808; உயர் குடிப்பிறப்பு 968; நிறையுடைமை 1255.

**தகைமைக் கண்** - பெருமையுள் 874.

**தகைமையவர்** - பெருமையுடைவர் 447.

**தகைய** - தன்மையுடையன 418.

**தகையால்** - தோற்றப் பொலிவால் 768; தன்மையால்; உரிமையால் 804; தன்மையோடு 1083; களிப்பு மிகுதியால், பெருமித்தால் 1182.

**தகையான்** - தன்மையுடையவன் 217; உரிமையால் 804.

**தக்க** - தகுதியுடைய பொருள்கள் 54, 466, 805.

**தக்கது** - தகுதி உடையது 633, 686, 732, 780, 1018, 1137, 1173.

**தக்கது உடைத்து** - தகுதி உடைத்து 220.

**தக்கனன்** - தகுதியாயினள், அமைந் தாள் (புலந்தாள்) 1316.

**தக்காங்கு** - தக்க முறையாக 561.

**தக்கார்** - தகுதியுடையவர் 114, 446, 731; தகுதியுடையோர் (முனிவர்); ஏற்புடையரை 1051.

**தக்கார்க்கு** - தகுதியுடையவர்களுக்கு, அறிவுடையோர் முனிவர் முதலாயி னார்க்கு 212, 1005.

**தக்காள்** - தக்கபடி செலவு செய்பவள் 51.

**தங்கண்** - தம்மிடத்தில் 107.

**தங்கா** - உள்ள ஆகமாட்டா 19.

**தங்கி** - நின்று 472.

**தங்கியான்** - தங்கியவனது 117.

**தங்கிற்று** - நிலைபெற்றது 613; அடங்கிற்று 874.

**தங்குதல்** - கிடத்தல் 671.

**தஞ்சம்** - நிலைபெறும் 389.

**தஞ்சம்** - எளிமை 863, 1300.

**தஞ்சம் எளியன்** - மிக எளியன், (இவை ஒரு பொருட் பன்மொழிகள்)

**தடிந்து** - கடல்நீரை உண்டு அதற்குக் குறைவு செய்து 17.

**தணந்தமை** - பிரிந்தமை 1233, 1277.

**தணிக்கும்** - தீர்க்கும் 948.

**தண்** - தாழ்மையான 548; குளிர் 1104; மென்மை 1239.

**தண்டம்** - தண்டனை 567.

**தண்டா** - தணியாத 1171.

**தண்டாநோய்** - தணியாத நோய் 1171.

**தண்ணம் துறைவன்** - குளிர்ந்த துறையையுடையவன் 1277.

**தண்ணென்னும்** - குளிரும் 1104.

**தண்பதத்தால்** - தாழ்ந்த நிலையில்; தண்பதம் - குறையைச் சொல்லுதற்குத் தாழ்த்தும் காலம் (மண) 548.

**தண்மை** - அருள் 30.

**தத்தம்** - தங்கள் தங்கள் 505.

**தந்த** - சம்பாதித்த 212; அறிவித்த 588.

**தந்தது** - வந்த அதனை 1065.

**தந்தம்** - தாம் தாம் செய்த 63.

**தந்தார்** - வரக்காட்டினார், உண்டாக்கினார் 1182.

**தந்தாள்** - கொடுத்தாள் 1135.

**தந்து** - கொணர்ந்து 1089 கொடுத்து 1183.

**தந்தை** - தகப்பன் 67.

**தந்தைக்கு** - தகப்பனுக்கு 70.

**தப்பா** - தவறாது நோயைத் தீர்க்கும் 217.

**தம** - தம்முடையவை 120, 376.

**தமக்கு** - தங்களக்கு 72, 319.

**தமது** - (தமது முயற்சியால் வந்த) தமது பொருளை 1107.

**தமது குடைக் கீழ்** - தமது அரசர் குடையின் கிழே 1034.

**தமபோல்** - தம்முடையதுபோல 120.

**தமரின்** - தமராவதிலினும் 814.

**தமர்** - சுற்றத்தார் 529, 837, 1027, 1300.

**தமர் ஆ** - தனக்குச் சுற்றத்தினராக 443.

**தமியர்** - தனியாயிருந்து 229.

**தமியள்** - தனித்தவளாய் (கணவனை இல்லாதவளாய்) 1007.

**தமியனாய்** - தனியனாய் (சுற்றம் நட்பு, படை முதலியன இல்லாதவனாய்) 873.

**தம்** - தமது 63....; தமரை 6. 237, 829, 1191.

**தம் கண்** - தமக்கு நேர்ந்த 107.

**தம் நோவார்** - தம்மை நொந்து கொள்பவர் 237.

**தம் பழி** - (இரந்த) அவருடைய பழி 1051.

**தம்மின்** - தம்மிலும் பார்க்க 68, 444.

**தம்மை** - தங்களை 151, 237, 843, 1033, 1312.

**தம்மொடு** - தம் நிலைமையோடு 470.

**தரலால்** - கொடுத்தலால் 131.

**தரற்கு** - தருதலால் 1214.

**தரின்** - தந்தால் 113.

**தருக்கி** - விரும்பி; மேற்கொண்டு 935.

**தரும்** - கொடுக்கும் 71, 171; (அவனுக்குக்) கொடுக்கும்; தரும் என்பது இடவழுவமைதி 183; கொடுக்கும் 275....

**தருவது** - கொடுப்பது 546, 839, 934.

**தருவார்** - விற்பவர் 256.

**தரூஉம்** - கொடுக்கும் 434, 651.

**தலை** - சிரம் 9, 16; சிறப்பு, சிறந்தது 43, 47....; தெளிவு 357.

**தலைக்கூடி** - ஓரிடத்திற் கூடி 394.

**தலைச் செல்லா வண்ணத்தால்** - பின்னும் அக் காரியத்தைச் செய்யாமற்பொருட்டு 561.

**தலைப்படாதார்** - உபசரிக்க மாட்டாதவர், (பயனை) அடையாதவர் 88.

**தலைப்படுவர்** - அடைவர் 356.

**தலைப்படுவார்** - பெறுவார் 1289.

**தலைப்பட்டார்** - அடைந்தவர் 348.

**தலைப்பிரிதல்** - நீங்குதல் 955.

**தலைப்பிரிந்த** - நீங்கிய 258.

**தலைப்பிரியா** - நீங்காத; தலைப்பிரிதல் - இடத்தில் நின்று நீங்குதல் 97.

**தலைப் பிரியாதார்** - நீங்காதார் 810.

**தலைப் பெய்து** - எதிர்ப்பட்டு, கண்டு 405.

**தலை மக்கள்** - தலைவராகிய வீரர் 770.

**தலையான்** - சார்பின் கண் 1196.

**தலையின்** - தலையினின்றும் 964.

**தலைவந்த** - முன்வந்த 767.

**தவத்தால்** - தவ வலியால் 264.

**தவத்திற்கு** - துறவினது 261.

**தவமுடையார்க்கு** - (முன் பிறப்பில்) தவம் செய்தவருக்கு 262.

**தவம்** - மனம் புலன் வழி போகாமல் நிற்றற்குச் செய்யும் உண்டி சுருக்கல் முதலியன 19, 262, 263, 265, 266, தவ வேடத்தில் 274.

**தவல்** - கேடு, தவறுதல் 853, பிழைத்தல், தவறுண்ணாதலும் 856.

**தவறிலர்** - தவறுதல் இல்லாதவர் 1325.

**தவறு** - குற்றம் 469, 1154, 1286, 1321.

**தவா** - கெடாமைக்கு ஏதுவாகிய 397.

**தவா அ** - கெடாது வருகின்ற 361.

**தவா அது** - முடிவின்றி 368.

**தாவாவினை** - கெடாமைக்கு ஏதுவாகிய செயல் 367.

**தவ்வை** - தமக்கை; மூதேவி 167.

**தழால்** - தழுவுதல் (53).

**தழீஇ** - தழுவி, அணைத்து 544; 913.

**தழீஇயது** - நட்பாக்குவது 425.

**தளர்ந்து** - தவறி 716.

**தளிர்த்து** - கொழுந்துவிட்டு 78.

**தளிர்ப்ப** - இன்பத்தால் தழைக்க 1106.

**தள்ளா** - குறைவில்லா 731.

**தள்ளாது** - தவறாது 290.

**தள்ளாமை** - தவறாமை 596.

**தள்ளினும்** - தவறினும் 596.

**தள்ளும்** - தவறிப்போம் 290.

**தறுகண்** - வீரம்; மூர்க்கம் 783.

**தற்கொண்டான்** - கணவன்; தன்னைக் கொண்டவன் 56.

**தற்று** - இறுகக் கட்டிக்கொண்டு 1023.

**தனக்கு** - தன் பொருட்டு 847.

**தனித்தொழிய** - தனித்துக் கிடக்க 338.

**தனிமை** - தனியேயிருக்கும் தன்மை 814.

**தன்** - தன்னை 51, 56.....

**தன் காத்து** - (கற்பினின்றும் தவறாமல்) தன்னைக் காத்து 56

**தன் கொண்டான்** - கணவன் 56.

**தன் செய்து** - தனது பொருளைப் பெருக்கி 878.

**தன் செற்று** - தன்னை வருத்தி 1009.

**தன் நாளை** - தனக்குச் சென்ற நாளை 776.

**தன் நோய்** - தன்னாலாகிய நோய் 1102.

**தன்மை** - இயல்பு 1144.

**தன்மைத்து** - இயல்புடையது 355.

**தன்மையவர்** - இயல்புடையவர் 855.

**தன்மையான்** - இயல்புடையவன் 511.

**தன்னின்** - தன்னைக் காட்டிலும் 250, 603.

**தன்னை** - 206, 208....

## தா

**தா** - கேடு 853.

**தா அம்** - தாம் 1176.

**தா அயது** - கடந்து; கடக்கப்பட்டது 610.

**தாக்க** - மோத 1068.

**தாக்கற்கு** - பாயும் போருட்டு 486.

**தாக்கு** - வருத்தவல்ல 1082.

**தாங்காது** - பொறுக்கமாட்டாது 990.

**தாங்கி** - சுமந்து, பொறுத்து 733; தடுத்து 767.

**தாங்கும்** - சுமக்கும் 151; தடுக்கும் 767.

**தாமரைக் கண்ணான்** - திருமால்; செங்கண்மால் 1103.

**தாமரையினாள்** - இலக்குமி 617.

**தாமுடைமை** - தம்முடைமை 228.

**தாமே** - தாங்கள், ஏ பிரி நிலை 229.

**தாம்** - தாங்கள் 158, 228...... சாரியை 658.

**தாம் இன்புறுவது** - தமக்கு இன்பம் தரும் கல்வி 399.

**தாம் உடைய** - தாம் உரித்தாக உடைய 1299.

**தாம் வேண்டின் நல்குவர்** - தாய் தந்தையர் விரும்பும் காதலருக்கு கொடுப்பர் (மண). 1150

**தாயானும்** - தாயினாலும் 1047.

**தாய்** - பெற்றவள் 69.

**தார்** - தூசிப்படை; முன்படை 767.

**தாழாது** - தாமதியாது 620; விரைந்து 1024.

**தாழ்** - தாழ்ப்பாள் 71, 125.

**தாழ்ச்சி** - நீடிப்பு 671.

**தாழ்ந்த** - தாழ்தற்கு ஏதுவாகிய 903.

**தாழ்விலா** - குறைவில்லாத 731.

**தாழ்வீழ்த்த** - தாள் போடப்பட்ட 1251.

**தாழ்வு** - வறுமை 117; வறுமை 731.

**தாளாண்மை** - முயற்சி 613.

**தாள்** - பாதம் 2, 7, 8; முயற்சி 212, 617, 1065.

**தானம்** - கொடை 19, 295.

**தானே** - வலிய, மற்றொருவன் செய் யாமல் 319, 1024, அவளே 1102.

**தானை** - படை 767, 768, 770, 1082.

**தானைஇல்** - படை நில்லாது 770.

**தான்** - 11, 17....; தேற்றப்பொருள் 515, 785, 977, 1215; அசைநிலை 980.

**தான் அறி** - தான் குற்றமென்று அறிந்தது 272.

**தான்காணான்** - (அரசனால் பழிக்கப் பட்டுத்) தான் அறியாதவனாய் முடியும் 849.

## தி

**திகழ்தரும்** - தோன்றும் 1273.

**திகழ்வது** - புலனாகின்றது 1273.

**திங்கள்** - சந்திரன் 1146.

**திட்பம்** - உறுதி 661, 665, 670.

**திண்ணியர்** - வலியர் (வினைத்திட்ப முடையவர்) 666.

**திண்மை** - கலங்காத நிலை 54, வலிமை 743, 988.

**திரிந்தற்று** - கெட்டது போன்றது 1000.

**திரிந்து** - மாறுபட்டு 90, 452.

**திரியாது** - வேறுபடாமல் 124.

**திரு** - செல்வம் 168, திருமகள் 179; செல்வம் 215; 374, 408; திருமகள் 519; செல்வம் 568; திருமகள் 920; அழகு 1011; நன்மை 1072; அழகு 1123.

**திருநுதல் நல்லார்** - அழகிய நெற்றி குலமகளிர் 1011.

**திருவினை** - செல்வத்தை 482, 616.

**திருவேறு** - செல்வமுடையராதற் குரிய ஊழ் வேறு 374.

**திறப்பாடு** - திறமை 640.

**திறம்** - கூறுபாடு 501, 1184, 1298.

**திறனறிந்து** - கொள்ளும்வகை அறிந்து 441.

**திறன்** - செய்யத் தகுந்தவை 157; கூறுபாடு 179; இழிந்தவை 441, 635; தகுதி வேறுபாடுகள் கேட்பவரின்றி 644; நெறி 754; (ஆகுபெயர்) உளையும் தன்மையுடைய பழி 186.

**திறன் அல்ல** - செய்யத் தகாதவை 157.

**தினல்** - தின்னல் 254, 256.

**தினிய** - தின்னுதற் பொருட்டு 1296.

**தினை** - தினை என்னும் தானியம் 104, 144, 433, 1282.

**தின்பவர்க்கு** - உட்கொள்பவர்களுக்கு 252.

**தின்னும்** - தின்பதுபோன்று வருத்தும் 1244.

## தீ

**தீ** - கொடிய 128, 138, 201, 206, 208, 210, 227; இழிதொழில், 330; கொடிய 460; நெருப்பு 674, 691; விளக்கு 929; நெருப்பு 947, 1104. (1159.)

**தீஉழி** - நரகம் 168.

**தீ எச்சம்** - நெருப்பின் குறை 674.

**தீகாய்வார்போல்க** - நெருப்பில் குளிர் காய்பவர் போல்க 691.

**தீங்கு** - தீமை 827.

**தீச்சொல்** - தீய சொல்லாகவிருந்து 128.

**தீண்டல்** - தொடுதல் 65; சேர்தல் 227; தொடுதல் 1106.

**தீண்டா** - வந்தடையா 62.

**தீது** - கொடிது 182; துன்பம் 190; கொடிது 192, 222, 282. 302; கொடியது 422; கொடிது 531; கொடுங்கோன்மை 754.

**தீது இன்றி** - பிறருக்குத் தீமை இல்லாது 754.

**தீதே** - பாவமாகும் 282.

**தீத்துரீஇ யற்று** - விளக்குக் கொண்டு தேடுதல் போன்றது 929.

**தீ நட்பு** - கெட்ட குணமுடையவரின் நட்பு (82.)

**தீப்பால** - தீமையுடையவற்றை 206.

**தீப்பிணி** - பொல்லாத நோய் 227.

**தீமை** - பாவம், கெடுதி 143, 291, 511; குற்றம் 984.

**தீமைத்து** - தீமையுடையது 450.

**தீமையிலாது** - (பிறருக்குத்) தீமையில்லாத சொற்களை 291.

**தீய** - பிறருக்குத் தீங்கு விளைக்கும் சொற்கள் 139; துன்பங்கள் 202; கொடியவை 302, 303, 375.

**தீயஆம்** - தீயவாய்ப் பயன்படா 375.

**தீயவும்** - தீயவைதானும் 375.

**தீயவை** - துன்பங்கள் 62; கொடிய வினைகள் 202, 205, 208.

**தீயில்** - நெருப்பில் 1260.

**தீயினால்** - நெருப்பால் 129.

**தீயினும்** - நெருப்பிலும் பார்க்க 202.

**தீயுழி** - நரகத்தின்கண் 168.

**தீர** - முற்றாக 348.

**தீரா** - நீங்காத 508, 510, 1201.

**தீராமை** - நீங்காமை 482.

**தீருநுதற்கு** - அழகிய நெற்றியுடையவளுக்கு 1123.

**தீர்க்கும்** - போக்கும் 1241, 1275.

**தீர்த்தல்** - போக்குக 226.

**தீர்ந்த** - நீங்கியவை 199; நீங்கிய 292.

**தீர்ந்தன்று** - விட்டது; தீர்ந்தது 612.

**தீர்ந்தாரின்** - விட்டாரைப்போல 612.

**தீர்ந்தார்** - நீங்கினவர் 170.

**தீர்ப்பான்** - ஆற்றுபவன் 950.

**தீர்வாம்** - நீக்கக்கடவோம் 1063.

**தீவினை** - பிறருக்குத் தீமை உண்டாகும் செயல் 201.

## து

**துகில்** - ஆடை 1087.

**துச்சில்** - ஒதுக்கு 340.

**துச்சிலிருந்த** - ஒதுக்குக் குடியிருந்த 340.

**துஞ்சல்** - உறங்குதல் 1049.

**துஞ்சா** - உறங்கமாட்டா 1179.

**துஞ்சினார்** - உறங்கினார் 926.

**துஞ்சின்** - உறங்குமாயின் 1212.

**துஞ்சும்** - உறங்கும் 1218.

**துடைத்தவர்** - நீக்கினார் 107.

**துடைத்து** - போக்கி 615.

**துணிக** - தொங்குக 467.

**துணிவாற்றி** - துணிந்து 669.

**துணிவு** - முடிவு 21; ஆண்மை 383; முடிவு 533, 671; அஞ்சாமை 688.

**துணை** - அளவு 22; உதவி 36, 41, 42, 51,76; அளவு 87, 104; உதவி 132; அளவு 144, 156, 397, 433; துணைவர் 1234; அளவு 1282.

**துணைத்து** - அளவினது 87.

**துணைமை** - துணையாயிருக்குந் தன்மை 688.

**துணையர்** - பெருமையுடையவர் 144.

**துணையார்** - துணையாகிய தன்மை யுடையவர் 497.

**துப்பார்க்கு** - உண்பவர்க்கு 12.

**துப்பின்** - வலிமையினையுடைய 895; பகையானால் 1165.

**துப்பு** - உணவு 12; உதவி, ஊன்றுகோல் 106; வலிமை 862.

**துப்புரவு** - உணவு 263, 378, 1050.

**தும்மல்** - தும்முதல் 1253, 1203.

**தும்மல் நினைப்பது** - தும்மல் எழுவது 1203.

**தும்மினீர்** - 1317.

**தும்மினேன்** - 1317.

**தும்மு** - தும்மல் 1318.

**துயரம்** - துன்பம் 792.

**துயர்** - கவலை 1135, 1165, 1256, 1275.

**துயர் வரவு** - துக்கத்தின் வரவு 1165.

**துயிலின்** - உறங்குதலைப்போல் 1103.

**துயில்** - நித்திரை 605.

**துயிற்றி** - உறங்கச் செய்கின்ற; துயிலப் பண்ணுதலால் 1168.

**துய்க்க** - உண்க 944.

**துய்த்தல்** - நுகர்தல்; அனுபவித்தல் 377.

**துய்ப்பதும்** - அனுபவிப்பதும் 1005.

**துரீஇ** - தேடி 929.

**துலை** - ஒப்பு 986.

**துலை இலார்** - தாழ்ந்தவர் 986.

**துவர** - மிக 44, முற்றாக 1050.

**துவ்வாதவர்** - வறியவர் 42.

**துவ்வாமை** - வறுமை 94.

**துவ்வாய்** - நுகர நினையாய் (சேர நினையாய்) 1294.

**துவ்வான்** - வலியிலன் 862; நுகர மாட்டான் 1006.

**துளக்கு** - அசைவு, நடுக்கம் 699.

**துளங்காது** - அசைவில்லாது 668.

**துளங்கு** - அசைவு 699.

**துளி** - மழைத் துளி 16; மழை 557.

**துறக்க** - பற்றொழிக 342.

**துறந்தமை** - பிரிந்துபோனமை 1157.

**துறந்தாரின்** - துறவிகளைப்போல் 159,

**துறந்தாரை** - பிரிந்து போனவரை 1250.

**துறந்தார்** - பற்றினை விட்டவர் 22, 159, 276; பிரிந்தவர் 310; பற்று விட்டவர் 348, 586; பிரிந்து போயினவர் 1188.

**துறந்தார்க்கு** - துறவிகளுக்கு 263.

**துறந்தார்க்கும்** - சுற்றத்தவரை விடப் பட்டவருக்கும்; துறவிகளுக்கும் 42.

**துறந்தார் துணை** - (சாவினை) ஒழித்தவரோடு ஒப்பர் 310.

**துறப்பர்** - விடுவர் 1017.

**துறப்பார்** - துறக்கும் எண்ணமுடைய வராக. இஃது ஆரீற்று எதிர்கால முற்றுச் சொல் 378.

**துறவற்க** - விடாதிருக்க 106.

**துறைவன்** - காதலன் 1157, 1277.

**துனி** - வெறுப்பு 769; வறுமை 1010; வெறுப்பு 1223; புலவி 1295; சிறிய பிணக்கம் 1306, 1322.

**துனி அரும்பி** - துன்பத்தை உண் டாக்கி 1221.

**துனித்து** - ஊடி 1290.

**துன்பங்கள்** - கவலைகள் 1045.

**துன்பத்திற்கு** - (ஒருவற்குத்) துன்பம் வந்தபோது 1299.

**துன்பத்துள்** - துன்பம் வந்தபோது 106, 369, 629.

**துன்பத்துள் துன்பம்** - மிக்க துன்பம் 369.

**துன்பமுறாவரின்** - கொடுப்பவன் தன் மனதில் துன்பமடையாது கொடுத் தால் 1052.

**துன்பம்** - கவலை 267, 368, 369, 615, 628, 629, 769, 854, 940, 1052, 1166, 1223, 1307.

**துன்புறூஉம்** - துன்பத்தை உண்டாக் கும் 94.

**துன்னற்க** - (பிறரிடத்தே) செய்யா திருப்பானாக 209.

**துன்னா** - சேராமல் 1250.

**துன்னாமை** - புரியாமை; அடை யாமை 316.

**துன்னியார்** - நெருங்கிப் பழகியவர் 188; சென்றவர் 494.

## தூ

**தூ** - பற்றுக்கோடு; பற்று 455.

**தூஉய்மை** - அழுக்கின்மை 364,

**தூக்கம்** - தூங்கியிருத்தல் 668.

**தூக்கம் கடிந்து** - காலம் தாழ்த்தாது; தூங்கியிராது 668.

**தூக்காத** - ஆராயாத 480.

**தூக்கார்** - ஆராயாதவர் 103.

**தூக்கி** - ஆராய்ந்து 471, 912.

**தூக்கும்** - அளவு செய்யும் 118, 813.

**தூங்கற்க** - காலந் தாழ்த்தாது செய்க 672.

**தூங்காது** - விரைந்து 672.

**தூங்காமை** - சோம்பி இராமை 383.

**தூங்கி** - காலம் நீடித்து; ஆறியிருந்து 672.

**தூங்குக** - காலம் நீடித்துச் செய்க 672.

**தூங்கும்** - தொங்கும் 1163.

**தூண்** - கம்பம் 615, 983.

**தூண்டில்** - தூண்டிலிடும் இரும்பு 931.

**தூண்டில்** பொன் - தூண்டில் இரும்பு 931.

**தூது** - அரசரிடத்து தூது செல்வா ருடைய தன்மை (69) தூது உரைத் தல் 681, 682; தூதன் 685, 686, 690; முன் ஓடி 1228.

**தூதொடு வந்த** - தூதினைக் கொண்டு வந்த 1211.

**தூயார்** - அழுக்கில்லாதவர் 456.

**தூய்மை** - அழுக்கின்மை புனிதம்; சுத்தம் 159, 298,455, 688.

**தூய்மையவர்** - தூய்மையையுடைய வர் 711, 721.

**தூவாத** - வெய்ய சொற்கள் 685.

**தூவி** - மென்மையான இறகு 1120.

**தூவேன்** - ஒழியேன் 1021

**தூறு** - போர் 435.

**தூற்றா**- அறிவிக்கமாட்டா 1157.

**தூற்றார்** - இகழ்ந்து சொல்லார் 1190.

**தூற்றும்** - இகழ்ந்து சொல்லும் 188.

## தெ

**தெய்வத்தால்** - ஊழால் 619.

**தெய்வத்துள்** - தெய்வங்களுள் 50.

**தெய்வத்தோடு** -தெய்வத்துக்குச் சமமாக 702.

**தெய்வம்** - தேவர் 43; கடவுள் 55, 1023.

**தெரிதல்** - ஆராய்தல் 717.

**தெரிந்த** - ஆராய்ந்தெடுத்த 462, ஆராய்ந்த 712.

**தெரிந்து** - ஆராய்ந்து 23, 132, 186, 501, 712, 1172.

**தெரிந்து செயல் வகை** - ஆராய்ந்து செய்யும் திறமை (47).

**தெரிந்து வினையாடல்** - தெளியப் பட்டவரை அவர் செய்யவல்ல வினையை அறிந்து அவற்றின் கண்ணே செலுத்துதல் (52).

**தெரியா** - ஆராயாத 583.

**தெரியான்** - உடலியல்பும் அதற்கேற்ற உணவும் காலமும் ஆராயாதவன் 947.

**தெரியுங்கால்** - (நுட்பமாக) ஆராயு மிடத்து 503.

**தெரிவார்** - அறிவார் 104, 329.

**தெரிவான்** - ஆராய்பவன் 27.

**தெருளாதான்** - அறிவில்லாதவன் 249.

**தெவ்** - பகைவர் 639.

**தெவ்விர்** - பகைவர்களே 771.

**தெளித்த** - தெளிவித்த 1154.

**தெளிந்தார்** - (தம்மைச்) சந்தேகப் படாதவர் 143.

**தெளிந்தார்க்கு** - மெய்ப் பொருளைக் கண்டவருக்கு 353.

**தெளிந்தான்** - நம்பினவன்; சந்தேகம் தீர்ந்தவன் 508, 510.

**தெளிவு** - நம்பிக்கை; ஆராய்ந்து காணும் தெளிவு 464, 502, 510, 513.

**தெள்நீர்** - தெளிந்த நீர் 1065.

**தெள்ளியர்** - அறிவுடையார் 374.

**தெறல்** - அழித்தல் 264.

**தெறு** - திறை; தண்டம் 756.

**தெறும்** - (பின்வளர்ந்து) கெடுக்கும் 674, 883.

**தெறூஉம்** - சுடும் 1104.

**தெற்றென்க** - அறிந்துகொள்ள வேண்டும் 581.

**தென்புலத்தார்** - பிதிரர், இறந்த முன்னோர் 43.

## தே

**தேய** - குறைய 96.

**தேயத்து** - இடத்து 753.

**தேயும்** - குறையும் 888.

**தேய்க்கும்** - குறைக்கும் 555, 567.

**தேராது** - ஆராயாது 509.

**தேரான்** - அறியாதவனாகி 144, 508, 510.

**தேரினும்** - பார்ப்பினும்; 132.

**தேரின்** - ஆராய்ந்து கூறுமிடத்து 249.

**தேர்** - வண்டி 496.

**தேர்க்கு** - வண்டிக்கு 667.

**தேர்ச்சி** - ஆலோசனை 635.

**தேர்ந்தபின்** - ஆராய்ந்தபின் 509.

**தேர்ந்து**- ஆராய்ந்து 441, 462, 541, 634.

**தேவர்** - வானவர் 1073.

**தேறப்படும்** - நம்பிக்கை வைக்கப் படும் 501; தெளியப்படும் 589.

**தேறல்** - தெளிதல் 825.

**தேறற்க** - தெளியாதுவிடுக 509.

**தேறற்பாற்றன்று** - நம்புதல் கூடாது 825.

**தேறாவிடினும்** - நம்பாவிடினும், தெளியாவிடினும் 876.

**தேறான்** - அறியமாட்டான் 848; சேராதவனாக 876.

**தேறிய** - தெளிந்த 514.

**தேறியார்** - தெளிந்தவர் 1154.

**தேறின்** - தெளிந்தால் 876.

**தேறுக** - தெளிக; ஐயுறாதிருக்க 509.

**தேறும்பொருள்** - அவரவர் ஆற்றலுக் கேற்ற கருமங்கள் 509.

**தேற்றம்** - மனங்கலங்காமை 513; நம்பப்படுதல் 766; நம்புதல் 1153 .

**தேற்றாதவர்** - அறியாதவர் 187, 289, 626, 649.

**தேற்றாதார்** - அறியாதார் 1054.

**தேற்றுதல்** - தெளிவித்தல் 693.

**தேன்** - தேன் 1121.

## தொ

**தொகச் சொல்லி** - சுருங்கச் சொல்லி 685.

**தொகுத்தவற்றுள்** - திரட்டிய அறங் களுள் 322.

**தொகுத்தார்க்கு** - திரட்டியவருக்கு 377.

**தொகை** - திறமை; குழு (செஞ்சொல், இலக்கணச் சொல், குறிப்புச் சொல்லின் தொகை) 711,721; ஒருங்கு 1043.

**தொக்க** - ஒத்தன 589.

**தொக்கு** - ஒருங்கு கூடி 545.

**தொடங்கற்க** - தொடங்காதுவிடுக 491.

**தொடங்கார்** - செய்யத் தொடங்கார் 464.

**தொடரார்** - (அவனை) தொடர்ந்து அணுகி வினவாமல் 695.

**தொடர்** - தொடர்பு; நட்பு 450.

**தொடர்பு** - சம்பந்தம் 73; நட்பு 783, 806, 819, 820, 882, 920.

**தொடர்ப்பாடு** - தொடர்பு 345.

**தொடலை** - மாலை 1135.

**தொடலைக் குறுந்தொடியாள்** - மாலைபோல் தொடுத்த சிறிய வளைகளை யணிந்தவள் 1135.

**தொடி** - ஒரு அளவை; ஒரு பலம் 1037; வளையல் அணிந்தவர் 1101, 1135; வளையல் 1234, 1238; வளையணிந் தவள் 1275.

**தொடியார்** - பெண்கள் 911.

**தொடியொடு தோள்நெகிழ** - வளை யோடு தோள்கள் பண்டுபோல இருக்காது நெகிழ 1236.

**தொடின்** - தொட்டால் 1154.

**தொட்டனைத்து** - தோண்டிய அளவுக்கு 396.

**தொலைவிடத்தும்** - தொலைந்து சிறிதாகிய விடத்தும் 762.

**தொலைவு** - அழிதல், வறுமை 806.

**தொல்** - பழமை, பழைய 1043, 1234, 1235.

**தொல்கவின்** - பழைய இயற்கை அழகு. 1235.

**தொல்படை** - மூலப்படை 762.

**தொல்லை** - பழமை 806.

**தொல் வரவும்** - குடிப்பிறப்பின் வரவையும் 1043.

**தொழாஅர்** - வழிபடமாட்டாத 2.

**தொழாஅள்** - தொழாதவளாயினும்; வணங்காதவளாய் 55.

**தொழிலோர்** - தொழிலைச் செய்பவர் 560.

**தொழில்** - செயல் 394, 428, 549, 582, 648, 833, 972, 1252.

**தொழிற்றாம்** - தொழில்களைச் செய் விக்கும் தன்மையனவாம் 977.

**தொழுத** - கும்பிட்ட 828.

**தொழுது** - வழிபட்டு 55, 970, 1033.

**தொழும்** - வணங்கும், கும்பிடும் 260, 268.

**தொறும்** - போதெல்லாம் 553, 783, 1145.

**தொறூஉம்** - போதெல்லாம் (தொறு - தான் சார்ந்த இடத்தைப் பலவாக்கி யாண்டாண்டு என்பது பட நிற்பதோர் இடைச்சொல்) 940.

## தோ

**தோட்க** - துளைக்க 418.

**தோட்டி** - அங்குசம் 24.

**தோட்டு** - பூவினை, தோடு-பூவிதழ் 1105.

**தோணி** - படவு 1068.

**தோயாதார்** - சேராதவர் 149.

**தோயார்** - தீண்டார் 914, 915, 916.

**தோய்வர்** - தீண்டுவர் 917.

**தோய்வன்ன** - (வந்து) தோய்ந்தாற் போன்ற 308.

**தோல்** - உடம்பின் தோல் 80, 273; சொல் 1043.

**தோல் கெடுக்கும்** - சொல்லைக் கெடுக்கும் - இழிந்த சொற்களைச் சொல்லச் செய்யும் 1043.

**தோல்வி** - (தன்னினும் உயர்ந் தாரிடத்து இருந்து பெறும்) தோல்வியை 986.

**தோழி** - பாங்கியே 1284.

**தோளவள்** - தோளையுடையவள் 1113.

**தோள்** - தோள்கள் 149, 906...

**தோறு** - போது எல்லாம் 1106, 1110.

**தோறும்** - தினமும் 520, 1110, 1145.

**தோற்றத்தான்** - தோற்றத்துடனே 1084.

**தோற்றம்** - உயர்வு 124; தவவேடம் 272; பிறப்பு 1003; புகழ் 1059.

**தோற்றவர்** - எதிர்த்தலாற்றாது சாய்ந்தவர் 1327.

**தோற்றவர் வென்றார்** - ஊடலில் தோற்றவர் வென்றவராவர் 1327.

**தோன்றல்** - தோன்றாதிருத்தல் வேண்டும் 1119.

**தோன்றலின்** - பிறவியிலும் பார்க்க 263.

**தோன்றா** - தோற்றமுமில்லாமல் 479.

**தோன்றாமை** - பிறவாமை 236.

**தோன்றிவிடும்** - வெளிப்பட்டுவிடும் 1253.

**தோன்றிய** - உண்டான 1328.

**தோன்றின்** - பிறக்கின்; உண்டாவ தாயின் 884, 885, 958

**தோன்றும்** - உண்டாகும் 371, தோன்றுகின்ற 1322; 1324.

## ந

**நக** - மகிழ 187, 685; மலர 786; மகிழ 829; சிரிக்க 1173.

**நகச்செய்து** - மகிழும்படி செய்து 829.

**நகச்சொல்லி** - மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லி 187.

**நகப்படுவர்** - சிரித்து இகழப்படுவர் 927.

**நகலான்** - நட்பினாம் 860.

**நகல்** - மனதில் மகிழ்தல் 999.

**நகாஅ** - சிரித்து 824.

**நகுக** - மகிழ்க 621.

**நகுதல்** - நகையாடி மகிழ்தல் 784.

**நகுப** - நகைக்கின்றார் 1140.

**நகும்** - இகழ்ந்து சிரிக்கும் 271; மகிழும் 774; இகழ்ந்து தன்னுக்குள் சிரிக்கும் 1040; மகிழும் 1094; 1095; புன்முறுவல் செய்கின்றாள் 1095.

**நகை** - சிரிப்பு 182, 304, 694, 817, விளையாட்டு 878; முகமலர்ச்சி 953; சிரிப்பு 1274.

**நகையுள்** - விளையாட்டினை 995.

**நகையேயும்** - விளையாட்டிலாயினும் 871.

**நகைவகையர்** - (கழைக்கூத்தர் விகடர் போன்று) சிரிப்புண்டாக்கு வார் 817.

**நசை** - விருப்பம், ஆசை 1043, 1156.

**நசைஇ** - விரும்பி 1263.

**நசைஇயார்** - விரும்பப்பட்டவர் 1199.

**நச்சப்படாஅ தவன்** - விரும்பப் படாதவன் 1004, 1008

**நச்சு** - நஞ்சு 1008.

**நஞ்சு** - விடம் 580, 926.

**நடு** - நடுவுநிலைமை 171.

**நடுஊருள்** - ஊர்நடுவுள் 1008.

**நடுக்கு** - அசைவு 654.

**நடுங்கல்** - பயப்படுதல் 680.

**நடுங்கு அஞர்** - நடுங்குதற்கு எதுவாகிய துன்பம் 1086.

**நடுவு** - நடுவுநிலைமை 113, 116, 117, 171, 172.

**நடை** - நடத்தல் 59, (வெளிப்படை குறிப்புப் போன்ற) போக்கு 712; நடத்தல் 1014.

**நட்ட** - நட்புக்கொண்ட 791.

**நட்டல்** - நட்புக்கொள்ளுதல் 784.

**நட்டார்** - நண்பர் 804, 805, 808, 826, 908, 1293.

**நட்டு** - நட்புக்கொண்டு 812, 830.

**நட்பது** - தோழமைகொள்வது 786.

**நட்பினுள்** - நட்பாயிருக்கும்போதே 1165.

**நட்பு** - உறவு, தோழமை 187, 338....

**நட்பு ஆடல்** - சிநேகங்கொள்ளல் 187.

**நட்பு ஆராய்தல்** - நட்பு செய்தற் குரியாரை ஆராய்ந்து கொள்ளும் முறைமை (80)

**நணித்து** - அண்மையில் உள்ளது 851.

**நணியது** - கிட்டியதாதல் 353.

**நண்ணார்** - பகைவர் 1088.

**நண்ணேன்** - சேரமாட்டேன் 1311.

**நண்பு** - நட்பு 998.

**நண்பென்னும்** - (யாவரும்) நண்ப ரென்னும் 74.

**நத்தம்** - ஆக்கம்; நந்து என்னும் தொழிற்பெயர் விகாரத்தால் நத்து என்று ஆய்ப் பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று 235.

**நமக்கு எவன்** - நமக்கு என்ன இன்பத்தைச் செய்வார் 1195.

**நமக்கொழிய** - நமக்குத் தீரும்படி 1231.

**நம்** - நமது 1220, 1258.

**நமக்கு** - எங்களுக்கு 1195; எங்க ளிடத்தே 1231.

**நம்மின்** - நம்மிலும் பார்க்க 1277.

**நயத்தக்க** - விரும்பத்தக்க 580.

**நயந்த** - விரும்பிய 1181.

**நயந்தவர்** - விரும்பப்பட்டவர் 1232.

**நயப்பித்தார்** - (பிரிவுக்கு யான்) உடன் படும்படி செய்தவர் 1189; மகிழ் வித்துச் சேர்ந்தவர் 1190.

**நயம்** - நீதி 860, மகிழ்ச்சி 314; அருள் 998.

**நயம் போலும்** - இன்பஞ் செய்தல் போலும் 783, 860.

**நயவற்க** - விரும்பாதொழிக 439.

**நயவா** - விரும்பாத 143.

**நயவாமை** - விரும்பாமை 150.

**நயனில** - விரும்பாத செயல்கள் 192.

**நயனுடையான்** - உபகாரஞ் செய்ப வன் 216.

**நயன்** - நன்மை, நீதி 97; விருப்பம் 103, 193, 194, 197; ஒப்புரவு 216, 219; நடக்கை 912.

**நரி** - நரி என்னும் விலங்கு 500.

**நல** - நற்குணங்கள் 1305.

**நலக்கு** - விருப்பத்துக்கு, நன்மைக்கு 149.

**நலத்தது** - அறத்தது, குணத்தை யுடையது 984.

**நலத்தார்** - ஆசையுடைய பெண்கள் 915.

**நலத்தின்** - நன்மையால் 459, 915.

**நலத்தின்கண்** - நற்செயல்களிடத்தில்; குலநலமுடையவனாய் வருகின்ற வனிடத்தில் 958.

**நலத்து** - நன்மையுள் 641, 982.

**நலம்** - அழகு 407; நன்மை 457, 458, 641, 651; அழகு 914, 915, 916, 982; நன்மை 1007; நற்குணம் 1019, 1305.

**நலனழிதல்** - அழகு கெடுதல் அதி. 124.

**நலன்** - நன்மை 499, 641, 682; சிறப்பு 982.

**நல்** - நல்ல 60; மிகுந்த 1133.

**நல்ஆள்** - நல்ல ஆண்மகன் 1030.

**நல்ஆறு** - நல்லொழுக்கம் 324.

**நல்கா** - அருள் செய்யாத 1217.

**நல்காது** - (திரும்பக்) கொடாது, பெய்யாது 17.

**நல்காமை** - அருளாமை 1181, 1190.

**நல்காரை** - (வந்து எனக்கு) அருள் செய்யாதவரை 1214, 1219.

**நல்கார்** - அருள் செய்யார் 1199, 1219.

**நல்குரவு** - வறுமை 657, 1043, 1045, 1047; நுகரப்படுவன எவையும் இல்லாமை (105)

**நல்குவர்** - (உடன் போதற்கு) உடன் படுவர் 1150; (மீண்டும் வந்து) அருள் செய்வர் 1156.

**நல்கூர்ந்தார்** - வறுமையடைந்தவர் 1046.

**நல்கூர்ந்தான்** - வறுமையடைந்தவன் 219.

**நல்நீரை** - நல்ல குணமுடைய 1111.

**நல்நுதலாள்** - அழகிய நெற்றியை யுடையவள் (மனைவி) 908.

**நல்நயம்** - நல்ல நன்மைகள் 314.

**நல்ல** - நன்மையுடையன 213, 300, 375, 379, 679, 823, 905.

**நல்ல ஆக** - நல்லனவென்று பொருந்தி 379.

**நல்ல ஆள்** - நல்ல வீரர் 746.

**நல்ல ஆறு** - நல்ல ஒழுக்கவழி 41.

**நல்லது** - நன்மையுடையது 323.

**நல்லபறை** - மகிழ்ச்சிக்குரிய பறை 1115.

**நல்ல பறை படா**- மகிழ்ச்சிக்குரிய பறை ஒலியாது துயரத்துக்குரிய பறை ஒலிக்கும் (இடை ஒடிந்து போகுமாதலால்) 1115.

**நல்லர்** - நன்மையுடையவர் 823.

**நல்லவர்** - குலமாதர் 1011.

**நல்லவை** - நன்மை பயக்கும் சொற் கள் 96; நற்கருமங்கள் 375; அறிவு தருகின்றவை 416; நன்றாகிய குணங்கள் 981.

**நல்லவைஆம்** - நல்லவையாகிப் பயன்படும் (ஊழ் வசத்தால்) 375.

**நல்லாருள்** - கற்ற பெரியாரிடையில் 903.

**நல்லார்** - பெரியார் 408, 450, 729, 905.

**நல்லாள்** - நல்ல பெண் 924; நல்லவள் 1040.

**நல்லாறு** - நல்வழி 222.

**நல்லாற்றான்** - நல்வழிகளிலே 242.

**நவில்** - பயில் 783.

**நள்ளா** - பொருந்தாது 912.

**நறா** - கள் 1090.

**நறு** - நல்மணமுள்ள 1231.

**நறுமலர்** - நல்மணமுள்ள மலர்; செங்கழுநீர் (குவளை என்பாரு முண்டு) 1231.

**நற்பொருள்** - (நூல்களின்) நல்ல பொருள் 1046.

**நனவினான்** - விழிப்புநிலையில் 1213-1217; 1219, 1220.

**நனவு** - விழிப்புநிலை 1216.

**நனி** - மிக 403.

**நனை** - (மதத்தால்) நனைகின்ற 678.

**நன்** - நல்ல 60, 171, 1000.

**நன்கு** - நிலைபெற 513, செல்வம் 534; ஏற்க 728; மனங்கொள்ள 919; தெளிய 1046.

**நன்குடையர்** - நல்வினையால் தாமே உடையர் 458.

**நன்குணர்ந்து** - (குற்றப்படாமல்) மிகத் தெளிந்து 712.

**நன்பால்** - நல்ல பால் 1000.

**நன்மை** - நல்ல தன்மை 103, 292; நற்குணம் 1013.

**நன்மையவர்** - திறமையுடையவர் 712.

**நன்மையின்** - நற்குணங்களினின்று 194.

**நன்றாகும்** - இன்பம் மிகுதற்கேதுவாகும் 328.

**நன்றி** - நன்மை 67; அறம் 97; உதவி 102, 104; நன்மை 108; உதவி 110; அறம் 652, 994.

**நன்றியில்** செல்வம் - தனக்கும் பிறருக்கும் பயன்படாத செல்வம் (101).

**நன்றிக்கண்** - அறத்தினிடத்து 117.

**நன்றிக்கு** - அறத்துக்கு 138.

**நன்றின்பால்** - நல்லதினிடத்து 422.

**நன்று** - தருமம் 38; நன்மையுடையது 49, 92, 108; நன்மை 109; நன்மையுடையது 111; நன்மை 113; நன்மையுடையது 125; நன்மை 128; நன்மையுடையது 150, 152, 157, 197, 222, 226; அருள் 253; நன்மையுடையது 259, 297, 308; நல்வினை 379; நன்மையுடையது 323, 404, 456; நல்ல உபாயம் 469; நன்மையுடையது 655, 673, 715, 815, 967, 1038, 1190; உதவி 1225.

**நன்று அல்லது** - தீமை 108.

**நன்று ஊக்காது** - அருளை நோக்காது; நல்லவற்றைச் செய்யக் கருதாது 253.

**நன்றே** - நன்மையே 113.

## நா

**நா** - நாக்கு (சொல்) 127, 335, 641.

**நாகம்** - பாம்பு 763.

**நாகரிகம்** - கண்ணோட்டம் 580.

**நாட** - வருந்தித் தேடினால் 734.

**நாடா** - அளவில்லாத 74; வருந்தித் தேட வேண்டாத 739.

**நாடாது** - ஆராயாது 791.

**நாடாமை** - (செய்வன தவிர்வனவுகளை) ஆராயாமை 833.

**நாடாம் ஊராம்** - நாடும் தனது ஊராகும் 397.

**நாடி** - ஆராய்ந்து 96; விரும்பி 242; ஆராய்ந்து 504, 511, 516, 553, 561, 948; தேடி 1214.

**நாடிய** - ஆராய்ந்த 518.

**நாடு** - தேசம் 397, 553, உலகம் 1323; நாட்டின் சிறப்புத் தன்மை (74)

**நாடுக** - ஆராய்க 520.

**நாண** - வெட்கப்பட 314, 1149.

**நாணத்தக்கது** - நாணத்தக்க பழி (1) 1018 (2) நாணத்தக்க குற்றம் (3) 1018.

**நாணாமை** - நாணவேண்டிய பழி பாவங் களுக்கு அஞ்சாமை 833.

**நாணால்** - நாணம் இழக்க நேர்ந்தால் 1017; இயந்திரக் கயிற்றால் உண்டாகிய தனது அசைவினால் 1020.

**நாணான்** - நாணமாட்டான் 1018.

**நாணின** - வெட்கமடைந்தன (தமக்கு முன் நாணின் மலர்களுக்கு இன்று நாணின.)

**நாணினை** - வெட்கத்தை 1132.

**நாணு** - நாணம், 902, 903, 1011, 1162, 1251.

**நாணுடைமை** - உயர்ந்தோர் தமக் கொவ்வாத கருமங்களைச் செய்ய நாணும் தன்மை (102).

**நாணுபவர்** - பயப்படுகின்றவர் 172.

**நாணுவார்** - அஞ்சுவார் 433, 1015.

**நாண்** - நாணம், இழிவான செயற்கண் வருவது 502, 902, 907, 924, 951, 952, 960.

**நாண் ஆள்பவர்** - (அதனது சிறப்பை அறிந்து) நாணத்தை விடாது ஒழுகுபவர் 1017.

**நாண்விடு** - (அல்லது) நாணத்தை விடு 1247.

**நாண்வேலி கொள்ளாது** - நாணை வேலியாகக் கொள்ளாது 1016.

**நாமம்** - அச்சம் 149; பெயர் 360.

**நாம்** - நாங்கள் 1195.

**நாரின்மை** - ஈரமின்மை 958.

**நார்** - இரக்கம், அன்பு 833, 958.

**நால்** - நான்கு 950.

**நாவாய்** - மரக்கலம் 496.

**நாவினாற்சுட்டபுண்** - கொடுஞ் சொற்களால் சுட்டபுண். 129.

**நாளேம்** - நாளையுடையோம் 1278.

**நாளை** - நாட்களை 776.

**நாளொற்றி** - நாட்களைக் கணக்கிடச் (சுவரில்) கீறி அவற்றைக் கொண்டு எண்ணி 1261.

**நாறாமலர்** - மணம் வீசாத மலர் 650.

**நாறா** - மணங்கமழாத 650.

**நாற்றம்** - மூக்கால் முகர்ந்து அறிவது 27; மணம் 1113, 1274.

**நான்கின்** - நான்கினது 501, 743.

**நான்கு** - நாலு 35, 146, 382, 390, 513, 605, 766, 953.

## நி

**நிகழ்பவை** - நடப்பவை 582.

**நிச்ச** - நித்திய 532.

**நிணம்** - கொழுப்பு 1260.

**நிரந்தவர்** - கூடி நடப்பவர் 821.

**நிரந்து** - ஒழுங்குப்படக் கோத்து 640.

**நிரப்பிடும்பை** - வறுமை நோய் ; கரத்தலாகிய நோய் 1056.

**நிரப்பிய** - (தேடி) நிரப்பிய உணவை; பொருட்குறை நிரப்ப வேண்டி 229.

**நிரப்பு** - வறுமை 532, 1048, 1056, 1060.

**நிரம்பிய** - (அறிவு) நிரம்புதற்கேது வாகிய 401.

**நில** - நிலத்தினது 234; நிலத்தை யுடைய 544.

**நிலக்கு** - நிலத்துக்கு 570, 572, 1003.

**நிலத்தில் கிடந்தமை** - வித்து நிலத்தில் கிடந்தமையை; நிலத்தின் தன்மையை 959.

**நிலத்து** - பூமியில்; 28, 68, 307, 413, 496, 526, 898.

**நிலத்தோடு** - நிலத்தின் கண் 499.

**நிலமிசை** - வீட்டுலகின் கண் 3.

**நிலம்** - தரை 151, 239; நாடு 386; தரை 1039; பூமி 990, 1040.

**நிலவரை** - நிலத்தின் எல்லையை 234.

**நிலன்** - நாடு 383; தரை 1094, 1114.

**நிலை** - நிற்றல் 255; துன்ப நிலை 325.

**நிலை இல்லை** - அத்துறவறத்தில் (நிற்குமாறும்) இல்லை 1036.

**நிலைதளர்ந்தற்று** - நிலைகுலைந்தது போலாகும் 716.

**நிலை மக்கள்** - பின் வாங்காத வீரர் 770.

**நிலைமையான்** - நிலைமையினை யுடை யவன்; இயல்பினை யுடையவன் 273.

**நிலையாமை** - (பிறந்திறத்தலாகிய) நிலையாத தன்மை 349.

**நிலையில்** - ஒழுக்கத்தில் 124.

**நிலையின** - நிலையுள்ளன 331.

**நில்லன்மின்** - நில்லாதீர்கள் 771.

**நில்லாத** - நிலையில்லாத 331.

**நில்லாது** - நிலைக்காமல் 592.

**நிழலது** - நிழலிலிருப்பது 1309.

**நிழலவர்** - கருணையுடையவர் 1034.

**நிழல்** - சாயை 108 (1) நிழலின் கீழுள்ள மண் (2) தண்ணளி 1034.

**நிழல்நீரும்** - நிழலிடத்து நீரும்; நிழலும் நீரும் 881.

**நிறுத்து** - நிறுத்தி விட்டு 1132; உண் டாக்கி விட்டு 1174.

**நிறை** - நிரம்பிய 28; கற்பு 57; சால்பு 154; நிரம்பிய 782; மறைபிறர் அறியாமை 864; 917, 1138, 1251, 1254; நிரம்பிய 1315.

**நிறை அழிதல்** - தலைவி மனதில் இருப்பவற்றை அடக்கி வைத் திருக்க முடியாமல் வாய்விட்டுச் சொல்லுதல் (126).

**நிறைந்த** - நிரம்பிய 1117, 1272.

**நிறைந்தற்று** - நிரம்பினாற்போன்றது 215, 523.

**நிறைமொழி** - அருளிக் கூறுதலும் வெகுளிக் கூறுதலும் அவ்வப் பயன்களைப் பயக்கும் மொழி 28.

**நிறைமொழி மாந்தர்** - முனிவர்; கல்வி யும் ஒழுக்கமும் நிறைந்தவர் 28.

**நிறைய** - மிக 1282.

**நிறையுடைமை** - நிறைந்த நல்ல குணம் 154.

**நிற்க** - ஒழுகுக 391; பார்த்து நிற்க 708.

**நிற்பேம்** - இருப்போம் 1260.

**நினைக்க** - எண்ணுக 250.

**நினைக்கப்படும்** - ஆராயப்படும் 169.

**நினைத்தக்கால்** - நினைந்தால் 1296.

**நினைத்து** - அறிந்து, விசாரித்து 1241; (உறுப்புக்களின் அழகை) நினைத்து 1320.

**நினைந்து** - எண்ணி எண்ணி 1209.

**நினைப்ப** - நினைத்தால் 1202.

**நினையார் கொல்** - நினையாமலிருக் கின்றார் போலும் 1203.

**நின்றக்கடை** - நீங்காதபோது 1019.

**நின்றவர்** - நின்ற வீரர் 771.

**நின்றன்னார்** - நிலை பெற்றாற் போன்ற செல்வமுடைய வரும் 898.

**நின்றாரின்** - நின்றவர் போல 142.

**நின்று** - (இடையில் நீங்காத) நிற்க, நிற்ப என்பது நின்று எனத்திரிந்து கின்றது. 11.

## நீ

**நீ** - நீ 1123, 1242....

**நீக்கப்பட்டார்** - கைவிடப்பட்டார் 920.

**நீக்கி நிறுத்து** - நீக்கி நிறுத்தி விட்டு 1132.

**நீக்கியார்** - போக்கினவர் 330.

**நீங்க** - கெட 358.

**நீங்கலர்** - நீங்க மாட்டாத 1216.

**நீங்கா** - (ஒரு போதும்) நீங்க மாட்டா 383.

**நீங்கி** - தவிர்த்து 246; (1) நீக்கி (2) நீங்கி 252.

**நீங்கியான்** - (பற்று) நீக்கியவன்; துறந்தவன் 341.

**நீங்கின்** - பிரியின் 495, 1104, 1155.

**நீடு** - நெடுங்காலம் 3, 6; நீட்டித்தல் 566; நெடிது 1312.

**நீடுஇன்றி** - நீடிக்காது 566.

**நீடுக** - நீளுக 1329.

**நீடுவது** - நீளுவது 1307.

**நீடுவாழ்க** - நெடிது வாழ்க 1312.

**நீடுவாழ்வர்** - நீண்டகாலம் (இகத்தி லும் பரத்திலும்) வாழ்வர் 6.

**நீட்டம்** - நீளம் 595.

**நீட்டலும்** - மயிரை வளர்த்தலும் 280.

**நீட்டி** - நீளமாக, எஞ்சாமல் 796;

**நீத்தக்கடை** - விட்டுப் பிரிந்தபின் 1149.

**நீத்தார்** - துறவிகள் 21; நீங்கினார் 1220.

**நீத்து** - நீங்க (நீப்ப என்பது நீத்து எனத்திரிந்து நின்றது) 1262.

**நீந்தல்** - நீந்த மாட்டார் 1170.

**நீந்தார்** - அழுந்துவர்; நீந்தமாட்டார் 10.

**நீந்தி** - நீந்தியும் 1167.

**நீந்தும்** - கடக்கும் 1164.
**நீப்பர்** - நீங்குவார்கள் 969.
**நீப்பினும்** - நீங்கிப் போமாயினும் 327.
**நீப்பின்** - பிரிந்தால் 1154.
**நீர** - தன்மையுடையன 34, 219, 782.
**நீரது** - தன்மையுடையது 221, 745.
**நீரர்** - தன்மையுடையவர் 1319.
**நீரவர்** - அறிவுடையோர் 782.
**நீரள்** - இயல்புடையவள் 1111.
**நீராடி** - நீரில் முழுகி 278.
**நீரான்** - தண்ணீரால் 298.
**நீரான் அமையும்** - நீரால் உண்டாகும் 298.
**நீரினும்** - நீர்ப்பாய்ச்சுதலினும் 1038.
**நீரென்று** - நீர்தாவென்று 1066.
**நீரை** - இயல்பினை உடையை, குண முடைய 1111.
**நீர்** - கடல் 13, தண்ணீர் 20; கண்ணீர் 71; தண்ணீர் 215; குணம் 605; கண்ணீர் 1174.
**நீர் அறும்** - நீர்வற்றிப் போவதாக 1177.
**நீர்த்தது** - தன்மையினையுடையது 431, 596, 777, 1143.
**நீர்மை** - தன்கை, செல்வம் 17; தன்மை 195; மடமை 1272.
**நீழலவர்** - தண்ணளியை யுடையவர் 1034.
**நீழல்** - நிழல் 1034.
**நீளவிடல்** - வேண்டுமளவுக்குமேல் விடுதல் 1302.
**நீளும்** - உயரும் 1022, 1147
**நீள்** - நீண்ட, பரந்த 234 இடையறாத 1022.
**நீள்வினை** - இடையறாத செயல் 1022.

## நு

**நுசும்பு** - இடை 1115.
**நுட்பம்** - நுண்மை, கூர்மை 636.
**நுணங்கிய** - நுணுகிய, நுட்பமான 419.
**நுணுக்கம்** - நுட்பம் (132)
**நுண்** - நுட்பமான, கூரிய, 407, 424.
**நுண்ணிய** - நுட்பமான பொருள்களை யுடைய 373.
**நுண்ணியம்** - நுட்பமான அறிவுடையேம் 710.
**நுண்ணியர்** - நுட்பமானவர் 1126.
**நுண்மாண் நுழைபுலம்** - நுனித்தகன்ற கூரிய அறிவு 407.
**நுதல்** - நெற்றி 1011, 1238, 1240, 1328.
**நுதற்கு** - நெற்றிக்கு 1088; பெண் களுக்கு 1123.
**நுதப்பேம்** - அவிப்போம் 1148.
**நுமர்** - உமக்கு வேண்டியவர் 1318.
**நுழை** - ஆராய்ச்சியுடைய, நுணுகிச் சென்ற, கூரிய 407.
**நுழைந்து** - புகுந்து 130.
**நுனி** - முனை 476.

## நூ

**நூலர்** - அரச நீதியை அறிந்தவர் 683.
**நூலாருள்** - நீதி நூலையறிந்த அமைச்சரிடையில் 683.
**நூலும்** - அரசியல் நூலும் 581.
**நூலொடு** - அறிவு நூல்களோடு 726.
**நூலோடு** - நூலறிவோடு 636.
**நூலோர்** - அறநூலார் 322; மருத்துவ நூலார் 941.
**நூலோர்க்கு** - நீதி நூலுடையவர் களுக்கு 533.
**நூல்** - புத்தகம் 373, 401; ஆலோசனை 440; மறைநூல் 543; நூற்பொருள் 783; பஞ்சு முதலியவற்றால் முறுக்கிய நூல் 1273.
**நூல்இன்றி** - நூல்களைக் கல்லாது, கற்று அறிவு நிரம்பாது 401.
**நூல் வல்லனை** - அரச நீதி வல்லவன் 683.

**நூறு** - நூறாகிய எண். 932.

**நூற்கு** - வேதத்துக்கு 543.

## நெ

**நெகிழ** - மெலிய 1236.

**நெஞ்சத்தர்** - உள்ளத்தின் கண்ணராக 1218.

**நெஞ்சத்தார்** - உள்ளத்தில் உள்ளார் 1128.

**நெஞ்சத்தான்** - உள்ளமுடையவன் 169, 185.

**நெஞ்சத்து** - அன்பால் 786, உள்ளத்துடன் 910.

**நெஞ்சத்தை** - உள்ளத்தை 1252.

**நெஞ்சம்** - மனம், உள்ளம் 116, 253, 272, 706, 917, 1259, 1299.

**நெஞ்சின்** - உள்ளத்தால் 276; 917; உள்ளத்துடன் 1297; நெஞ்சினையுடைய 1053.

**நெஞ்சு** - உள்ளம், 281, 293, 842, 1081, 1264, 1284, 1291, 1295, 1296, 1298; உள்ளமே 1200, 1242, 1246, 1248, 1249, 1291, 1292.

**நெடிது** - நெடுநாளாக 562, 943.

**நெடிய** - நீண்டனவாய் 1169.

**நெடும்** - ஆழமான 495; நீண்ட 496; பெரிய 566.

**நெய்யால்** - நெய்யினால் 1148.

**நெருஞ்சிப்பழம்** - நெருஞ்சி முள் போல வருத்தஞ்செய்யும் 1120.

**நெருநல்** - நேற்று 336, 1048.

**நெருநற்று** - நேற்று 1278.

**நெருப்பினுள்** - தீயினுள் 1049.

**நெறி** - நூல்முறை 6, 324, 356, 477.

## நே

**நேரா** - கூடாமலிருந்து 821.

**நேர்** - ஒப்பர் 813.

**நேர்ந்தேன்** - உடன்பட்டயான் 1181.

**நேர்வது** - உடம்பட்டுக்கொடுப்பது 733.

## நொ

**நொந்தது** - வருந்தியது 877.

**நொந்தார்** - வருந்தினார் 1308.

**நொந்து** - வருந்தி 157, 1236.

## நோ

**நோ** - துன்பம் 157.

**நோக்க** - பார்க்கும்போது 90, 1098.

**நோக்கப்படும்** - பார்க்கப்படுவான் 1047.

**நோக்கம்** - பார்வை 1085, 1092.

**நோக்கா** - ஆராயாத 184.

**நோக்காக்கால்** - பாராதபோது 1094.

**நோக்காத** - பார்க்காத, உட்கொள்ளாத 148.

**நோக்காது** - நினைப்பதும் செய்யாது 1009.

**நோக்காமை** - பாராதிருத்தல் 1095.

**நோக்கான்** - (நீதி நூலை) ஓதமாட்டான் (1) பாரான் (2) 865.

**நோக்கி** - பார்த்து 93, 189, 528, 673, 701, 708, 1093, 1094, 1173, 1297; கருதி 189 (1); எதிர்பார்த்தது 542; குறிப்பாலறிந்து 708 (2).

**நோக்கினாள்** - அழகுடையவள் அல்லது பார்க்கப்பட்டவள் 1082, பார்த்தாள் 1093.

**நோக்கு** - பார்வை 1082, 1089, 1091, 1097, 1099, 1100.

**நோக்கும்** - பார்க்கின்ற 1094.

**நோதக்க** - வெறுக்கத்தக்கவற்றை 805.

**நோதல்** - வருந்துதல் 341, 1308.

**நோய்** - துன்பம் 261, 315, 359, 429, 442, 1160, 1162, 1174, 1200, 1226, 1241, 1243,

1266, 1303; இன்னாதவை 320; குற்றம் 851; உடற்பிணி 848, 853, 941, 946, 947, 948; காமப்பிணி 1091, 1147, 1159, 1171, 1175; 1176, 1183, 1227, 1255, 1280, 1301; வினைப்பயன்கள் 360.

**நோய்க்கு** - துன்ப நீக்கத்திற்கு 1102.

**நோய்ப்பால** - நோய் செய்யும் கூற்றவாகிய தீவினைகள் 206.

**நோகாதவர்** - நோன்பு செய்யாதவர், தவஞ்செய்யாதவர் 270.

**நோவது** - வருத்துதல் 237, 1242.

**நோவல்** - நோவாது கொள்வேன் 1236.

**நோவற்க** - நோவைச் சொல்லா தொழிக 877.

**நோவார்** - நொந்துகொள்ளாதவராய் 237.

**நோற்கிற்பவர்**- பொறுப்பவர் 159 (நோன் - பகுதி, இல் - சாரியை இடைச்சொல், பகர ஒற்று எதிர்கால இடைநிலை, அர்-விகுதி, அ- சாரியை, வகர ஒற்று உடம்படு மெய். இது எதிர்கால் வினையா லணையும் பெயர்.)

**நோற்கிற்பவர்க்கு** - நோன்பு இயற்றும் ஆற்றலுடையவர்க்கு 267.

**நோற்பார்** - நோன்பு செய்பவர்கள் 270; (நோயைப்) பொறுப்பவர் 160.

**நோற்பாரின்** - தவஞ்செய்வார் நிலையைக் காட்டிலும் 48; பொறுப் பவரைக் காட்டிலும் 160.

**நோற்றலின்** - தவம் காரணமாக வருகின்ற 169.

**நோனா** - வருத்தத்தைப் பொறாத 1132, 1163.

**நோன்பிற்கு** - தவஞ்செய்வார்க்கு 344.

**நோன்மை** - தவம் 984; பொறை 48.

**நோன்றல்** - பொறுத்தல் 261.

## ப

**பகச்சொல்லி** - பிரியும்படி புறங்கூறி 187.

**பகடு** - எருது 624.

**பகலும் இருளின்பால** - பகலும் இருளின் கண்ண 999.

**பகல்** - கூற்றில், காலத்தில் 319, பகற் பொழுது 481; கூடாமை, வேறுபடு தல், மாறுபடுதல் 581, 852; பகற் பொழுது 1227.

**பகவன்** - கடவுள் 1; (இது பகவான் என்னும் வட சொல்லின் வேறு பாடெனக் கூறப்படுகிறது. பகவன் என்பது பகலவனின் திரிபாயிருத் தல் கூடும். பண்டை மக்கள் பகல வனையே முழு முதலாகக் கொண் டார்கள்).

**பகவு** - பிளவு, பாதி 889.

**பகாஅன்** - நீக்காது 876.

**பகுதியால்** - நண்பர் பகைவரென்ற பகுதிதோறும் 111.

**பகுத்து** - பங்கிட்டு, பிரித்துக் கொடுத்து 322.

**பகை** - மாறுபடுந்தன்மை, எதிரியாகுந் தன்மை 146, 207.....

**பகைமை** - பகையாகுந்தன்மை 707.

**பகையின்** - கருவிபோல 883.

**பகையுள்** - பகையுள்ளவிடத்தும், பகை வருள்ளும் (பரிதி) 995.

**பக்கு** - பிளவு 1068.

**பக்குவிடும்** - பிளந்துபோகும் 1068.

**பசக்க** - பசப்பதாக (பசப்பு - மேனி யின் நிறம் வேறுபடுதல்) 1789.

**பசந்த** - மேனி நிறம் வேறுபட்ட 1181.

**பசந்து** - வெளுத்து 1232, 1238.

**பசப்பு** - தலைவனின் பிரிவாற்றாமை யால் தலைவிக்கு வருவதோர் நிறவேறுபாடு (அதி. 119) 1182.

**பசப்பு என** - பசந்தாள் என 1190.

**பசப்புக் கள்ளம்** - (அவ்வாறாகவும்) பசப்புக்கள்ளமாக வந்து நின்றது 1184.

**பசலை** - பசப்பு 1183.

**பசி** - உணவின்மையால் தோன்றும் நோய் 13, 225.

**பசி ஆற்றல்** - பசியைப் பொறுத்தல் 225.

**பசித்து** - பசிகொண்டு 944.

**பசிப்பர்** - பசித்திருப்பர் 837.

**பசும்** - பச்சை, பச்சென்றிருக்கும் 16, சுடாத, சூளையில் வேகாத 660.

**பசையினள்** - இளகினவளாகி 1098.

**பட** - உண்டாக 231, 237, படும் வகை 524; படுதலை 922.

**படர்** - பிரிவினாலுண்டாகிய வருத்தம் (அதி. 120).

**படர்தரும்** - பரவிவரும் 1229.

**படல்** - துயிலுதல் 1136, 1175.

**படல் ஆற்றா** - உறங்க முடியாமல் 1175.

**படா** - ஒலியா, ஒலிக்கமாட்டா 1115; படாமையால் 1140; நிமிர்ந்த, வளையாத 1087.

**படாஅதவர்** - அனுபவியாதவர் 623.

**படாஅதி** - மறையாதிருப்பாய் 1210.

**படாஅமை** - உண்டாகாமல் 38.

**படாஆறு** - படாமையால் 1140.

**படாம்** - முகபடாம் (முகத்திலிடும் ஆடை) 1087.

**படி** - பூமி 606.

**படிவத்தர்** - தவவேடத்தர் 586.

**படிறு** - வஞ்சனை 91.

**படிற்று** - குற்றத்தையுடைய, மறைந்த 271, 275.

**படின்** - உண்டாகுமானால் 216, 217; தாழுமாயின் 272; வாழின், குடியிருக்கின், அகப்படின் 558; உற்றால் 654; பிறக்குமாயின், உளதாயின் 886; இருக்குமாயின், இடத்ததாயின் 977.

**படு** - வரும், உண்டாகின்ற 172; படுக்கின்ற 279; பெரும், பெறும் 676.

**படுக்கும்** - ஆக்கும், உண்டாக்கும், உளதாக்கும் 372.

**படுத்து** - வளர்த்து 512.

**படுப** - படுவர் 810.

**படுபவோ** - உறுவரோ 512.

**படுபாக்கு** - உண்டாவதை, வருவதை 136, 164.

**படுப்பது** - படுத்துவது, உறுவிப்பது 460, நிலைபெறச் செய்வது, இடுவது 465.

**படும்** - படுவன் 50, 214; படுதல் வேண்டும் 265, 335; தகும் 412; வேண்டும் 698; தங்கும் 933; வளரும் 947,படுவான் 1047; படுவர் 1078; வெளிப்படும், படரா நிற்கும் 1138, 1254.

**படுவ** - உண்டாவன 172.

**படை** - கொலைக்கருவி 253; சேனை 381; கருவி, ஆயுதம் 555; சேனை 764, 768, 769; படைக்கலம், கொலைக் கருவி 828, கருவி 985; கொலைக் கருவி 1258; கொலைக்கருவி 1324.

**படையான்** - படையை உடையவன் 478

**பட்ட** - உண்டாகிய, நின்ற 408, 878; உற்ற நோய்கள் 1140.

**பட்டடை** - தறிப்பதற்கு அடியில் வைக்கும் கட்டை 821.

**பட்டன்று** - கிடந்தது 999.

**பட்டாங்கு** - நிலையாக (முன்படர்ந்தது போல), பட்டது 1189.

**பட்டி** - கண்டபடி நடப்பவன் 1074.

**பட்டு** - தொடர்புபடுதலால் 996.

**பணி** - மெல்லிய 1121, தாழ்ந்த 1258.

**பணிதல்** - அடங்கி நடத்தல் 125; தாழ்ந்து ஒழுகுதல் 936, 985.

**பணிமொழி** - தாழ்ந்த மொழி, நம்மி னும் தான் அன்பு மிகுதியுடையவ னாகச் சொல்லும் சொற்கள் 1258.

**பணியும்** - தாழ்ந்து ஒழுகும் 978.

**பணிவு** - வணக்கம், தாழ்மை 95, 960.

**பணை** - பெருமை 1234.

**பணை நீங்கி** - மெலிந்து 1234.

**பண்** - இசை 573.

**பண்டம்** - பொருள் 475.

**பண்டு** - முன்பு 1083, 1133.

**பண்பு** - இயல்பு, குணம் 45, 62......

**பண்புடை** - நற்குணங்களையுடைய 62.

**பதடி** - பதர் 196.

**பதத்தால்** - செவ்வியராதலால், காலத்தை யுடையராதலால் 991.

**பதத்தான்** - காலத்தையுடையனாய், செவ்வியையுடையனாய் 548.

**பதி** - இடம் 1015; வாழிடம் 1229.

**பதியில்** - தமது இடங்களில் நின்று 1116.

**பத்து** - பத்தென்னும் எண் 450, 817.

**பயக்கும்** - தரும், கொடுக்கும் 97, 123.

**பயத்த** - பயனைச் செய்வன, பயனைத் தருவன 705.

**பயந்தற்று** - பெய்தாற்போலும் 1192.

**பயப்பது** - தருமவன், விளைவிப் பவன் 685, 690.

**பயம்** - பயன் 354, 758, 740.

**பயவா** - பயனடையா 406; விளைக் காத 439, 652.

**பயனில** - தனக்கும் பிறக்கும் பயனில் லாதவற்றை 191.

**பயனுண்டாயின்** - (தீய) பயனுண் டாகுமானால் 128.

**பயன்** - நன்மை 2....; பதில் உபகாரம் 103; பயன்படுகின்ற 216; விளைவு, விளைச்சல் 239; பால் 560; அறம் 901; பொருள் 912.

**பயன்சாரா** - பயனோடு படாத 194.

**பயன்மரம்** - பயன்படும் மரம், காய்க்கும் மரம் 216.

**பயன்படுவர்** - உள்ளது கொடுப்பர் 1078.

**பயில்தோறும்** - பழகுந்தோறும் 783.

**பரத்த** - பரத்தையரோடு செல்கின்ற வரே 1311.

**பரிதல்** - வருந்துதல் 1243.

**பரந்து** - அலைந்து 1062.

**பரிந்து** - வருந்தி 88, 132; கூறுபடுத்து 1172; வருந்தி 1243; இரங்கி 1248.

**பரிந்தோம்பி** - வருத்திப் பாதுகாத்து 88.

**பரியது** - உடற் பருமையுடையது 599.

**பரியினும்** - வருந்திக் காப்பாற்றி னாலும் 376.

**பரியும்** - தொலைப்பன், தொலைக்கும், வெல்வன் (என் பரியும் என்பதை என்பு அரியுமெனப் பிரித்து எலும் பினையும் அரியும் எனப் பொருள் கொண்டனர் காளிங்கர்) 862. அஞ்சிநிற்கும் 502.

**பருகுவன்** - (புலன்களெல்லாவற்றி னாலும்) அனுபவிப்பேன் 1266.

**பருகுவார்** - குடிப்பார் 811.

**பருவத்து** - காலத்து 218, 490.

**பருவந்து** - (வறுமையால்) வருந்தி 83.

**பருவம்** - காலவரையறை 1028.

**பருவரல்** - வருத்தம் (அதி. 119), 1197, 1240.

**பருவரார்** - வருந்தமாட்டார் 1126.

**பல** - அநேக 140....

**பலர்நாண** - பலர் (முன் நான்) நாணும் படி 1149.

**பல்** - பல 242....

**பல்குஉரைத்துன்பம்** - இரப்பார்க்கு உரைக்கத் துன்பம் (மணக்) 1045.

**பல்லவை** - பல நூல்களை 728.

**பல்லார்** - பலர் 191....

**பலவாற்றால்** - பலவகைகளால் 242.

**பலமாயக் கள்வன்** - பல பொய்களையும் பேசவல்ல கள்வன் 1258.

**பழகிய** - பழையதாய் வந்த, பழமையான 803, 937.

**பழகுதல்** - கொண்டாடுதல், பயிலல் 785.

**பழம்** - தொன்றுதொட்டு வருகின்ற 955.

**பழி** - தீச்செயல் 40, 44; பிறர் பழித்தற்குரியது 62, 137; குடிப்பழி 145, 146, 172, 186, 433.....; குற்றம், தவறு 1285.

**பழிஅஞ்சி** - பாவத்துக்குப் பயந்து (பொருளீட்டி) 44.

**பழிக்கும்** - இகழப்படும் 656.

**பழித்தது** - பழித்துக் களறிய ஒழுக்கத்தை 280.

**பழியுள்** - பழித்துக் கூறப்படுபவற்றுள் 186.

**பழுதெண்ணும்** - தீங்குசெய்ய எண்ணும் 639.

**பழுத்து** - கனிந்து 216, 1008.

**பழைமை** - பற்றறாக் காலத்துத் தமக்குச் செய்த உபகாரம் (பற்றறாக் காலம் - செல்வமுள்ள காலம்) 521; உரிமையை அறுத்துவிடாத நட்பு 801.

**பழையம்** - நீண்டகாலம் முதல் தொடர்புடையோம் 700.

**பழையார்** - பழைய நண்பர் 810.

**பளிங்கு** - கண்ணாடி போன்ற கல் 706

**பள்ளி** - படுக்கை 840.

**பறந்தற்று** - பறந்துபோன தன்மையுடையது 338.

**பறியா** - பறித்து, பிடுங்கி 744.

**பறை** - மேளம் 1076, 1115, 1180.

**பற்றற்கு** - கைப்பற்றுதற்கு 747.

**பற்றற்றேம்** - ஆதரவு அற்றவர்களானோம் 88.

**பற்றா** - வெறுப்பன, இன்னாதன 852.

**பற்றி** - பிடித்து 347, சார்ந்து 956.

**பற்றியார்** - பற்றிய அகத்தோர் 748.

**பற்று** - விருப்பு 275; பிடித்தல் 438; தொடர்பு 506; பொருள் 521, 606; பற்றிய இடம் 748.

**பற்றுக** - செய்க 350.

**பனி** - நீர் 1232.

**பனிவரும்** - நீர்சொரியும் 1232.

**பனுவல்** - நூல், சாத்திரம் 21.

**பனை** - பனைமரம் 104, 433, 1282.

## பா

**பாகம்** - பாதி 1092.

**பாக்கியத்தால்** - நல்வினையால், புண்ணியத்தால் 1141.

**பாடற்கு** - பாடல் தொழிலோடு, பாடலோடு (மணக்உரை) 573.

**பாடு** - பெருமை 409, 597, 768, 1322. ஆண்மை, பெருமை (மணக்) 906, பெருமை அழகு (மணக்) 1237, நெறிப்பாடு 995.

**பாத்தி** - பயிர் விளைவிப்பதற்கு வரம் பிட்டுக் கட்டும் பாத்தி 465, 7 18.

**பாத்து** - பகுத்து 44, 227, 1107.

**பாம்பு** - நாகம் 890, இராகு 1146.

**பாய்பவர்** - குதிப்பவர் 1287.

**பாராட்டுதல்** - கொண்டாடுதல் 521.

**பாராட்டும்** - கொண்டாடும் 994.

**பாராட்டுவானை** - பலகாலும் சொல்லுவானை 196.

**பாரிக்கும்** - வளர்க்கும் 851.

**பாரித்து** - விரித்து 193.

**பாரிப்பார்** - பரப்புவார் 916.

**பார்** - வன்னிலம் 1068.

**பார்க்கும்** - பார்த்து நெருங்கிவரும் 1186.

**பார்த்து** - நோக்கி 86, 487, சீர்தூக்கி, கண்டு, எண்ணி 676.

**பார்ப்பார்** - காண்பவர் 285.

**பார்ப்பான்** - அந்தணன், கோயிற் பார்ப்பான் 134.

**பார்வல்** - பார்வை 1152.

**பால** - தன்மையுடையவை, கூறுடையவை, பகுதியின 342, 378, 437, 672.

**பாலவை** - பொருள்கள் 659.

**பாலால்** - கூறுபாட்டால் 279.

**பாலொடு** - பாலுடன் 1121.

**பால்** - பகுதி 111, பக்கம் 118, ஊழ்வினை 376, இடத்தில் 422, வகை 53 3, பகுதி 950, 999, பசுவின் பால் 1000.

**பாவம்** - தீவினை 186.

**பாவாய்** - பெண்ணே 1123.

**பாவி** - கொடியது 1042.

**பாவை** - பதுமை 407, 1020, 1058.

**பாழ்** - கெடுதலாக 735.

**பாழ்படுதல்** - கெடுதல் 83.

**பாற்கண்** - பால் + கண் - நிலத்தில் 78.

**பாற்று** - பகுதியது 11, தன்மையது 82, 515, 871.

## பி

**பிடித்து** - பிடியளவு 1037.

**பிணம்** - சவம் 913.

**பிணி** - நோய் 227, 734, 738, 949, 1014.

**பிணி அன்றோ** - (கண்டார்க்கு) நோய் போல் பொறுத்தற்கரியதாம் 1014.

**பிணிக்கு** - நோயைத் தீர்ப்பதற்கு 1102.

**பிணிக்கும்** - கூட்டா நிற்கும் 570, கவரச் செய்யும் 643.

**பிணை** - பெண்மான் 1085, 1089.

**பிரிதல்** - நீங்குதல் 394, 955.

**பிரிப்பர்** - பிரியப்பண்ணுவர் 187.

**பிரியலம்** - பிரியமாட்டோம் 1315.

**பிரிவாற்றி** - பிரிவுக்குப் பொறுத்து 1160.

**பிரிவு** - நீங்குதல் 1152......, செலவு 1155.......

**பிழை** - குற்றம் 535.

**பிழைத்த** - தவறிய 772.

**பிழைத்தது** - தப்பியது 779.

**பிழைத்து** - தவறு செய்து 896.

**பிழையாது** - தவறாது 307.

**பிற** - வேறு 34, 61, 95, 213, 300, பிறிதொன்று, மாறான இயல்புடையவை 1102, அசைநிலை 1181, 1184.

**பிறஆழி** - (அறமல்லாத) பாவக்கடல், பிறவிக்கடல் 8.

**பிறக்கும்** - பிறத்தற்கு ஏதுவாகிய 1044.

**பிறங்கா** - உண்டாகாத, மிகாத 62.

**பிறங்கிற்று** - உயர்ந்தது, விளங்கும் 23.

**பிறப்பின்** - பிறப்பில் 1315.

**பிறப்பு** - பிறவி 351, தோற்றம் 62, 107, 369; குடிப்பிறப்பு 133, 134.

**பிறப்பென்னும்** - பிறப்புக்குக் காரணமென்னும் 358.

**பிறர்பழி** - பிறர்க்கு வரும் பழிக்கு 1015.

**பிறவாமை** - பிறவாதிருத்தல் 362.

**பிறவி** - பிறத்தல் 10.

**பிறவினை** - பாவச் செயல்கள் 321.

**பிறவும்** - பிறர் பொருளையும் 120.

**பிறற்கு** - மற்றவனுக்கு 149.

**பிறனியலாள்** - பிறனுக்குரியவள் 147.

**பிறன்** - மற்றவன் 49, 141.......

**பிறன்கடை** - அயலவன் தலைவாயில் 142.

**பிறிதின்** - பிற உயிர்களின் 315.

**பிறிது** - வேறொன்றின், மற்றது 251, 257, 327, 645, 841, 842.

**பிறை** - இளமதி 782.

**பிற்பகல்** - ஒரு பகலின் பிற்கூற்றில் 319.

**பின்** - பின்வரும் குற்றம் (ஆகுபெயர்) 184, பின் செல்கின்ற நீ 1248.

**பின்சார** - பின்னே நிற்க 323.

**பின்செல்லா** - பின்னே செல்லாத, நிலைக்காத 1255.

**பின்செல்வர்** - அவர் பின் செல்கின்ற வர், அவரில் தங்கியிருக்கின்றவர் 1033.

**பின்நோக்கா** - பின்வரும் குற்றத்தைப் போக்காத, பின்பு அவனை முகம் நோக்கத் தகாத 184.

**பின்றை** - பின்பு 518.

**பின்னது** - வழியது 1031.

## பீ

**பீடு** - மேம்பாடு, பெருமிதம் 59, மானம் 968, பெருமிதம் 1014, வலிமை 1088.

**பீடுநடை** - கம்பீர நடை 1014.

**பீழிக்கும்** - வருத்தும் 843.

**பீழிப்பது** - வருத்துவது 1217.

**பீழை** - வருத்தம் 843.

## பு

**புகல்** - நுழைதல், புகுதல் 144, 243, 840.

**புகழ்** - கீர்த்தி 5, 39, 59, 156, 232, 233, 234, 237, 296, 457.

**புகழ்ந்தவை** - புகழ்ந்து கூறப்பட்ட செயல்கள் 538.

**புகழ்மை** - புகழுடைமை 533.

**புகுத்திவிடும்** - அடைவித்துவிடும் 608, 616.

**புகும்** - எய்தும், செல்லும் 346.

**புக்கில்** - இருக்கும் வீடு 340.

**புக்கு** - புகுந்து 835, 996.

**புடை** - பக்கம் 1187.

**புணரின்** - கூடுமாயின், நட்புச் செய்யின் 308.

**புணர்ச்சி** - ஒரே தேயத்தவனாதல், நட்பாதல் 785; சேர்க்கை 887.

**புணர்தல்** - சேர்க்கை, கூடல் 1109.

**புணர்வு** - சேர்தல் 1155.

**புணை** - தெப்பம் 306, 1134, 1164.

**புதல்** - சிறு செடி. புதர் 274.

**புதல்வர்** - புத்திரர் (அதி. 7).

**புதை** - அம்புக்கட்டு 597.

**புத்தேளிர்** - தேவர் 58.

**புத்தேளுலகு** - தேவருலகு 213, 234, 290.

**புத்தேள்** - தேவர் 213, 234.

**புயல்** - மழை 14.

**புரந்தார்** - ஓம்பின அரசன், ஆண்ட வன் 780.

**புரளவிடல்** - கழியவிடுக, போக விடுக 755.

**புரிந்த** - விரும்பிய 59, 511, 994, மிக்க 977.

**புரிந்தார்** - விரும்பினார் 287.

**புரிந்தார்மாட்டு** - விரும்பியவரிடத்து, தோத்திரம் செய்கிறவரிடத்து 5.

**புரிந்து** - விரும்பி 143; பொருத்தி 541; மிகச் செய்து 607.

**புருவம்** - கண் புருவங்கள் 1086.

**புரை** - குற்றம் 292, அறிவு, உயர்வு 919.

**புலத்தகை** - புலவி மிகுதியாகுந் தன்மை 1305.

**புலத்தக்கனள்** - புலக்கத் தக்கவளா னாள், புலந்தாள் 1316.

**புலத்தார்** - உலகத்தார், இடத்தின் கண்ணுள்ளவர் 43.

**புலப்பை** - புலன்களை 343, புலப்பாய் 1301.

**புலந்து** - வெறுத்து 1039, பிணங்கி 1246, 1287.

**புலந்துரையாய்** - புலந்து கூடாது கண்டமாத்திரத்தே கூடுவாய் 1246.

**புலப்பல்** - பிணங்குவேன் 1259.

**புலப்பேன்** - பிணங்குவேன் 1267.

**புலம்** - விளைநிலம் 86, புலன்கள் 174, அறிவு 407, நூற்பொருள் 716.

**புலம்பல்** - தனிமையுறல் (அதி. 121).

**புலவரை** - தேவரை 234 (புலவரென்றார் தேவரை அவர் புலனுடையராதலால் - மணக்குடவர்).

**புலவி** - பெரிய பிணக்கம் 1306, 1309.

**புலவி நுணுக்கம்** - புலத்தற்குக் காரணமில்லாதிருப்பவும் ஒரு நுண்ணிய காரணமிருப்பதாகக் கொண்டு தலைவி தலைவனோடு புலத்தல் (அதி. 132.)

**புலன்** - புலன்களால் நுகரப்படுவன 1101.

**புலால்** - ஊன் 257, 260.

**புலி** - வேங்கை 273, 599.

**புலை** - புலாலுண்ணுந் தொழில் 329.

**புல்** - புன்மை, கீழ்மை 331, 719, 846, 914, 915, 916.

**புல்சொல்** - இகழ்ச்சிச் சொல் 189.

**புல்லாது** - தழுவாது 1301.

**புல்லார்** - பொருந்தாதவராய் 755.

**புல்லாள்** - தழுவாதவளாய் 1316.

**புல்லி** - தழுவி 1187, 1324.

**புல்லினேன்** - தழுவிக்கொண்டேன் 1259.

**புழுதி** - மண், தூசி 1037.

**புள்** - பறவைகள், புள் என்னும் பறவை 274.

**புறத்த** - இன்பத்துக்குப் புறம்பானவை, துன்பங்கள் 39.

**புறத்ததாக** - வெளியே இருக்க 82.

**புறத்தாற்றின்** - புறவழிகளில் (துறவறத்தில்) 46.

**புறப்படுத்தான்** - வெளிப்படுத்தினவன் 590.

**புறம்** - காணாத பிற இடம் 181, 183, 185; வெளியிடம் 277, உடம்பு 298; வெளிப்பட 487; பிறர் 549; எதிர்முகம் 924; பகைவரிடத்து 933.

**புறன்** - காணாதவிடத்து 182; பிறர் நீங்கின அளவு 189.

**புற்கென்ற** - மங்கிப்போயின (மங்கிப்போதல் வழிபார்த்தலால்) 1261.

**புற்கை** - கூழ், கஞ்சி 1065.

**புனல்** - நீர் 737, 1134, கடல் 1167, நீர் 1287.

**புனை** - அணிந்த 407, விலங்கு 836.

**புனைந்துரைத்தல்** - தலைமகளது அலங்கார வகையாற் கூறுதல் (அதி. 112.)

**புன்கண்** - துன்பம் 1152.

**புன்கண்நீர்** - புற்கென்ற மென்மையின் விளைவாகிய கண்ணீர் 71.

**புன்கண்ணை** - ஒளியை இழந்திருக்கின்றாய் 1222.

**புன்மை** - குற்றம் 174, கீழ்மை 185, 329.

## பூ

**பூ** - மலர் 1313.

**பூசல்** - ஊரிலெழுந்த ஆரவாரம் 1237.

**பூசல்தரும்** - வெளிப்படுத்திவிடும் 71.

**பூசனை** - பூசை, வழிபாடு 18.

**பூணும்** - மாட்டிக்கொள்ளும் 836.

**பூண்டார்** - மேற்கொண்டவர் 23.

**பூண்டு** - (விரதமாகக்) கொண்டு 30.

**பூதங்கள்** - நிலம், தீ, நீர், வளி, வான் என்ற ஐம்பூதங்கள் 271.

**பூப்பர்** - செல்வராவர், பொலிவடைவர் 248.

**பூரியாகள்** - கீழ்மக்கள் 919.

**பூரியார்** - கீழ்மக்கள் 241.

## பெ

**பெட்டாங்கு** - விரும்பியவாறு 1293.

**பெட்டார்** - விரும்பியவர் 1178.

**பெட்டு** - காதலித்து 141.

**பெட்ப** - விரும்புவன, மகிழ 1257, 1283.

**பெண்** - மனையாள் 56.....

**பெண்ணியலார்** - பெண் தன்மை யினையுடையவர் (பரத்தையர்) 1311.

**பெண்டிர்** - பெண்கள் 913, 920.

**பெண்ணினால் பெண்தன்மை உடைத்து** - பென் தன்மையிலும் சிறந்த பெண்தன்மை உடைய தென்று 1280.

**பெண்தகை** - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய குணங்கள் 1083.

**பெண் நிறைந்த நீர்மை** - பெண்களுக் குள்ள நல்ல தன்மைகள் 1272.

**பெண்மை** - பெண்ணின் தன்மை 147; 150 மன அடக்கம், நிறை 1258.

**பெய** - இட 580.

**பெயரார்** - மாறுபடமாட்டார் 989.

**பெயரின்** - மாறுபட்டால் 989.

**பெயர்த்து** - (தவத்தை) பெயர்த்து, குழப்பி 344.

**பெயர்த்தும்** - திரும்பவும், மறுபடியும் 205.

**பெயர்த்தேன்** - விலகினேன் 1187.

**பெயல்** - பருவமழை, மழை பெய்தல் 545, 559, 1174.

**பெயலாற்றா** - அழுது கண்ணீர்விட முடியாமல் 1174.

**பெயின்** - சுமத்தினால் 475.

**பெய்** - பொழிவாய் 55, ஏற்றிய 475.

**பெய்தாள்** - சூடினாள் 1115.

**பெய்து** - கண்டு 405, சொரிந்து 660.

**பெரிது** - பெரியது 102........, அதனிலும் பெரியது 1092.

**பெரியர்** - பெருமையுடையவர் 26, 160.

**பெரியார்** - பெருமையுடையவர் 444, 680, 694, 896.

**பெரு** - மிக்க 380.

**பெருகலின்** - வளர்த்தலின் 811.

**பெருகும்** - வளரும் 96. பெருகும் 604.

**பெருக்கத்தின்** - செல்வத்தின் 170.

**பெருக்கத்து** - நிறைந்த செல்வம் உளதாய வழி 963.

**பெருக்கம்** - செல்வம் 115, 431.

**பெருக்கி** - அதிகப்படுத்தி 512.

**பெருக்கற்கு** - வளர்ப்பதற்கு 251.

**பெருந்தகைமை** - பெருஞ்சிறப்பு 1255.

**பெருந்தகையான்** - பெருந்தன்மை யுடையவன் 217.

**பெருந்தக்க** - மேம்பட்ட பொருள் 54.

**பெருந்தக்கது** - பெரிய தகுதியை யுடைய பிறப்பு 1137.

**பெருமழைக்கண்** - குளிர்ந்த பெரிய கண்கள் 1239.

**பெருமித** - மேம்பாட்டின் 431.

**பெருமிதம்** - செருக்கு 979.

**பெருமை** - உயர்வு 21..... நிலையாமை மிகுதி 336, பெருந்தன்மை 979.

**பெரும்** - மிக்க 10......

**பெருவலி** - மிக்க வலிமையுடை யவை 380.

**பெறல்** - அடைதல் 213, அறிதல் 1180.

**பெறாஅது பெற்றமை** - பெறாம லிருக்கும்போதே பெற்றதுபோன்ற 1143.

**பெறாஅமை** (காதலரை) பெறாமை 1295.

**பெறாவிடின்** - அடையாவிட்டால் 238.

**பெறின்** - அடைந்தால் 54......

**பெறுகுவம்** - அடைவோம் 1328.

**பெறுதி** - அடைவாய் 1237.

**பெறும்** - அடையும் 61, 768, 1322.

**பெறுவது** - கிடைக்கும் விலை 813.

**பெற்ற** - அடைந்த 524, 1000, 1109.

**பெற்றக்கால்** - பெற்றாலும் 1270.

**பெற்றம்** - பசு 273.

**பெற்றன்ன** - பெற்றாற்போலும் 1143.

**பெற்றான்** - கணவன் 58.

**பெற்றியார்** - தன்மையுடையவர் 442.

**பெற்றேம்** - அடைந்தேம் 626.

## பே

**பேஎய்** - பேய் 565.

**பேடி** - அலி 641, 727.

**பேணப்படும்** - விரும்பிக்கொள்ளப் படும் 866.

**பேணலர்** - விரும்பார் 1016.

**பேணா** - இகழும், விரும்பப்படாத 924.

**பேணாது** - உதவாது 163, 902; அவ மதித்து 892; விரும்பாமல் 902, 1178; அவமதித்து 1283.

**பேணாமை** - விரும்பப்படாமை 833, பகைமை 866.

**பேணி** - உணவு முதலியவற்றால் உப சரித்து 56; பாதுகாத்து 120; உவப் பன செய்து 442, 443, 633, 976.

**பேணியார்** - காதலர் 1257.

**பேதை** - அறியாமை 372; அறிவில்லாத வன் 603,816, 833, 835, 836, 837, 838, 840; கபடமற்றவள், பெண் 1238, 1239, அறிவில்லாதது 1248, பெண் 1272.

**பேதைக்கு** - பெண்ணுக்காக 1136, 1172.

**பேதைப்படுக்கும்** - அறியாமையை உண்டாக்கும் 372.

**பேதைமை** - அறியாமை 141...

**பேதையார்** - அறிவிலார் 142, 782, 797, 834, 839.

**பேதையின்** - அறிவில்லாதவன்போல 834.

**பேரறிவு** - சிறந்த அறிவு 215.

**பேரா** - மாறுபடாத 370, நீங்காத 892.

**பேரும்** - பெயர்ந்து செல்லுதல் 486.

**பேர்** - பெருமை 148..., மிக்க 773, பெயர் 1190.

**பேர்த்து** - மாறி 357.

**பேறு** - பெறுதல் 60, 61.

**பேற்றின்** - பெறுமாயின், பெறுவானா யின் 162.

## பை

**பைதலும்** - துன்பமும் 1197.

**பைதல்** - துன்பம் 1172, 1175, 1197, 1223, 1226, 1229.

**பைதல்கொள்** - (மயங்கிவரும்) இருளடைந்து வரும் 1223.

**பைதல்நோய்** - துன்பஞ் செய்கின்ற நோய் 1266.

**பைந்தொடி** - பசும்பொன் வளை (மரகதத் தாற் செய்த வளை - மண.) 1234, 1238.

**பைம்** - பசிய 1234, 1238.

**பைய** - மெல்ல 1098.

## பொ

**பொச்சாந்தார்** - மறந்தவர் 246.

**பொச்சாந்தும்** - மறந்தும் (இகழ்ச்சி யுற்ற இடத்தும் வேறு உரை) 199.

**பொச்சாப்பு** - சோர்வு 285, மறதி 532, 534.

**பொதிந்து** - (மனதில்) பத்திரப்படுத்தி, முடிந்து 155.

**பொது** - பொதுவாகிய 528, 915, யாவ ரிடத்தும் ஒரு தன்மைத்தாகிய 1099.

**பொது உண்பர்** - பொதுவாக உன்னை அனுபவிப்பர் 1311.

**பொதுநோக்கு** - யாவர் மாட்டும் ஒரு தன்மைத்தாகிய நோக்கு 1099.

**பொத்துப்படும்** - தவறும் 468.

**பொய்** - மெய்யல்லாதது 938, 1246.

**பொய்தீர்** - மெய் 6.

**பொய்த்தபின்** - பொய்த்தானாயின் 293.

**பொய்த்தல்** - (பிணக்கம்) நீடியதாகிப் பொய்ப்படுதல் 1287.

**பொய்த்து** - பொய்யாகி 182, பொய் செய்து, பொய்யாகப் புகழ்ந்து 183.

**பொய்ப்பின்** - தன்தொழில் மறுப்பின், பெய்யாது விடின் 13.

**பொய்மை** - பொய்யான தன்மை 913.

**பொய்மையும்** - பொய்யான சொற் களும் 292.

**பொய்யற்க** - மெய் போற்காட்டற்க 293.

**பொய்யா** - அணையாத, தணியாத 753.

**பொய்யாமை** - பொய் பேசாமை 296, 297, 323.

**பொய்யாவிளக்கு** - மெய்யாகிய விளக்கு 299.

**பொரு** - தாக்கு 486.

**பொருட்டு** - பயனுடையன 212, காரணம் 256, 1017.

**பொருத** - அராவப்பட்ட 886, 486.

**பொருது** - தாக்கப்பட்டு 888.

**பொருத்தல்** - சேர்த்தல் 633.

**பொருள** - பொருளையுடையனவாய் 424.

**பொருளல்லவரை** - ஒரு பொருளாக மதிக்கப்படாதவரை 751.

**பொருளல்லவற்றை** - மெய்ப்பொருளல்லாதவற்றை 351.

**பொருளற்றார்** - வறியரானவர் 248.

**பொருளாக்கம்** - பொருட்செல்வம் 755.

**பொருளாட்சி** - பொருளாற்பயன் பெறுதல் 252.

**பொருளாள்** - பொருளாகவுள்ளவள், உரிமையாகவுள்ளவள் 141.

**பொருளான்** - பொருளொன்றுமுண் டாக அதனால் 1002.

**பொருளென்று** - தனது ஆற்றலைக் காட்டுங்குணமென்று 307.

**பொருள்** - மெய்ப்பொருள், உண்மை 5; அறம் 91, உறுதிப்பொருள் 122, 128, உரை, நூல் 141, அறம் 254, குணம் 307, செல்வம் 63, 171, 176, 212, பொருள் தேடுவதையே 1230.

**பொருள் அல்லது** - புண்ணியமல்ல தாகும் 254.

**பொருள்ஆ** - பொருளாக 122.

**பொருள் செயல்வகை** - பொருட் செல்வத்தின் சிறப்பும் அது தொகுக்கும் வகையும், அதி. 76.

**பொருள்தீர்ந்த** - பயனில்லாதவற்றை 199.

**பொல்லாத** - தீயவற்றை 176.

**பொழுதின்** - காலத்திற் காட்டிலும் 69, நேரத்தின் கண் 1105.

**பொழுது** - நேரம் 337, 481, 1215, பொழுதே 1221, மாலைப்பொழுது அதி. 123.

**பொழுதும்** - உம்மை இழிவு சிறப் பும்மை 337.

**பொள்ளென** - சடுதியில் 487.

**பொறி** - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் 6.

**பொறி** - விதி, புண்ணியம் 6.

**பொறுத்த** - சுமந்த 239.

**பொறுத்தல்** - தாங்குதல், மன்னித்தல் 151, மன்னிக்க 152.

**பொறுத்தாரை** - பொறுமையுடைய வரை, பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொண்டவரை 155.

**பொறுத்தான்** - சுமந்தவன் 37.

**பொறுத்தும்** - மன்னிக்கும் 579, தாங்கு தலால் 1032.

**பொறேன்** - தாங்கமாட்டேன் 1247.

**பொறை** - பிழை பொறுத்தல் 153..... சுமை 189, 570.

**பொறை ஆற்றுவார்** - சுமையைத் தாங்குவார் 1027.

**பொன்** - தங்கம் 155, 267, இரும்பு 888, 931.

**பொன்றா** - அழிவில்லாத 36.

**பொன்றாது** - இறவாமல் 233.

**பொன்றி** - கெடுத்து 171.

**பொன்றும்** - அழியும் 156.

**பொன்றும் கால்** - இறக்கும்போது 36.

**பொன்றும் துணையும்** - (உலகம்) அழியும் வரையும் 156.

## போ

**போஒம்** - போய்விடும் 1070.

**போஒய்** - சென்று 46, விட்டு நீங்கி 933.

**போகவிடல்** - கைவிடல் 831.

**போகா** - தம்மை விட்டு நீங்கிப் போகா 376.

**போகாது** - படாதது 764.

**போகு ஊழால்** - போதற்குரிய ஊழினால் 371.

**போக்கி** - செலுத்தி 774.

**போக்கும்** - (அச்செல்வம்) போதலும் 332, உம்மை எச்ச உம்மை.

**போதாய்** - (நீ அங்கு நின்றும்) போவாய் 1123.

**போது** - மொட்டு, பெரிய அரும்பு 1227.

**போம்** - போகும், தொலையும் 659.

**போர்** - சமர் 758, 767.

**போர்த்த** - மூடப்பட்ட 80.

**போர்த்து** - மேலே மூடி 273.

**போல** - ஒப்ப 75, 151......

**போலும்** - இரண்டாவது போலும் உரையசை 1228, போல நின்றன 1232.

**போல்** - ஒப்ப - 59, 118....

**போல்க** - ஒத்திருக்க 691.

**போழ** - நுழைய, நுழைந்ததாக 1239.

**போழப்படா** - நுழையா, ஊடுபோகாத 1108.

**போழ்து** - பொழுது, நேரம் 412, 539. 1229.

**போற்றல்** - காக்க 693, காவல் 891.

**போற்றாக்கடை** - காவாதவிடத்து 315.

**போற்றாதார்க்கு** - (பொருளைக்) காப்பாற்றாதவருக்கு 252.

**போற்றி** - எண்ணி 537, 538; தெளிய அறிந்து 942.

**போற்றுபவர்க்கு** - அடைபவர்களுக்கு 741.

**போன்று** - ஒத்து 135, 822....

## ம

**மகளிர்** - பெண்கள் 57, 822, 912, 918, 974.

**மகற்கு** - மகனுக்கு, புதல்வனுக்கு 67, ஒருவனுக்கு 110.

**மகன்** - புதல்வன் 70, மனிதன் 196.

**மகிழ் செய்தல்** - மகிழச் செய்தல் 1090.

**மகிழ்ச்சி** - களிப்பு 531, 539.

**மகிழ்தல்** - களித்தல் 1281.

**மக்கட்பேறு** - மக்களைப் பெற்றிருத்தல் 60.

**மங்களாதலே** - மக்கள் வடிவாயிருத்தலே 600.

**மக்கள்** - பிள்ளைகள், புதல்வர் 60-66, 68, மாந்தர் 196, 410, 600, வீரர் 770, மாந்தர் 993, 997, 1071.

**மங்கலம்** - அழகு, நன்மை 60.

**மட** - பேதை, காணாதவழி தவற்றை நினைந்து கண்டவழி மறக்கும் 1297.

**மடங்கின்** - வாளாவிருப்பின் 1036.

**மடநோக்கு** - வெருவுதலுடைய நோக்கு 1089.

**மடந்தை** - பெண் 1116, 1122.

**மடமை** - அறியாமை, மூடத்தனம் 89.

**மடலொடு** - மடலேறுதலுடன் 1135.

**மடல்** - பனங்கருக்கால் செய்த குதிரை 1131, 1132, 1133, 1136, 1137.

**மடவரல்** - பெண் 1085.

**மடவார்** - அறியாதார், அறிவில்லாதார் 89, 153.

**மடன்மா** - கருக்கு மட்டைக் குதிரை 1132.

**மடி** - சோம்பல் 371, 601-607, 609, 610, 617, தன்னுள்ளே 603, ஆடை 1023.

**மடி செய்து** - சோம்பியிருந்து 1028.

**மடி தற்று** - ஆடையை இறுக உடுத்து 1023.

**மடிந்து** - விழ்ந்து, அழிந்து 604.

**மடி மடி** - விடத்தக்க சோம்பல் 603.

**மடிமை** - மடியினது தன்மை, காரியக் கேடு 608.

**மடியா** - கெடுத்து; கீழடக்கக்கூடிய தாக 602.

**மடியாண்மை** - சோம்பலைக் கொண்டு நடத்தலை 609.

**மடியும்** - அழியும் 603.

**மடி உள்ளான்** - சோம்பலிடத்திருப் பவன் 617.

**மடுத்த** - தடைபட்ட, விலகிய 624.

**மடுத்தவாய்** - தடைபட்ட இடம் 624.

**மட்பகை** - மட்கலங்களை அறுக்கக் குயவன் பயன்படுத்துங் கருவி 883.

**மணந்தார்** - மணஞ்செய்து கொண்ட வரின் 1221, கணவர் 1226.

**மணல்** - மணல் 396.

**மணற்கேணி** - மணலிடத்துள்ள ஊற்று 396.

**மணிநீர்** - நீலமணி நிற நீரும் (வற்றாத நீரும்) 742.

**மணியில்** - (கோக்கப்பட்ட) பளிங்கு மணியில் 1273.

**மணியின்** - கருவிழியிடத்து 1123.

**மண்** - மண்ணினால் 407, மண் 576.

**மண்ணும்** - வெளி நிலமும், மரு நிலமும் 742.

**மண்புக்கு** - மண்ணிற் புகுந்து 996.

**மண் புனைபாவை** - மண்ணினால் நன்றாகச் செய்யப்பட்ட பாவை எனவும், நிற மண்களாற் பூசி அலங்கரிக்கப்பட்ட பாவை எனவும் பொருள் கொள்ளலாம் 407.

**மதலை** - தூண் 449.

**மதி** - அறிவு 636, 915, 1229, சந்திரன் 782, 1116, சந்திரனே 1118, 1119, 1210.

**மதிக்கு** - திங்களிடத்து 1117.

**மதிப்பின்** - நினைத்தால் 898.

**மந்திரி** - அமைச்சன் 639.

**மயக்கம்** - அறியாமை 360.

**மயங்கி** - மயக்கமடைந்து, அறிவிழந்து 348.

**மயலாகும்** - மயக்கத்திற்கு ஏதுவாகும் 344.

**மயல்** - மயக்கம் 344.

**மயிர்** - உரோமம் 964, 969.

**மயில்** - மயிலென்னும் பறவை 1081.

**மர** - மரத்தாலான 1020, 1058.

**மரத்து அற்று** - மரம்போல்வது 217.

**மரபினார்** - இயல்பினார் 188.

**மரம்** - மரம் 78, 216, 600, 879, 997, 1008.

**மரீஇயவனை** - பழகியவனை 227.

**மருங்கு** - கிளை, சுற்றம் 526.

**மருங்குஓடி** - (கெட்ட) வழியிற் சென்று 210.

**மருட்டி** - மயக்கி 1020.

**மருண்டு** - மயங்கி 1139, 1229.

**மருந்தாகி** - (எல்லாப் பாகங்களும்) மருந்தாகி 217.

**மருந்து** - ஔடதம் 217, 942, 950, 958, 1091, 1102, 1241, 1275, உணவு செயல்களது ஒவ்வாமையால் வருவித்துக் கொண்ட நோயைத் தீர்க்கும் மருந்து, அதி. 95.

**மருந்து ஒன்று** - ஒரு மருந்தை (உண்போர்க்கு) 1275.

**மருவுக** - பழகுக 800.
**மருளான்** - மயக்கத்தால் 1002.
**மருள்** - மயக்கம் 199, 351, 352, மயங்கிய (இரவும் பகலும் தம்முள் கலக்கின்ற) 1222, மயக்கிச் செய்யும் 1230.
**மலரின்** - மலரினும் பார்க்க 1289.
**மலரும்** - விரியும் 1227.
**மலர்** - அன்பரது நெஞ்சாகிய தாமரை மலர் 3, பூ 595, 650, 1112, 1119, 1142, 1231.
**மலர்தல்** - மகிழ்தல், விரிதல் 425.
**மலை** - 737, 742.
**மலையின்** - மலையிலும் பார்க்க 124.
**மலைந்து** - சுமந்து 657.
**மல்க** - பெருகி நிரம்ப 780.
**மல்லல்** - செழிப்பு, வளம் 245.
**மழலை** - குதலை, நிரம்பாச் சொல் 66.
**மழித்தல்** - தலையை முண்டிதஞ் செய்து கொள்ளுதல் 280.
**மழை** - கண்ணீர், குளிர்ந்த 1239.
**மறக்கலா** - மறக்க முடியாத 1297.
**மறத்தல்** - மறந்துவிடுதல் 32, ஒழிக 303, நினைவொழித்தல் 303.
**மறத்திற்கு** - தீமையை ஒழிப்பதற்கு 76.
**மறந்தார்** - மறந்துபோயினார் 263.
**மறந்தீர்** - நினைத்திலீர் 1316.
**மறப்பது** - மறத்தல் 108.
**மறப்பின்** - மறந்தேனாயின் 1125.
**மறப்பின் எவனாவன்** - (அவ்வின்பத்தை) மறந்தால் யான் எவ்வாறாவேன் 1207.
**மறப்பு** - மறத்தல் 1125, 1207.
**மறம்** - வீரம் 766.
**மறவர்** - வீரர் 778.
**மறவற்க** - மறவாதிருக்க 106.
**மறவி** - மறதி 605.
**மறன்** - வீரம் 384.
**மறு** - கறை, களங்கம் 1117.
**மறுகு** - வீதி, தெரு 1139.
**மறுகும்** - சுழலுகிறது 1139.
**மறுத்தானை** - நீக்கியவனை, தவிர்த்தவனை 260.
**மறுத்து** - மீண்டு 312, ஒழித்து 945.
**மறுத்து உண்ணின்** - உடம்பு வேண்டும் அளவுக்கன்றி நோய் வாரா அளவுக்கு உண்ணின் 945.
**மறுமை** - மறுபிறப்பு, சுவர்க்கம் 98, 459, 904, 1042.
**மறுமை இலாளன்** - மறுமைப் பயனில்லாதவன் 904.
**மறை** - மந்திரம் 28, இரகசியம் 590, 695, உபதேசம் 847, மறைத்தல், ஒழித்தல் 1138, 1076, 1180.
**மறை இறந்து** - மறைவாயில்லாமல் 1138, 1254.
**மறைக்கும்** - மூடிவைக்கும் 980.
**மறைத்திர்** - மறைக்கலுற்றீர் 1338.
**மறைந்தவை** - மறைவான செயல்கள் 587.
**மறைந்து** - மறைவாகவிருந்து 274, 278.
**மறைப்பான்** - வரமாற் காக்க முயல்பவன் 1029.
**மறைப்பேன்** - ஒளிப்பேன் 1161, 1253.
**மறைமொழி** - மந்திரம் 28.
**மறையா** - இலவாக்காத 846.
**மற்றையவை** - இஃது அல்லாத மற்றைய செல்வங்கள் 400.
**மற்ற** - பிற 39.
**மற்றின்பம்** - பேரின்பம், மறுமை இன்பம் 173.
**மற்று** - வேறு 173, 221, 380, 588, 591, 1033, மீண்டு 356, பின்னும், 344, 354, 373, 540; அசைநிலை 30, 36, 60, 95, 205, 323, 596, 773, 802, 905, 1122,

மற்றவை வினைமாற்றின்கண் (ஆனால், பின், அவ்வாறன்றி என்னும் பொருள்களில்) வந்தவை.

**மற்றுமருந்தோ** - சாகாமைக்கு மருந்தோ (ஆகமாட்டாது சாகவேண்டும்) 968.

**மற்றும்** - பின்னும் 373.

**மற்றுஎன்** (என்மற்று) - இனி அவ்வாறு சென்று மானங்கெடுவது எதற்காக 966.

**மற்றையவர்** - பிறர் 348.

**மற்றையவர்கள்** - பிறர் (துறந்தவர்) 263.

**மற்றயவை** - அல்லாத பிற 400.

**மற்றையார்** - பிறர் 365.

**மற்றையான்** - பிறன் (அவ்வாறு செய்யாதவன்) 214.

**மற்றொன்று** - (ஊழை விலக்குவதற்கு) ஒரு உபாயத்தை 380.

**மனக்கவலை** - மனத்துயரம் 7

**மனத்தது ஆக** - மனத்திலிருக்க 278.

**மனத்தான் ஆம்** - மனத்தினின்று வரும் 93.

**மனம்** - உள்ளம் 453, 455, 456, 822, 823, 884.

**மனை** - இல்லறம் 51, 52, மனைவி 60, 148, 901, 1268.

**மனைக்கெழீஇ** - வீட்டில் (தனிமையில்) உறவுகொண்டு 820.

**மனைத்தக்க** - இல்லறத்துக்குத் தகுந்த 51.

**மனைமாட்சி** - இல்லறத்துக்குத் தக்க நற்செய்கைகள் 52.

**மனைவிழைவார்** - தம் மனையாளை விரும்பி அவள் சொற்படி நடப்பவர் 901.

**மன்** - ஆக்கம் 1329, மிகுதி 1138, நிலைபேறு 68, 244, 268, 318, 457, 1168; அசைநிலை, 819, 1016, 1046, 1064, 1327 ஏனையவை ஒழியிசைகள். ஒழிபிசை - (செல்லாது விட்ட சொற்களால் பொருளை இசைப்பது).

**மன்ற** - உறுதியாக, திண்ணமாக 143, 229, 649, 867, 880, 1136.

**மன்றில்** - சபையில் 820.

**மன்னர்** - அரசர் 692.

**மன்னவன்** - அரசன் 338, 445, 542, 546, 548..

**மன்னன்** - அரசன் 386, 448, 520, 544.

**மன்னா** - நிலைபெறமாட்டா 556.

**மன்னுதல்** - நிலைபெறுதல் 556.

**மன்னும்** - நிலைபெறும் 190.

**மன்னுயிர்** - நிலைபெற்ற உயிர்கள் 268.

**மன்னோ** - மன்னும் ஓவும் அசை 819.

## மா

**மா** - பெரிய 68, 245, 526, 544, குதிரை 814, மான் 969, பெரிய 999, 1058; மாமை நிறம் 1107, கரிய 617.

**மாஇரு** - மிகப்பெரிய 999.

**மாக்கள்** - மனிதர் 329, 420.

**மாசறு காட்சி** - குற்றந் தீர்ந்த அறிவு 352.

**மாசு** - குற்றம், அழுக்கு 34, 106, 199, 278, 311, 312, 352, 601, 646, 649, 800, வசை 956.

**மாஞாலம்** - பெரிய பூமியிலுள்ளார் 1058.

**மாடு** - செல்வம் 400.

**மாட்சி** - சிறப்பு, நற்குண நற்செய்கைகள் 52, 60, 750.

**மாட்டு** - இடத்தில் 5, 118, 211......

**மாண** - மிக 102, 125, தப்பாமல் 883.

**மாணா** - சிறப்பில்லாத, துன்பந் தருவனவற்றை 317, சிறப்பில்லாத 351,

நன்மை தராத 432, சிறப்பில்லாத 1002, 1297.

**மாணாக்கடை** - சிறப்பில்லாவிடில் 53.

**மாணாதன** - ஏற்காதன 867.

**மாணாப் பிறப்பு** - இன்பமில்லாத பிறப்பு 351.

**மாணார்க்கு** - தீய பகைவருக்கு 823.

**மாண்** - பெரிய, மாட்சிமைப்பட்ட 3, 407, 606, 901, 919, 1114.

**மாண் இழை** - அழகிய ஆபாரணம் 919, சிறந்த ஆபரண மணிந்தவள் 1114.

**மாண்ட** - சிறந்த 604, இறந்த 766, 897 பெருமையடைந்த 915.

**மாண்டது** - மாட்சிமைப்பட்டவன் 632.

**மாண்டற்கு** - சிறப்படைதற்கு 177.

**மாண்டார்** - மாட்சிமைப்பட்டவராய் 278, மாட்சிமைப்பட்ட அமைச்சர் 665.

**மாண்பானால்** - நற்குண நற்செய்கை களுடைய வளாயின் 53.

**மாண்பு** - நற்குண நற்செய்கை 51.

**மாதர்** - பெண், காதலிக்கப்பட்டவள் 1081, 1087, 1117, 1118, 1120.

**மாத்திரை** - அளவு 406.

**மாந்தர்** - மக்கள் 278, 499, 514, 595, 964, 1012.

**மாந்தர் சிறப்பு** - மக்களுக்குச் சிறப்பு 1012.

**மாமுகடி** - கரிய மூதேவி 617.

**மாய** - வஞ்சக 918, பொய்களைவல்ல 1258.

**மாயா** - இறவாத 1230.

**மாயும்** - கெடும், இறக்கும் 878, 1230.

**மாய்வது** - அழிவது 996.

**மாரி** - மேகம், மழை 211, 1010.

**மார்பு** - நெஞ்சு 1288, 1311.

**மாலும்** - மயங்கும் 1081.

**மாலை** - குணம், இயல்பு 1035, மாலைக் காலம் 1135, 1221, 1223, 1224, 1226.....

**மாலை ஓ** - மாலைப்பொழுதோ (அல்லை) 1221.

**மாலையவர்** - இயல்பாகவுடையவர் 1035.

**மாலையவரை** - (தமக்கு) இயல்பாக உடையவரை 1230.

**மாழ்கும்** - கெடுதற்கு ஏதுவாகிய 653.

**மாறல்ல** - மாறுகொள்ளாத, ஏற்கத் தக்க 944.

**மாறா** - வற்றாத 701.

**மாறு** - உதவி 211, வேறாதல் 944, தலைமாறுதல் 1183, பகை 861.

**மாறுபாடில்லாத** - ஏற்றுக்கொள்ளத் தக்க 945.

**மாற்ற** - நீக்க 609.

**மாற்றம்** - மறுமொழி 725.

**மாற்றலர்** - பகைவர் 749.

**மாற்றாரை மாற்றும்** - பகைவரை நண்பராக்கும் 985.

**மாற்றான்** - பகைவன் 471.

**மாற்றும்** - திரும்பும் 985.

**மாற்றுவார்** - ஒழிப்பவர் 225.

**மானம்** - நிலைதவறாதிருக்கும் பேராண்மை 384, வணங்காமை; தாழ் வின்மை 969, 970, 1028, தன் நிலை தாழ்வு வந்தால் உயிர் வாழாமை. அதி. 97.

**மானம் கருத** - மானத்தை நினைப்பா ராயின் 1028.

**மானம்வரின்** - மானம் அழியவந்தால் 969.

## மி

**மிக** - அதிகமாக 829, 1007.

**மிகச்செய்து** - (நட்பினை) அதிகம் செய்து 829.

**மிக நலம்** - மிக அழகு 1007.

**மிகப்பட்டு** - மேம்பட்டவனாக நினைத்து 1074.

**மிகல்** - மேல் மேல் ஊருதல் 856.

**மிகல் ஊக்கும்** - வெல்ல முயலும் 855.

**மிகல் காணும்** - மிகுதியும் நினைப்பின் 859.

**மிகுதி** - மிகையாயின, வேண்டப்படா தன, குற்றம் 784.

**மிகுதியான்** - மனச் செருக்கினால் 158.

**மிகுத்து** - பெருக்கி 475.

**மிடும்** - மேற்படும் 373, வெளிப்படும் 928, 1161.

**மிகை** - அதிகம் (வேண்டப்படாதது) 345; மிகுதியானவை 504.

**மிக்க** - அதிகமானவை 504, 724.

**மிக்கவை** - தீயவற்றை 158.

**மிக்கற்றால்** - மிகுந்தது போன்றது 1302.

**மிக்கார்** - தன்னிலும் அதிகம் கற்றவர் 724.

**மிசை** - மேலுலகம், வீட்டு உலகம் 3.

**மிசைவான்** - உண்பவனது 85.

**மிச்சில்** - எஞ்சியது 85.

**மிதம்** - மேம்பாடு 979.

**மிறை** - துயர், துன்பம் 847.

## மீ

**மீ** - உயர்வு 386.

**மீக்கூறும்** - உயர்த்திக் கூறும் 386.

**மீன்** - விண்மீன் 1116.

## மு

**முகடி** - மூதேவி 617, 936.

**முகடியான்** - மூதேவியால் 936.

**முகத்த** - கொம்பிடத்தே கோத்த 500.

**முகத்தான்** - முகத்தினால் 93, முகத்தை யுடையவன் 500.

**முகத்தின்** - முகம்போல 707, முகத் தால் 824.

**முகத்து** - முன்பு 393, 574, எதிரில் 623, தொடக்கத்து, வேறுபாடுகளால் 949, முன்பு 1117.

**முகத்தேயும்** - முன்பாயினும் 923.

**முகம் ஒத்தி** - முகத்தை ஒத்திருக்க விரும்பினால் 1119.

**முகம்** - 90, 224, 706, 708, 786, 830, 1118, 1119.

**முகம் நட்டு** - முகத்தால் நட்புச் செய்து 830.

**முகன்** - முகம் 84, 92, 1116.

**முகை** - அரும்பு 1274.

**முடிந்தாலும்** - முற்றுப் பெற்றாலும் 658.

**முடியார்** - நிறைவேற்ற மாட்டாதவர் 908.

**முடிவு** - முற்றுப் பெறுதல் 640, எல்லை 671, முற்றுப்பெறுதல் 1024.

**முடிவும்** - முடித்தற்கேற்ற முயற்சியும் 676.

**முட்டா** - முட்டாது, குற்றமின்றி 547.

**முதல** - முதலையுடையர் 1.

**முதலை** - முதலை என்னும் பிராணி 495.

**முதல்** - முதலீடு 449, 463, காரணம் 948. அடி 1304.

**முதல்ஆ** - முதலாக 941.

**முதற்று** - முதலையுடையது 1.

**முதுக்குறைந்தது** - அறிவுமிகுந்தது 707.

**முதுவருள்** - அறிவுடையவர்களிடை யில் 715.

**முத்தம்** - முத்து 1113.

**முந்தி இருப்ப** - முன்னிடத்திலிருக்க 67.

**முந்து** - முற்பட்டு 380, முன்னமே 603, முன்னே (சென்று) 715, முற்பட்டு 1023.

**முந்து கிளவாச் செறிவு** - முன்னே சென்று ஒன்றைச் சொல்லா அடக்கம் 715.

**முந்துறும்** - முற்பட்டு நிற்கும் 380, 707, 1023.

**முயக்கம்** - தழுவுகை 913.

**முயக்கு** - தழுவுகை, சேர்க்கை 918, 1107, 1108, 1185, 1239.

**முயங்கிய** - தழுவிய 1238.

**முயலப்படும்** - முயலவேண்டும் 265.

**முயல்வாருள்** - (புலன்களைவிட) முயல்கின்றவர்களுள் 47.

**முயற்சி** - ஊக்கம், முயலுதல் 611, 616, 619.

**முயற்று** - முயலுதல் 616.

**முரண்** - பகை 492, 567.

**முரிந்தார்** - கெட்டவர், அழிந்தவர் 473.

**முரிந்து** - ஒடிந்து, கெட்டு, இழந்து 899.

**முலை** - தனம் 1089

**முள்மரம்** - முள்ளை உடைய மரம் 879.

**முறி** - தளிர் (நிறம்) 1113.

**முறுவல்** - பற்கள் 1113.

**முறை** - நீதி 388, 547, 548. 553, 558, 559.

**முறைபடச் சூழ்ந்தும்** - செய்யும் வகை களை ஆலோசித்தும் 640.

**முறைப்பட** - நெறிப்பட, ஒழுங்குபட 640.

**முறையர்** - உறவினர் 698.

**முற்பகல்** - ஒரு பகலின் முற்பகுதியில் 319.

**முற்றியவரை** - சூழ்ந்தவரை 748.

**முற்றி** - சூழ்ந்து, முற்றுகை இட்டு 747.

**முற்றியாங்கு** - முடிவடைந்தால் 676.

**முற்று ஆற்றி** - முற்றுகை இட வல்லவராகி 748.

**முற்றும்** - முற்றகை இடும் 491.

**முனிய** - வெறுக்க 191.

**முனை** - போர் 749.

**முன்இன்று** - முன்னே இல்லாதபோது 184.

**முன்கை இறை** - மணிக்கட்டு - 1157.

**முன்** - முன்னால், முன்பு 59, 184.

**முன்னம்** - முற்பொழுதில் 1277.

**முன்னர்** - முன்னிடம் 435, 716.

## மூ

**மூக்கு** - முகத்தில் வெளியே நீண்ட பகுதி 277.

**மூடப்பட்டார்** - விழுங்கப்பட்டார் 936.

**மூத்த** - முதிராத 441.

**மூத்தற்று** - முதுமையடைந்தது போலாகும் 1007.

**மூவர்** - பிரமசாரி, வானப்பிரத்தன், சன்னியாசி என்னும் மூவர் 41, மூன்று பேர் 589.

**மூன்றன்** - மூன்றினுடைய 360, 384.

**மூன்றின்** - மூன்றினோடு கூடிய 688.

**மூன்று** - 383.

## மெ

**மெய்** - உடம்பு 65; உண்மை 249, 300, 354, 355, 356; 423; உடம்பு 619; நீதி 857; உடம்பு 925.

**மெய்மை** - மெய்கூறுதல் 952.

**மெய்யறியாமை** - மெய் மறத்தல், தன்னை மறத்தல், மயங்குதல் 925.

**மெய்வேல்** - மார்பில் பாய்ந்துகிடந்த வேல் 774.

**மெலிந்து** - நினைந்து, இளைத்து (அதி. 117)

**மெலியார்** - வலிகுறைந்தவர் 250, 861.

**மெல்** - மெல்லிய 1103, 1265.

**மெல் நீரள்** - மெல்லிய குணமுடையள் 1111.

**மெல்ல** - அளவுகடவாமல் 562, வெளிப்படாமல் 1094.

**மெல்லிது** - மென்மையானது 1289

**மென்** - மென்மையான 919.

**மென்மை** - மெலிவு 877.

**மென்மை பகைவர்** - மெலிவைப் பார்க்கும் பகைவர் 877.

## மே

**மேக** - விரும்புக, மேவுக 861.

**மேய்ந்தற்று** - மேய்ந்தது போன்றது 273.

**மேல** - இடத்தன 320.

**மேலர்** - மேலேயிருப்பவராக 1218.

**மேலாயவர்** - உயர்ந்தவர் 1016.

**மேலுலகம்** - தேவருலகம் 222.

**மேல்** - உயர்ந்த 222, உயர்ந்தகுடி 409, அறிவுடையார் 627, வரும்பிறப்பில் 1262.

**மேல் அல்லார்** - மேன்மைக் குணங்க ளில்லாதவர் 973.

**மேல் இருந்தும்** - மேலிடத்திலிருந் தும், செல்வம் அதிகாரங்களா லிருக்குமிடத் திலிருந்து 973.

**மேவல்** - பொருந்துதல், பொருந்தும் 857.

**மேவன** - விரும்பியன 1073.

**மேவார்** - விரும்புபவர் 1059.

**மேற்கொண்டு** - கடைப்பிடித்து, விரதமாகக் கொண்டு 551.

**மேற்கொண்டொழுதல்** - கற்றதாகக் கொண்டு நடத்தல் 845.

**மேற்கொளின்** - தொடங்கின் 836.

**மேற்கொள்வது** - (இரத்தலைச்) செய்வது 1055.

**மேற்கொள்வர்** - தொடங்குவர் 713.

**மேற்சென்று** - விரைந்து, மேல் விழுந்து 335.

**மேற்றே** - மேலதே 1027.

**மேனி** - உடம்பு 1182, 1185, 1189, 1279.

**மேன்மேல்** - இடைவிடாமல் 308.

**மேன்மை** - மேம்பாடு, உயர்வு 137.

## மை

**மைந்து** - வலிமை 539.

**மையல்** - மயக்கம் 838.

**மையலொருவன்** - பித்தனொருவன் 838.

**மையாத்தி** - மயங்குகின்றாய் 1112.

## மொ

**மொக்குள்** - குமிழ்ப்பு 127.

**மொய்ம்பு** - வலிமை 492.

**மொழி** - சொல் 28, 567; மொழியினை யுடையாள் 1121; சொல் 1258.

**மொழிவது** - சொல்லப்படுவது 643.

## மோ

**மோப்ப** - முகர, மணக்க 90.

## யா

**யா** - எவை, யாவை 54, 127, 380, 636, 781.

**யாக்க** - (நட்புச்) செய்க, கொள்க 793.

**யாக்கை** - உடம்பு 79, 239, 942.

**யாங்கணும்** - எங்கும் 864.

**யாங்கு** - எங்கு, எவ்விடத்து 1070.

**யாண்டு** - எக்காலத்தும் 4, எவ்விடத்து 895.

**யாண்டும்** - எவ்விடத்தும் (ஐய்யுற்றுக் கைப்பற்றியும் சிறைப்படுத்தியும் வருந்தச் செய்யுமிடத்து) 585.

**யாதனின்** - எதனினின்றும் 341.

**யாது** - எது 178, 254...

**யாத்தற்று** - பிணித்தாற் போன்றது 678.

**யாப்பினுள்** - (அன்பாகிய) தளையுள் 1093.

**யாப்பு** - கட்டுதல் 777.
**யாமத்து** - இடையாமத்தில் 1136, 1252 அரையிருள் 1167 (யாமம் ஏழரை நாழிகை கொண்டபொழுது).
**யாம்** - நாங்கள் 61, 300.....
**யாரின்** - யாரைப் பார்க்கிலும் 1314.
**யார்** - எவர் 256, 447.....
**யார் மாட்டும்** - எல்லாரிடத்தும் 94, 162.
**யார் யார்க்கும்** - எவ்வகை உயர்ந்த வர்க்கும் 20.
**யாழ்** - வீணை 66, 279.
**யானை** - ஆனை 599, 678, 758, 772.
**யானையால்** - யானையைக்கொண்டு 678.
**யான்** - நான் 116....

## வ

**வகுந்த** - விதித்த 377.
**வகுத்தலும்** - பகுத்தலும் (பிரித்துச் செலவு செய்தலும்) 385.
**வகுத்தான்** - ஊழ், தெய்வம் 377.
**வகை** - தன்மை, கூறுபாடு 23, 27, 377, 465, 514, 709; உரிய 953.
**வகை மாண்ட** - எல்லா வகையாலும் அழகுபெற்ற 897.
**வசை** - பழிப்பு 238, 239, 240.
**வஞ்ச** - கபடம், கள்ளம் 271.
**வஞ்சிப்பது** - கெடுப்பது 366.
**வடு** - தழும்பு 129; பழி 549; தாழ்வு 689; பழி 1079.
**வட்டாடுதல்** - கட்டையுருட்டல் 401.
**வணக்கம்** - வளைவு 827
**வணங்கா** - பணியாத 9.
**வணங்கிய** - பணிந்த 419.
**வண்** - வளப்பமான 239.
**வண்ணம்** - நிறம் 714.
**வந்த** - போந்த, நேர்ந்த 569, 609, 754, 764.....; கேடுகள் வந்தவற்றை 807.
**வந்தது** - இழிவானது 1066.
**வந்தவிடத்து** - வந்த சமயத்தில் 968.
**வந்தானை** - வந்த சுற்றத்தவனை 530.
**வயிற்றுக்கு** - 412.
**வயின்** - இடம் 846.
**வரல்** - வருதல் 1205, 1263.
**வரவு** - குடிப்பிறப்பிற்குரிய ஒழுக்கம் 1043, வருகை 1151, 1165, 1264.
**வரன்** - மிக்கது 24.
**வரிசை** - தகுதிக்கேற்ற தன்மை 528.
**வரு** - வந்த 83, பின்செல்லக்கடவ 86, வரக்கடவதாகின் 435, 737, வரக் குறித்த 1269.
**வருக** - வருவானாக 1266.
**வருத்த** - வருத்தத்தின் 619.
**வருத்தம்** - முயற்சி 468.
**வருப** - வருஞ்செயல்கள் 961.
**வரும்** - வந்தடையும் 63....
**வரை** - அளவு 480.
**வரைத்து** - அளவை உடையது 105.
**வரையாள்** - எல்லையின் நிற்பவள் 150.
**வரையான்** - உரிமையாகச் செய்யாத வன் 150.
**வரைவின் மகளிர்** - விலைமாதர் களோடு கலந் தொழுகலால் வருங் குற்றம் (அதி. 92.)
**வரைவு** - (உயர்ந்தோர் இழிந்தோர் என்னும் வரம்பு 919
**வலி** - வலிமை 273, வலிமையுடைய வன் 380, வலிமை 471, 473, 1131.
**வலியறிதல்** - உபாயங்களுள் தண் டத்தைக் குறித்த அரசன் நால் வகை வலியையும் அளத்தல் (அதி. 48.)
**வலியார்** - (தன்னிலும்) வலியவர் 250.
**வலை** - கண்ணி 348.
**வலைப்பட்டார்** - வலையில் பட்டவ ராவர் 348.

**வல்** - வலிய 273, வலிய 721, அழியாத 737, விரைவான 582, 1151.

**வல் அவை** - அறிஞர் சபை 721.

**வல் உருவம்** - வலிதாகிய தவவேடம் 273.

**வல்லது** - வல்லவன் 385, 585, 633, 634; கற்று வல்ல கலை 713, விளைக்க வல்ல தாகின்றது 1321.

**வல்லா்** - திறமையுடையவர் 999.

**வல்லையேல்** - திறமையுடையை யானால் 1118.

**வழக்கு** - ஒழுக்கத்தின் பயன் 73, உலக வழக்கு 795, நல்ல வழி 992.

**வழங்காது** - பெய்யாது 19.

**வழங்கும்** - நடக்கும், ஒழுகும், இய லும் 477. இயங்குகின்ற 245.

**வழங்குவது** - சொல்லுதல் 99, கொடுக் கும் பொருள் 955.

**வழிச்செலவு** - வழியில் செல்லுதல் 766.

**வழி பயக்கும்** - (பிற) பொழுது தரும் 461.

**வழிமுறை** - பிற்சந்ததி 508.

**வழியது** - ஒத்து நின்றது 80.

**வழியுரைப்பான்** - (அரசன் சொற் களை) சொல்லியபடி சொல்பவன் 688.

**வழிவந்த** - பழமையாக வந்த 807.

**வழுக்காமை** - ஒழிவின்றி 536.

**வழுக்கி** - மறந்து, உரைதவறி 139; தவிர 165.

**வழுக்கினுள்** - பயன்படாது கழிந்த நாளுள் 776.

**வழுத்தினாள்** - வாழ்த்தினாள் 1317.

**வள** - வருவாய்க்கு 51; செல்வத்தினது 480.

**வளத்தக்காள் வாழ்க்கை** - வரவுக்குத் தக்க செலவு செய்து வாழ்கின்ற வளின் வாழ்க்கை 51.

**வளம்** - பயன் 14; செல்வம் 512, 736, 739.

**வளர** - மிக, முதிர 1223.

**வளர்வதன்** - வளர்கின்றதன் 718.

**வளா** - பரப்பு 523.

**வளி** - காற்று 245; வாதம் 941; காற்று 1108, 1239.

**வளை** - சங்கு வளையல் 1157, 1277.

**வள்ளி** - கொடி 1304.

**வள்ளியம்** - கொடையுடையேம் 598.

**வறக்குமேல்** - வறண்டுபோனால், பெய்யாதாயின் 18.

**வறங்கூர்ந்து** - வறட்சியடைந்து 1010.

**வறம்** - வறுமை 1010.

**வறியார்க்கு** - ஒரு பொருளுமில்லாத வருக்கு 221.

**வறுமை** - சிறுமை, பொருளின்மை 769, 934.

**வற்றல்** - உலர்ந்தது 78.

**வற்று** - வல்லது 587, 1079.

**வன்** - வலிய 78, 99, 228.

**வன்கணவர்** - கொடியவர் 228.

**வன்கணவன்** - வலிமையுடையவன் 689.

**வன்கணார்** - வலிய நெஞ்சையுடைய வர் 1198.

**வன்கண்** - உறுதிப்பாடு 632, 762.

**வன்கண்ணர்** - வீரர் 1027.

**வன்சொல்** - கொடுஞ்சொல் 99.

**வன்பாட்டது** - வலிமைப்பாடுடையது (மூடத்தன்மை) 1063.

**வன்பால்** - வன்னிலம் 78.

**வன்மை** - வலிமை 153, 444, 682, துணிபு 1063.

## வா

**வாஅய்மை** - மெய்மை 364.

**வாடிய** - சோர்ந்த 1234, 1235; உலர்ந்த 1304.

**வாடினும்** - குறைவுபடினும் 1322.
**வாடுதோள் பூசல்** - தோள்கள் வாடுதலால் ஊரில் எழும் ஆரவாரம் 1237.
**வாணிகம்** - வியாபாரம், இலாபம் 120.
**வாயில்** - வாயிலாகவுடைய வழி 6.
**வாயினா்** - சொல்லினையுடையவர் 419.
**வாயின்** - வாய்த்திருப்பின், கிடைக்குமாயின் 536.
**வாயுணர்வு** - கைப்பு கார்ப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு இனிப்பு முதலியன 420.
**வாய்** - வழி 948, வாய் 91, 159, 415, 420, 423.
**வாய்சோரா** - வாய் தடுமாறியும் 689.
**வாய் சோரார்** - பிழைபடச் சொல்லார் 721.
**வாய்ச்சொல்** - வாயினின்றும் வரும் சொல் 97.
**வாய்ந்த** - வாய்ப்புடைத்தாகிய 737.
**வாய்ப்ப** - பிழையாமல் 948.
**வாய்ப்பன** - நூல்கள் விதித்தவைகள் 865.
**வாய்மை** - மெய் பேசுதல், மெய்மை 291, 292, 295, 688, 952, 983.
**வாய்மை இடத்த** - மெய்ச்சொற்களினிடத்தன 292.
**வாரா** - வருவதற்கு 335; நேராத 356, 755.
**வாராநெறி** - வாராத வழி 356.
**வாரி** - வருவாய், செல்வம் 14, 512.
**வாரும்** - சொரிகின்ற 1232.
**வாலறிவன்** - கடவுள், விளக்கிய அறிவினையுடையவன் 2.
**வால்** - தூய்மை 2; வெள்ளிய 1121.
**வாழா** - இறந்துபோகும் 969.
**வாழாத** - வாழாமல் அதனை விட்ட 970.
**வாழாதவர்** - இறந்தவர் - 240.
**வாழாதார்** - வாழ்மாட்டாதவர் 237.
**வாழி** - வாழ்வாயாக 1111, 1118, 1210, 1221, 1222, 1242.
**வாழிய** - வாழ்க 1200.
**வாழின்** - உயிரோடியிருந்தால் 420, 906.
**வாழுநம்** - வாழ்வோம் 1193.
**வாழும்** - வாழ்கின்ற 58; சிறப்புடைய 392; உளவாக நிற்கும் 542.
**வாழ்க** - வாழ்ந்திடுக 1312.
**வாழ்க்கை** - வாழ்வு 44.....; இல்வாழ்க்கை 52, 83.
**வாழ்க்கையவர்** - வாழ்க்கையுடையவர் 330.
**வாழ்தல் அன்னள்** - (உடம்போடு கூடி) வாழ்தல் போன்றவள் 1124.
**வாழ்தும்** - வாழ்வோம் 956, 971.
**வாழ்பவன்** - வாழ்க்கை நடத்துபவன் 47, 50.
**வாழ்வது** - வாழ்தல் 81, 932.
**வாழ்வது அறியார்** - உயிர் நிலைநிற்குமென்பதை அறியாதவர் 337.
**வாழ்வாங்கு** - வாழும் முறையில் 50.
**வாழ்வாரின்** - வாழ்கின்ற பெண்களைப் போல 1189.
**வாழ்வார்க்கு** - உயிர் வைத்துக்கொண்டிருப்பவர்க்கு (தலைவிக்கு), தன்னை நம்பி வாழ்கின்றவருக்கு 1151, 1192.
**வாழ்வு** - வாழ்க்கை 50.
**வாளது** - வாளின் இடத்திலுள்ளது 334.
**வாளொடென்** - வாளினாலென்ன பயன் 726.
**வாள்** - வாளாயுதம் 727, 882; ஒளி 1261.
**வாள் ஆண்மை** - வாள் வீரம் 614.
**வாள்போல் பகைவர்** - வெட்டுவோமென்று வெளிப்பட்டு நிற்கும் பகைவர் பகையினை 882.
**வானத்தவர்க்கு** - தேவருக்கு 86.

**வானம்** - முகில் 18, 19, 559, 1192; வீட்டுலகம் 353.

**வானோர்க்கு உயர்ந்த** - வானோர்க்கும் செல்லுதற்கரிய 346.

**வான்** - மழை 11, 20, 542; வானுலகம் 50, 101, விசும்பு 272; வெண்மை 714; மிக்க, பெரிய 897.

**வான் அகமும்** - மேலுலகமும், சுவர்க்கமும் 101.

**வான் உயர்** - வானம்போல உயர்ந்த 272.

## வி

**விக்குள்** - விக்கல் 335.

**விசும்பின்** - மேகத்தினின்றும் 16; வானிடத்து 957.

**விசும்புளார்** - தேவர் 25.

**விடல்** - விடுக 113, 158, 517, 697, 785, 818, 830, 876, 912, 961; நீங்குதல் , விடுதல் 203, 314, 343, 450, 797, 831, 979, 1245, 1302, 1303.

**விடாஅ** - நீங்கா 347; விடாமைக்கு ஏதுவாகிய 1324.

**விடாஅ தவர்க்கு** - துறக்காதவருக்கு 347.

**விடா அது** - இடைவிடாதிருந்து 1210.

**விடில்** - விட்டு நீங்கினால் 1159.

**விடுக** - ஒழிக 928.

**விடுமாற்றம்** - சொல்லிவிட்ட மொழி 689.

**விடும்** - மிகும் 267, நீங்கும் 167.

**விடுவார்** - விட்டு நீங்குபவர் 799.

**விட்டக்கால்** - அடங்காது சொன்னால் 695.

**விட்டேம்** - துறந்தேம் 1036.

**விண்** - மழை 13.

**விண்ணின்று பொய்ப்பின்** - விண் நின்று பொய்ப்பின் எனவும் விண் இன்று பொய்ப்பின் எனவும் இரு வகையாகப் பிரித்துப் பொருள் கொள்ளப் படுவதுண்டு 13.

**விதிரார்** - உதறமாட்டார் 1077.

**விதுப்பு** - விரைதல் 1290, அதி. 118.

**விதுப்புற்று** - விரைந்து 1290.

**விதும்பல்** - விரைதல் அதி. 127, 129.

**வித்தகர்** - அறிஞர், சமர்த்தர் 235.

**வித்து** - விதை 24, 85, 361; காரணம் 138.

**வியந்தான்** - மெச்சிக்கொண்டவன் 474.

**வியவற்க** - மெச்சாதொழிக 439.

**வியன்** - அகன்ற 13, 19, 716, 1016.

**விரல்** - கைவிரல் 1261.

**விரித்து** - அகலம் கூறி. 650.

**விரிநீர்** - கடல் (சூழ்ந்த) 13.

**விருந்தின்** - புதிதாகத் தம்மிடம் வந்தவரது 87.

**விருந்து** - விருந்தினர், புதிதாக வந்தோர் 43, 81, 82, 83, 84, 85, 86, 88, 89, 90, 153; விருந்தினருக்கு அளிக்குமுணவு 1211, 1268.

**விருப்பு** - அன்பு 522.

**விரைந்து** - விரைவாக 648, 1080, 1218.

**விலங்கு** - மிருகம் 410.

**விலைப்பொருட்டு** - விற்றற்பொருட்டு, பொருளுக்காக 256.

**வில்** - வில்லு 827, 872.

**விழிக்கும்** - கண் திறக்கும் 1218.

**விழித்த கண்** - பகைவரைக் கோபித்துப் பார்த்த கண் 775.

**விழிப்பது** - நித்திரை கழிவது 339.

**விழு** - சிறந்த, மேலார் 363, 400, 776.

**விழுங்கி** - விழுங்கினால் 931.

**விழுப்பத்து** - சிறந்தவற்றுள் 21.

**விழுப்பம்** - சிறப்பு 131.

**விழுப்புண்** - சிறந்த புண் (முகத்திலும் மார்பிலும் பட்டபுண்) 776.

**விழுமம்** - துன்பம் 107, 284, 313, 663.

**விழுமியா** - உயர்ந்தோர் 201.

**விழை** - விரும்பப்படும் தன்மை 804.

**விழைத்தகைமையான்** - விரும்பப்படும் தன்மை பற்றி 804.

**விழைந்து** - விரும்பி 1177.

**விழைப** - விரும்புவன 592.

**விழையும்** - விரும்பும் 630, 809, 911.

**விழைவதூஉம்** - விரும்புவதும் (விரும்பும் உணவும்) 1036.

**விழைவான்** - ஆசை வைப்பவன் 615, 902.

**விளக்கம்** - எரிக்கும் விளக்கு, தீபம் 601, 753; புகழ் 853.

**விளக்கு** - தீபம், ஒளி 299, 1186.

**விளங்கும்** - வெளிப்படத் தோன்றும் 717; ஓங்கித் தோன்றும் 957.

**விளித்து** - அழைத்தாற்போலும் 894.

**விளிந்தற்று** - போனாற்போன்றது 332.

**விளிந்தார்** - இறந்தவர் 143.

**விளியாது** - நீங்காது 145.

**விளியும்** - கழியும், அழியும் 1209.

**விளையுள்** - விளைபொருள், விளைச்சல் 545, 731.

**விளைவது** - விளைச்சல் தருவது 732.

**விளைவயின்** - அனுபவிக்கும்போது 117.

**விளைவின்கண்** - பயன் கொடுக்கும் போது 284.

**விளைவு** - விளைச்சல் 738.

**விறல்** - வெற்றி 180.

**விற்றற்கு** - (தம்மை) விற்றற்கு 1080.

**விற்றுக்கோள்** - விற்றாயினும் கொள்ளுதல் 220.

**வினாய்** - கேட்டு, வினாவிக்கொண்டு 594.

**வினை** - செயல் 5, 33....., பாவம் 244, பகைவர் செய்யும் வினை 781, ஆண்மை, முயற்சித் திறமை 904.

**வினை கெடல்** - செய்யுந்தொழிலில் முயற்சி கெட்டிருத்தலை 612.

**வினைக்குறை** - செய்யும் தொழிலின் குறை 612.

**வினைத்திட்பம்** - வினைமுடித்தற்கு வேண்டிய மன உறுதி அதி. 67.

**வினைத்தூய்மை** - செய்யும் செயல்கள் பொருளும் புகழும் தந்து நல்லவாதல் அதி. 66.

**வினைநலம்** - செயலின் நன்மை 651.

**வினைபடுபாலால்** - செயலின் தன் மைகளால் 279.

**வினைப் பகை** - தீவினைப் பகை 207.

**விளை மாட்சி** - செய்யுந் தொழிலின் சிறப்பு 750.

**வினையான்** - நல்வினை தீவினை களால் 63.

**வினையில** - பயனில்லாதன 697.

**வினையுடையான்** - தனது கடமை களைச் செய்கின்றவன் 519.

**வினையோடு** - முயற்சியோடு 632.

## வீ

**வீங்கிய** - பூரித்த 1233.

**வீடில்லை** - விடுதலுண்டாகாது 791.

**வீயா** - தொலையாத 284.

**வீயாது** - நீங்காது 207, 208.

**வீவர்** - கெடுவர் 289.

**வீழ** - காதலிக்க 1191.

**வீழப்படா அர்** - விரும்பப்படார் 1194, விரும்பப்படுவார் 1193.

**வீழப்படுவார்** - (பிறரால்) மதிக்கப் படுகின்றவரும் 1194.

**வீழுநர்** - அன்புடையார் (கணவர்) 1193, 1309.

**வீழும்** - விழும் 1030, விரும்பும் 1108, 1123.

**வீழ்** - விரும்ப, காதலிக்க 1191.

**வீழ்த்த** - கோத்த 1251.

**வீழ்த்தக்கண்** - சுருங்கும்போது 955.

**வீழ்பவள்** - விரும்பப்படுமவள் 1111.

**வீழ்வார்** - விரும்பப்பட்டவர் 1103, 1191, 1192, 1194, 1325.

**வீறு** - உயர்வு, சிறப்பு 749, பெருமை புகழ் 904.

**வீற்றிருக்கை** - பெருமை கொண்டிருக்கை, அரசிருக்கை 789.

## வெ

**வெஃகா** - விரும்பாத 179.

**வெஃகாமை** - விரும்பாமை 178.

**வெஃகி** - விரும்பி 172, 173, 175, 176, 177.

**வெஃகிஆம்** - (பிறர்பொருளை) ஆசைப் படுவதாலுண்டாகும் 177.

**வெஃகின்** - ஆசைப்பட்டால் 171, 180.

**வெகுளாமை** - கோபங்கொள்ளாமை 308, 1060.

**வெகுளி** - கோபம் - 29, 35, 309, வெறுப்பு, 360, 526, 531, 864.

**வெண்மை** - புல்லறிவாண்மை, அற்ப புத்தி 844.

**வெம்** - கொடிய 895.

**வெம்கோல்** - கொடுங்கோல் 563.

**வெயர்ப்ப** - வேர்வை உண்டாக 1328.

**வெயில்** - ஞாயிற்றின் ஒளி 77.

**வெய்து** - விரைவில் 569, சூடான (உணவு) 1128.

**வெருவந்த** - அஞ்சிய, அஞ்சத்தக்க 563, அதி. 57.

**வெருவந்து** - அஞ்சி 569.

**வெரூஉம்** - அஞ்சும் 599.

**வெல்படை** - (பகைவரை) வெல்லத் தக்க சேனை 761.

**வெல்லும்** - வெற்றிகொள்ளும் 481, 495, 769. வெல்ல வல்ல 645.

**வெல்வது** - வெற்றிகொள்வது 748.

**வெளிப்படும்** - அலராகும் 1145.

**வெளியார்** - அறிவிலார் 714.

**வெளிறு** - அறியாமை 503.

**வெள்ள** - வெள்ளமாகிய 1170.

**வெள்ளத்தனைய** - அளவற்ற 622.

**வெள்ளநீர்** - வெள்ளமாகிய நீரில் (தண்ணீரில் புகுந்து நீந்த) 1170.

**வெறி** - நன்மணம் 1113.

**வெறிய** - அறிவற்றச்செயல் 175.

**வெறுக்கை** - மிகுதி 600, செல்வம் 761, மிகுதி 971.

**வெறுத்தக்க** - நிலையுடைய; செறியத் தக்க 993.

**வெறுப்பு** - விருப்பின்மை 696.

**வென்ற** - வெற்றிகொண்ட 174.

**வென்றதூஉம்** - வெற்றியாகக் கிடைத்த பொருளும் 931.

**வென்றி** - வெற்றி 546, 683.

**வென்றிடினும்** - வெற்றி கிடைக்கு மாயினும் 931.

**வென்றீக** - வெல்லுக 1268.

**வென்றுவிடல்** - வென்று விடுக 158.

## வே

**வேட்ட** - விருப்பம் மிகுந்த 1105.

**வேட்டலின்** - வேள்வி செய்தலின் 259.

**வேட்டற்றால்** - விரும்பினாற் போல 1145.

**வேட்டுவன்** - வேட்டையாடுபவன் 274.

**வேட்ப** - (பின்னும்) விரும்ப, விரும் பும் வண்ணம் 643, 646, 696.

**வேட்பன** - விரும்புகின்றவை, விரும்புகின்றசெயல்கள் 362, 364.

**வேண்ட** - விரும்ப 362, 364.

**வேண்டல்** - விரும்புதல் 82, 871.

**வேண்டற்க** - விரும்பாதொழிக 177, 931.

**வேண்டா உயிரார்** - உயிர் வாழ வேண்டாத வீரர் 777.

**வேண்டா** - வேண்டுவதில்லை 37, நோக்கமாட்டா 211, வேண்டுவ தில்லை 942, விரும்பாத 777, 901, விரும்பா 1003.

**வேண்டாதார்** - பகைவர் 584.

**வேண்டாப்பொருள்** - (பொருள் செய்தற்குத்) தடையென்று வேண்டாப் பொருள் 901.

**வேண்டாமை** - விரும்பாமை 180, 362, 363.

**வேண்டாமை வேண்ட** - வேண்டா மையை விரும்ப 362.

**வேண்டாரை** - கொள்ளாத அமைச்சரை 670.

**வேண்டி** - விரும்பி 263, 777, 1177, 1255.

**வேண்டிய** - விரும்பியவை 265, 651.

**வேண்டிய எல்லாம்** - புலன் நுகர்ச்சிக்கு வேண்டியவற்றை யெல்லாம் 343.

**வேண்டின்** - விரும்பினால் 154, 342, 893, 960, 1062, 1150, வேண்டிய விடத்து 893.

**வேண்டுக** - விரும்புக 960.

**வேண்டுங்கால்** - (ஒன்றை) விரும்ப வேண்டுமானால் 362.

**வேண்டுதல்** - விருப்புதல் 4.

**வேண்டுபவ** - விரும்புவனவாகிய செல்வங்கள் 696.

**வேண்டும்** - விரும்பும் 21, விரும்ப வேண்டும் 362, விரும்பும் 367, தகும் 85, 257, 315, 343, 470, 538, 611, 652, 653, 667, 867, 963, 1060.

**வேந்தர்** - அரசர் 691.

**வேந்தற்கு** - அரசனுக்கு 382.

**வேந்தனும்** - அரசனும் (இந்திரனாயினு மெனப்பொருள் கொள்வர் மணக் குடவரும் பரிமேலழகரும்) 899.

**வேந்து** - அரச பதவி 899.

**வேபாக்கு** - கொடுமையுறல் சுடுதல் 1128.

**வேய்** - மூங்கில் 1113.

**வேரார்** - கோபிக்க மாட்டார்; வெகுள மாட்டார் 487.

**வேர்ப்பர்** - வெகுள்வர் 487.

**வேலாருள்** - வேலையுடைய வேற்ற ரசரிடை 683.

**வேலி** - பாதுகாப்பு 1016.

**வேலை** - வேற்படையாயிருந்தாய் 1221.

**வேல்** - எறியீட்டி, வேலாயுதம் 500; படைக்கலம் 546.

**வேள்** - உதவி 81, உபகாரியந் தன்மை 613, 614, ஒப்புரவு 212.

**வேள்வி** - யாகம் 87, 88.

**வேறு** - பிறர் 143, 926, 1209. கூறு 374, மாறுபாடு 514, 519, 822, பிறிது 600, மாறுபட்டவர் 704, தனிச்சிறப்பு 1012, மாறும் 822, மாறாக இருப்பவர் 819.

**வேற்றுமையான்** - மாறுபாட்டினால் 972.

## வை

**வை** - வைக்கோல் 435.

**வைகல்** - நாடோறும் 83.

**வைக்க** - கருதப்படும் 50, 214, 388, 850.

**வைக்கும்** - இருத்தும் 776.

**வைத்தான்** - சேமித்துவைத்தானாக 1001.

**வைத்து** - ஈயாமல் சேமித்து 228, நினைந்து 1269, இட்டாற் (போன்ற) 840.

**வைப்பர்** - கொள்வர் 155.

**வைப்பிற்கு** - நிலத்திற்கு 24.

**வைப்பின்** - உலகத்தில் 149.

**வைப்பு** - வைத்தல், வைத்தற்கு உரிய இடம் 226.

**வையகத்து** - உலகத்து 75, 1055.

**வையகம்** - மண்ணுலகம் 101, 547.

**வையக்கு** - நிலவுலகத்திற்கு (வையகத்துக்கு) 701.

**வையத்தின்** - நிலவுலகைவிட 353.

**வையத்து** - உலகத்தில் 22, 850.

**வையம்** - நிலம் 189.

**வையாது** - கொள்ளார் 841.

**வையார்** - கொள்ளார் 155.

# திருக்குறள் ஆராய்ச்சி

**திருவள்ளுவர்.**

இற்றைக்கு இரண்டாயிரமாண்டுகளின் முன் விளங்கிய தனிப்பெரும் புலவர் திருவள்ளுவர். பண்டைத் தமிழ் அரசர் சபையில் உயர் அதிகாரம் பெற்று விளங்கிய கருமத்தலைவர்களுள் ஒருவர் வள்ளுவன் எனப்பட்டார். வள்ளுவன் யானைமீது வீதிகளிற் சென்று அரசகட்டளையை மக்களுக்கறி வித்தான். வள்ளுவனுடைய கடமை இஃதாதலைப் பண்டைத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. தமிழரசர் வலியிழந்து ஒடுங்கிய காலத்தில் பண்டை மரபுகள் சில மறைந்து போயின. பிற்காலத்தில் சாம்பவர் குலத்தி னர் அரசகட்டளைகளைப் பறை அறைந்து மக்களுக்கு உணர்த்தி வந்தனர். அவ்வழக்கு இன்றும் நிலை பெறுகின்றது. இவர்கள் உபசார முறையில் வள்ளுவரெனப்பட்டனராகலாம். பிற்காலத்தில் வள்ளுவரென்னும் பெயர் சாம்பவர் குலத்தினரைக் குறிப்பதாகவிருந்து வருகின்றது. திரு திருவள்ளு வர் பண்டைத் தமிழரசர் காலத்தில் வள்ளுவன் என்னும் கருமாதிகாரியாக இருந்தவரென்பது அறிஞர் கருத்து.

வள்ளுவரைப் பற்றிய வரலாறுகள் அனைத்தும் மறக்கப்பட்டு விட்டன. வள்ளுவர் சாம்பவர் குலத்தை சேர்ந்தவர் என்னும் ஐதீகத்தை நம்பிய பிற்காலத்தவர் அவரைக் குறித்துக் கற்பனைச் செய்திகளைப் புனை வாராயினர். வள்ளுவரின் இயற்பெயர் மறக்கப்பட்டு விடப்பட்டபடியால் அவர் உத்தியோகப் பெயரால் அறியப்பட்டார். இன்றும் பலர் இவ்வாறு அறியப்படுதல் மரபு.

வள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தாரென்னும் ஐதீகமிருந்து வருகிறது. ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளின்முன் கற்சிற்பி ஒருவர் தமது மனக்கண்ணுக்குத்தோன்றிய வண்ணம் வள்ளுவர் உருவச்சிலையை மயிலாப்பூரில் அமைத்து வைத்தார். இது பற்றித் திருவள்ளுவர் மயிலையிற் பிறந்தாரென்னும் ஐதீகம் தோன்றியிருக்கலாம். திருவள்ளுவர் வரலாற்றைக் கூறும் கபிலரகவல் என்பது சென்ற நூற்றாண்டினிறுதியில் வாழ்ந்த விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் என்போரால் செய்யப்பட்ட தென நம்பப்படுகிறது. திருவள்ளுவர் வாசுகியை மணந்தது, நெசவுத் தொழிலைக் கைக் கொண்டிருந்தது போன்ற செய்திகளும் நிலவுகின்றன.

சங்க காலத்தில் திருவள்ளுவரின் புகழ் ஓங்கியிருந்தது. மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய இரட்டைக் காவியங்கள் இவரைக் குறிப்பிடுகின்றன.

**திருக்குறள்**

சங்ககாலப் புலவர்கள் திருக்குறளடிகளை எடுத்து ஆண்டுள்ளார்கள். சங்ககாலம் முதல் திருக்குறளடிகள் தமிழ்ப்புலவர்களால் தமது நூல்களில் எடுத்து ஆளப்பட்டு வந்துள்ளன. மேல்நாட்டினர் இந்தியாவுக்கு வரத் தொடங்கிய பின் அவர்களிற் பலர் தமிழைக்கற்றுத் திருக்குறளைப் படித்தறிந்து அதனை இலத்தின், சேர்மன். ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழிபெயர்த்து அதன் சிறப்பை மேல் நாட்டினருக்கு உணர்த்தினர். எம்மொழியிலும் இதற்கிணையான நூலில்லை யென்பது திருக்குறளையும் பிறமொழி நூல்களையும் ஆராய்ந்த எல்லா அறிஞர்களின் துணிவாகும். திருக்குறள் எல்லா மதத்தினரும், எல்லா நாட்டினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொதுநூலாக அமைந்துள்ளது. ஆகவே திருக்குறளைக் கற்று ஆராய்ச்சி செய்த சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிறித்தவர் முதலிய சமயத்தவர்கள் அது தத்தம் மதக் கருத்துக்களைக் கொண்ட நூல் எனக் கூறியுள்ளனர்.

**திருவள்ளுவர் சமயம்**

சிவன், திருமால், முருகன், போன்ற பெயர்களைக் கடவுளுக்கு இட்டு அவரை ஆண்டான் எனக்கொண்டு வழிபடும்முறை மிகப்பழங்காலம் முதல் இவ்வுலகம் முழுவதிலும் இருந்துவருகின்றது. ஒவ்வொரு மதமும் வழிபடு கடவுள் தொடர்பான பெயர்பெறும். இவ்வழிபாடுகள் மக்களின் நாகரிக வளர்ச்சிக் கேற்பப்படிப்படியே செம்மை பெற்று வந்துள்ளன. வழிபடப்படும் கடவுளின் பெயரால் அறியப் படாத சாங்கியம், பௌத்தம், சமணம், யோகம் போன்ற மதங்களும் காணப்படுகின்றன. இம்மதங்க ளெல்லாம் ஆதியிலிருந்த ஒரு தத்துவஞானக் கொள்கைகளின் ஒவ்வோர் பகுதியை முதன்மையாகக் கொண்டெழுந்தவை. உபநிடதக்கொள்கைகளை அடிநிலையாகக் கொண்டே சாங்கியம் முதலிய ஞானங்கள் எழுந்தன வென்று அறிஞர் கூறுவர். உபநிடதங்கள் இறை, உலகு, உயிர், பிறப்பு, இறப்பு, வினை. வினைப்பயன் போன்றவற்றையும், ஆதிமுதல் சடத்தோடு சம்பந்தப்பட்டு வருகின்ற உயிர்கள் சடத்தை விட்டு நீங்கிப் பின் ஒரு போதும் அச்சடத்தைப் பற்றாது விடுதலை அடைந்து வீட்டு நிலை அடைவதைப் பற்றியும் ஆராய்வன. உபநிடதக் கருத்துகளே ஆகமங்களிலும் காணப்படுகின்றன. உபநிடத ஞானம் எல்லாச் சமயத்தவர்களுக்கும் பொதுவானவை. இஞ்ஞானங்கள் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு இரண்டாயிர மாண்டுகளின் முன் தமிழரிடையே பரவியிருந்தன என அறிஞர் கருதுகின்றனர். இத்தத்துவஞானங்கள் வேதங்களுக்குப் புறம் பானவை. உபநிடத ஞானங்களை அறிந்திருந்தோரும், சாங்கியம், பௌத்தம், சமணம் போன்ற மதங்களைத் தாபித்தோரும் பிராமணரல்லாத அரச

வகுப்பினராவர். தமிழர் மதத்துக்கு சாதி உயர்வு தாழ்வும், வருணாச் சிரம தருமங்களும் இருக்கவில்லை. பழமை தொட்டு வந்த தமிழரது தத்து ஞானத்தைத் தழுவித் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இது பற்றியே இவர் எம்மதத்தைச் சேர்ந்தவர் என்று கூறமுடியாமலிருக்கிறது. இவர் கடவுள், வினை, வினைப்பயன், மறுபிறப்பு, பாவம், புண்ணியம் போன்றவற்றை ஏற்றுக்கொண்டவராகத் தெரிகிறது. சாங்கியம், பௌத்தம், சமணம், யோகம், வேதாந்தம், முதலிய மதக்கொள்கைகளுக்கும் பகவத் கீதைக்கும் ஆதாரம் உபநிடதங்களென்று, ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

**திருக்குறளின் காலம்**

திருக்குறளின் காலத்தைப் பற்றிப் பலர் பலவாறு கூறியுள்ளனர். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் கி.பி. 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த நூல்கள். இவை திருவள்ளுவரைக் குறிப்பிடுகின்றன. ஆகவே, திருக்குறள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல் எனத் தெரிகின்றது. ஒரு நூல் தோன்றிப் புகழடைவதற்குச் சில காலம் செல்லவேண்டும். திருக்குறள் கிறித்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டில் அல்லது கிறித்துவுக்குப்பின் முதல் நூற்றாண்டில் தோன்றியிருத்தல் கூடுமென அறிஞர் கூறுவர். மறைமலையடிகள் கிறித்துவ ஆண்டு தொடங்குவதற்கு 30 ஆண்டுகளின் முன் திருவள்ளுவர் வாழ்ந்தாரெனக் கூறினார்கள். இக்கணிப்பைக் கொண்டே இன்று திருவள்ளுவர் ஆண்டு வழங்குகின்றது.

**திருக்குறளுரைகள்**

மாணாக்கர் ஆசிரியரிடத்து நூல்களுக்கு உரை கேட்டுப் பயில்தல் மிகப் பழங்காலம் முதல் இருந்து வரும் வழக்கு என்பது இறையனாரகப் பொருளுரையைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள வரலாற்றைக் கொண்டு அறிகின்றோம். இறையனார் அகப் பொருளுரை நீண்ட காலம் செவி வழக்கில் வந்த பின் ஒருவரால் எழுதி வைக்கப்பட்டது. திருக்குறளுரை அல்லது உரைகள் நீண்டகாலம் செவி வழக்கில் வந்திருக்கலாம். அவற்றைக் குறித்து ஒன்றும் அறியப்படவில்லை. பதினொன்று 12-ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தமிழ் மறுமலர்ச்சிக்குரிய பல தமிழ் நூல்கள் எழுதப்பட்டன. அக்காலத்திலேயே திருக்குறளுரைகளும் ஒன்றன்பின் ஒன்றாகப் பல தோன்றின. திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதினார்கள் என்பது பழைய பாடல் ஒன்றால் தெரியவருகிறது. இவற்றுள் பரிதி, காளிங்கர், பரிப்பெருமாள், மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் அச்சிடப் பட்டுள்ளன. இவற்றை நோக்கும்போது ஒன்றிலிருந்து ஒன்று வளர்ச்சி யடைந்ததெனத் தோன்றுகின்றது. இவற்றுள் இறுதியானது பரிமேலழகருரை. பிற்காலத்தில் பரிமேலழகருரைக்கு விளக்கம் வேண்டியிருந் தமையால் திருக்குறள் நுண்பொருள்மாலை, இராமானுசருரை முதலியன தோன்றின.

உரைகளிற் பரிமேலழகருரையே சிறந்ததென எல்லாரும் ஒப்புக் கொள்கின்றனர். பொது நூலாகவும் தமிழ் நாட்டு வழக்கைத் தழுவியும் செய்யப்பட்ட திருக்குறளுக்கு மிருதி வழக்கு, வருணாச்சிரமதருமம் முதலியவற்றைப் பின்பற்றிப் பரிமேலழகர் சிற்சில இடங்களில் உரை எழுதி யுள்ளார். அவ்வுரைப் பகுதிகள் திருக்குறட் கருத்துகளுக்குப் பொருத்த மில்லாதிருத்தலை இக்கால அறிஞர் எடுத்துக்காட்டியுள்ளனர். இதனால் பரிமேலழகரின் பெருமைக்கோ அவர் உரைச் சிறப்புக்கோ இழுக்கு யாதும் இல்லை. உரை அக்காலச் சூழ்நிலைக்கேற்ப எழுதப்பட்டது.

**திருக்குறளில் வடசொற்கள்**

சமீப காலம் வரையில் தமிழ் மொழியைப் பற்றிய வரலாறுகள் தெளிவுபடாம லிருந்தன. தமிழ் வட மொழியினின்று பிறந்தது, தமிழுக்கும் சமக்கிருதத்துக்கும் இலக்கணமொன்று, தமிழ் வடமொழியினுதவியின்றித் தனித்தியங்க மாட்டாது என்னும் கருத்துக்கள் இருந்து வந்தன. தமிழில் காணப்படும் ஒரு சொல் வட மொழியிற் காணப்பட்டால் அல்லது வட மொழியிற் காணப்படும் சொல் தமிழில் காணப்பட்டால் அச்சொல் வட மொழிக்குரியதெனக் கொள்ளப்பட்டது. இதற்குக் காரணம், சமக்கிருதம் பிறமொழிகளிலிருந்து சொற்களை இரவல் பெறவில்லை. அது பிற மொழிகளுக்குச் சொற்களை இரவல் கொடுத்துதவியது என்னும் மூட நம்பிக்கை இருந்து வந்தமையாகும்.

இன்று சமக்கிருத மொழி, பிறமொழிகளோடு ஒப்பிட்டு நன்கு ஆராயப் பட்டுள்ளது. சமக்கிருத மொழி பிறமொழிகளுக்குச் சொற்களை உதவியது போலவே பிறமொழிகளிலிருந்து சொற்களை இரவல் பெற்றுமிருக்கின்றதென்றும், மத்திய காலச் சமக்கிருதத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காடு உள் நாட்டு மொழிச் சொற்கள் காணப்படுகின்றன வென்றும், வேதகாலத்திலேயே பல தமிழ்ச் சொற்கள் வேதபாடல்களிற் சென்று ஏறியுள்ளனவென்றும் அச்சொற்கள் இவை என்றும் ஆராய்ச்சி வல்லார் காட்டியுள்ளனர்.[1]

1. The Dravidian names of things and operations connected with all these arts of peace are native and not foreign (not borrowed from Sanskrit). The question has not yet been investigated, but on enquiry it will most probably turn out that many Sanskrit words connected with these arts were borrowed from *Dravidian - Age of the mantras p.15. - P.T. Srinivasa Iyengar.*

   The Dravidian substratum in Sanskrit has been discovered by several scholars and Kittel in his Kannada dictionary has given some 450 Sanskrit words with possible Dravidian connections a few other words in Sanskrit and Prakrit and the vernaculars have subsequently been suggested as being of Dravidian origin by other scholars - non-Aryan elements in Indo-Aryan, S.K. Chatterji - Journal of the Greater India Society Vo1. 3.

இந்தியாவில் வழங்கும் சமக்கிருதமும், பாரசீகவேதம் எழுதப்பட்டுள்ள பழைய பாரசீக மொழியும் ஐரோப்பிய நாடுகளில் வழங்கும் ஆரிய மொழிகளும் பழைய ஒரு மொழியின்று பிறந்தவை எனக் கொள்ளப் படுகின்றன. இம்மொழிக் கூட்டங்கள் இந்து-ஐரோப்பியம் எனப்படும். சமக்கிருதமல்லாத மற்றைய இந்து-ஆரிய மொழிகளில் காணப்படாத சொற்கள் சமக்கிருதத்தில் காணப்பட்டால் அவை இந்திய உள்நாட்டு மொழிகளிலிருந்து சமக்கிருதம் இரவல் பெற்றவை எனக் கொள்ளப்படுதல் வேண்டுமென ஆராய்ச்சியாளர் கூறுவர். தமிழில் காணப்படும் சமக்கிருதமெனப்படும் சொற்களைச் சமக்கிருதமெனத் துணியுமுன் அவை மற்றைய இந்து-ஐரோப்பிய மொழிகளிலிருக் கின்றனவோ என்று ஆராய்ந் தறிதல் வேண்டும். இவ்வகை ஆராய்ச்சி இன்னும் நடைபெறவில்லை. இவ்வாறு ஆராயப்படும் வரை சங்க இலக்கியங்கள், திருக்குறள், தொல் காப்பியம் முதலிய நூல்களிற் காணப்படும் ஆரியம் எனப்படும் சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

பல ஆரியச் சொற்களுக்கும் திராவிடச் சொற்களுக்கும் அடியங்கள் (roots) ஒன்றாகவிருக்கின்றன வென்பதையும் மொழியாராய்ச்சிகாரர் காட்டியுள்ளனர். அவ்வாறாயின் ஆரியமெனக் கொள்ளப்படும் தமிழ்ச் சொற்களை ஆரியமெனத் துணிதல் மேலும் கடினமாகின்றது.

திருக்குறளில் வடசொற்களெனக் கொள்ளப்பட்டு வருவன : - அவி, அந்தம், அமரர், அமிர்தம், அங்கணம், ஆகுலம், ஆசாரம், ஆதி. ஆயம், இந்திரன், இலக்கம், கருமம், கனம், காமம், காரணம், குணம், குலம், கோடி, சலம், சாதி, ஞானம், தண்டம், தவம், தானம், துலை, தெய்வம், தேயம், தேவர், நாகம், நாகரிகம், நாமம், பருவம், பாக்கியம், பாகம், பாவம், புரந்தரன், புருவம், பூதம், மங்கலம், மந்திரி, மதி, மணி, மாத்திரை, மாயம், மானம், முகம், முத்தம், யாமம், வித்தகர் என்பன. இவற்றுள் பல தமிழ்ச் சொற்களே என எளிதில் அறியக் கிடக்கின்றன.

**திருக்குறளின் பகுதிகள் வடமொழி நூல்களிலிருந்து எடுக்கப்பட்டனவா?**

திருக்குறளின் சில பகுதிகள் அர்த்த சாத்திரம், மனுமிருதி, பகவத்கீதை முதலிய வடமொழி நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள தமிழ்

---

Like Sanskrit, Greek, with all its entirely Indo-European syntax and grammar, has a vast non-Indo-European vocabulary. The reason was the same in both cases. In both lands the invading Wirors(i.e. the Indo-Europeans) found a previousaly existing non-Aryan race with which they mingled, the Hindus with the Dravidians, the greeks with the Minoans, and in both cases, while the language of the conqueror prevailed, that of the conquered supplied innumerable names and words to its vocabulary. In both countries the conquered race continued to exist side by side with the conquerors, the dark Dasyus with the fair Aryans, the dark Minoans with the fairer Hellenes - Brongze age Greece, p. 288 - Hall.

மொழி பெயர்ப்புகளாகக் காணப்படுகின்றனவெனச் சிலர் எடுத்துக் காட்டி யுள்ளனர்.

இப்பொழுது அர்த்த சாத்திரமென வழங்குவது கௌடலியரால் செய்யப்பட்ட நூலன்று எனவும், அது கௌடலியரின் நூலைத் தழுவிப் பிற்காலத்து எவராலோ செய்யப்பட்ட நூலெனவும் கருத்துக்களிருந்து வருகின்றன.[2] இது கி.பி 300 வரையில் செய்யப்பட்ட தெனவும் காலத்துக்கு காலம் பின்சேர்ப்புகள் நடந்தனவெனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர். திருக்குறளுக்குப் பின் செய்யப்பட்ட ஒரு நூலிலிருந்து திருவள்ளுவர் சில வரிகளை மொழிபெயர்த்துத் தமது நூலில் சேர்த்தார் எனக் கூறுவது சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை.[3] மனுநூல் கி.பி. 100-க்கும் 300-க்கும் இடையில் செய்யப்பட்டதெனவும் இது பல முறை புதியன பல சேர்த்து எழுதப்பட்ட தெனவும் ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றனர். ஆகவே மனு நூலில் திருக்குறளிலிருந்து சில பகுதிகள் எடுத்துச் சேர்க்கப்பட்டன என்பது மிகப் பொருத்தமாகிறது. பகவத்கீதை பாரதப் போரின்போது செய்யப்பட்டதெனப்பட்டாலும் இன்றைய வடிவிலுள்ள நூல் கி.மு. 200-க்கும் கி.பி. 200-க்குமிடையில் செய்யப்பட்டதெனச் சில ஆராய்ச்சி அறிஞர் கருதுகின்றனர். பிற்காலங்களில் பழைய ஆசிரியர்கள் பெயர்களைக் கொடுத்துப் புதிய நூல்கள் பல செய்யப்பட்டன. எடுத்துக் காட்டாக யாக்ஞவல்கியம், நாரதம், பிரகஸ்பதி, காத்தியாயனம் முதலிய மிருதிகள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்கும் 7-ஆம் நூற்றாண்டுக்குமிடையில் செய்யப்பட்டவை எனக் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும் வடமொழி நூல்களை இயற்றி அம்மொழியை வளம் படுத்தியவர்கள் தென்னாட்டின ராகக் காணப்படுகின்றனர்[4]. அவர்களே அரிய திருக்குறட் கருத்துக்களை வடமொழி நூல்களில் புகுத்தினார்கள் எனக் கொள்வது காலப் பொருத்தமாகிறது.

### திருவள்ளுவமாலை

திருக்குறளைப் பற்றிப் புகழ்ந்து பாடப்பட்டுள்ள 53 பாடல்கள் திருவள்ளுவ மாலை என வழங்குகின்றன. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு புலவரால் செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது. திருக்குறள் அரங்கேற்றப்

2. According to this view, therefore, the arthasastra was composed much later than the time of Chandragupta Maurya and may even be as late as A.D. 300 - *The History and Culture of Indian People, Vol. II. p. 275.*

3. It is now generally agreed that the text (Manusmiriti) was formulated some time between 200 B.C. and A.D. 200. It was possibly revised several times - *The History and Culture of Indian People, Vol. II, p. 256.*

4. Katyayana, the grammarian, Baudhayana the smiriti writer, and possibly Apastamba also were south Indians but we do not known to which part of South India they belonged - *Malayalam and other Languages, p. 1249*

பட்ட காலத்தில் இப்பாடல்கள் பாடப்பட்டனவாக ஐதீகம் இருந்து வருகின் றது. திருவள்ளுவ மாலையைக் குறித்துப் பலர் ஆராய்ச்சி செய்துள்ளனர். கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவரொருவர் இப்பாடல்களைச் செய்து இவற்றுக்குத் திருவள்ளுவ மாலையெனப் பெயரிட்டு, ஒவ்வொரு பாடலையும் செய்தவராக ஒவ்வொரு புலவர் பெயரைக் குறிப்பிட்டுள்ளார் என்பது அறிஞர்களின் கருத்தாக இருந்து வருகின்றது.

### திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்

திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகையைச் சேர்ந்த நூல்.இத் தொகையைச் சேர்ந்த நூல்கள் எல்லாம் ஒரு காலத்தனவல்ல. நாலடியார் கி.பி. 7-ஆம் அல்லது 8-ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட நூலெனத் துணியப்படுகின்றது. இத்தொகுப்பிலுள்ள நூல்களெல்லாம் சங்க காலத்தனவெனக் கருதிய ஒரு புலவர் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பை 8-ஆம் நூற்றாண்டுக்குப் பின் செய்தாரெனத் தெரிகின்றது.

### திருக்குறளுக்கு வழுங்கும் பெயர்கள்

முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து. உத்தர வேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், பொருளுரை, முதுமொழி, அறம்.

### திருவள்ளுவரைக் குறிக்க வழங்கும் பெயர்கள்

தேவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர், முதற்பாவலர், பெரு நாவலர், மாதாநுபங்கி, செந்நாப் போதார், நாயனார், நான்முகனார், புலவர்.

### திருக்குறளில் வீடு கூறாமைக்குக் காரணம்

வீட்டு நெறியைப் பற்றிய உண்மை ஞானங்கள் ஆசிரிய மாணாக்க முறையில் பண்டைக்காலம் முதல் உபதேசிக்கப்பட்டு வந்தன. இவை மறை (இரகசியம்) எனப்பட்டன. இவற்றுக்கு உபநிடதம் என்னும் பெயரும் வழங்கும். உபநிடத மென்பதற்குக் கிட்ட இருந்து கேட்பது என்பது பொருள். உபநிடதங்கள் பக்குவம் வாய்ந்த மாணவனுக்கு ஆசிரியன் உபதேசிக்கும் ஞானங்கள். வீட்டு நெறி பற்றி நூல் செய்வது பண்டைய மரபன்றெனத் தொல்காப்பியங் கூறுகின்றது. இம்மரபு பற்றியே திருவள்ளுவர் வீட்டு நெறியைத் தனியாகக் கூறவில்லை.

### திருக்குறளின் சிறப்புணர்த்தும் ஆன்றோர் செய்யுட்கள் சில

***“வள்ளுவர்சீர் அன்பர்மொழி***
***வாசகந்தொல் காப்பியமே***
***தெள்ளுபரி மேலழகன்***
***செய்தவுரை - ஒள்ளியசீர்த்***

தொண்டர் புராணம்
    தொகுசித்தி ஓராறும்
தண்டமிழில் மேலாந் தரம்" *(உமாபதி சிவாசாரியார்)*

"திருத்தக்க மாமுனிசிந்
    தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும்
    வேண்டேம் - உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக்
    கூறேம் குறளணுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு"

"தேவர் குறளும்
    திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும்
    முனிமொழியும் - கோவை
திருவா சகமும்
    திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்" *(ஔவையார்)*

❖❖❖❖

## அறிஞர் ந.சி. கந்தையா எழுதிய நூல்கள்

| | நூல் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு | 1949 |
| 2. | பதிற்றுப்பத்து | 1937 |
| 3. | கலித்தொகை | 1941 |
| 4. | பரிபாடல் | 1938 |
| 5. | அகநானூறு | 1938 |
| 6. | புறப்பொருள் விளக்கம் | 1936 |
| 7. | கலிங்கத்துப்பரணி | 1938 |
| 8. | விறலிவிடுதூது | 1940 |
| 9. | பெண்கள் உலகம் | --- |
| 10. | பெண்கள் சமூகம் அன்றும் இன்றும் | 1948 |
| 11. | பெண்கள் புரட்சி | 1946 |
| 12. | பொது அறிவு | 1957 |
| 13. | பொது அறிவு வினா விடை | 1961 |
| 14. | உலக அறிவியல் நூல் | --- |
| 15. | உங்களுக்குத் தெரியுமா? | 1954 |
| 16. | அறிவுக் கட்டுரைகள் | 1950 |
| 17. | நூலகங்கள் | 1948 |
| 18. | அறிவுரை மாலை | 1950 |
| 19. | அறிவுரைக் கோவை | 1950 |
| 20. | தமிழர் சமயம் எது? | 1947 |
| 21. | சைவ சமய வரலாறு | 1958 |
| 22. | சிவன் | 1947 |
| 23. | இந்து சமய வரலாறு | 1954 |
| 24. | தமிழர் பண்பாடு | 1966 |
| 25. | நமது தாய்மொழி | 1948 |
| 26. | நமது மொழி | 1946 |
| 27 | நமது நாடு | 1945 |
| 28. | திராவிட மொழிகளும் இந்தியும் | 1948 |
| 29. | தமிழ்ப் பழமையும் புதுமையும் | 1946 |

| | | |
|---|---|---|
| 30. | முச்சங்கம் | 1947 |
| 31. | தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா? | 1947 |
| 32. | ஆரியர் தமிழர் கலப்பு | 1946 |
| 33. | ஆரியத்தால் விளைந்த கேடு | 1948 |
| 34. | புரோகிதர் ஆட்சி | 1949 |
| 35. | இராமாயணம் நடந்த கதையா? | 1947 |
| 36. | ஆரியர் வேதங்கள் | 1947 |
| 37. | திராவிடம் என்றால் என்ன? | 1948 |
| 38. | திராவிட இந்தியா | 1949 |
| 39. | திராவிட நாகரிகம் | 1947 |
| 40. | மறைந்த நாகரிகம் | 1948 |
| 41. | ஆதி மனிதன் | 1948 |
| 42. | ஆதி உயிர்கள் | 1949 |
| 43. | மனிதன் எப்படித் தோன்றினான்? | 1947 |
| 44. | மரணத்தின் பின் | 1950 |
| 45. | பாம்பு வணக்கம் | 1947 |
| 46. | தமிழர் யார்? | 1946 |
| 47. | உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு | 1948 |
| 48. | சிந்துவெளித் தமிழர் | 1947 |
| 49. | தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் | 1958 |
| 50. | தமிழர் சரித்திரம் | 1940 |
| 51. | வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர் | 1943 |
| 52. | திருவள்ளுவர் | 1948 |
| 53. | திருக்குறள் | 1949 |
| 54. | தமிழகம் | 1934 |
| 55. | தமிழ் இந்தியா | 1945 |
| 56. | திருக்குறள் அகராதி | 1961 |
| 57. | தமிழ்ப் புலவர் அகராதி | 1953 |
| 58. | தமிழ் இலக்கிய அகராதி | 1953 |
| 59. | காலக் குறிப்பு அகராதி | 1960 |
| 60. | செந்தமிழ் அகராதி | 1950 |
| 61. | கலிவர் யாத்திரை | 1959 |
| 62. | இராபின்சன் குரூசோ | 1949 |
| 63. | அகத்தியர் | 1948 |
| 64. | தமிழ் ஆராய்ச்சி | 1947 |
| 65. | தமிழ் விளக்கம் | --- |
| 66. | நீதிநெறி விளக்கம் | 1949 |